சென்னை ஸ்ரீ வைஷ்ணவ மஹா சங்க வெளியீடு—2

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# பெரியாழ்வார் பெண் கொடி

இஃது
இந்து நிலைய முன்னைத் தலைவியாரும்,
சென்னை லேடி வில்லிங்டன் போதனாமுறைக் கல்லூரித்
தலைமைத் தமிழ் ஆசிரியையாரும்,
சென்னை ஸ்ரீ வைஷ்ணவப் பெண்கள் சங்கத்தின்
தலைவியாருமாகிய

**பண்டிதை S கிருஷ்ணவேணி அம்மையார்**

இயற்றியது.

பிரசுர கர்த்தர்:

**ஸ்ரீ வைஷ்ணவ மஹா சங்கம்**

நாகப்பையர் தெரு,
திருவேட்டீஸ்வரன் பேட்டை,
திருவல்லிக்கேணி, சென்னை.

பதிப்புரிமை] 1944 [விலை ரூ. 1

*First Edition—December*, 1944.

The B. N. Press, Mount Road, Madras

ஸ்ரீ:

# முன்னுரை

இறை அன்பில் தாமும் ஆழ்ந்து பிறரையும் ஆழச் செய்த ஆழ்வார் பன்னிருவர். அவருள் நம் ஆண்டாளும் ஒருவராவர். அழகிய பூங்கொடி அன்ன இவர் பெரியாழ்வாருக்கு மகளாராய்த் தோன்றி, எம்பெருமானாகிற கொம்பில் சென்று படர்ந்தமையின், இவர் பெரியாழ்வார் பெண் கொடி எனப் பெயர் பெறும் நிலையில் நின்றார். மற்ற ஆழ்வார்களினும் இவர் உயர்ந்து நின்றதற்கு இதுவே சிறந்த காரணமாகும். இவரைப் போன்று வேறு யார் ஞான பக்தி வைராக்கியங்களில் சிறந்த ஓர் ஆழ்வாருக்கு மகளாராய்த் தோன்றினார்? நம் கோதையார், எவ்வாழ்வாராலும், எந்த அறிஞராலும் சூட்டப்படாததும், எந்நூலிலும் இயம்பப் பெறாததுமான ஒரு புத்தம்புதிய திருநாமத்தை இச்சிறு நூலில் ஏற்று நிற்கின்றார். இச்சீரிய திருநாமத்தின் பெட்பும், பொருளும் தோற்றுவாயினும் நூற்பெயரின் சிறப்பினும் விரித்துரைக்கப்பட்டன. இவர் கண்ணன் காதலையே உருவெனக் கொண்டவர்; அவன் நிழற்படத்தை உலகினர்க்குப் பாசுரங்களால் தீட்டிக் காட்டியவர்; பெண்ணுலகிற்குப் பெட்புத் தேடவே தோன்றியவர்; பிறர் நலத்தையே பேணி நின்றவர். இவர் வாழ்க்கையில் பல பொற்றுகளும், மணிகளும், முத்துகளும் மிளிர்கின்றன. அவை அவரவர் கல்வி, அறிவு, அனுபவம், ஆராய்ச்சிகளுக்கேற்ப மதிப்போடா நிற்கும். பரந்த ஞானம் வாய்ந்த அறிஞரே நம் அன்னையார் வாழ்க்கையையும் நூல்களையும் நுணுகி நோக்குதற்குத் தகுதியுடையவராவர், அடியானைப் போன்றார் இச்செயலிற்குச் சிறிதும் அருகரல்லர். ஆனால், மக்கட்கு அறிவு அளவுபட்டதே ஆயினும், ஆர்வம் என்ப தொன்று உளதன்றோ? அஃது மக்களை எத்துணை அரிய

காரியத்திலும் நுழையச் செய்தல் இயல்புதானே! அக் கோட்பாட்டைத்தான் அறிஞர் அடியாளிடத்திலும் கொள்ளல்வேண்டும்.

சில்லாண்டுகளுக்கு முன்னர்ச் சிலர் என்னை நூல் எழுதத் தூண்டிய போது, ஆண்டாள் சரிதம் அன்றி வேறொன்றையும் முதலில் எழுத அடியாள் மனம் இசைந்திலது. ஆதலின், 1933-ஆம் ஆண்டு கோதையார் என்னும் ஒரு சிறு நூல் வெளியிடலானேன். ஆயினும், அத்தொண்டு அடியாள் மனத்திற்கு முழுத் திருப்தியையும் அளித்திலது. அவ்வமயத்திலிருந்தே திருப்பாவைச் செல்வியாரைப் பற்றி ஓர் ஆராய்ச்சி நூல் வெளியிட வேண்டுமென்னும் ஆர்வம் அடியாளை உந்திக்கொண்டே இருந்தது. 1936, 37ஆம் ஆண்டுகளில் நவசக்தி என்னும் வார இதழில் இதைப் பற்றிய சில பொருள்களை வெளியிட்டிருந்தேன். அதன் ஆசிரியர் சகோதரர் திருவாளர் திரு. வி. கலியாண சுந்தர முதலியார் அவர்கள் என்னைக் காணும்போதெல்லாம் ஆண்டாள் ஆராய்ச்சி ஒன்று எழுதுமாறு தூண்டிக்கொண்டேயிருந்தார்கள். ஆயினும், இவ்வரிய தொண்டில் நுழைதற்கு இப்போதே இறைவன் கண்ணோக்கு அலர்ந்தது.

இந்நூலை எழுதத் தொடங்குங்கால் அன்னையார் நூல்கள் இரண்டிலுமுள்ள அரும்பொருள்கள் முழுவதையும் அடியாள் புல்லறிவிற்கேற்ப ஆராய்ந்து வெளியிட வேண்டும் என்னும் ஆர்வம் மிகுந்தது. இவ்வார்வம், ஒரு சிறு பூசை பாற்கடல் முழுதும் பருகிவிட நினைத்ததற்கே ஒப்பாயிற்று. இவர் நூலில் நுழைந்த பிறகு எதைச் செப்புவது, எதைச் செப்பாமல் இருப்பதென்பது புலப்பட்டிலது. ஒன்றைச் சிந்தித்துக் கொண்டிருக்கும்போதே இன்னொரு அரிய பொருள் முன் வந்து நிற்கிறது. யாவும் உயர் தத்துவங்களாகவே காணப்படுகின்றன. ஆராய்ச்சி சிறிதும்ற்ற அடியாளுக்கே இங்ஙனமாயின், ஆராய்ச்சித் துறையில் வல்

லுநரான பேரறிஞருக்கு நம் அன்னையாரின் நூல்கள் எத்தனை சீரிய பண்புகளைப் புலப்படுத்துமோ அறியேன்!

அடியாளுக்குப் புலப்பட்ட பொருள்கள் யாவற்றையும் இப்போதே வெளியிடுதற்கும் தற்காலத் தாள் பஞ்சம் இடந்தாராமற் போனதைக் குறித்துப் பெரிதும் வருந்துகிறேன். காலமும், காகிதமும் கூடுமேல் பாமாலை பாடிக் கொடுத்த பாவையாரைப் பற்றி வைணவ தத்துவங்களும் இலக்கியச் சிறப்புகளும் நிறைந்த இன்னோர் ஆராய்ச்சி நூலும் வெளியிட எண்ணியுள்ளேன். இறையருள் கூடுவதாக!

இந்நூல் இருபிரிவுகளாய் அமைந்தது. ஒன்று, குரு பரம்பரைகளையும், பெரியாழ்வார் கோதையார் பாசுரங்களில் உள்ள அகச்சான்றுகளையும் தழுவிய வரலாற்றுப் பகுதி; மற்றொன்று, இவர் இரு நூல்களிலும் பொதிந்து கிடக்கும் பொன்னனைய அரியபொருள்களின் ஆராய்ச்சிப் பகுதி. கல்வியிலும், அறிவிலும், ஆராய்ச்சியிலும் குறைவுபட்ட அடியாள் வெளியிட்ட இந்நூலில் பல குறைகளும், குற்றங்களும் மலிந்து கிடக்கக்கூடும். அறிஞர் பொறுப்பாராக!

இக்கிரந்தத்தை, யான் கல்வியிலும் ஒழுக்கத்திலும் முன்னேறப் பல வகையிலும் முயன்ற என் தாய்தந்தையர் திருவடிகளுக்குக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கிறேன்.

தமிழாசிரியர் - செந்தமிழ் இரத்நாகரம் - மருத்துவ மணி - வல்லை - சண்முக சுந்தர முதலியாரவர்களுக்கும் என் மனமார்ந்த வணக்கம். மந்திர இரத்தினங்களை உபதேசித்து அடியாளை ஞானப் பிறவிக்குக் கொணர்ந்த திருமழிசை - கோயில் கந்தாடை - சுத்த சத்துவம் - சிரோமணி - கிருஷ்ணஸ்வாமி தொட்டாசாரியர் அவர்களுக்கும், அடியாளுக்கு வைணவ தத்துவங்களையும், நுட்பங்களையும் மனத்தில் ஊன்ற வைத்துச்சில இரகசியக் கிரந்தங்

களைச் சுருக்க முறையில் வெளியிடக்கூடிய ஞானத்தை ஊட்டிய சதாசாரியராகிய பிரபந்த வித்துவான் - திருப்புறம்பயம் D. இராமசாமி இராமாநுஜதாசர் அவர்களுக்கும் அடியாளின் சொரூபாநுரூபமான நமஸ்காரத்தைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

இக்கிரந்தம் விரைவில் வெளிவர வேண்டும் என்னும் அன்பினால் பெரிதும் முயன்று காகிதத்தைப் பெற்றுதவிய சகோதரர் திருவாளர் K. வேங்கடசாமி நாயுடு, B.A.,B.L,, M.L.C. அவர்களுக்கும், இதை வெளியிட்ட ஸ்ரீ வைஷ்ணவ மஹா சங்கத்தார்க்கும் என் மனமார்ந்த நன்றி உரியதாகுக

இந்நூலை அச்சிடுங்கால் பிழைகள் ஏற்படாவண்ணம்! கருத்தூன்றி நோக்கி, நூலை முற்றுப் பெறச் செய்த சகோதரர் வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்களுக்கு என் நன்றியைச் செலுத்துகிறேன்.

அப்போதைக்கப்போது உதவி புரிந்த என் சகோதரி ஸ்ரீமதி T. பதுமாவதியம்மாளுக்கு என் அன்பு உரியது.

சென்னை,
24—12—'44.

S. கிருஷ்ணவேணி.

# பொருளடக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|

## I வரலாறு

1. தோற்றுவாய் ... 1
2. கோதையார் தோற்றம் ... 7
3. குழவிப் பருவம் ... 13
4. சிற்றில் இழைத்தல் ... 15
5. மங்கைப் பருவம் ... 19
6. நோன்பு - ஆர்வப் பெருக்கு ... 33
7. காதற் பெருக்கே நாச்சியார் திருமொழி ... 38
8. ஆண்டாளைத் திருவரங்கன் ஆட்கொள்ளல் ... 70

## II ஆராய்ச்சி

1. பெயர்களின் தோற்றத் தேற்றம் ... 79
2. நூற் பெயரின் சிறப்பு ... 79
3. கோதையார் ... 83
4. திருப்பாவைச் செல்வியார் ... 89
5. ஆண்டாள் ... 93
6. சூடிக் கொடுத்த நாச்சியார் ... 96
7. பாவையும் மொழியும் ... 102
8. திருப்பாவை ... 103
9, திருமொழி ... 106
10. திருமொழியின் திரண்ட பொருள் ... 113
11. ஆழ்வார்களிலும் ஆண்டாள் உயர்ந்தவரா? ...
12. பெண்மையின் பெட்பு ... 116
13. இருமாலைகள் ... 123
14. ஆன்ம அழகு ... 125
15, ஆயர் மகளிர் ... 131

| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| 16. | இயற்கை | ... 141 |
| 17. | வீரம் | ... 148 |
| 18. | ஓவியமும் காவியமும் | ... 155 |
| 19. | தமிழ் | ... 166 |
| 20. | சால்பு | ... 171 |
| 21. | சீர்திருத்தம் | ... 176 |
| 22. | கனவு | ... 188 |
| 23. | அவதாரம் | ... 190 |
| 24. | அர்ச்சை | ... 193 |
| 24. | அக அமைப்பு | ... 197 |
| 25. | காதல் | ... 211 |

# பெரியாழ்வார் பெண் கொடி

## I. வரலாறு

" அல்லிநாள் தாமரைமேல் ஆரணங்கின் இன்துணைவி
மல்லிநா டாண்ட மடமயில்—மெல்லியலாள்
ஆயர் குலவேந்தன் ஆகத்தாள் தென்புதுவை
வேயர் பயந்த விளக்கு."

" கோலச் சுரிசங்கை மாயன்செவ் வாயின் குணம்வினவும்
சீலத் தனள்தென் திருமல்லி நாடி செழுங்குழல்மேல்
மாலைத் தொடைதென் னரங்கருக் கீயும் மதிப்புடைய
சோலைக் கிளியவள் தூயநற் பாதம் துணை நமக்கே."

—திருக்கண்ணமங்கையாண்டான்

கோதையார் மாயவனைக் கூடியநற் பண்புரைக்க
ஏதமிலெம் ஆரியர்கள் இன்னடியும்—ஆதரவாய்ப்
பன்னிருவர் தாள்மலரும் பற்றுகிறேன் குற்றமறப்
பன்னவருள் கூர்ந்திடுவர் பாங்கு.

### 1. தோற்றுவாய்

செந்தமிழ் தழைத்தோங்கிய பாண்டி நாட்டின் சிறப்பை அறியாதார் யார்? முச்சங்கத்தையும் ஈன்று உகந்த தாயன்றோ அது! அந்நாடு புலமையும் செல்வமும் வாய்ந்த பாண்டியர் பலரையும் வளர்த்த செவிலியெனில், வரும் குற்றம் யாது? புலமைச் செல்வியர் பலரையும் பெற்று இன்புறும் பெரும்பேற்றை அந்நாட்டுத் தாயே பெற்றனள். அறிவறிந்த இரு பாலாரையும் ஈன்று இன்ப வெள்ளத்தில் திளைத்திருந்த அத்தாயை வேறு யாருக்கு ஒப்பிடக்கூடும்!

அத்தகைய நாட்டின்கண் தெய்வத்தன்மை பொருந்திய **ஸ்ரீ வில்லிபுத்தூர்** என்னும் ஓர் ஊர் உண்டு. வேடுவன் **வில்லி** என்பான் புதிதாகக் கண்டமையின், அதற்கு இப்பெயர் அமைந்தது. அது செல்வத்திற்கு இருப்பிடமெனத் திகழ்ந்தது; உயர் மாடமாளிகைகளால் பொலிவுற்றது. தமிழ் மறையும், வடமொழி வேதமும் கற்றுத் துறைபோயவர் அவண் வதிந்துவந்தனர். இப்பெருமிதங்களை,

**" பொருப்பன்ன மாடம் பொலிந்து தோன்றும் "**
**" பொன்னியல் மாடங்கள் சூழ்ந்த புதுவை "**
**" வேதவாய்த் தொழிலார்கள் வாழ்வில்லி புத்தூர் "**
—நாய்ச்சியார் திருமொழி.

என்னும் ஆண்டாள் திருவாக்கால் அறியலாம்.

அவ்வூரார் பக்தியே உருக்கொண்டவரெனக் காணப்பட்டனர். அந்நகரத்தின் பரப்பும் சன்னிதானத்தின் அழகமைப்பும் காண்போர் மனத்தைக் கவரா நிற்கும். மக்கள் மனத்துன்பத்தை அகற்ற அஃதொரு புகலிடமெனப் பகரலாம். இதைக் குறித்துத்தான் அவணுள்ள நீர் நிலை (தடாகம்) **திருப்பாற்கடல்** எனப் பெயர் பெற்றது போலும்! சன்னிதியில் மணமகன் போன்று வீற்றிருக்கும் அரங்க மன்னாரின் கம்பீரமும், மனத்திற்கிசைந்த மணமகனை வாய்க்கப்பெற்ற புதுப் பெண் போன்று அளப்பரிய ஆனந்தம் முகத்தில் தவழ எழுந்தருளி இருக்கும் ஆண்டாளின் அழகும் கண் கொள்ளாக் காட்சியாகும்.

இங்ஙனம் இருவரும் வீற்றிருக்கும் ஆசனத்திலேயே பெரிய திருவடியும் (கருடன்) அமர்ந்துள்ளான். இவ்வமைவு எதைக்குறிக்கிறது? எல்லாத் தத்துவங்களை

யும் தன்னுள் பொதிந்துகொண்டிருக்கும் பிரணவத்தையே குறிக்கின்றது. பிரணவத்தில் உருத்தோன்றுது மறைந்துறையும் அகர உகர மகரங்களின் பொருளாகும் இம்மூவரையும் (இறைவன், பிராட்டி, சேதனன்) ஒரே இடத்தில் நிறுத்தி யாவருக்கும் கட்புலனுகுமாறு காட்சி அளியாநிற்கும் பெருமை என்னே !

இன்றும் நாய்ச்சியாரும் பெரியாழ்வாரும் வடபெருங்கோயிலுடையானும் கலந்து வாழும் அவ்வூர் பொன்னும், முத்தும், மாணிக்கமும் பதித்துச் செய்த அணிக்கு நிகராய் ஒளிர்கிறது. இதை,

**“ குறித்தொருவர் கொண்டாடும் கொள்கைத்தோ கோதை**
**நிறத்தவூர் விண்டுசித்தர் நீடூர்—பிறப்பிலியூர்**
**தாழ்வில்லி புத்தூர்என் றைவர்க்குத் தானிரந்தான்**
**வாழ்வில்லி புத்தூர் வளம்?”** —108 திருப்பதி அந்தாதி.

எனப் புகழ்கின்றார் **திவ்விய கவி பிள்ளைப்பெருமாளையங்கார்.**

இத்துணை இன்னலங்களுக்கும் இருப்பிடமாய்த் திகழ்ந்த ஸ்ரீவில்லிபுத்தூரில் முற்கூறிய **பெரியாழ்வார்** என்னும் ஒரு பெரியார் வதிந்து வந்தார். சான்றோரால் போற்றப்படும் அவர், திருமாலைப் பரத்துவ நிலையில் இருத்திப் பல்லாண்டு பாடும் பண்பும், அவனைக் குழவிப் பருவத்தில் நிறுத்தி அவனுக்குப் பாலூட்டித் தாலாட்டி வளர்க்கும் தகைமையும் வாய்ந்தவர் ; பதின்மருள் உயர் நிலையில் வைத்தெண்ணப்படுபவர். பிரபந்நருள் சீரியர் எனப் போற்றப்படும் பெருமை அவருக்குண்டு.

அவர் பக்தி வெள்ளத்தில் மூழ்கி ஈஸ்வரன் இயல்பையும், தம் இயல்பையும் அறவே மறந்து, செயலாற்றினுர். ஒவ்வொரு காரணத்தால் பட்டர்பிரான், விஷ்ணு

சித்தர் என்னும் திருநாமங்களும் அவருக்கு வழங்கலாயின. அவர் எம்பெருமானுக்குப் பாமாலையும், பூமாலையும் தொடுத்திந்த சீரியர்; அன்பு நீர் பாய்ச்சி, பாசுர எருவிட்டு வளர்த்த சண்பகம், மல்லிகை, முல்லை, இருள்வாசி முதலிய மணம் நிறைந்த மலர்களையும் துளவத்தையும் கண்ணனுக்குச் சூட்டி மகிழும் கைங்கரியபரர். அவனுக்குப் பிள்ளைத்தமிழ் பாடித்தந்த பெருமை அப்பெரியாருக்கே உண்டு. வேறு எந்த ஆழ்வாரும் இத்தகைய தொண்டில் நுழையும் தவத்தை இயற்றிலர். அவர் தூய நா, கண்ணனுக்கு நீராட்டுகிறது; மருந்தூட்டுகிறது. அவன் வயிற்றுள் அடங்கிக் கிடக்கும் பதினான்கு உலகங்களையும் அவர் கண்கள் கண்டு களிக்கின்றன. அவர் தத்துவப் பொருள் நிறைந்த கண்ணனின் இளமை விளையாட்டுகளைப் பலர் முன் நிறுத்தி அவர்களை ஆனந்தக் கடலில் ஆழ்த்தும் வன்மையைத் தமக்கே உரிமை ஆக்கிக்கொண்டார்; கண்ணன் தோன்றிய காலத்தில் ஆயர்பாடியின் ஆரவாரத்தையும் பெண்கள் குதுகுலிப்பையும் கவிச் சித்திரத்திற் காட்டுகிறார். அவர், கண்ணன் திருவடி தொடங்கித் திருமுடிவரை அமைந்த அவயவங்களின் அழகின் பிழம்பைத் தாம் மட்டும் துய்த்து உவக்கின்றனரா? இல்லை இல்லை! யாவரையும் விளித்து விளித்து, அவரையும் துய்க்கச் செய்கிறார். அவர் கண்ணனை அம்புலிக்கு அறிமுகப்படுத்தி அதை விளிக்கும் அழகுதான் என்னே!

**“ சிறியனென் றென்னிளஞ் சிங்கத்தை இகழேல்கண்டாய்,**
**சிறுமையின் வார்த்தையை மாவலியிடைச் சென்றுகேள்,**
**சிறுமைப் பிழைகொள்ளில் நீயுமுன் தேவைக்குரியைகாண்,**
**நிறைமதி! நெடுமால் விரைந்துன்னைக் கூவுகின்றான். ”**

—பெரியாழ்வார் திருமொழி, 1-4-8

“ ஆழிகொண் டுன்னை எறியும் ஐயுறவில்லைகாண்
வாழ உறுதியேல் மாமதீ ! மகிழ்ந்தோடிவா. ”

பெரி-திரு-1-4-9

கண்ணன் தளர்நடைப் பருவத்தில், காற்சிலம்பு, கிண்கிணி இவைகளின் தெய்வ ஓதை தம் செவியைத் தொளைத்துச் செல்லவும், செங்கீரைப் பருவத்தின் தலையசைப்பும் புன்சிரிப்பும் தம் மனத்தை அள்ளிக் கொள்ளவும் அவற்றில் ஈடுபட்டு நின்ற கவிஞர்,

“ இடவணரை இடத் தோளொடு சாய்த்து
இருகை கூடப் புருவம்நெரிந் தேறக்
குடவயிறுபட வாய்கடை கூடக்
கோவிந்தன் குழல்கொ டூதின போது— ”

ஷை, 3-6-2

“ சிறுவிரல்கள் தடவிப் பறிமாறச்
செங்கண் கோடச் செய்யவாய் கொப்பளிப்பக்
குறுவெயர்ப்புரு வம்கூட விப்பக்
கோவிந்தன் குழல்கொ டூதின போது— ”

ஷை,3-6-8

என்க் கண்ணன் குழலூதும் நிலையை ஓவியமாகத் தீட்டிக் காட்டுகிறார்.

அவர் சேஷ பூதராகிய தம் சொரூபத்தையும் (உண்மை நிலை) சேஷியாகிய ஈஸ்வர சொரூபத்தையும் அறவே மறந்து, எம்பெருமானுக்கு மங்களாசாஸனம் செய்த எல்லை கடந்த அன்பர்; பிரேமத்தால் **‘பெரியாழ்வார்’** எனப் பெயர் வாய்ந்தவர்; பூமிப்பிராட்டியின் அமிசமாய் அவதரித்த அன்னையாரை மகளாராக வாய்க்கப்பெற்றவர்; எம்பெருமான், வைகுந்தம் திருப்பாற்கடல்களைக்காட்டிலும் தம் உள்ளத்தில் ஆர்வத்

துடன் வீற்றிருக்கும் பேறடைந்தவர். இன்னும் ஆய்ந்து கூறின், கண்ணனைப் பச்சைப் பசுங்குழவிப் பருவத்திலிருந்து உருப்படுத்தி வளர்த்து உலகிற்கு விட்ட பெற்றி பெரியாழ்வாருக்கே அமைந்தது என இயம்பல் மிகையாகாது. இச்சிறப்பு மற்ற ஆழ்வார் எவருக்கும் வாய்த்திலது என்பது உலகறிந்த செய்தி.

இங்ஙனம் **பட்டர் பிரான்** கண்ணனை அன்பு நீரில் குளிப்பாட்டி, மனத்தொட்டிலிலிட்டு வளர்த்தது எதன் பொருட்டு? தம் அருமைப் பெண் கொடியாகிய கோதையாரை அவனுக்கு உரிமையாக்கி இன்புறுதற் பொருட்டே போலும்! பெருஞ்செல்வர் ஆண் மகன் ஒருவனுக்கு உணவு, உடை, உறையுள், கல்வி, அறிவு களை ஈந்து முன்னேற்றி, அவனுக்குத் தம் அருமைப் புதல்வியை மணம் செய்வித்தல் வழக்கன்றோ?

பூங்கொடி ஒரு கொம்பை நாடிச் செல்லுதல் போன்று, கோதைக்கொடியும் மாலாகிற ஒரு கொம்பைத் தேடிச் செல்கிறது. ஆயினும், அம்மரக் கொம்பு, கோதையார் நாடிச்செல்லும் கொம்பைப் போன்றதோ? அன்றன்று. நோன்பியற்றியும் வேறு தெய்வத்தின் காலில் விழுந்தும் பெற வேண்டிய பீடு உடைய கொம்பன்றோ இது! அம்மாலாகிற கொம்பை அடைய எத்தனை தூது விடுதல்! எத்தனை குறி கேட்டல்! எத்தனை ஆற்றாமை கொள்ளல்! எத்தனை முறை நெருங்கி இன்புறல்! எத்தனைமுறை பிரிந்து துன்புறல்! எத்தனை விதமாகக் கனவில் காணல்! இயற்கையில் கண்டு களித்தல் எத்தனை முறை! இவை யாவும் ஒருபுற மிருக்க, கண்ணனுகிற கொம்பு தவிர வேறெந்தக் கொம்பிலும் படரலாகாது என்னும் உறுதிப்பாடு

அப்பூங்கொடிக்கு உண்டோ? அம்மரக்கொம்புக்குத் தான், தன்னைக் காட்டிக் காட்டி மறைத்துப் பூங் கொடிக்கு ஆர்வம் மிகுமாறு செய்யுந் திறனுளதோ? அன்றி, அப்பூங்கொடியை என்றும் விடாமல் காக்க வும், தானும் என்றும் அழியாமல் நின்று அதைத் தாங்கவும் வன்மை உளதோ? இங்ஙனம் இயம்பிக் கொண்டே செல்லின் நீளும்! தெய்வக் கொடியெனத் திகழ்ந்த நம் கோதையார் உலகில் வாழும் அறிவுடைய பெண் கொடிகளையே ஒப்புப்படுத்த இயலா வகையில் உயர்ந்து நிற்பாராயின், கேவலம் ஓரறிவு பெற்ற தாவ ரக் கொடியை யாங்ஙனம் இவருக்கு ஒப்புக் கூறுவது!

> **"கோல்தேடி ஓடும் கொழுந்ததே போன்றதே**
> **மால்தேடி ஓடும் மனம்."**
>
> —இரண்டாந் திருவந்தாதி. 27.

## 2. கோதையார் தோற்றம்

பெரியாழ்வார் பெண் கொடியெனத் திகழ்ந்த நம் நூற்றலைவியார், மேற்பகர்ந்த சீர்மைகள் பலவும் வாய்ந்த ஸ்ரீவில்லிபுத்தூரில், ஆடி மாதம் பூர நட்சத்திரம் கூடிய செவ்வாய்க்கிழமையில் திருவவதாரஞ் செய் தார்.* தன்னை அகழ்வாரையும் தாங்கும் பொறுமை பூண்ட புவி மகளே இவருக்கு அன்னையாய் அமைந்த

---

* குருபரம்பரைகளில் ஆண்டாள் அவதரித்த மாத நட்சத்திரங்கள் காணப்படுகின்றனவே அன்றி, வருடம் காணப்பட்டிலது. நம் கோதையார், தாம் நோன்பு நோற் கப்புகுந்தது, மார்கழி மாதம் பௌர்ணமியில் வெள்ளி உதித்து வியாழன் அஸ்தமிக்கும் காலம் என்று தாமே குறிப்பிட்டுள்ளார். மார்கழிப் பௌர்ணமியில் வெள்ளி வியாழன்களின் தோற்ற மறைவுகள் பதினொன்று,

னள். கண்டோர் மனத்தைக் கவரும் இயற்கை அழகு கள் யாவும் ஒருங்கே அமையப்பெற்ற பெரியாழ்வாரின் மலர் வனமே இவர் தோற்றத்திற்கு இடனாய்ப் பொருந் தியது. அம்மலர்வனம் பெரியாழ்வாரின் பக்தி நீரையும், பாசுரங்களாம் எருவையும் கொண்டு வளர்ந்ததனால், அஃது அம்மையாரை அடையும் புண்ணியத்தைப் பெற் றது போலும்!

அத்திரு நந்தவனத்தின் ஒரு புறம் திருத்துளவம் பச்சைப்பசேலென்று செழித்து அடர்ந்து வளர்ந்துள் ளது. அதனிடமிருந்து ஒரு புதிய மணம் வீசுகின்றது. திருமாலையே நாடித் தவமியற்றியும், அவனைப் பெறாது அக்கவலையினால் உயிர் துறந்த ஓர் அழகிய பெண் மணியே துளவமாக உருக்கொண்டெழுந்தாளென்றும் அதனாலேயே எம்பெருமான் துளவத்தில் மிக்க ஆர்வங் கொண்டுள்ளான் என்றும் ஒரு சரிதம் வழங்குகிறது. இங்ஙனம் எம்பெருமான் உகந்தணிவதும், அவன் நிறத்தை நினைப்பூட்டுவதுமான இத்திருத்துளவமே நம் அன்னையார் பச்சைப் பசுங்குழவியாய் வீற்றிருத் தற்கு நிலைக்களனாய் அமைந்தது. இவர் இளமையிலேயே

---

**பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நேரிடும். மற்ற ஆழ்வார் ஆசாரியர்களின் தோற்றம், அக்கால் நடைபெற்ற செயல்கள் முதலியவற்றை ஆராய்ந்து நோக்குங்கால், நம் கோதையார் தோற்றம் கி. பி. 716 ஆகவும், மார்கழி நோன்பு நடைபெற்றது இரு நட்சத்திரங்களும் அதிகாலை யில் தோன்றி மறையக்கூடிய காலமாகிய கி. பி. 731 ஆக வும் இருத்தல் வேண்டும் எனச் சென்னை யூனிவர்ஸிட்டி-தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர்-திருவாளர் இராமநாதபுரம் மு. இராகவ அய்யங்காரவர்கள் எழுதிய ஆழ்வார்கள் கால நிலை என்னும் நூலினால் அறிகிறோம்.**

ஞான பக்தி வைராக்கியங்களில் சிறந்து விளங்கியதற்குக் காரணம், முளைக்கும்போதே நிறத்துடனும் மணத்துடனும் கிளம்பும் இத்துளவத்தின் தொடர்பே என ஒருவாறு யூகிக்கலாம்.

இங்ஙனம் பச்சைப்பசேலெனக் காணும் திருத்துளவத்தில் வீற்றிருந்த இவ்விளங்குழவி பொற்கொடியென மிளிர்ந்தது. அத்தோற்றம், திருமாலும் அவன் மார்பில் பொருந்திய திருவுமெனக் காட்சி அளித்தது. அருகில் நின்ற மரங்கள், மலர்களைத் தூவிக் களித்தன. வாவியில் மலர்ந்த செந்தாமரை மலர்கள் விளக்கென ஒளிர்ந்தன. மலரிடம் மது உண்ணும் வண்டுகள் இசையென மிழற்றின. மஞ்ஞைகள் மகிழ்வினால் நடித்தன. உதிர்ந்து ஆங்காங்கே படிந்த பல நிற மலர்கள், குழவியின் சுற்றுப் புறத்தை இயற்கை அலங்கரித்ததெனக் காணப்பட்டன. வளர்ந்த துளவச் செடிகள் இக்குழவிக்கு நிழலைத் தந்தன. எங்ஙனம் அரவு எம்பெருமானுக்கு நிழலும் படுக்கையுமாய் அமைந்ததோ, அங்ஙனமே திருத்துளவமும் அன்னையாருக்கு அமைந்தது போற்றத் தக்கதன்றோ? இத்தொடர்பினாற்றான் அன்னையார் அவனை விளிக்கும் போதும், "மதுவின் துழாய் முடிமாலே! மாயனே! எங்களமுதே" (நா-தி. 3-2) என்றும்,

அவனைப் பிரிந்த ஆற்றாமை நீங்குதற்குத்

**'தண்ணந் துழாய்என்னும் மாலை கொண்டு சூட்டத்தணியும்'**

நா-தி. 12-7

**"'நீலார் தண்ணந் துழாய்கொண்டென்
நெறிமென் குழல்மேல் சூட்டீரே."**

நா-தி. 13-2

'அவன் மார்பணிந்த வனமாலை
வஞ்சி யாதே தருமாகில்
மார்பில் கொணர்ந்து புரட்டீரே.' நா-தி.13—3

என்றும் கூறுவாராயினர்.

கோதையார் மலர்கள் யாவற்றையும் நீக்கித் திருத்துளவத்தில் வீற்றிருந்ததற்குச் சீரிய காரணம் ஒன்று இல்லாமற் போகவில்லை. எம்பெருமானை நீங்கி வந்த இவர், அப்பெருமானின் தொடர்பு சிறிதுமின்றி எங்ஙனம் தனித்திருத்தல் கூடும்? அஃது இவரைப் பெரிதும் வருத்துமன்றோ? அக்குறை ஒழியவே இவர், எம்பெருமான் மிக்க ஆர்வங் கொண்ட துளவத்தில் வந்து தங்கினாரெனக் கொள்ளலே சால்புடைத்து.

அங்ஙனம் திருத்துளவத்தில் வீற்றிருந்த அம்மகவின் உடல் ஒளி, மலர் வனத்தை ஒளிரச் செய்தது; அது துயில் நீங்கி வந்த பெரியாழ்வார் கண்ணையும் மனத்தையும் காந்தமென இழுத்தது. ஸ்ரீ சடகோபர் ஞான ஒளியைப் பின்பற்றிச் சென்ற ஸ்ரீ மதுரகவிகளைப் போன்று, பெரியாழ்வார் அவ்வொளியைப் பின் பற்றி நடந்தார்; அருகில் சென்ற அவர், ஆங்கு ஓர் அதிசயத்தைக் கண்டார்; ஒன்றுந் தோன்றாது தயங்கினார். அவர் சிந்தை சிந்திக்கும் தொழிலை விட்டது. அவர்தம் ஐம்பொறிகளும் செயலற்றன. கண்ணிமைகள் ஒன்றையொன்று சந்தித்தில; கண் ஒளி மழுங்கிற்று. இங்ஙனமே சில விநாடிகள் கழிந்தன. பின்னர் அவர் சிறிது உணர்வைப் பெற்றார்; முதலில், 'இஃது ஓர் ஒளிப் பிழம்போ!' எனக் கருதினார்; பின்பு அப்பொருளில் சிறிது அசைவு காணப்பட்டதும் தம் மனத்தைத் தெளிவு படுத்திக்கொண்டு அதை உற்று நோக்கினார். உறுப்புகள் பல அவருக்குக் காட்சி அளித்தன. அவ்வமயம் ஆழ்வாருக்

குண்டான ஆனந்தத்தை அளந்து கூற ஒருவராலும் இயலாது. மானஸ அநுபவம் உடல்மட்டும் பாய்ந்து அவர் அறியாமலே அவர் கைகள் அக்குழவியின் அருகில் சென்றன. நிதிக் குவியலைக் கண்ட வறியவரென ஆழ்வார் அக்குழவியை வாரியெடுத்து, மார்புடனணைத்து, முத்தமிட்டு அன்பு பாராட்டினார். அவ்வமயம் அவர், கண் பெற்ற பிறவிக் குருடனுக்கு ஒப்புக் கூறவும் இயலா நிலையில் நின்றார். அன்னையார் பக்தியிற் சிறந்த பெரியாழ்வாரை நாடிச் சேர்ந்தமை, நல்லாரை நல்லாரும், புண்ணியத்தைப் புண்ணியமும், ஒளியை ஒளியும் தேடி அடைதல் போன்றிருந்தது. 'இனம் இனத்தைச் சாரும்' என்பது பழமொழியன்றோ ?

அக்குழவியைக் காணக்காண ஆழ்வாருக்கு ஆர்வம் பொங்கி எழுந்தது. "இவள் கலைமகளோ! புவி மகளோ!" என அவர் விம்மிதமுற்றார்; அம்மகவின்மேல் உதிர்நத மலர்களில் வண்டுகள் மொய்த்தலும், பண் பாடி எழுதலுமாயிருந்தமையின், அதற்குச் 'சுரும்பார் குழற்கோதை' எனப் பிள்ளைத் திருநாமம் சூட்டினார். மகவைக்காண வந்த மகிபன் போன்று ஆதித்தன் தன் செவ்விய கிரணங்களுடன் கீழ்த்திசையில் தோன்றினான். மலர் வனம் முற்றும் பல மாணிக்கத் தீபங்கள் வைத்ததெனெ மிளிர்ந்தது. பறவைகளும், மரங்களும், மலர்களும் புது ஒளி பெற்று இலங்கின. மகவின் அழகு முன்னையினும் பதின்மடங்கு மிக்கொளிர்ந்தது. அக்குழவியை எங்குக் கொண்டு சென்றார் ? தம் இல்லத்திற்கா ? தம் சுற்றத்தினரிடமா ? அன்றி நட்பினர் அகத்திற்கா ? இல்லை இல்லை. தம் ஆன்ம உறவினராகிய வடபத்திர சாயியின் இல்லிடமாகும் சந்நிதானத்திற்கு விரைந்து ஓடி அம்மகவை அவன் திரு

வடியில் கிடத்தினர்; அவண் சயனித்த திருக்கோலமாய் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் திருவடி முதல் திருமுடி வரையும் ஒரு முறை ஊன்றி நோக்கினர்; அந்நோக்கையே தம் மகளார் மாட்டும் செலுத்தி, உற்றுப் பார்த்தார். சில எண்ணங்கள் அவர் சிந்தையில் உருக்கொண்டெழுந்தன: "இம்மகவு இறைவன் இன்னருளே உருக்கொண்டு வந்தது போலும்! இவ்விறைவன் உயர் ஞானத்தையே, ஒரு பிண்டமாகச்செய்தனனே! இக்குழவியைக்கொண்டு உலகத்தையே உயர்த்தக் கருதினனே! இம்மகவால் வைணவமே புது மணம் பெறும் என்பது திண்ணம்! இம்மகளின் மாண் புணர்ந்து மகிமைப்படுத்துதல் இவனுக்கன்றி மற்றவருக்கு அமையுமோ? இச்செல்வி என்னை வந்தடைந்தது இறைவன் இன்னருளோ! அன்றி என் பெரியோர் இழைத்த புண்ணியமோ! அறியேன். ஆயினும், இத்தெய்விகக் குழவியை வளர்க்கும் பொறுப்பு என்னைச் சார்ந்ததே! ஞானமே உருக்கொண்டெழுந்த இம்மகவைச் சிறிதும் ஞானமற்ற அடியேன் வளர்த்தல் யாங்ஙனம்? இக்குழவியின் பக்தியாகிற பகலவன் முன், என் பக்தி மின்மினி அன்றோ? எம்பெருமான் உள்ளம் உவக்க இப்பசுங்கொழுந்தை யான் பண்படுத்தவேண்டுமே! என்ன அறியாமை! என்ன அறியாமை! இக்காரியத்திற்கு யானோ பொறுப்புடையவன்? அளித்தவன் ஆதரியானோ? சிறு கிருமியையும் காக்கும் பெருமான் இப்புண்ணியக்கொடியை வழிப்படுத்தாது விடுவனோ? ஓ எம்பெருமானே! இம்மகவை மாண்புறச் செய்தல் உன் பொறுப்பே ஆகும்," எனக் கூறி இறைவனைத் தொழுது நின்றார்.

இவ்வழகுக் கொழுந்தைக் கண்ட கோயில் அதிகாரிகள் யாவரும் வியப்புற்றுப் பெரியாழ்வாரையும் குழவியையும் போற்றி நின்றனர். சிறிது போழ்து தம்மைத் தாம் மறந்து நின்ற ஆழ்வார், பின்பு தெளிந்து மகவைக் கையிலேந்தி, இல்லம் புகுந்தார். சான்ருேர் பலரும் ஆழ்வாருடன் போந்தனர்; தனித்தனியே வாழ்த்துக் கூறினர். மக்கள் வருதலும் போதலுமாகவே அன்று முற்றும் கழிந்தது. பெரியாழ்வார் திருமாளிகையில் அன்று சிறந்த திருவிழா ஒன்று நடைபெறுதல் போன்று காணப்பட்டது. ஸ்ரீவில்லிபுத்தூர் முற்றும் இச்செய்தி பரவிவிட்டது. எங்கும் இப்பேச்சே! எங்கும் அலங்கரிப்பே! எங்கும் குதுகலிப்பே! எங்கும் ஆசியே! எங்கும் தானமே! எங்கும் தருமமே! எங்கும் தெய்வ வழிபாடே! பெரியாழ்வார் பெட்பைப் பேசுவாரும் குழந்தையின் தெய்விகத்தைச் செப்புவாருமாகவே யாவரும் பொழுது போக்கினர். இவ்விருவருடைய இன்னலம் யாரைத்தான் வியக்கச் செய்யாது!

## 3. குழவிப் பருவம்

இங்ஙனம் சான்ருேரால் கொண்டாடப்பட்ட கோதையார், ஆழ்வார் திருமாளிகையில் வளர்ந்த நிலை வியப்பிற்கிடமானது: ஆழ்வார் பக்தி கலந்த பாலேயே தம் குழவிக்கு ஊட்டுகிருர். பெண்ணின் அருட்குணங்களும் வீரச் செயல்களுமே அவருக்குத் தாலாட்டாய் அமைகின்றன. ஆழ்வார் அன்பு மணம் கமழும் நீரிலேயே கோதையார் குளிக்கிருர்.

ஆண்டுகள் சில செல்கின்றன. சிறுமியார் தம் மழலைச் சொற்களால் தந்தையாரை மகிழ்விக்கிருர்.

இவர் பேசும் பேச்சுகள் யாவை? பெருமாள் ஆனைக்கருள் புரிந்ததும், சங்கொடு சக்கரம் ஏந்தியதும், கடல் வண்ணத்தைப் பெற்றதுமேயாகும். இனிய மழலையில் இன்பச்சுவை துன்னும் இத்தெய்விகச் சொற்களும் கலக்குமாகில் அதன் பெருமை இயம்பற்பாலதோ? இவை பெரியாழ்வாருக்குத் தேனும் பாலும் கன்னலும் அமுதும் கலந்ததென இனித்தன.

நம் நில மங்கையார், பெரியாழ்வார் வீட்டிற்கும், குலத்திற்கும், உள்ளத்திற்கும் விளக்கென ஒளிர்ந்தார். ஆழ்வார் தாய் தந்தையராகிய இருவர் பொறுப்பையும் மேற்கொண்டு சிறுமியாரை வளர்த்தது யாவருக்கும் பெருவியப்பை விளைத்தது. கோதையாருக்கு ஆழ்வார் மாட்டிருந்த அன்பும் மதிப்பும் அளக்கற்பாலனவல்ல. தேவியார் தந்தையாரிடமே கல்வி பயின்றார்.

முன்பு நிதியைத் திரட்டிவைத்தவர் பின்பு துன்பமின்றி அதை அடைதல் போன்று, தெய்வச் சிறுமியாராகிய அன்னையார் சின்னாட்களிலேயே யாதொரு துன்பமுமின்றி எல்லாக் கலைகளும் நிரம்பப் பெற்றார். இது கற்றோர் கருத்தைக் கவர்ந்தது. தம் தந்தையாரும், மற்றப் பிரபந்நரான பாகவதரும் இடைவிடாது பாசுரங்களைப் பாடி இறைவனைத் துதித்தலையும், தம்மைத்தாம் மறந்து இறையன்பில் மூழ்கி இருத்தலையும் இளமை தொட்டே பார்த்துக்கொண்டிருந்த கோதையாருக்கு அப்பழக்கமே பண்பாய் அமைந்தது. இவரும் சொல்நயம், பொருள்நயம் நிறைந்த பாசுரங்களைப் பாடுவார்; அவன் லீலைகளைச் சொல்லிக்கொண்டே தம்மை அறியாமல் நடிப்பார்; கண் மூடி இருப்பார். இவை யாவும் பெரியாழ்வாரை ஆனந்தக் கடலில் ஆழ்த்தின.

## 4. சிற்றில் இழைத்தல்

நம் அன்னையார் சிற்றிலிழைக்கும் பருவத்தை அடைகிறார். தம்மையொத்த சிறுமியர் பலரும் ஒருங்கு குழுமுகின்றனர். மிக்க ஆனந்தம்! இவர் வீடு கட்டி விளையாட விழைகின்றார்; ஒவ்வொருவரும் ஓடி ஓடி ஒவ்வொரு வேலையைச் செய்கின்றனர். மட்குடம், நீர், வண்டலிலுள்ள சிறுமணல், சிறு சுளகு (முச்சில்) இவை யாவும் அங்கு வந்து குவிகின்றன. ஒருவரை ஒருவர் அழைத்தலும், பணிக்கு ஏவுதலும் பேரொலி யைக் கிளப்புகின்றன. இவர்களுக்கிருக்கும் ஊற்றம் பெரிய அரண்மனையைக்கூடக் கட்டி முடித்துவிடுவார் கள் போலத்தோன்றுகிறது! இக்கூட்டத்திற்குத் தலைவி யார் கோதையாரே. மற்ற யாவரும் இவர் ஏவியவாறே செயல் புரிகின்றனர். அவர்கள் மணலைச் சிறு சுளகில் இட்டுக் கொழிக்கின்றார்கள். வண்டல் மண்ணும் அத னோடு கலக்கப்படுகிறது. நீர் விட்டு மிதித்து அழகான சிறு இல்லத்தை அமைக்கின்றார்கள். சிறு முற்றம், நீண்ட கூடங்கள், அழகிய அறைகள் யாவும் அவ்வில் லத்தில் அமைகின்றன. அழகு நோக்கி நோக்கி வளை அணிந்த தம் சிறுகரங்களால் எத்தனை நேரம்இல்லத்தை அமைப்பார்கள் பாவம்! முதுகும் வலிக்கின்றது. இவற்றை நம் கோதையார்,

"வட்டவாய்ச்சிறு தூதையோடு
சிறுசுளகும் மணலும்கொண்டு" —நா-தி 2-8

"வண்டல் நுண்மணல் தெள்ளியாம்
வளைக்கைகளால் சிரமப்பட்டோம்." ஷை 2-3

"இன்று முற்றும் முதுகு நோவ
இருந்திழைத்த இச்சிற்றில்" ஷை 2-2

எனத் தெரிவிக்கிறார்.

இவர் இங்ஙனம் குதுகலத்துடன் இழைத்த சிற்றிலின் முடிவு என்ன? திருவின் நாயகனான கண்ணன் எதிர் பாரா வண்ணம் அவண் புகுகிறான்; மெல்லென அடிமேல் அடிவைக்கிறான். அவன் நீலநிறம் எங்கும் பரவுகிறது. இவர்கள் இல்லம், ஆடை, அணிகள் யாவும் அந்நிறத்தையே கொண்டு ஒளிர்கின்றன. சிறுமிகள் ஒன்றுந் தோன்றாது தயங்குகின்றார்கள். இவர்கள் கரங்கள், இயற்றும் வேலையை விடுகின்றன. கண்கள் சுற்றும் நோக்குகின்றன. இவர்கள் நோக்கை வேறு பக்கம் திருப்பவே கண்ணன் இம்மாற்றத்தை உண்டாக்கினான் என்பதை இச்சின்னஞ்சிறுமியர் எங்ஙனம் அறியக் கூடும்? இவர்கள் நோக்கு அவ்வில்லத்தை விட்டு நீங்கியதோ இல்லையோ, உடனே நெருங்கி, அழகிய அவ்வில்லத்தைச் சிதைத்துப் புன்முறுவலுடன் நிற்கிறான். இஃது அவனுக்கு ஒரு விளையாட்டு. இவர்களுக்கோ, நிறம் தவிர, அந்நிறத்திற்குக் காரணப் பொருள் ஒன்றும் தோன்றிற்றிலது. ஆதலின், மறுபடியும் தம் இல்லத்தின்மாட்டே தம் பார்வையைச் செலுத்தினர். நீலக் குன்றில் செந்தாமரை மலர்ந்ததென ஓர் உருவம் கண்ணிற்பட்டது. அதன் குறுநகை இவர்கள் மனத்தைக் கவர்ந்தது. கண்ணன் அங்ஙனம் குறும்பு செய்யினும் இவர்களுக்குச் சினம் உண்டாகிறதா? இதற்கு மாறாக இவர் உள்ளம் அவனை எண்ணி எண்ணி அன்றோ உருகுகிறது! இத்தத்துவத்தை இன்னதென உணர்ந்தார்; மிக்க வியப்புக் கொண்டார். அறுதியாக அமைந்த தொடர்பிற்கு இன்று நிகழ்ந்த இச்சிறு நிகழ்ச்சி பிரிவை ஏற்படுத்திவிடுமோ? ஆயினும், அவன் குறும்பை இவரால் பொறுக்க இயலவில்லை. "ஓ கண்ணா, இச்சிறு இல்லத்தோடு எங்கள் சிந்தையையும் அழிப்

பாய் போலும்! உன் மாட்டே பித்தேற்றி எங்களை மயக்குகிறாய்! எங்கள் நெஞ்சம் உன்னை விட்டு நகர மாட்டேன் என்கிறது. இங்ஙனம் செய்ய உன் முகம் என்ன மாய மந்திரங்கொலோ! அந்தோ! நீ எங்கள் வருத்தத்தை அறிந்திலையே! உன் முகம் சிவந்த தாமரைதான். ஆயினும், உன் நோக்கம் அங்ஙனம் காணப்பட்டிலதே! என் செய்வோம்! எங்குச் செல்வோம்! உன்னையன்றி வேறு கதியும் கண்டிலோமே!" என இறைஞ்சுகிறார் கோதையார். இவை யாவும் நம் அன்னையாருக்கு வெளிக்காட்சியல்ல; மனக்காட்சியே! அவ்வுள்ளத் தோற்றம், பல சொற்களை உருப்படுத்தி வெளித்தள்ளுகிறது, அவையே இப்போது நமக்கு ஆதரவு.

**"தெள்ளி நாங்கள் இழைத்த கோலம்**
**அழித்தி யாகிலும் உன்றன்மேல்**
**உள்ள மோடி உருக லல்லால்**
**உரோட மொன்று மிலோம்."** —நா-தி-2-5

**"எங்களை, மையல் லேற்றி மயக்க வுன்முகம்**
**மாய மந்திரந் தான்கொலோ!**
**.............................................**
**செய்ய தாமரைக் கண்ணினாய்! எங்கள்**
**சிற்றில் வந்து சிதையேலே."** ௸-2-4

நம் கோதையார் சின்னஞ்சிறுமியார்; சிற்றாடை உடுக்கும் பருவம்; மழலை மாறா மங்கையார். பற்கள் யாவும் முளைத்தெழுந்தில. இவர் கூந்தலோ முடி கூடிற்றிலது விளையாட்டிலும் வேடிக்கையிலும் பொழுது போக்கும் காலம். சிற்றில் செய்து, மண் செப்புகளையும் சிறு பதுமைகளையும் வைத்து, மண் சோறு சமைத்து, யாவ

ருக்கும் விருந்தளிக்கும் வயது. இப்பருவத்தில் இவர் செயல்கள் யாவும் அருமையுடையனவாகக் காணப் படுகின்றன. மணற்சோற்றையும், சிறு போது பல விதப் பட்சணச் சோற்றையும் அடுகின்ருர். அதைத் தம்மொத்த மக்களுக்கு மட்டும் இடுகின்றனரா? தம் சிற்றிலில் பெருமாள் அறை தனியாக அமைகிறது. அங்கு எம்பெருமான் அமர்கிருன். அவன் மட்டுமா? சங்கு, சக்கரம், தண்டு, வாள், வில் ஆகிய ஆயுதங்கள் யாவும் வரையப்பட்டுள்ளன. இக்காட்சியைப் பெரி யாழ்வார் நோக்குகிருர். அளவற்ற ஆனந்தம் அவருக் குப் பொங்கி எழுகிறது! என்னே என் மகளின் பக்தி! விளையாட்டிலும் மாயன் மாண் பொருள்களா!

**“செய்ய நூலின் சிற்றாடை**
**செப்ப னுடுக்கவும் வல்ல ளல்லள்”**—பெரி.திரு-3-7-1

**“பொங்கு வெண்மணற் கொண்டு**
**சிற்றிலும் முற்றத்து இழைக்கலுறில்**
**சங்கு சக்கரம் தண்டுவாள்**
**வில்லு மல்லது இழைக்கலுருள்.”** ஷை-3-7-3

எனப் பகர்ந்து தந்தையார் வியப்புறுகிருர்.

இங்ஙனம் தந்தையார் வியப்புறச் செயல் புரியா நிற்கும் கோதையாருக்கு நன்னெறியும், சீலமும், பக்தி யும் இயல்பாகவே அமைகின்றன. இவரை உருப்படுத் தியவர் யார்? இவை யாவும் நிரம்பப்பெற்ற பெரியாழ் வாரல்லரோ! அவரிடம் பழகிவரும் நம் அன்னையாருக்கு இவை வேருெருவரால் கற்பிக்கப்பட வேண்டுமோ? பழக்கமே பண்பன்ருே! ‘குல விச்சை கல்லாமல் பாகம்படும்’ என்பதை மறுப்பவர் உண்டோ! ஆகவே, இவர் நற்குணக் குன்றெனத் திகழ்ந்தார்.

## 5. மங்கைப் பருவம்

இவர் வைகறையிலேயே துயில் விட்டெழுவார்; தந்தையாருடன் மலர் வனம் புகுவார். சிறு குடம் கொண்டு செடிகளுக்குத் தண்ணீர் பரிமாறுதல், மலர் கொய்தல், எம்பெருமானுக்கென மாலை தொடுத்தல், தந்தையார் விரும்பும் உதவிகளைப் புரிதல் முதலியவற்றிலேயே இவர் காலங்கழிந்தது. இவர் உடல் இத்தூய தொழில்களைப் புரியினும், இவர் உள்ளம் எதை நினைக்கிறது? என்ன செய்கிறது? ஆயர் மங்கையர் தொட்டுத் திரட்டிய வெண்ணெயை அள்ளி அள்ளி உண்டு மகிழ்ந்த கண்ணனை அடைதற்கேற்ற வழிகளையே கோரிக்கொண்டிருக்கிறது. "அவனை என்று அடைவோம்! என்று அடைவோம்!" என்னும் விரைவு, இவர் மனத்தை ஊக்குகிறது; இவருக்குச் சிறு குழவித் தன்மை மாறுகிறது. எம்பெருமானுக்கென வைத்த பொருள்களைக் காணில், அவை தமக்கும் உரிமையுடையன என இவர் கருதுகிறார். தாம் அவருக்கும், அவர் தமக்கும் உரிமையுடையராதலின், பொருள்களும் அங்ஙனமே ஆம் என்பது இவர் எண்ணம். இஃதன்றோ உயரிய ஞானிகளின் கொள்கை!

இந்நிலையில் பெரியாழ்வார் வடபத்திரசாயிக்கெனத் தொடுத்துவைத்த மலர் மாலைகளில் இவர் கண் பார்வை பதிகிறது. அவை தமக்கும் சொந்தமுடையனவே என எண்ணுகிறார். மறு விநாடியே இவருக்கு என்ன தோன்றுகிறது? அவற்றைத் தாம் அணிந்து அழகு பார்க்க வேண்டும் என்பதே! அதனால் என்ன பயனைப் பெறக் கருதுகிறார்? அவற்றை அணிந்த எம்பெருமானின் தோற்றம் எங்ஙனம் இருக்கும் எனக்

காணும் நலனையேயாகும். நினைத்த அக்கணமே கரங்கள் அச்செயலைப் புரிந்தன. கண்கள் அழகை ஆடியில் நோக்கின. "என்ன அழகு! என்ன அழகு! இம்மாலை அணிந்தவுடன் என் மேக நிறத்தன் என்ன கம்பீரமாகப் பொலிந்து தோன்றுவான்! அவனுக்கு அவ்வமயம் ஆரதி கழித்தல் வேண்டாவா? கண்ணெச்சில் படா வண்ணம் பல்லாண்டு பாட வேண்டாவா? இப்பெருமையை அர்ச்சகர் அறிவரோ? ஆயினும், என் தந்தையார் பல்லாண்டு கூற மறக்க மாட்டார் என நினைக்கிறேன். எங்ஙனமேனும் அவன் அழகு என் அற்பக் கண்ணிற்கு அடங்குவதன்று," என எண்ணிக்கொண்டிருக்கும்போதே இவருக்குப் பெரியாழ்வார் நினைவு தோன்றும். அவர் வந்துவிடுவாரே என விரைவாக மாலைகளைக் களைந்து குடலையில் இட்டு எப்போதும் போன்று இருந்துவிடுவார். ஆதலின், இவ்வன்புச் செயலைப் பல நாட்கள் பெரியாழ்வார் அறிதற்கே இடமில்லாமற் போயிற்று.

இங்ஙனமே நாடோறும் நடைபெற்றது. என்று அம்மாலைகளைக் கோதையார் சூட்டித் தரத் தொடங்கினரோ, அன்றிலிருந்து அம்மாலைகளில் இயற்கை மணத்துடன் ஒரு புதிய மணமும் வீசத்தொடங்கிற்று. மலர் வாடினும் அம்மணம் குறைதல் இல்லை. அஃது அர்ச்சகருக்கு ஆச்சரியத்தை விளைத்தது. பெரியாழ்வாரின் பக்தியின் வளர்ச்சியே அம்மணத்திற்குக் காரணம் என்பது அவர்தம் நினைவு. அவர் பெரியாழ்வாரிடம் முன்னினும் பன்மடங்கு மதிப்பைக் காட்டினர். இது நம் சூடிக்கொடுத்தாரின் அன்பு மணம் என்பதை அர்ச்சகர் யாங்ஙனம் அறிவர்! ஆழ்வாருக்குத்தான் எப்படித் தெரியும்!

நாடோறும் மாலைகளை அணிந்து அழகு காணும் கோதையாருக்குத் தம் மனத்தில் ஒரு புதிய எண்ணம் உதித்தெழுகிறது. விரைவில் உட்செல்லுகிறார்; தம் விலையுயர்ந்த காறை, கைவளை முதலிய அணிகள் யாவற்றையும் அணிந்துகொள்கிறார் ; தம் சிற்றாடைகளை ஒவ்வொன்றாக எடுத்து எடுத்துப் பார்க்கிறார். இறுதியில் நீலப்பட்டாடையினிடமே இவர் சிந்தைசெல்கிறது ; அதை அழகு பெற உடுத்துக்கொண்டு, கண்ணுக்கு மை தீட்டித் திலகமும் இட்டுக்கொள்கிறார்; குடலையிலிருந்த மாலைகளைக் கரத்திலும், கழுத்திலும், தலையிலும் அணிந்துகொள்கிறார் ; தம் நீலச் சிற்றாடையை உற்று உற்று நோக்குகிறார். கண்ணன் நீல நிறம் இவர் கண்ணெதிரில் காட்சி அளிக்கிறது. மனத்தில் உவகை பொங்குகிறது. காற்சிலம்பும், கைவளையும் ஒலிக்க அசைந்து அசைந்து ஆடியினிடம் போதருகிறார். அந்நிலைக் கண்ணாடியில் இவர் உருவம் முற்றும் காணப்படுகிறது. இவர் அழகு இவரையே வியக்கச்செய்கிறது. சிறிது நேரம் ஒன்றையும் நினையாமல் நிற்கிறார். உவகை ததும்புகிறது. அவ்வமயம் இவர் கண்கள் தம் அழகை மட்டும் தனித்துக் காணவில்லை; எம்பெருமான் அழகையும் சேர்த்து நோக்குகின்றன. இவர் மனக்கண், “ எம்மிருவர் வனப்பும் ஒத்திருக்குமா ? ஈஸ்வரன் உவந்து ஏற்றுக்கொள்ளும் வகையில் நாம் உள்ளோமா ?” என இவர் மனம் ஆராயும். உவகை பொங்கி முகத்திலே தேங்கும். அதனால், இவர் வனப்பு முன்னிலும் பதின்மடங்காய் மிளிரும்.

இந்நிலையில், அம்மாலைகள் எம்பெருமானுக்கென அமைத்தவை என்பதையும், தம் தந்தையார் விரைவில் வந்துவிடுவார் என்பதையும் இவர் அறவே மறந்தார்.

இச்செய்கைக்குக் காரணம், இவர்தம் அளவு கடந்த அன்பே என்பதை மறுக்க வல்லார் யாவர் ?

அன்று விரைவில் வீடு திரும்பிய ஆழ்வார் இச் செயலைக் கண்டார். அவர் உடல் பதைத்தது ; நெஞ்சம் கலங்கிற்று ; பேச நா எழவில்லை. சிறிது போது அவர் தம்மை மறந்து நின்றார். தாம் கனவிலும் நினையாத இச்செயல் அவரை மயக்கிவிட்டது. தம்மைத் தாம் மறந்திருந்த கோதையாரோ, அவர் வரவை அறிந்திலர். ஆழ்வார் நடுங்கிக்கொண்டே, " குழந்தாய், ஈதென்ன காரியம் ! இச்செயலைச் செய்ய உன் மனம் எங்ஙனம் துணிந்தது ! இளமையிலிருந்தே பாகவதரோடு பழகி வரும் உன் பண்பு மிக அழகு ! உன் அறிவுடைமைக்கு என் சொல்வேன்!" எனத் தம் மகளாரைச் சிறிது சினந்தார். அவ்வமயம் இவர் கவலையை முகத்தில் தேக்கித் தலைகுனிந்த வண்ணம் வாய் பேசாது தந்தையாரின் கோபச் சொற்களை ஏற்றுக்கொண்டார். இவர் கண்களிலிருந்து நீர் துளித்தது. இவர் தம் பொறுமையும் அடக்கமும் ஆழ்வார் திருவுள்ளத்தைக் கனியச் செய்தன. இவர் கண்ணீர் ஆழ்வார் சினத்தீயை அணைத்தது.

உடனே ஆழ்வார் தம் மகளாரை அருகழைத்து, கண்ணீரைத் துடைத்து, " நீ இங்ஙனம் செய்யலாமா ? யாரேனும் இத்தகைய காரியத்தைச் செய்யத் துணிவரோ ? எம்பெருமானின் உயர்வு என்ன ! அவனுக்குச் சூட்டும் மாலைகளை நாம் சூடி மாசு படுத்தலாமா ? இஃது எத்துணை அபசாரம் ! எதைக் கருதி இங்ஙனம் இயற்றினை என்பது எனக்குத் தோன்றவில்லையே ! என் அருமைக் குழந்தாய், இத்தகைய காரியத்தைச் செய்தற்கு இனி முற்படமாட்டாயென்று நம்புகி

றேன். இம்முறை போகட்டும்! பயப்படாதே! அருட் கடலாகிய எம்பெருமான், சின்னஞ்சிறுமியாகிய நீ அறியாதிழைத்த இக்குற்றத்தைப் பொறுப்பானாக!" எனத் தேறுதல் செப்பினார். தந்தையாரின் சாந்த மொழிகளைக் கேட்ட நம் அன்னையாரும் ஒருவாறு மகிழ்வடைந்தார்.

இதைச் சிறிது ஊன்றி நோக்குங்கால், தந்தையாரும் மகளாரும் தத்தம் கடமையைச் செம்மை நெறியில் மேற்கொண்டனர் என்பது நன்கு புலனாகும். ஆழ்வார் அவ்வமயம் உலக வழக்கிலும், வரையறுத்த பக்தியிலும் நின்றார். ஆதலின், அவருக்குத் தம் திருக்குமாரியார் இயற்றியது பிழையெனத் தோன்றிற்று. ஆயினும், கரை கடந்த இறை அன்பில் மூழ்கி நின்ற கோதையாருக்கு இச்செயல் குற்றமாகக் காணப்படல் யாங்ஙனம்? அளவிலடங்காத பக்தியுடையாரிடத்தில் சாஸ்திரமும் உலக மரியாதையும் என் செயும்?

அன்னையார் கவலைக்கும், இவர் சிரம் நிலத்தை நோக்கியதற்கும், நா ஒன்றையும் புகலாதிருந்ததற்கும் வேறு காரணங்களும் உண்டு: "அந்தோ! தந்தையார் நம் அன்பின் நிலையை உணர்ந்தாரில்லையே!" என்னும் எண்ணத்தினால் கவலையும், "இதை நாம் அவருக்கு எவ்வகையில் விளக்க வல்லோம்!" என்னும் நாணத்தினால் தலை கவிழ்தலும், "இதை நாம் வெளிப்படையாய் அவருக்குப் புகல்வதைக்காட்டிலும் அவரே உணருமளவும் மௌனங் கொள்ளலே சால்புடைத்து," என்னும் நினைவினால் வாய் பேசாமையும் இவர்பால் அமைந்தன. இது நிற்க.

ஆழ்வார் அம்மாலைகளைக் கொண்டுபோய் வடபத்திரசாயிக்குச் சாத்த விரும்பிற்றிலர்; மலர்வனம்சென்று

புதிய மலர்களைக் கொணர்ந்து மாலை தொடுக்கத் தொடங்கினார். மாலைகளைத் தொடுக்கும் ஆழ்வார் உள்ளத்தில், கோதையார் எம்பெருமான்பால் இழைத்த பிழையும், தலைகுனிந்து நின்ற நிலையும், துளித்த கண்ணீரும் மாறிமாறித் தோன்றிக்கொண்டிருந்தன. கண்ணாடியில் கண்ட சூடிக்கொடுத்த சுடர்க்கொடியின் தெய்வத்தன்மை வாய்ந்த அழகிய உருவம் அவர் மனக்கண் முன் நின்றது. இத்தன்மையில் அவர் கைகள் ஒரு காரியத்தையும், சிந்தை வேறு எண்ணங்களையும் இயற்றிக்கொண்டும் சிந்தித்துக்கொண்டுமிருந்தன.

பொழுது சாய்தற்கு முன் ஆழ்வார் மாலைகளை வடபத்திரசாயி சந்நிதானத்திற்குக் கொண்டு சென்றார். எதிர் நோக்கியிருந்த அர்ச்சகர் அம்மாலைகளைப் பெற்றுப் பெருமாளுக்குச் சாத்தி நின்றார். அவ்வமயம் ஆழ்வார் பக்தியிலோ, அர்ச்சகர் அன்பிலோ வேறுபாடு தோன்றிலது. ஆயினும், மாலைகளில் சில மாறுபாடுகள் காணப்பட்டன. முன்பெல்லாம் பெருமாளுக்கு மாலையை இட்ட உடனே உண்டாகும் புதிய பொலிவும் மணமும் அவற்றினிடம் காணப்பட்டில. இதன் காரணம் அறியாது அர்ச்சகர் தயங்கினர். தம் மகள் இழைத்த குற்றந்தான் இதற்குக் காரணம் என்பது ஆழ்வார் கருத்து. ஆனால், அவர் ஒன்றும் கூறிற்றிலர். மனக் கலக்கத்துடன் வீடு திரும்பினார். அவர் சிந்தை உணவிலோ, உறக்கத்திலோ சென்றிலது. இரவு படுக்கைக்குச் சென்றார். உறக்கம் அவர் அருகிலும் அணுகிற்றிலது. எழுதல், படுத்தல், இருத்தல், பெருமூச்சு விடுதல்—இங்ஙனமே பெரும்பொழுதைக் கழித்தார்; வெகு நேரம் கழித்து அவரை அறியாமலே அவர் கண்கள் மூடின. ஒரு புறம் தோன்றிய ஒளி

சிறிது சிறிதாகப் பரவுகிறது. எங்கும் ஓரே பிரகாசம்! அதன் இடையில் ஓர் அழகிய உருவம், திகிரி சங்கங்களுடன் சேவை சாதிக்கிறது; அது மெல்ல மெல்ல ஆழ்வார் அருகில் போதருகின்றது. ஆழ்வார் கண்கள் கூசுகின்றன. ஆயினும், அவர் உற்று நோக்குகிறார். அவ்வுருவம் சிறிது வாய் திறந்து, "ஆழ்வாரே, இன்று ஏன் எனக்கு மணமற்ற மாலைகளை இட்டீர்?" என வினவுகிறது. அவ்விநாடியே ஆழ்வார் எண்ணம் எங்குச் செல்கிறது? மகளார் செயலிலேயே. அவர் நா எம்பெருமானுக்கு உண்மையை உணர்த்திப் பொறுத்தருளுமாறு மன்றாடுகிறது.

இறைவன், நம் இன்னல மணியின் பெருமையை ஆழ்வாருக்கும் மற்ற அனைவருக்கும் வெளிப்படுத்தக் கருதினான். ஆதலின், எம்பெருமான் பெரியாழ்வாரை நோக்கி, "ஆழ்வாரே, நீர் உம் மகளின் மகிமையை அறிந்திலீர் போலும்! அவள் நிலமகளின் அவதாரம் என்பதை உணர்வீர்! அவள் எனக்குப் பாமாலையும் பூமாலையும் பாடியும் சூடியும் ஈயவே இவ்வுலகில் தோன்றினாள். அவள் என்பால் அளவுகடந்த அன்பைச் செலுத்துபவள்; என்னையே உபாய உபேயமெனக் கருதியிருப்பவள். ஆதலின், அவள் தொடர்பமைந்த மாலைகளே யான் விரும்புவன. மாலைகளைச் சூடுவதனால் உண்டாகும் அவள் அழகும், அதனால் அவளுக்கு ஏற்படும் மனமகிழ்வுமே எனக்கு உவப்பை அளிப்பன. ஆதலின், இனி மாலைகளை முதலில் அவளுக்குச் சூட்டிப் பின்பு எனக்குச் சூட்டும்," எனத் திருவாய் மலர்ந்து மறைந்தருளினார்.

ஆழ்வாருக்கு விழிப்பு வருகிறது. அச்சுடரொளியோடுங் கூடிய உருவம் தம் கண்முன் நிற்றல்போன்றே

அவர் உணர்கிறார் ; கண்களைத் துடைத்துக்கொண்டு சுற்றுமுற்றும் நோக்குகிறார். ஒரு பொருளும் காணப் படவில்லை. சிறிது நேரம் அவருக்கு ஒன்றும் தோன்ற வில்லை. பின்பு எம்பெருமான் திவ்விய மங்கள விக்கிர கத்தை உருவகப்படுத்திக் காண்கிறார். அவன் திருமுக ஒளியும், மெல்லெனத் திறந்த திருவதரச் செம்மையும், 'ஆழ்வாரே !' என அழைத்த அன்பொலியும், தம் மக ளாரைக் குறித்துப் பகர்ந்த பண்புரைகளும், இறுதியில் செப்பிய முடிவும் ஒவ்வொன்றாக அவர் கண்களுக்கும் செவிகளுக்கும் முறையே விருந்தளிக்கின்றன. அவர் அவ்வனுபவத்திலேயே தோய்ந்துள்ளார். படுக்கை விட்டெழவும் புத்தி சென்றிலது. அவ்வமயத்தில் கோயில் அர்ச்சகர் ஓடோடியும் ஆழ்வாரிடம் போந் தனர். அவர் முகத்தில் வியப்பு விளையாடிற்று. அவர் உடலும் வாயும் ஒருங்கே விரைந்தன; இந்நிலை யில் தாம் விடியலிற்கண்ட கனவை ஆழ்வாரிடம் அறிவித்தார். இருபாலார் கனவும் ஒன்றாய் இருந் ததை அறிந்து அவர்கள் கொண்ட ஆனந்தத்திற்கு அளவில்லை. இறைவன் திருக்காட்சியையும் கோதை யாரின் உயர்வையும் உன்னுந்தோறும் உன்னுந்தோ றும் அவர்கள் இன்பக்கடலில் மூழ்கினார்கள். கோதை யாரை நோக்கலும், கண்ட கனவை நினைத்தலும், மகிழ் தலுமாகவே சிறிது நேரம் கழிந்தது. இறுதியில் அவர் கள், தங்கள் மனத்தை ஒறுவாறு வயப்படுத்தித் தங்கள் செயலில் ஈடுபட்டார்கள்.

ஆழ்வார் விரைவில் மலர் கொய்து, மாலையைத் தொடுத்துத் தம் மகளார்க்குச் சூட்டிக் கண் குளிரக் கண்டார் ; பின்பு சந்நிதானத்திற்குச் சென்று, அர்ச்சக ரிடம் மாலையை அளித்தார். கோதையாரின் அன்பு மண

மூட்டப்பட்ட மாலையால் வடபத்திரசாயி அலங்கரிக்கப் பட்டான். அவன் முகத்தில் புது அழகு துலங்கிற்று. அந்த இடம் முற்றும் பிரகாசித்தது. அவன் புன்சிரிப்புக் கொள்வதுபோலக் காணப்பட்டது. ஆழ்வாரும், அர்ச்சகரும் பெருமானை உற்று நோக்கினர். வரவர அவன் அழகு அதிகப்படுவதாகப் புலப்பட்டது. 'இவர் திருவாய் திறந்து கோதையாரைப்பற்றி இனியும் ஏதேனும் பகர்வாரோ!' என்றுகூட எதிர்ப்பார்த்தனர். "நம் குழந்தையின் பெருமை என்னே! பெருமை என்னே! யாருக்கேனும் இத்தகைய மகவு ஒன்று இதுகாறும் தோன்றியதுண்டோ! எம்பெருமான் அருளே திரண்டு வந்ததெனக் காணும் இவ்வருங்கொடியின் அருமை யாரால் இயம்ப இயலும்! நாம் பிறந்ததன் பயனை இன்றன்றோ பெற்றோம்! பெருமான் அர்ச்சையில் வாய் திறந்து பேசக்கூடாதென்னும் கட்டுப்பாட்டினாலன்றோ கனவினில் தோன்றிச் சில பகர்ந்தான்! இப்பரம் பொருளைத் துயிலில் காணும் புண்ணியந்தான் யாருக்குக் கிடைக்கும்! யாவற்றிற்கும் காரணம் நம் செல்வச் சிறுமியின் சிறப்பே அல்லவா?" எனத் தமக்குள் சிந்தித்துக்கொண்டே ஆழ்வார் வீடு திரும்பினார்.

தம் தந்தையார் எம்பெருமான் மாலைகளைத் தமக்கு அணிவித்ததன் பொருளறியாது சிந்தித்துக்கொண்டிருந்த நம் அன்னையார், வீடு திரும்பிய ஆழ்வாரை எதிர்கொண்டழைத்தார். தம் மகளாரைக் கண்ட ஆழ்வார், தம்மை அறியாமலே, 'என்னை ஆண்டாள் இவளே!' எனக்கூறி அன்னையாரைத் தழுவி முத்தமிட்டார். பின்னர் வடபத்திரசாயியினிடம் நிகழ்ந்தநிகழ்ச்சிகள் யாவற்றையும் ஆழ்வார் ஆண்டாளுக்குஅறிவித்தார்.அப்போதுதான் நம் அன்னையாருக்குக் காரணம் புலப்பட்டது;

எம்பெருமான் தம் மாட்டு வைத்துள்ள அன்பையும் உணர்ந்தார். மனத்தில் உவப்பு ஊன்றி நின்றது. ஆயினும், அதை வெளிக்காட்டிஞரிலர்.

இச்செய்தி காற்றைப் போன்று ஊரெங்கும் பரவிற்று. சின்னுள் வரை அறிஞர் பலர் வந்து வந்து கோதையாரைக்கண்டு சென்றனர். பெரியாழ்வார் திருமாளிகையில் எம்பெருமான் கலியாண குணங்களையும் திருவிளையாடல்களையும் துதிப்பவர் ஓதையும், அவனது திவ்விய மங்கள விக்கிரகத்தைப் போற்றும் ஒலியும், அவன் ஆன்ம சொரூபத்தைப் புகழும் அரவமும் பெருகின. இச்செயல்கள் நம் ஆண்டாளுக்கு ஆனந்தத்தையும் ஆற்ருமையையும் வளர்த்துக்கொண்டே வந்தன. சான்றோர் நம் கோதையாரைச் சூடிக்கொடுத்த **நாச்சியார்** எனப் போற்றினர். அன்று முதல் இவருக்கு அப்பெயர் வழங்கலாயிற்று.

ஆழ்வார் நாடோறும் அருமை மகளாரை ஆடை அணிகளால் அலங்கரித்து, மாலைகளையும் சூட்டி, அழகை நோக்குவார்; அவ்வழகு அவர் கண்ணையும் மனத்தையும் ஒருங்கே கவரும். "ஈதென்ன சீரிய தோற்றம்! இவள் இயற்கை அழகோடு ஆடையணிகளின் செயற்கை அழகும் கலந்து ஒளிரும் இத்தெய்விகச்செம்மை யாங்ஙனம் என் ஊனக்கண்களில் அடங்கும்! இவள் செப்பமுடைமையை நோக்கும் போதெல்லாம் எம்பெருமானையும் சேர்த்துக் காண வேண்டுமென்னும் அவா என் பிடர் பிடித்துந்துகிறதே! இவள் அழகுக்கும் அமைப்பிற்கும் அவனன்றிப் பொருத்தமுடையார் வேறு யார்? அடியேன் குடிசைக்கு இரத்தினத்தீபமாய் அமைந்த இவளைப் பெற்றது என் இல்லம் இயற்றிய

தவமோ! என் முன்னோர் திரட்டிய புண்ணியமோ! அறியேன்! அன்றன்று! எம்பெருமான் என்மாட்டுக் கொண்ட அருள் நினைவே இதற்குக் காரணமாகும்! ஆயினும், யான் இத்தகைய மாணிக்கப் பூங்கொடியை அடைந்தது மட்டும் போதுமோ! இக்கொடியைத் தக்க கொம்புடன் யான் சேர்க்கவேண்டுமன்றோ! இன்றேல், இவள் என்னை அணுகியதற்கும், இவளை யான் வளர்த்ததற்கும் யாது பயன்? எம் இருவர் வாழ்க்கையும் பயனற்றதாகுமே! அப்பொருளை யான் ஊன்றி நோக்கின் இம்மாணிக்கக் கொடிக்கு அம்மரகதக் கொம்பன்றோ ஏற்றது? இவ்விரண்டையும் ஒன்றுபடுத்த யான் யாது புரிய வேண்டும்?" என ஆழ்வார் ஆழ எண்ணுகிறார். ஈண்டு ஆழ்வார், நாயகி தன்மையையடைந்துஅலமருங்கால் அவரே தாயாராய் இருந்து,

" **அண்ணலார் தாளிணை மேலணி தண்ணந்துழாயென்றே**
**மாலுமால் வல்வினையேன் மடவல்லியே!** "

எனத் தம்மகளாரைக் கொடிக்கு ஒப்பிட்டுப் பேசுவது நம் நினைவிற்கு வருகின்றது. பின்னும் ஆழ்வார், "சிச்சீ! ஈதென்ன புல்லிய எண்ணம்! யாவற்றிற்கும் அவனிருக்குங்கால் எனக்கேன் கவலை? 'களைவாய் துன்பம் களையா தொழிவாய் களைகண் மற்றிலேன்,' என அவனையே சரணடைந்த அடியேன் காரியத்திற்கு அவனல்லனோ கருத்தா! இதற்கு வழி கோலுதற்கு யான் யார்!" எனப் பலவாறு சிந்தித்திருந்தார்.

நம் கோதையாரோ, நாடோறும் தாம் பூண்ட காறையைக் கண்ணுடியில் நோக்குவார்; கைவளைகளைக் குலுக்குவார்; ஆடையைச் செவ்வனே உடுத்துக் கொள்வார்; கொவ்வைக் கனிபோன்ற தம் அதரத்தை

அழகுபடுத்திக்கொள்வார். இச்செயல்களை அருகி லிருந்து கண்டு இன்பந்துய்த்த பெரியாழ்வார்,

“ காறை பூணும் கண்ணாடி காணும்தன்
கையில் வளை குலுக்கும்
கூறை யுடுக்கும் அயர்க்கும்தன்
கொவ்வைச்செவ் வாய்திருத்தும். ”

—பெரி-திரு.3-7-8

எனப் பகர்கிறார்.

தந்தையார் வந்துவிடுவரோ என்னும் அச்சம் இப் போது நம் அன்னையாரை விட்டு நீங்கிற்று; உற்சாகம் ஊக்கியது. அதனால், இவர் அழகு முன்னையிலும் விஞ்சி நின்றது. இம்முறையில் தந்தையாரும் மகளா ரும் இன்பக்கடலில் நீந்திக்கொண்டிருந்தனர். இவ்வுல கில் ஒருவர் காலம், முற்றும் இன்பமாகவே கழியா தன்றோ! ஆகவே, இவ்விருவருக்கும் ஒவ்வொரு சிறு கவலை மனத்தை வாட்டிக்கொண்டிருந்தது.

ஆழ்வார் எத்துணை ஞானமுடையவராய் இருப் பினும், ஒவ்வொரு சமயம் இம்மங்கையார் மாண்பிற் கேற்ற மணமகனைக் காணல் வேண்டுமே என்னும் துன் பம் அவரை வருத்திற்று. “எம்பெருமான் எப்போது வருவான், எப்போது வருவான்!” என்னும் துன்பம் ஆண்டாளை ஆட்கொண்டது. இவை, பெருகி ஓடும் அவர்கள் இன்பவெள்ளத்திற்குச் சிறு அணைகளாய் இருந்தன. ஞானியையும் அஞ்ஞானத்திற்குட்படுத் தும் உலகமன்றோ இது? இச்சிறு அணைக்கட்டும் ஏற் படவில்லையேல், அவர்கள் அவ்வின்ப வெள்ளத்தில் மூழ்கி முடிவைப் பெறினும் பெறுவார்கள் என்பது இறைவன் கருத்துப்போலும்!

தாம் அணிந்த மலர் மாலைகளையே எம்பெருமான் அணிந்ததும், அதை உலகம் புகழ்ந்ததும் அன்னையாருக்கு அத்துணை மன ஆறுதலை அளித்திலை. திருமாலைச் சென்றடைந்து அவனோடு இன்பந்துய்க்க வேண்டுமென்பதே அவரது ஊன்றிய எண்ணம். அவ்வெண்ணம் நிறைவேறுமட்டும் அவர் எங்ஙனம் மனந்தேறி இருத்தல் கூடும்? இது நிற்க!

எம்பெருமான் ஆயர்பாடியில் தோன்றிய போது தன் அன்பரான ஆயர்மங்கையரோடு கைகோத்துக் குரவையாடுதல், வேறு விளையாட்டுகளைச் செய்தல் முதலியவற்றில் தன் காலத்தைக் கழித்தான். அம்மங்கையர் எல்லை அற்ற ஆனந்தத்தில் ஆழ்ந்தனர். அவ்வானந்தத்தின் மிகுதி அப்பெண்களுக்கு இறுதியை உண்டாக்கினும் உண்டாக்கலாம் எனக் கருதிய கண்ணன், அவர்களை விட்டுச் சிறிது போது மறைந்திருந்தான். அதைப் பொறுக்கலாற்றாத வனிதையர்கள், அவன் தங்கள் அருகிலிருப்பதாகவும் அவனோடு தாங்கள் கலந்து விளையாடுவதாகவும் பாவனை செய்துகொண்டு, சிறிது ஆறி இருந்தார்கள் எனவும்; எம்பெருமானை அடைய விரும்புவோர், அவன் அவதாரங்களின் நீர்மையையும், அவன் கலியாண குணங்களையும் சேஷ்டிதங்களையும் நினைத்து நினைத்துப் பாடிக்கொண்டு இருத்தல் அவன் அருளை அடைதற்கு உதவி புரியும் எனவும் சில பெரியோர்கள் செப்பக் கோதையார் கேட்டார். இதைச் செவியேற்ற சூடிக்கொடுத்தார், தாமும் அங்ஙனமே போது போக்கக் கருதினார். இவருக்கு ஆயர்பாடியும், கண்ணன் உருவமும் காட்சியளித்தன. அவ்வமயம், காளிங்க மடுவிற்குச் சுற்றுப்புறமுள்ள ஓரறிவுயிரையும் தன் நச்சுத் தீயினால் தீய்த்துக்கொண்டிருந்த காளிங்கனை அழித்தற்

பொருட்டு அதன் உச்சியில் தன் திருவடியை நாட்டி நடித்த நடிப்பும், பல்லோரையும் வருத்திக்கொண்டிருந்த கம்ஸனைப் பாதங்களால் துவைத்த துவைப்பும், பசுக்கூட்டங்களின் பின் குழலூதி வரும் இனிமையும் ஒன்றன் பின் ஒன்ருக இவர் நினைவிற்கு வந்தன. ஈண்டு

"நீர்க்கரை நின்ற கடம்பை ஏறிக்
காளியன் உச்சி நட்டம் பாய்ந்து
போர்க்கள மாக நிருத்தஞ் செய்தான்."

—நா. தி. 12-5

"கஞ்சைக் காய்ந்த கருவில்லி" ஷை. 13-3

"தழையின் பொழில்வாய் நிரைப்பின்னே
நெடுமா லூதி வருகின்ற குழலின்" ஷை. 13-5

என்னும் திருமொழிகள் நினைவு கூர்தற்குரியன.

பின்பு இவர் சிந்தை ஆயர் மங்கையரிடம் சென்றது. அவர்கள் இயற்றிய மார்கழி நோன்பினைக் கருதிஞர்; அதன் முடிபையும், பயனையும் உணர்ந்தார். தாமும் அந்நோன்பை நோற்றுக் கண்ணனை அடைய இவர் மனம் கருதிற்று. இவர், "அந்தோ! யான் அக்காலத்தில் பிறக்கவில்லையே! அவ்வாயர் மங்கையருள் ஒருத்தியாக வேனும் இருக்கப் பெற்றிலேனே! நெடுந்தொலைவில் இருக்கும் அவ்வாயர்பாடிக்குச் செல்லும் வன்மையையும் பெற்றிலேனே! யாது செய்வேன்!" என மனங் கசிந்தார்; இறுதியில் அவ்வாயர் மங்கையர் செய்கையால் செய்த மார்கழி நோன்பை இவர் பாவனையால் இயற்றிப் பயன் பெறத் தொடங்கிஞர்.

## 6. நோன்பு—ஆர்வப் பெருக்கு

பண்டைக் காலத்தில் நம் தமிழ்நாட்டுப் பெண்கள் நல்ல நாயகனை அடைதற்பொருட்டும், நாடு செழித்தற் பொருட்டும் நோன்பு நோற்றல் வழக்கு. இவ்வழக்கம் மலையாள நாட்டில் இன்றும் நடைபெறுகிறதென்றும், பர்மாத் தேசத்தில் இப்பழக்கம் மிகச் சிறப்பாய் முன் நிகழ்ந்து வந்ததென்றும் சிலர் கூறுகின்றனர். ஓர் அழ கியபாவையை வைத்து இந்நோன்பைச் செய்தலாலும், பாவையைப் போன்ற பெண்கள் சேர்ந்து இதை இயற்றுவதாலும் இதற்குப் **பாவை நோன்பு** எனப் பெய ரமைந்தது எனக் கொள்ளலாம்.

ஆயர் மங்கையர் நோன்பைப்பற்றி இன்னொரு செய்தியும் வழங்குகிறது: கண்ணன் அவதரித்த காலத்தில் அவனுடனிருந்த ஆயர் மங்கையர் அவன் மாட்டு மிக்க அன்பு பூண்டிருந்தனர். அதைப் பொறாத மற்றையோர் அவ்விளம்பெண்களையும் கண்ணனையும் வேறுபடுத்தினர். அப்பிரிவு பெண்களைப் பெரிதும் வருத்திற்று. அவர்கள் மனநோய் அந்நாட்டில் பெய் யும் மழையைத் தடுத்தது. "குலப்பெண் வயிறெரிந் தால் கொடிச்சீலை பற்றி எரியும்," என்பது பழமொழி யன்றோ? மாரி பொய்க்கவே, நாடு வறண்டது. நாட் டின் வறட்சி உணவுப்பொருளைக் குறைத்தது. உணவுப் பொருளின்மையால், உயிர்கள் வாடித் துவண் டன. அதனால், நாட்டைத் துன்ப இருள் சூழ்ந்தது. பொதுவாகச் சிற்றின்பத்தில் விருப்பங்கொண்ட இரு வரைப் பிரித்தலே இன்னலுக்கிடமென்பது கண்கூடு. அங்ஙனமாயின், ஆயர் மகளிர்க்கும் கண்ணனுக்கும் ஏற் பட்ட கூட்டுறவு ஆன்ம பரமான்மாவைச்சார்ந்த

பேரின்பத் தொடர்பன்றே! அதைத் தொலைக்க முற்படின், அது பெருந்தீமையையன்றி வேறெதனை விளைக்கும்!

ஆகவே, வேறு வழியறியா ஆயர், மழையை அடைய வேண்டிக் கண்ணனைத் தலைவனாகக் கொண்டு நோன்பிழைக்கக் கன்னிகளை விடுத்தனர். அங்ஙனமே அம்மங்கையர் நோற்று மழையை வருவித்ததும் அன்றிக் கண்ணனையும் அடைந்து, தாம் விரும்பிய பேற்றைப் பெற்றனர் எனக் கூறப்படுகிறது.

எம்பெருமானை அன்றி இவ்வுலக மக்களுள் எவரையும் அடைய மனமற்ற நம் கோதையாருக்கு வழிகாட்டியாய் இருந்தது இந்நோன்பேயாகும். இவரும் இந்நோன்பையே இயற்றி, இறையை அடைய விழைந்தார். ஆயினும், அச்செயலைச் செயல் முறையில் செய்ய இவருக்கு இயலாமையின், தம் பாசுரங்களைக்கொண்டு அந்நோன்பைப் பாவனையினால் இயற்றினார். இது அநுகாரம் * எனப்படும்.

ஆயினும், கண்ணனை அடைய ஆயர் மங்கையர் இயற்றிய நோன்பிற்கும்,நம் அன்னையார்நோற்றநோன்பிற்கும் வேறுபாடு உளது. அவர்கள் நோன்பைப் பிற்காலத்தவர் அறிந்துகொள்ள ஒரு குறியும் காணப்பட்டிலது. இவர் நோன்போ, இன்றும் நம் மனக்கண்ணிற்குக் காட்சி தந்து, நாமும் அதை இயற்றக்கூடிய நிலையில் உள்ளது; அது மட்டுமன்றி, ஆயர் செய்கையையும் புலப்படுத்தாநிற்கிறது. நம் கோதையார் இந்நோன்பு இல்லத்தைப் பாசுரக்கற்களால் கட்டி நம்முன் நிறுத்தி உள்ளார்.

---

* அநுகாரம் என்பது, மற்றொருவர் செய்வதைப் போன்று தாமும் செய்வது.

இப்பாசுர் இல்லம் அமைந்திருக்கும் அழகமைப்பை நாம் நோக்க வேண்டும். ஆண்டாள் ஸ்ரீ வில்லிபுத்தூரை ஆயர்பாடியாகவும், தம்மை இடைப்பெண்டிராகவும், தம் தோழியரை ஆயர்மங்கையராகவும், வடபத்திரசாயி சந்நிதானத்தை நந்தகோபன் இல்லமாகவும், அதிலுள்ள பெருமானைக் கண்ணனாகவும் பாவனை செய்துகொண்டார். இடை மாதர் நோன்பு தொடங்கிய 'மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாளே' கோதையார் பாவனை நோன்பிற்கும் அமைகிறது. எம்பெருமான் கலியாண குணங்களாகிற தடாகத்தில் மூழ்கிப் பேறு பெற்றுய்தற்குத் தவம், யோகம், யாகம் ஒன்றும் வேண்டற்பாலதன்று; விருப்பம் ஒன்றே போதியதாகும். இதுவே சேதனரை உய்விக்கும் சிறந்த கருவி. இது வைணவத் தத்துவத்தின் உயிர் நிலை. இவ்வுயிர் நிலையை 'நீராடப் போதுவீர் போதுமினோ' என முதல் பாசுரத்திலேயே அமைக்கிறார். இவர் நோன்பிற்கு ஏற்படுத்திக்கொள்ளும் நியதிகளைக் காணவேண்டும். வருணன் மழை சொரிய இவர் ஏவல் கேட்டு நிற்கிறான். பத்து வித இயல்புடைய தோழிகளும், பொழுது புலர்ந்ததை அறிந்து, அன்னையாரிடம் வந்து சேர்கின்றார்கள். நந்தகோபன் அரண்மனை வாயிலில் பெண்களின் பெருங்கூட்டம் நிற்கிறது. வாயிற்காப்போர், நந்தகோபன், யசோதை, பலராமன் முதலியோர் ஒல்லென விழிக்கின்றனர். நப்பின்னை நங்கையாரின் அழகு என்னே! அவர் கைவளைகள் ஒலிக்கின்றன. அவர் கதவைத் திறந்து இவர்களுக்குக் கண்ணனைக் காட்டுகின்றார். கோதையாரின் மனத்திண்மை கண்ணனைச் சிம்மாசனத்தில் அமரச்செய்கிறது. சூடிக்கொடுத்தார் வாக்கால் கண்ணன் பல்லாண்டு பெறு

கிருன். இவர் கண்ணனிடம் எவற்றைப் பெற விரும்பினரோ, அவற்றைப் பெறுகிருர் ; கண்ணனேடு கூடியிருந்து மனங்களிக்கிருர். இவை யாவும் பாவனையினுலேயே நடைபெற்றன.

இந்நோன்பு இயற்றுங்கால் அன்னையாருக்கு ஆயர் உடையும், ஆயர் நடையும், ஆயர் பேச்சும் அமைகின்றன. இவை வியக்கத்தக்கனவல்ல. ஆயர் மங்கையர் மேல் வீசும் பால் மணமும் இவர்மேல் வீசிற்று என ஆசாரியர் இயம்புகின்ருர்; இவர் பாவனையின் திண்மை என்னே !

இதுதான் 'திருப்பாவை' என்னும் பெயர் பெற்றது. இதில் முப்பது பாசுரங்கள் அடங்கியுள்ளன. இம்முப்பதும் விலைமதிக்க இயலாத முப்பது மணிகள் எனக் கூறலாம். இந்நூல் சிறுமிகளின் மன இயல்பையும், போக்கையும், செயலையும், சொல்லையும் வடித்துக் காட்டும் நிழற்படமாய் அமைந்துள்ளது. விளையாட்டும், வேடிக்கையும் கலந்த சொற்களை இடத்திற்கேற்ப இவர் பெய்திருக்கும் தன்மை வியக்கற்பாலது !

**" மாமான் மகளே ! மணிக்கதவம் தாள்திறவாய் ;**
**மாமீர் ! அவளை எழுப்பீரோ ? உன்மகள்தான்**
**ஊமையோ ? அன்றிச் செவிடோ ? அனந்தலோ ?**
**ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ ? "**

—திருப்பாவை, 9

**" கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கருணனும்**
**தோற்று முனக்கே பெருந்துயில்தான் தந்தானே ? "**

— ஷை 10

**" எல்லே ! இளங்கிளியே ! இன்னம் உறங்குதியோ?"**
**" சில்லென் றழையேன்மின் நங்கைமீர் ! போதர்கின்றேன்."**

"வல்லை! உன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும் !"
"வல்லீர்கள் நீங்களே ; நானேதான் ஆயிடுக !"

—திருப்பாவை, 15

இவ்விறுதிப் பாசுரத்தில் வாக்கு வாதத்தின் அழகை நோக்குக !

தாம் அடைய விரும்பும் உயர் பொருளை மனத்திற் கொண்டு, அதன்பொருட்டு இவர் அடி கோலுதலும், இவர் சொல்லும் முறையும், முடிக்கும் முடிபும் கற்றோர் மனத்தைக்கவராமலிரா. இந்நூல், சிறுவர் விளையாட்டின் மூலமாகவே இறை அன்பைப் பெறுதற் பொருட்டே இயற்றப்பட்டதோ எனக்கருதற்கும் இடமுள்ளது. இதன் மேற்போக்கான பொருளைச் சிறுவர்க்குக் கூறுங்கால் அவர்களுக்கு உண்டாகும் மகிழ்வும் நகையும் உற்சாகமும் நேரே கண்டவரே அறிவர். அங்ஙனமாயின், இதன் உட்பொருளை அறிந்தவர்அடையும் தன்மைகள் நம்மாற் கூறுந்தரமுடையனவோ? ஏனெனில், இதன் பொருள் இத்துடன் முடிந்துவிட்டது என நாம் கருதுதல் கூடாது. இஃது எடுக்க எடுக்கக் குறையாத தெய்வ நிதி போன்று, ஆய ஆய அரும் பொருள்களை ஈந்துகொண்டே இருக்கும் ஒரு புதையலாகும். அவரவர் அறிவிற்கும் அநுபவத்திற்கும் தக்கவாறு பொருள் காணக்கூடிய பெட்பு இதற்கமைந்துள்ளது. ஞானியரும், கலைஞரும் உய்த்துணரக் கூடிய பொருள்களும் இதிலுண்டு.

இத்திருப்பாவையை ஆழ்ந்து நோக்கில், நம் கோதையார் வானக்கலை, சோதிடக்கலை, மருத்துவக் கலை, விஞ்ஞானக்கலை, ஓவியக்கலை முதலிய கலைகள் யாவற்றிலும் வல்லுநர் என்பது புலனாகும்.

இந்நூலுக்குப் **பெரியவாச்சான் பிள்ளை** மேற்போக்காகக் காணப்படும் பொருள் ஒன்றும் உள்ளூறக் காணப்படும் பொருள் ஒன்றும் ஆக இரு பொருள்களைச் செப்பிப் போந்தனர். இவை முறையே அந்யாபதேசம், ஸ்வாபதேசம் எனக் கூறப்படுகின்றன. பொன்னும் முத்தும் கலந்து இழைத்த இத்திருப்பாவை என்னும் அழகிய மணியாரத்தின் ஊடே ஊடே மாணிக்க மன்ன வைஷ்ணவத் தத்துவங்கள் பதிந்திருப்பதை அறிஞர் அறியாமலிரார். இது கண்ணன் உகந்த மார்கழி மாதத்தின் மணி விளக்காய் ஒளிர்கிறது. கோதையார் இப்பாசுரங்களால் நோற்ற நோன்பு இவர் காலத்தோடு நின்றுவிடவில்லை. இன்னும் ஒவ்வொரு மார்கழி மாதமும் தமிழ் நாட்டில் இந்நோன்பு நோற்கப்படுகிறது; இனியும், காலதத்துவம் நடையாடும் வரையும் நோற்கப்படுமென்பது ஒருதலை. இது நம் திருப்பாவைச் செல்வியாரின் தெய்வத்தன்மையையும், இவர் பாசுரங்களின் அருள் நிலையையும் அறிதற்கு ஓர் ஆடி என்னலாம். இது கோதையாரின் சரித்திரத்தை இயம்பும் இடமாதலாலும், இத்திருப்பாவையைப் பற்றி ஆராயும் இடமன்று ஆதலினாலும், இப்பொருளை இத்துடன் நிறுத்திக்கொள்வாம்.

## 7. காதற்பெருக்கே நாச்சியார் திருமொழி

இங்ஙனம் நம் தெய்வப்பாவையார் இந்நோன்பைப் பாக்களினாலேயே செய்து முடித்து, எம்பெருமானுக்கு இன்பம் ஊட்டினார். ஆயினும், இன்னும், தான் இவர் திருமொழியைக் கேட்டு உகக்கவும், இவர் காதல் வெள்ளம் கரைபுரண்டோடுவதை உலகோர் அறிந்து நலனுற

வும் கருதிய எம்பெருமான், இவரை உடனே ஆட்கொண்டிலர்; சிறிது காலந் தாழ்த்தனர். அக்காலத் தாழ்வு, அன்னையாரைப் பெரிதும் வருத்திற்று. என் செய்வார் பாவம்! கொழுகொம்பைக் காணுது அலையும் கொடி போன்று இவர் துவள்கிருர்! தம் நிலையை அறியும் மாந்தர் எவரையும் கண்டிலர். எங்கும் மெய்யல்லா வாழ்க்கையை மெய்யெனக் கொள்வோரும், உண்டி உடைகளைத் தேடித் திரிவோருமாகவே காணப்பட்டனர். ஆதலின்,

**" பண்டே உயிரனைத்தும் பங்கயத்தாள் நாயகற்கே**
**தொண்டா மெனத்தெளிந்த தூமனத்தார்க்கு—உண்டோ**
**பலகற்றும் தம்முடம்பைப் பார்த்துஅபிமா னிக்கும்**
**உலகத் தவரோடு உறவு ?" ***

என அருளாளப் பெருமாள் எம்பெருமானுர் அருளிச் செய்தவாறு அவரோடு உறவு கொள்ளவும் இவர் மனம் இசைந்திலது. இவர்தம் தந்தையாராகிய பெரியாழ்வாரும் இவர் ஆற்ருமையை அறிந்திலர். அவர் கோதையார் இன்னுர் என்றும், இவரிடம் திருமால் கொண்டுள்ள விருப்பம் இத்துணைத்தென்றும் உணர்ந்திருப்பினும், இவர் தம்மகளார் என்றும், சின்னஞ்சிறுமியார் என்றும் நினைத்திருந்தனரேயன்றி, இவருடைய மங்கைப் பருவத்தின் மாண்பும் காதல் பெருக்கும் ஆழ்வாருக்குப் புலப்பட்டில. பெற்ருேர் தம் மக்களை என்றும் குழந்தைகளாகவே மதித்திருத்தல் உலக வழக்கன்ருே!

**" பேசவும் தெரியாத பெண்மையின்**
**பேதையின் பேதைஇவள் "**

—பெரி - திரு. 3-7-7.

* ஞான ஸாரம், 13

57980
...அடிகள் நூல்...

எனப் பெரியாழ்வார் கூறுவதிலிருந்து அவர் கருத்தை அறியலாம்.

ஆயினும், இவரோடு அல்லும் பகலும் கலந்து உறவாடும் தோழியர் மட்டும் இவர் போக்கை ஒருவாறு அறிந்திருந்தனர். அவர்தாம் என் செய்வர்! இவர் விழையும் பொருள் சிறிது துன்பப்பட்டேனும் காணக்கூடிய இவ்வுலகப் பொருளன்றே! அறிஞராலும் அறிய முடியாத அரும்பொருளன்றே? இவர் காதலோ, சுக்கில பட்சச் சந்திரன் போன்று நாளுக்கு நாள் வளர்வதாயிற்று. எம்பெருமானைக் காணவேண்டுமென்னும் ஆர்வம் பெருகிய போது திருப்பாவை என்னும் நூல் வெளி வந்தது போன்று, எம்பெருமானை இப்போதே சேரவேண்டும் என்னும் காதல் உள்ளடங்காமல் மீதூர்ந்தபோது திருமொழி என்னும் இப்பிரபந்தம் வெளி வந்தது. இஃது ஒருநூற்று நாற்பத்துமூன்று பண்புடைய பாசுரங்களை உடையது. "ஒரு நூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே!" என்பதைநோக்குக. திருப்பாவை செங்காய் நிலையிலும், திருமொழி கனிந்த கனிநிலையிலும் உள்ளன. இக்கனிந்தநிலையன்றோ கோதையாரை எம்பெருமானிடம் கலந்து இன்பந் துய்க்குமாறு செய்தது! 'நாராயணனே நமக்கே பறைதருவான்' எனத் தேற்றேகாரத்தை இட்டுக்கூறி அவனையே உபாய உபேயமென உறுதி கொண்ட குடியில் பிறந்தவரும், திருப்பாவை முதற்பாசுரத்திலேயே இவ்வுண்மையை வாய்விட்டு வெளியிட்டவருமான நம் அன்னையார், இப்போது எந்நிலையில் உள்ளார்? இவருக்குத் திருமாலிடம் உதித்த ஊன்றிய அன்பு காதலாக மாறுகிறது! இதற்குப் போக்கு வீட்டை நோக்குகிறார்; தாமாகவே சென்று தேவதேவனை அடைதல் அருமை என இவருக்

குத் தோன்றிற்று. அதற்கு வழி யாதெனச் சிந்திக்கிறார். காதல் தெய்வம் இவர் முன் காட்சி அளிக்கிறது! இவர் உறுதி நிலை சிறிது மாறுகிறது. இத்தெய்வத்தைப் புருஷகாரமாகக் கொண்டேனும் எம்பெருமானைச் சேர்தல் வேண்டுமென்னும் ஓர் எண்ணம் தோன்றுகிறது. அடியார்க்கு எளியானை அடைய வேண்டும் என்னும் வேட்கையின் முன் வேறு தெய்வங்கள் காலில் விழுதல் கூடாது என்னும் கோட்பாடு உறுதி பெற்றிலது. இவர் விரும்பிய பொருள்தான் எளிமையுடையதோ? அன்றி இவர் காதல்தான் வரையறைப்பட்டதோ, சாஸ்திரத்தின்படி வேறு கடவுள் காலில் விழாமலிருத்தற்கு? கடலில் மூழ்கிக்கொண்டிருக்கும் ஒருவன், புல் போன்ற ஓர் அற்பப் பொருளைக்காணினும், "இதுவும் நம்மைக் கரை சேர்க்கும்," என மயங்கிப் பிடித்துக்கொள்வானல்லனே? அதைப் போன்றே இத்தெய்வப் பாவை யாரும் எம்பெருமானுகும் பகலவன் முன், மின்மினியெனத் தோன்றும் மன்மதன் காலில் விழுந்து, தம்மை இறையிடம் கொண்டு சேர்க்குமாறு வேண்டுகிறார். இவர் காதலித்த பொருளின் பெட்பு இவரை இங்ஙனம் ஆட்டி வைக்கிறது.

"முள்ளுமில் லாச்சுள்ளி எரிமடுத்து
முயன்றுன்னை நோற்கின்றேன் காமதேவா!
புள்ளினை வாய்பிளந் தானென்பதோர்
இலக்கினில் புகஎன்னை எய்கிற்றியே"

—நா-தி.1-2

"மாசுடை உடம்பொடு தலையுலறி
வாய்ப்புறம் வெளுத்தொரு போதுமுண்டு
தேசுடைத் திறலுடைக் காமதேவா!
நோற்கின்ற நோன்பினைக் குறிக்கொள்கண்டாய்

பேசுவ தொன்றுண்டிங்கு எம்பெருமான்
பெண்மையைத் தலையுடைத் தாக்கும்வண்ணம்
கேசவ நம்பியைக் கால்பிடிப்பாள்
என்னுமிப் பேறெனக் கருளுகண்டாய்.''

—நா-தி.1-8

ஆயர் மங்கையர் கண்ணனைப் பிரிந்திருக்குங்கால் அவர்க்குத் துன்பம் மேலிட, அத்துன்ப வெம்மை தணிதற்பொருட்டுக் குளிர்ந்த நீராடலாம் என்னும் எண்ணம் அவர்களுக்கு உதித்தது. உடனே அவர்கள் ஒருசுனைக்குச் சென்று நீராடுகின்றார்கள்; அவர்கள் கரையில் களைந்து வைத்த ஆடைகள் கண்ணனால் கவரப்படுகின்றன. அவற்றைத் தருமாறு அவனை இறைஞ்சுகின்றார்கள். அந்நினைவு நம் கோதையாருக்கும் தோன்றிற்று. அச்செயலைத் தாமும் செய்வதாகப் பாவித்து, மன்மதனை வழிபட்ட குற்றம் நீங்க, "மற்றவர்கள் காணு முன்னம் எங்கள் ஆடையைத் தா! நீ வானரங்களுக்குத் தலைவன் அல்லவோ? உனக்கு மரமேறுதல் அருமையோ? எங்களைத் துன்புறுத்தற்பொருட்டே நீ தோன்றினை போலும்! உன் அன்னை யசோதையோ, உன்னைச் சிறிதும் அடக்கி வளர்க்கக் கற்றாள் இல்லை. தீமையிலேயே உன்னை உருப்படுத்துகிறாள். இஃது எங்கள் பாவமேயாகும்! எங்கள் சேலைகளைத் தந்துவிடு," என எம்பெருமானை இறைஞ்சுகின்றார்.

"ஏழைமை யாற்றவும் பட்டோம்;
இனிஎன்றும் பொய்கைக்கு வாரோம்;
தோழியும் நானும் தொழுதோம்;
துகிலைப் பணித்தரு ளாயே.''

—நா-தி. 3-1

"வில்லா லிலங்கை யழித்தாய் !
நீ வேண்டிய தெல்லாம் தருவோம்;
பல்லாரும் காணுமே போவோம்
பட்டைப் பணித்தரு ளாயே." —நா-தி. 3-3

"இலங்கை அழித்த பிரானே !
குரக்கர சாவத றிந்தோம்
குருந்திடைக் கூறை பணியாய்." — ஷை 3-4

"அஞ்ச உரப்பாள் அசோதை
ஆணாட் விட்டிட்டி ருக்கும்
வஞ்சகப் பேய்ச்சிபா லுண்ட
மகிமையி லீ! கூறை தாராய்." — ஷை 3-9

மக்கள் தங்களுக்கு நேரும் நன்மை தீமைகளை அறிந்துகொள்ளக் குறி பார்த்தல் அக்கால வழக்கு. அதன்படியே நம் கோதையாரும் அழகிய மணவாளன் எப்போது வந்து தம்மை அங்கீகரிப்பான் என்பதை அறிய,

"தேவகி

மாம கன்மிகு சீர்வசு தேவர்தம்
கோம கன்வரில் கூடிடு கூடலே." — ஷை 4-3

எனக் கூடலிழைத்துப் பார்க்கிறார். அவ்வமயம் தம் வீட்டுப் புறக்கடையின் மலர் வனத்தில் பெடையோடு சேர்ந்து களித்திருக்கும் குயில் இவரால் பார்க்கப்படுகிறது. "இன்பத்தில் ஆழ்ந்திருக்கும் குயிலே, நீ என் கருளக் கொடியுடைப் புண்ணியனை வரக்கூவாய் ! அங்ஙனம் செய்யாவிடில், இக்காவிலிருந்து உன்னைத் துரத்திவிடுவேன்," என வற்புறுத்துகிறார்.

அன்னையாருக்கு எவ்வகையிலும் ஆறுதல் உண்டாயிற்றில்லை. இவர் உடல் வன்மை குறைகிறது ; இவருக்குக் கெடுதி ஏற்படுமோ என யாவரும் அஞ்சுகின்ற

னர். இவரால் உலகிற்குப் பல நன்மைகளையும் விளை விக்கக் கருதிய மாயன், நனவில் வந்து முகங்காட்டில னேனும், இவர் ஆற்றாமையைச் சிறிது தணிக்க இவர் கனவில் தோன்றினன். அச்சொப்பனத்தில் பூரணப் பொற்குடங்கள், தோரணங்கள், மங்கல வாத்தியங்களை யும், யானைமேல் பவனி வரும் பெருமானையும் காண் கிறார்; கண் விழிக்கிறார். கனவில் நிகழ்ந்தவற்றை நினைக்க நினைக்க அடங்கொணாத்துயரம் ஏற்படுகிறது. இவர் துயரைச் சிறிது குறைக்க எண்ணிய திருமால், தன் திருவாயில் இருத்திய பாஞ்சசன்னியத்தோடு உரு வெளித்தோற்றத்தில் சேவை சாதிக்கிறான். கோதை யார் அவன் திருவாய்ச் சுவையை அச்சங்கினிடம் கேட் டறிய விழைகிறார்; அஃது அடைந்திருக்கும் செல்வத் தையும் பேற்றையும் பெரிதும் புகழ்கிறார். இவர் எங் கும் பரந்து நிற்கும் மேகத்தைத் திருவேங்கடத்தில் அர்ச்சாவதாரமாய் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானி டம் தூது செல்ல விடும் செம்மை என்னே! காக்கணம் பூக்களும், காயா மலர்களும் அவன் நிறத்தைக் காட்டு கின்றன. கரிய குருவிகள் அவன் வரவைத் தெரிவிக் கின்றன. அன்னங்கள் அழகாய் நடிக்கின்றன. குயில்கள் இனிய பாடல்களை இசை கூட்டிப் பாடுகின்றன. இவர் வண்டு தாமரை முல்லைகளை நோக்கித் தமக்கொரு வழி காட்டுமாறு அவற்றைச் சரணடைகிறார்; இங்ஙனம் அழ கிய இயற்கைப் பொருள்களைக் கண்டு ஆற்றாது துன் புறுகிறார்.

சூடிக்கொடுத்தார் இங்ஙனம் ஆற்றாமையால் அலறுநிற்க, பெரியாழ்வாருக்கு இவர் மங்கைப்பருவம் மனத்திற்பட்டது. பரமன் பக்தியிலும், பாகவதர் அன்பிலும், கல்வி அறிவிலும் சிறந்து விளங்கிய தம்

மகளாரைக் காணுந்தோறும் ஆழ்வாருக்கு அளப்பிலா உவகை பூத்தது. தம் அருமை மகளாரின் உடலழகும் ஆன்மஞானமும் ஆழ்வாருக்கு ஆனந்தத்தைப் பெருக்கினவாயினும், மற்றொரு கவலை அவரை வருத்தாமல் இல்லை. "இவள் அறிவிற்கும், பக்திக்கும், அடக்கத்திற்கும் ஏற்ற நாயகனை யான் காணல் வேண்டுமே! இதற்கு என் செய்வது! எங்குச் செல்வது! இவளுக்குப் பொருத்தமானவனை யான் புணர்த்தாவிடில் இவள் வாழ்க்கை பயனற்றதாகுமே!" எனப் பன்னாட்கள் பல துறையில் சிந்தித்துக்கொண்டிருந்தார். ஆனால், அவருக்கு ஒரு முடிவும் தோன்றிலது. ஆதலின், தம் மகளார் விருப்பத்தையே கேட்டு முடிவு செய்வதெனத் தீர்மானித்தார்.

மண விஷயத்தில் மகளார் மனத்தை அறிதலே அறிவுடைமை எனத் தீர்மானித்த தந்தையார், மகளாரை அருகழைத்துத் தாம் அறிய விழைந்த பொருளைத் தெரிவித்தார். நாணத்தினால் சிறிது நேரம் கோதையார் வாயினின்று சொல்லொன்றும் வெளிவந்திலது. சிறிது நகை முகம், பாதங்களையே நோக்கும் கண்களில் ஒருவித அநுதாபப்பார்வை, மனத்தில் சிறிது கலக்கம்-இந்நிலையில் உள்ள கோதையாரின் அச்சத்தை ஆழ்வார் அறிந்தனர். இவரை உற்சாகப்படுத்தக் கருதிய பெரியார், "என் கண்மணீ, அச்சங்கொள்ளற்க! உன் நன்மையே நாடி நிற்கும் என்னிடம் உன் விழைவைத் தெரிவித்தற்கு நாணம் ஏன்? நீ திருமாலின் அருட்பிரசாதமன்றோ? உனக்கு உகப்பை உண்டாக்குவது, அக்கண்ணனுக்கே களிப்பை உண்டாக்குவதாகும் என்பதில் ஐயம் யாது? ஆதலின், உன் எண்ணத்தை முற்றுப்பெறச் செய்தலே என் கடமையாகும். உன்

நல்வாழ்வன்றே யான் நாடுவது! இவ்வுலகத்தில் அதனினும் இன்பம் எனக்கு வேறு யாது? ஆயினும், உன் வாழ்க்கையைத் தூய்மைப்படுத்தற்கு எம்பெருமான் உள்ளான். அதைக் குறித்துக் கவலைப்படுதற்கு அடியேன் யார்? யான் அவன் தூண்டிவிடும் கருவியாதலின், இங்குச் சிறிது அசைந்துகொண்டிருக்கின்றேன். எதற்கும் அஞ்சாமல் உன் நினைவைத் தெரிவிப்பாய்," என மகளாரை ஊக்கப்படுத்தினார். அது பொழுதும் நம் சூடிக்கொடுத்தாருக்குச் சிறிது தயக்கம் இருந்தது. சில விநாடிகள் மௌனமாயிருந்தார். பின்பு தழுதழுத்த மெல்லிய குரலுடன், "அடியாள் உலக மக்களை நாடவில்லை! திருமால் மாட்டே என் மனங்கனிந்துள்ளது! அவன் பெருமிதங்களே என் கண்முன் நிற்கின்றன! அவன் வீரம் என்ன! அவன் ஞானம் என்ன! சக்கரமேந்திய அவன் கரத்தின் அழகு என்ன! அவன் உறையும் இடங்களின் பெருமை செப்பற்பாலதோ! அவனிடமே என்னைச் சேர்ப்பிக்குமாறு உம்மை இறைஞ்சுகின்றேன்," என மன்மதனை வேண்டி நின்றது போன்றே பெரியாழ்வாரையும் இறைஞ்சுகிறார்,

**"வித்தகன் வேங்கட வாணன்என்னும்**
**விளக்கினில் புகஎன்னை விதிக்கிற்றியே."**

—நா-தி. 1-3

**"துவரைப் பிரானுக்கே சங்கற்பித்துத்**
**தொழுதுவைத் தேன்ஒல்லை விதிக்கிற்றியே—** ஷை. 1-4

இச்சொற்கள் ஆழ்வார் செவியுள் நுழைந்தன. இவர் ஊன்றிய எண்ணம், அவருக்கு மகிழ்வையும், வியப்பையும், கவலையையும் விளைவித்தது. ஏன்? எம்

பெருமான் கனவில், இவரைப்பற்றிப் பகர்ந்த உயர் நிலையிலேயே இவர் ஊன்றி இருத்தலை நோக்க அவருக்கு எங்ஙனம் ஆனந்தம் உண்டாகாமலிருக்கக் கூடும்? 'மாயப்பெருமான் நம் மகளை இச்சரீரத்துடன் யாங் ஙனம் ஏற்றுக்கொள்வான்!' என நினைக்குங்கால் அவ ருக்கு வியப்பு ஏற்படாதோ? 'அடியார்க்கு எளியன் நம் மகளை அங்கீகரிக்கவில்லையேல், இவள் கதி என்னாகும்!' எனக் கருதும்போது அவர் கவலையுறுது என் செய்வார்!

ஆயினும், ஆழ்வார் தம் மனத்தைச்சிறிது தேற்றிக் கொண்டு, மகளாரை விளித்து, "அம்மணி, வாத்ஸல்யம் முதலிய ஆறு குணங்களும் முற்றும் விளங்க அர்ச்சாவ தார மூர்த்தியாய் நூற்றெட்டுத் திருப்பதிகளிலும் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களுள் நீ யாரை அடைய விழைகின்றனை?" என வினவினர். ஸ்ரீமந் நாராயணனே எல்லாத் திவ்விய தேசங்களிலும் எழுந் தருளி இருப்பினும், ஒவ்வோர் இடத்தில் ஒவ்வொரு குணமும், ஒவ்வொருசெயலும் ஒவ்வொரு பெருமிதமும் சிறப்பாகப் பிரகாசிக்கும் என்பது அறிஞர் அறிந்ததே! இம்முறையில் மக்கள் தங்கள் தன்மைக்கேற்ற குணஞ் செயல்களைப் பெற்றுள்ள பெருமானை விரும்புதல் இயல்பு. இதை மனத்திற்கொண்டுதான் பெரியாழ்வார் தம் மகளாரை இங்ஙனம் கேட்கத் துணிந்தார்.

ஆழ்வார் கேட்ட கேள்வி ஆண்டாளைப் பெரிய ஆராய்ச்சியில் புகுத்திற்று. உடனே விடையளிக்க இவர் மனம் இசைந்திலது. இவர் நூற்றெட்டுத் திருப் பதிப் பெருமான்களின் குண சேஷ்டிதங்களையும் தம் தந்தையாரிடமிருந்து அறிய ஆர்வங் கொண்டார். இவர் விழைந்தவாறே ஆழ்வார் ஒவ்வொருவர் சிறப்பை

யும் அழகாகத் தம் மகளார்க்கு எடுத்தியம்பினர். அவ்வமயம் திருவேங்கடமுடையான், திருமாலிருஞ் சோலை நம்பிகளுடைய இனிய நலங்களை இயம்புங்கால் இவர் மனம் உருகிற்று. கண்களில் நீர் கான்றது. அப் பெருமான்களின் செயல்களும், பெருமிதங்களும் இவர் முன் நின்றன. அவனுள்ள இயற்கைப் பொருள்களுள் சில திருமாலிருஞ்சோலை நம்பியின் நிறத்தைக்காட்டின. இவர் கூடலிழைக்கும்போதும அந்நம்பியின் எண் ணமே இவருக்கு ஏற்பட்டது. அன்னையார் அப்பெரு மானுக்கே எல்லா உணவுப் பொருள்களையும் கொடுத் துத் தாமும் தொண்டு புரிய விரும்புகிறார். பின்பு திரு வேங்கடமுடையான் உயரிய குணங்கள் இவர் மனத் தைக் கவர்ந்தன. "அவன் குணங்களைப் பாடியேனும் என்ஆவியைக் காப்பேன்," என்றும், "அவன் ஒரு நாளே னும் என்னிடம் தங்கினுற்ருன் என் ஆவி தங்கும்," என்றும் அடியாள் விண்ணப்பத்தை அவனுக்குத் தெரி வியுங்கள் என்று மேகங்களை நோக்கி இயம்புகிறார். இந்நிலையில் இவருக்குப் பல உணர்ச்சிகள் உண்டா கின்றன.

**"வள்ளல் மாலிருஞ் சோலை மணாளனார்**
**பள்ளி கொள்ளும் இடத்தடி கொட்டிடக்**
**கொள்ளு மாகில்நீ கூடிடு கூடலே."**

**—நா - தி. 4-1**

**"நாறு நறும்பொழில் மாலிருஞ் சோலை நம்பிக்குநான்**
**நூறு தடாவில் வெண்ணெய்வாய் நேர்ந்து பராவிவைத்தே**
**நூறுதடா நிறைந்த அக்கார அடிசில் சொன்னேன் [ன்**
**ஏறு திருவுடையான் இன்று வந்திவை கொள்ளுங்கொலோ"**

**—நா - தி. 9-6**

" சங்கமா கடல்கடைந்தான்
தண்முகில்காள்! வேங்கடத்துச்
செங்கண்மால் சேவடிக்கீழ்
அடிவீழ்ச்சி விண்ணப்பம்:
கொங்கைமேல் குங்குமத்தின்
குழம்பழியப் புகுந்துஒருநாள்
தங்குமேல் என்னாவி
தங்குமென் றுரையீரே." —நா-தி. 8-7

என்னுமிப்பாசுரங்கள் இங்கு நினைவு கூர்தற்குரியவை.

இறுதியில் ஆழ்வார் நூற்றெட்டுத் திருப்பதிகளுள்ளும் உயர்வுற்றதும், பழைமையானதுமான அரங்கத்தில் எழுந்தருளி இருப்பவனும், பெரிய பெருமாள், நம்பெருமாள், திருவரங்கன் என்னும் திருநாமங்களைப் பெற்றவனும், ஆழ்வார் பலர் மங்களாஸாசனத்திற்கு அருகனானவனும், பட்டர் முதலிய ஆசாரியர்களின் தொண்டுக்கு இலக்கானவனும், திருமங்கையாழ்வார் எடுத்த அன்பிற் சிறந்த அரணில் அமைந்தவனும், ஏழு அரண்களுக்குள் அரசனென வீற்றிருப்பவனும், உலகாசிரியர் எதிராஜரைக் கைங்கரியத்தில் ஈடுபடுத்தியவனும், பிள்ளை உறங்காவில்லி தாசரைத் தன் கண் அழகில் ஈடுபடச் செய்தவனும், இன்னும் பல சீர்மைகள் வாய்ந்தவனுமான திருவரங்கேசனின் சிறப்பியல்புகளை எடுத்தியம்பினார். யாவர் மனத்திலும் உறையும் எம் பெருமானே அழகராகவும், திருவேங்கடமுடையானாகவும் சேவையளித்தபோது அளவோடு நின்ற ஆர்வம், திருவரங்கனைத் தோன்றியபோது, அணை கடந்து பாய்ந்தது. அவனுடைய நாகணை, அழகு, அவனுள்ள காவிரி நதி திண்மதில்கள் யாவும் இவருக்குக் காட்சி அளித்தன. சிறிது நேரம் இவர், தயங்கி நின்றார்.

இவர் வாய் துடித்தது; கண்கள் சுழன்றன. 'இப்போதே திருவரங்கேசனைச் சென்றடைய வேண்டும்' எனக்கருதினர். ஆர்வம் பெருகிற்று. 'அந்தோ! யான் எப்போது செந்தாமரைக் கண்ணரான அவ்வெம் பெருமானைச் சென்றடைவேன்! இன்னும் எத்தனை நாட்கள் இங்ஙனம் தரிப்பேன்! களைகண் அற்ற என் அழகு வளை முதலிய பலவற்றையும் கவர்ந்த அவர் என் உடலையும் கொள்ளை கொள்வார் போலும்!' எனப் பலவாறு கருதினர். கண்ணீர் ததும்பிற்று. இவ் வாற்ருமையை ஆழ்வார் அறியாவண்ணம் மறைக்கவும் இவரால் இயலவில்லை. தம்மாற் கூடியவரை துயரை உள்ளடக்கினர்; ஆயினும், தந்தையாருக்குத் தம் எண்ணத்தை ஒருவாறு தெரிவிக்க வேண்டுமே! ஆதலின்,

**" தீமுகத்து நாகணைமேல் சேரும் திருவரங்கர்**
**ஆமுகத்தை நோக்காரால் அம்மனே அம்மனே!"**

—நா-தி. 11-1

**" மச்சணி மாட மதிளரங்கர்**
**என்னுடைய பெய்வளைமேல்**
**இச்சை யுடையரேல் இத்தெருவே போதாரே."**

ஷை 11-4

**" காவிரி நீர்**
**செய்ப்புரள வோடும் திருவரங்கச் செல்வனர்"**

ஷை 11-6

எனத் தாம் திருவரங்கனையே அடையக் கருதுவதை அவரிடம் வெளியிட்டார்.

இங்கு வட நாட்டுச் சுயம்வரமுறை நினைவிற்கு வருகிறது. ஒரு மன்னன் அருமைப் புதல்வி, தன் தோழிகளாலும், அரச அவைக்கு வரும் தூதுவர்களாலும், அந்தந்த

நாட்டின் வரலாற்றுச் சரிதங்களாலும், தன் தந்தையாலும் வேறுநாட்டு மன்னர்களின் கல்வி, செல்வம், அறிவு குணம், குலம், வீரம் முதலியவற்றையும் அவர்கள் முன்னோர்களின் போக்குகளையும் உணர்ந்திருப்பாள். அவர்களுள் சிலரே சிறந்தவராக அவளுக்குத் தோன்றுவர். அச்சிலருள்ளும் சிறந்த ஒருவரையே மணக்க உறுதி கொண்டு காலத்தை நோக்கிக்கொண்டிருப்பாள். ஒரு போது அவள் தந்தை, அவளுக்குச் சுயம்வரம் எனப் பறை சாற்றி, மன்னர் யாவரையும் தன் நாட்டிற்கழைப்பான். யாவரும் திரண்ட பின்பு அவள் தோழி அம்மன்னர் இடையில் அவளை அழைத்துப் போந்து, ஒவ்வொருவருடைய குணம், குலம், வீரம் முதலிய யாவற்றையும் விளக்குவாள். இங்ஙிலையில் தான் குறித்துள்ள மன்னர் வருங்கால், தோழி இயம்பும் செய்திகளைக் கருத்துடன் செவி ஏற்று அவர்தம் முகச்சாயல், தோற்றம், கண்ணோட்டம் முதலியவற்றை நன்கு கூர்ந்து நோக்கி, அவருள் சிறந்தவரும் தன்னியல்பிற்கு ஏற்றவருமான ஒருவரையே வரித்து மணமாலை இடுவாள். அரசிளங்குமரி தன் மனத்திற்கிசைந்த மணாளனைத் தானே தேர்ந்து வரிப்பதால் இதற்குச் '**சுயம்வரம்**' என்பது பெயராயிற்று. இதுவே வடநாட்டுப் பண்டை மணமுறை. இதைத் **தமயந்தி, சந்திரமதி, திரௌபதி** இவர்கள் வரலாறு விளக்கும்.

இங்ஙனமே பெரியாழ்வார் நூற்றெட்டுத் திருப்பதி எம்பெருமான்களைப்பற்றிப் பகரினும், அவருள் திருவேங்கடத்தான், திருமாலிருஞ்சோலை அழகன், திருவரங்கன் ஆகிய மூவரே இவருக்குச் சிறந்தவராய்த் தோன்றினர். ஆனால், மனக்கண்ணிற்குக் காட்சியளித்த இம்மூவருள் இவர் திருவரங்கநாதனையே தேர்ந்தெடுத்

தார். (நம் அன்னையார் வரிப்பு முற்றும் வடநாட்டுக் கொள்கையையே சார்ந்தது எனக்கூறுதற்கு இடமில்லை. தமிழ் நாட்டிற் பிறந்து வளர்ந்து, வண்டு தமிழ்ப் பாட்டிசைக்கும் மலர்களையே சூடி, தமிழ்ப் பாக்களினாலேயே இறைவனை வழுத்தி, தமிழ் நாட்டு எம்பெருமானையே சேரக் கருதிய கோதையாரின் மணம், தமிழ் வாழ்க்கையையே முற்றும் பொருந்திய காதல் மணத்தைச் சார்ந்தது எனக் கூறுதலே பொருத்தமுடையதாகும்.)

மானைத் துரத்தி வரும் ஒருவனும், தினைப்புனம் காவல் புரியும் ஒருத்தியும் ஒருவரை ஒருவர் காண்கின்றனர். பருவம், உருவம், அறிவு, பண்பு முதலியவற்றால் ஒத்த அவ்விருவர் மனமும் கண்களும் ஒன்றுபட்டு உறவாடுகின்றன. இருவருக்கும் தெய்வக்காதல் ஏற்படுகிறது. (கொடுப்போரும் அடுப்போரும் இன்றி, இருவரும் பிறர் அறியாவாறு களவு ஒழுக்கத்தை மேற்கொள்ளுகின்றனர்; பின்பு யாவரும் அறிய மணம் புரிந்து, கற்பொழுக்கத்தில் நிலைபெறுகின்றனர். இதுவே '**காதல் மணம்**' எனப்படும். இதை மனத்திற் கொண்டு நம் அன்னையார் மணத்தை ஆராய்தல் வேண்டும்.

கோதையார் சிற்றில் இழைத்து விளையாடுகிறார். அதனை அழிக்குமுகத்தான் திருமால் முகங்காட்டுகிறான். அவனைக்கண்டு பெருங்காதல் கொள்ளுகிறார். கனவில் கலந்து உறவாடும் புண்ணியமும் இவருக்கு வாய்க்கிறது. ஏன் இதைக் களவொழுக்கம் எனக்கூறுதல் கூடாது? தம் களவொழுக்கத்தைக் கைவிட்டு யாவரும் அறிய அவனோடு சேர்ந்திருக்கக் கருதிய கன்னியார், தம் காதலை யாவரும் அறியுமாறு பறவை, மேகம் முதலியவற்றைத் தூதுவிடலை மேற்கொள்ளுகிறார். இஃதொன்

றுமோ? தம் காதலனிடம் தம்மைக் கொடுபோய் விடு மாறும், அவன் தொடர்புள்ள பொருள்களால் தம்மை ஆற்றுமாறும் தோழியரிடமும் உறவினரிடமும் மன்று டுகிறார்; இறுதியில் அத்திருமாலோடு கலந்து இன்பந் துய்க்கிறார். ஆயினும், திருமாலையே அடைய வேண்டும் என்னும் உறுதியுடன் தோன்றி, அவனையே காதலித் துச் சேர்ந்த நம் ஆண்டாளின் காதற்போக்கை உலக நிலையில் புலவரால் அகப்பொருள் இலக்கணம் என வகுக்கப்பட்டதுடன் ஒப்பிட்டுக் கூறுதல் யாங்ஙனம்? இது தனிப்பட்டதென்றும், ஆன்ம பரமான்மாக்களின் சேர்க்கையாகும் இது ஞானிகளுக்கே உரித்தானதென் றும், பிரபந்நருக்குப் பெருவிருந்தளிக்கக் கூடியதென் றும் இயம்புதலே தகுதியுடையதாம்.

தக்கபருவம் அடைந்த நம் கோதையார் தம் தந்தை யார் திருமாளிகையின் பின்புறம் அமைந்த தோட்டத் துடன் நில்லாமல், தம் தோழியருடன் வெளிப்புறம் உள்ள மலர் வனம் செல்கிறார்; அவண் அழகிய மலர் களையும், கொடிகளையும், குன்றுகளையும், குயில் மயில் போன்ற பல அழகிய பறவைகளையும் காண்கிறார். அதுபோது உலகப்பெண்டிர் என் செய்வர்! அவற்றின் மேலெழுந்த அழகாலும், மணத்தாலும், இனிய குரலா லும், அழகிய சாயலாலுமே கவரப்பட்டுத் தம் வசம் இழந்து இன்பந் துய்ப்பரல்லரோ? ஆனால், நம் தெய்வப் பாவையரோ, அத்துடன் நின்றுவிடவில்லை. இவ ருடைய கூர்ந்த நோக்கமும், ஆராய்ச்சியும், சமயப் பளிங்கும் இவரை எங்கு அழைத்துச் செல்கின்றன? அவ்வியற்கைப் பொருள்களின் உள்ளுறை பொருளி னிடத்தேயாகும். இவரது கூர்ந்த நோக்கும், ஆராய்ச்சி யும் இவரைச் சிறிது தொலைவு அழைத்துச்சென்று

நிறுத்துகின்றன. சமயப்பளிங்கு இவருக்கு எவற்றைப் பிரதிபலித்துக் காட்டுகின்றது? இயற்கைப்பொருளில் காணும் அவ்விறைவனின் உருவம், நிறம், வார்த்தை ஆகியவற்றையே காட்டுகிறது. சூடிக்கொடுத்தார் இயற்கைப் பொருள்களைக் கேவலம் அஃறிணை என நினைத்திலர்; இயற்கையின் உயிரையும், அவ்வுயிர்க்குயிராய்த் திகழும் இறைவனையும் இவர் காண்கின்றனர். இயற்கை, இறைவனுக்கு உடலென்பதே இவர் கருத்து.

"கருவிளை ஒண்மலர்காள்! காயா மலர்காள்!
திருமால் உருவொளி காட்டுகின்றீர்."
—நா. தி. 9-3

"பைம்பொழில் வாழ்குயில்காள்!
மயில்காள்! ஒண் கருவிளைகாள்!
வம்பக் களங்கனிகாள்!
வண்ணப்பூவை நறுமலர்காள்!
ஐம்பெரும் பாதகர்காள்!
அணிமாலிருஞ் சோலை நின்ற
எம்பெரு மானுடைய
நிறமுங்களுக்கு என்செய்வதே!' ௸ 9-4

"சோலை மலைப்பெருமான் துவரா பதியெம் பெருமான்
ஆலி னிலைப்பெரு மான்அவன் வார்த்தை உரைக்கின்றதே!"
௸ 9-8

என்னும் பாசுரங்களை நோக்குக.

இங்ஙனம் இவர் இயற்கையில் இறையைக் காணினும், அவன் தமக்கு நேரே தோன்றுதல், வார்த்தை சொல்லுதல், தமது ஆற்ருமையைப் போக்குதல் இன்றி, மறைந்திருத்தல் இவர் நெஞ்சத்தைப் பெரிதும்

புண்படுத்திற்று. "எம்பெருமானைக் காணல் வேண்டும்! அவனோடு சேர்ந்து இறவாத இன்பம் துய்த்தல் வேண்டும்," என்னும் பேரவாவை எத்தனை நாள் உட்பொதிந்து துன்புறுவர்! ஆதலின், "நம்மால் ஆற்ற இயலாத இவ்வின்னலை வெளிப்படுத்தித்தான் ஆகவேண்டும்! இன்றேல், இதற்கொரு போக்கிடம் கிடைத்தல் அருமை. இதுகாறும் ஒருவரும் அறியா வண்ணம் மறைத்து வைத்தது போதும்! நம்மால் தாங்க இயலாதபோது நாம் என் செய்வோம்? வாய்விட்டுக் கூறுவிடினும் நம் நிலையிலிருந்தே நமது எண்ணத்தைப் பலர் அறிந்துள்ளனர். ஆதலின், நாம் நாணித்தான் பயன் என்னை?"

**" நாணி யினியோர் கரும மில்லை**
**நாலய லாரும் அறிந்தொழிந்தார்."** —நா-தி. 12-2

எனத் தீர்மானித்து, தோழியரையும் தாய்மாரையும் நோக்கித் தாம் காதலித்த உயர்பொருளையும், தம் மாறுபாட்டையும் வெளியிடக் கருதிய இவர்,

**" எழிலுடைய அம்மனைமீர்! என்னரங்கத் தின்னமுதர்**
**குழலழகர் வாயழகர் கண்ணழகர் கொப்பூழில்**
**எழுகமலப் பூவழகர் எம்மானார் என்னுடைய**
**கழல்வளையைத் தாமும் கழல்வளையே ஆக்கினரே!"**
ஷை 11-2

என வெளியிட்டனர்.

இன்னும், "என் கைவளைகள் எங்குச் சென்றன? அவற்றைக் கவர்ந்தவர் யார்? அவை என்னிடம் தெரிவித்தேனும் சென்றனவா? அவை என்னை ஒரு பொருளாகவே மதித்திலவே! செங்கோல் செலுத்தும் செல்வரை-மகானுபாவரை—அத்துணைச் சீரியரை நாடியன்றோ அவை சென்றன! அவற்றைக்கொண்டு அவர்

குறைகள் நிறைவுறுமோ? இங்ஙனமாயின், என்னிடமிருந்து கொள்ளை கொண்ட வளைகளாலேனும் அவர் நிறைவு பெற்றுப் போகட்டும்! அவரே சுகமாக வாழட்டும்!

> **" செங்கோ லுடைய திருவரங்கச் செல்வனார்**
> **எங்கோல் வளையால் இடர்தீர்வ ராகாதே "**
>
> —நா-தி. 11-3

"நாள் செல்லச்செல்ல என் கவலை பெருகுகின்றது. உணவிலோ, உறக்கத்திலோ என் மனம் சென்றிலது. ஊணும் உறக்கமுமின்றி எத்தனை நாட்களுக்கு என் உடல் வன்மை பெற்றிருக்கும்! ஓரிடத்திலிருந்து வேறோரிடத்திற்குக் கால் எடுத்துவைக்கவோ, அன்றி இருந்த இடத்திலிருந்து எழவோ வன்மையற்றுள்ளேன். இன்னும் சின்னாட்களில் வார்த்தை சொல்லவும் வன்மையற்றவள் ஆவேன்போலும்! அவரை அடைதற்குக் கைம்முதல் ஒன்றுமற்ற எனக்கு இவ்வுடல் ஒன்றுதான் கைம்முதலாயுள்ளது. இதையும் விரைவில் கொள்ளை கொள்வார் போலும்!"

> **" கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார்,**
>
> **..................................**
>
> **எப்பொருட்கும் நின்றார்க்கும் எய்தாது நான்மறையின்**
> **சொற்பொருளாய் நின்றாரென் மெய்ப்பொருளும்**
> **கொண்டாரே!"**
>
> டை 11-6

> **" நல்லார்கள் வாழும் நளிரரங்க நாகணையான்**
> **இல்லாதோம் கைப்பொருளும் எய்துவா னொத்துளனே."**
>
> டை 11-5

எனக் கதறுகிறாள்.

தோழியரும் இவருடன் சேர்ந்து வருந்துபவராய் முடிந்தனர். "அந்தோ! என் செய்வேன்! எனக்கு நலம் புரிபவரும் துன்பத்தில் ஆழ்ந்தனரே! யான் இயற்றிய கன்மம் யாதோ! என் நிழல் என்னோடு நில்லாமல் என்னைச் சூழ்ந்தவரையும் பின் தொடர்கிறதே! எனக்குமுன் அவர்களல்லவா சோர்கின்றார்கள்! என் இன்னலை யார் போக்க வல்லார்! எனக்குத் துணை புரிபவரும் இல்லாமற் போயினரே!" எனக் கலுழாநின்றனர். பின்பு தோழியருள் சிலர் தேறி, இவருக்கு முகங் காட்டாநின்றனர். அவர்களை நோக்கித் திருவரங்கன் பல உருவங்களுடன் எழுந்தருளியிருக்கும் எந்தத் திவ்விய க்ஷேத்திரத்திலேனும் தம்மை அழைத்துக்கொண்டு போய் விடுமாறு பணிவுடன் இறைஞ்சுகிறார்.

**"காலிகளுய்ய மழைதடுத்துக்**
**கொற்றக் குடையாக வேந்தி நின்ற**
**கோவர்த் தனத்தென்னை உய்த்திடுமின்."**

—நா-தி. 12-8

**"கூட்டுயர் மாடங்கள் சூழ்ந்து தோன்றும்**
**துவரா பதிக்குஎன்னை உய்த்திடுமின்."**

ஷை 12-9

என்னும் பாசுரங்கள் இங்கு நினைவு கூர்தற்குரியன.

இவர் வேட்கை மிகுதியினால் இங்ஙனம் உரைப்பினும், அருமைத் தலைவியரை எங்கேனும் ஓரிடத்தில் கொடுபோய்த் தன்னந்தனியே விட்டு வரத் தோழியர் மனம் இசையுமோ? அச்செயலை உலகந்தான் ஏற்றுக் கொள்ளுமோ? ஆயினும், இவர் நிலையோ, அவர்கள் நெஞ்சை உருக்குகின்றது. என் செய்வார் பாவம்! முத

வில் அதற்கு ஒரு விடையும் பகர அவர்களால் இயல வில்லை. சிறிதுநேரம் சிந்தித்தாராய், "எங்கள் குலக் கொழுந்தே, நீ இங்ஙனம் துரிதப்படுதல் கூடாது! பெண்மையைப் பேணிக்கொளல்வேண்டும்! நாட்டார் பழிப்பார். அவன் விரைவில் வந்து உன்னை ஆட் கொள்ளுவான்;" நீ வருந்தற்க என ஆறுதல் வார்த் தைகள் பல புகன்றனர். அவ்வார்த்தைகள் இவரைப் பெரிதும் துன்புறுத்தின. "என் இயல்பிற்கு முற்றும் மாறுன உங்களால் இஃதெங்ஙனம் அறியஇயலும்! மாதவர்பால் மால் கொண்டுள்ள எனக்கு நீங்கள் உரைப்பன யாவும், ஊமையரும் செவிடரும் சேர்ந்து பேசிக்கொள்வன எங்ஙனம் பயனற்றனவோ, அங்ங னமே வீணுகும். ஐயோ! என் நிலையை நீங்கள் அறிந் திர்களில்லையே! இன்னும் யாரிடம் சென்று என் குறை யைக் கூறுவேன்! என் துன்பம் தொலைவதுதான் யாங் ஙனம்? தலைக்குமேல் வெள்ளம் புரண்டபிறகு காத்தல் எப்படி? என் நிறம் வேறுபட்டது! நெஞ்சம் சோர்ந்தது! அறிவும் சுருங்கியது! இந்நிலையில் யான் யாது செய்ய வல் லேன்? நீர் என் துன்பத்திற்குப் பரிகாரம் தேடவில்லை யேல், யான் தனியே சென்றேனும் அவனை அடைய வேண்டி வரும்! அவ்வமயம், 'தந்தையும் தாயும் மற்றோரும் இருக்க இவள் தனிவழிப் போயினுள்!' என்னும் பழிப்பு ஏற்படும்! பின்பு அப்பழியைப் போக்குதற்கு முடியாது!" எனக் கதறுகிறுர். ஈண்டு,

**"மற்றிருந் தீர்கட்கு அறிய லாகா**
**மாதவ னென்பதோர் அன்பு தன்னை**
**உற்றிருந் தேனுக் குரைப்ப தெல்லாம்**
**ஊமைய ரோடு செவிடர் வார்த்தை."**

—நா-தி. 12-1

" தந்தையும் தாயும்உற் றாரும் நிற்கத்
தனிவழி போயின ளென்னும்சொல்
வந்த பின்னைப் பழிகாப் பரிது
மாயவன் வந்துருக் காட்டு கின்றான்."

—நா-தி- 12-3

என இயம்பும் நம் அன்னையாரின் மொழிகளை நோக்குக!

தாமே சிறிது நேரம் சிந்தித்துத் தம் நெஞ்சைத் தாமே தேற்றிக்கொள்ளுகிறார். இந்தக் கையற்ற நிலையில் இவருக்கு ஓர் எண்ணம் உதிக்கிறது. "நான் நாயகரை அடைதற்கு இங்ஙனம் விரைந்து நிற்கலாமா? இது குலப் பெண்களுக்கு அழகாகுமா? யான் உயர்குல திலகரான பெரியாழ்வார் குலத்திலுதித்த பெண் கொடியல்லவோ? பெண்களுக்கு அடக்கமும், பொறுமையும் இன்றியமையாதன அல்லவா? பெற்றோர் என்னை ஒரு நாயகனிடம் ஒப்புவிக்கு மட்டும் என் காதலை மறைத்துறைதலன்றோ அறிவுடைமை! இன்றேல், என் பெற்றோர்க்கும் என் குலத்திற்கும் இழிவு ஏற்படாதோ! எப்பெண் என்னைப் போன்று துடித்தாள்? யான் விரும்பியது யாரை? உலக ரக்ஷகரான திருமாலையல்லவா? அவர் வந்து என்னை ஏற்குமட்டும்,

" துரிசற்றுச்
சாதகம்போல் நாதன் றனதுஅருளே பார்த்திருத்தல்
கோதி லடியார் குணம்."

—ஞானஸாரம், 2

என்னுமாறு அவர் அருளை நோக்கியிருத்தல் என் கடமையன்றோ!" எனச் சிறிது போழ்து தம் மனத்தைத் தேற்றியிருந்தார்.

கட்குடித்தவர் அக்குடியினுல் உண்டாகும் களிப்பை எத்துணைப்போது மறைத்து வைத்தல் கூடும்! அது மறந்தேனும் வெளிப்பட்டுவிடும் அல்லவா? காதல் களிப்பும் அவ்வினத்தைச் சார்ந்தது தானே? ஆகவே, ஆரணங்கின் அன்பு அணை கடந்தது. இவர் பிறருக்கு அஞ்சிய அச்சமெல்லாம் பறந்தோடியது! என் செய்வார்! இவரால் தாங்க முடியவில்லை. பழைய படியே மனந்தடுமாறலானுர். " அன்னைமீர், உங்களுக்கும் எனக்கும் நலமீயும் இன்னுமோர் உபாயத்தைச் சொல்லுகிறேன்! யான் இதற்கு முன்பு இயம்பிய வண்ணம் என்னை என் தலைவர் உகந்த இடத்தில் நீர் கொடுபோய்ச் சேர்க்கவில்லையேனும், அவர் தொடர்பு வாய்ந்த பீதாம்பரமேனும், திருத்துளவமேனும், கால் துகளேனும் எனக்குக் கொடுவந்து கொடுங்கள். அவை என் மனப்புண்ணை ஆற்றும் மருந்துகளாகும். நீங்கள் இயற்றும் மற்ற உபசாரங்களுள் ஒன்றும் இப்போது எனக்குப் பயனளியாது.

"பெருமானரையில் பீதக
வண்ண வாடை கொண்டென்னை
வாட்டம் தணிய வீசீரே!" —நா-தி. 13-1

"கோலால் நிரைமேய்த்து ஆயனாய்க்
குடந்தைக் கிடந்த குடமாடி
நீலார் தண்ணந் துழாய்கொண்டென்
நெறிமென் குழல்மேல் சூட்டீரே!"

ஷை 13-2

" போட்கன் மிதித்த வடிப்பாட்டில்
பொடித்தான் கொணர்ந்து பூசீர்கள்."

ஷை 13-6

ஒருவர் எப்போதும் துன்பத்திலேயே துவண்டு கொண்டிருக்க இயற்கை இடந்தாராதன்றே? இம் முறையில் இவருக்கு என்றுமில்லாத ஓர் எண்ணம் உதித்தெழுந்தது. அஃதென்ன? "சொல் தவறாத பெரு மான், முன் பெரியாழ்வார் சொப்பனத்தில் தோன்றி, 'யான் இவளை அங்கீகரிப்பேன். இவளுக்காக நீர் கவ லாதீர்,' என வாக்களித்திருக்கின்றாரல்லவா? அவ் வார்த்தைகள் இன்னும் ஆழ்வார் செவியிலிருந்து மறைந்து விடவில்லையே! இறைவர் யாருக்குப் பொய்ப் பினும், பக்தி பரவசராகிய ஆழ்வாருக்குப் பொய்ப் பாரோ? தம்மை விரும்புவாரைத் தாம் விரும்புவார் என்னும் சொல் பெருமானிடமே பொய்க்குமாயின், பின்பு யார்தாம் அதை நிறைவேற்றுவர்! ஆதலின், நிச்சயமாகத் தம்மை வந்து ஆட்கொள்ளுவார் எனக் கருதுகிறார்.

**" செம்மை யுடைய திருவரங்கர் தாம்பணித்த**
**மெய்ம்மைப் பெருவார்த்தை விட்டுசித்தர் கேட்டிருப்பர்**
**தம்மை யுகப்பாரைத் தாமுகப்பர் என்னும்சொல்**
**தம்மிடையே பொய்யானால் சாதிப்பா ராரினியே!"**

—நா. தி. 11-10

எனச் செப்பிச் சிறிது ஆறியிருக்கிறார்.

இங்ஙனம் கோதையார் இடையறாது எம்பெரு மானைப்பற்றியே அரற்றிக்கொண்டிருத்தலை எத்தனை நாள் ஆழ்வார் அறியாமலிருக்கக்கூடும்? இவர் திரு மாலிடம் ஆர்வம் கொண்டு செய்யும் செயல்களும் இயம்பும் சொற்களும் அவருக்குத் தெரிந்தன. தம் மகளாரின் ஞானமும், இவர் பரம்பொருளை அடைய அவாவும் சீரிய பண்பும் ஆழ்வாருக்கு மகிழ்வை ஈந்தனவாயினும், இவர் அரற்றலும் மனத்தாங்

களும் அவரால் தாங்க முடியவில்லை. "எம்பெருமான் இவளை அங்கீகரிப்பனேல், இவ்வருமை மகள் நம்மை விட்டுப் பிரிவளே!'' எனநினைக்குங்கால் அவர் நெஞ்சம் பகீரென்றது. " அந்தோ! என் மகள் ஒன்றும் அறியாத பேதை; சின்னஞ்சிறுமி; என் மடியில் கிடந்து வளர்ந்த குழந்தை; என் மார்பில் தவழ்ந்து மகிழ்ந்த செல்வி; திருத்தமாக உடுக்கவும் தெரியாள்; உலகப் போக்கில் பழகி அறியாள். இவளை யான் எத்துணை அன்புடன் வளர்த்தேன்! இவளுக்குச் சீர்மையாக மணம்புரிந்து என் இல்லிலேயே இருத்தி உவக்கக் கருதி னேனே! என் விருப்பம் முற்றுப் பெறுவதாகத் தோன்றிலதே! என் கைக்கு அடங்கிய இவள் என் மனத்திற்கும் அடங்காமல் போய்விட்டனளே! என் நிலையிலும் இவள் நிலை உயர்ந்துவிட்டதே! உலகை முண்ட வாயன் எங்ஙனமோ தன் மாயச்செயல்களைக் காட்டி என்மகளை மயக்கிவிட்டனனே! மற்றப் பெண் டிரும் இவள் மனத்தை மாற்றி விட்டனரே! சிறிது பொழுதும் அவனை மறந்திலளே! நாராயணன் அடிச் சுவட்டை நாடித்திரிகிருள்; அவன் நாமங்களையும், கலியாண குணங்களையுமே பேசிப்பேசி வாய் புலரு கிருள். என் செய்வேன்!" எனப் பெரியாழ்வார் வருந்துகிருர். இக்கருத்துக்களை,

**" பேசவும் தெரியாத பெண்மையின்**
**பேதையேன் பேதையிவள் "** பெரி. திரு. 3-7-7

**" பெருப்பெருத்த கண்ணாலங்கள் செய்து**
**பேணிநம் மில்லத்துள்ளே**
**இருத்துவான் எண்ணி நாமிருக்க**
**இவளும்ஒன் றெண்ணுகின்ருள்."**

ஷை 3-7-10

" ஏழை பேதையோர் பாலகன் வந்து
என்பெண் மகளை எள்கித்
தோழி மார்பலர் கொண்டுபோய்ச்
செய்த சூழ்ச்சியை யார்க்குரைக்கேன் !"

பெ-திரு-3-7-4

என்னும் பாசுரங்களால் அறியலாம்.

" ஐயோ ! என் மகள் என்ன நைந்துதான் பய னென்னை ? அவன் இவள்பால் இரங்கவில்லையேல், இவள் முயற்சியினுல் என்ன நலமேற்படப் போகிறது ! அவன் இரக்கமன்றோ இன்றியமையாதது ! அஃதன்றோ இவள் பேற்றிற்குப் பயனளிப்பது ! ஆயினும், இவள் நைதலிலும் ஒரு நன்மை உளது : இவள் நைந்து நிற் கும் நிலை அவன் இரக்கத்திற்குக் காரணமும், அவன் இரக்கம் இவள் பேற்றிற்குக் காரணமுமாகும்.*, அந்தோ! தாங்கலாற்ருத இத்துன்பத்தால் என் மகள் என்றோ முடிந்திருப்பாள் ! 'இன்னம் ஒருகால் அவர் முகத்திலே விழிக்கலாமாகில் அருமருந்தன்ன பிராணனைப் பாழே போக்குகிறதென் ?' என்னும் கருத்தைக் கொண்டன்றோ உயிர் தாங்கியுள்ளாள் ! இவள் துக்கம் தொலைவதென்றோ ! என்று இவள் உவகை முகத்தைக் காண்பேனோ ! இதற்கு இறையே அருள் புரிய வேண்டும்! அவன் யாவற்றையும் அறி வான்; சிறுமியைப் பெரிதும் அலைக்கழியான்;அடியேனை யும், இவளையும் இன்பத்திலிருத்தல் அவன் கடமையே யாகும்!" என ஒருவாறு மனந்தேறி இருந்தார்.

---

குறிப்பு:— *" இவள் நைவு பேற்றுக்கு உபாயமல்ல ; அவனிரக்கம் பேற்றுக்கு ஸாதநம். இவள் நைவு அவன் இரக்கத்திற்குப் பரிகரம்; அவனிரக்கம் இவள் பேற்றுக்கு ஸாதனம் " திருவாய்மொழி ஈடு.

இவர் இங்ஙனமிருக்க, பழையபடியே, "என்று இறைவனைக் காண்போம்! என்று அவனை அடைவோம்! என்று உண்மை இன்பந்துய்ப்போம்!" என்னும் எண்ணங்கள் இடைவிடாமல் நம் கோதையார் மனத்தில் ஊசலாடிக்கொண்டிருந்தன.

ஒரு நல்ல இரவு! துயிலிற்குச் சென்றது நல்லநேரம் போலும்! அவ்வுறக்கத்தில் ஸ்ரீ வில்லிபுத்தூரே ஒளியுடன் பிரகாசிக்கின்றது! வீதிகளில் வாழை கமுகு முதலியன நாட்டப்பட்டுள்ளன. நிலமுழுதும் வெண்மணல்; ஆங்காங்கே அழகிய பந்தர்கள்; அப்பந்தர்களில் சித்திர வேலைப்பாடுகள்; அவற்றுள் மலர் மாலைகள் தொங்க விடப்பட்டுள்ளன. இந்திரன் முதலாகிய தேவர்கள் கூடியிருக்கின்றார்கள். அந்தணர்கள் தூய தீர்த்தத்தைக் கொணர்ந்து மங்களமுண்டாக வேண்டுமென இவர் மேலே தெளிக்கின்றார்கள். அழகிய இளம்பெண்கள் விளக்குகளையும் பொற்கலசங்களையும் தாங்கி மணமக்களை எதிர்கொண்டழைத்தல் யாவருக்கும் குதுகுலிப்பை ஈந்தது. மத்தளங்களும், சங்குகளும் முழங்குகின்றன; நாற்புறமும் வைதிகர்கள் வேத ஒலி; எங்கும் பரபரப்பு; யாவர் முகத்திலும் புன்னகை; ஒவ்வொரு வீட்டு முற்றத்திலும் அலங்கரிப்பு; தூங்கா விளக்குகள்; எங்கும் மாவிலைத் தோரணங்கள்; மங்கையரும் சிறுவரும் ஆடை அணிகளால் ஒளிருகின்றனர்; ஆடவர் தம் புதிய ஆடைகளை உடுத்து, வீரமும் சுறுசுறுப்பும் தோன்ற உலவுவது உலத்தையே பெயர்த்து விடுவார் போலத் தோன்றுகிறது. பல சங்கீத ஒலிகள் கலந்து ஒலிக்கின்றன. இங்ஙனம் அவ்வூரே ஆனந்தத்தில் தவழ்ந்து கொண்டிருந்தது. எல்லார் உள்ளும் உறைந்தொளிரும் ஸ்ரீமந் நாராயணன் ஆயிரம் ஆனைகள் சூழ

ஊரை வலமாகச் சுற்றி வருகிறான்; முத்துப் பவழங்களால் அணி செய்யப்பட்ட பந்தர்க்குள் அம்மாதவன் புகுகிறான். நம் கோதையாருக்கு மணச்சேலை உடுத்து, மலர் மாலை சூட்டப்படுகிறது. அறிஞர் ஆண்டாளைக் கண்ணனோடு இருக்கச்செய்து, காப்பு நாண் கட்டுகின்றனர். கண்ணன் சூடிக்கொடுத்தார் கரத்தைப் பிடித்துக்கொள்கிறான். மணமக்கள் தீவலம் வருகின்றார்கள். அம்மி மிதித்தல், பொறி அள்ளி இடுதல் யாவும் நடைபெறுகின்றன. குங்குமம் சந்தனம் அணிந்து அழகு துலங்கச் சூடிக்கொடுத்தார் அச்சுதனோடு ஊர் வலம் வருகிறார். வீடு திரும்பிய பின்பு இருவரும் மஞ்சள் நீர் ஆடுகின்றனர். உடனே தெய்வக்கொடியாகும் நம் அன்னையார் விழிக்கிறார்; தம் அறை முற்றும் நோக்குகிறார். தாம் துயிலிற்குச் சென்ற போது எங்ஙனம் இருந்ததோ, அங்ஙனமே உள்ளது; மாறுபாடு ஒன்றும் தோன்றவில்லை. சில விநாடிகளுக்கு முன்பு தாம் கனவில் கண்ட பொருள் ஒன்றும் இவர் கண்ணிற் படவிலது! தம்மை உற்று நோக்குகிறார். மணச்சேலையோ, அன்றி மண அலங்காரமோ தம்மிடம் அமைந்தில்லை. இவர் முன்கொண்ட மகிழ்வு சிறிது சிறிதாகக் குறையத் தொடங்குகிறது. "நாம் துய்த்த இன்பம்யாவும் நனவா, கனவா!" எனச் சிறிது நேரம் இவர் சிந்திக்கிறார்; இறுதியில் கனவெனத் தெளிகிறார். "என் உவகை இவ்வளவிலா முடிந்தது! அஃது உண்மை இன்பம் என்றன்றோ யான் கருதினேன்! ஆ! மணவறையின் அமைப்பு என்னே! சூழ்ந்திருந்தார் ஆனந்தம் அளவிடற்பாலதோ! மங்கையரின் மாண்பு மதித்தற்கியலுமோ! என் தோழியரின் குதுகுலிப்பு வரையறைப்பட்டதோ! என்ன ஒளி! என்ன ஒளி! தீபங்களின் விளக்

கமும், அணிகளின் பிரகாசமும், என் ஆன்ம நாயகரின் தாமரையை வென்ற முகத்தேஜஸும் கலந்து ஒளிரும் ஜோதியை எதற்கு ஒப்பிடுவது! என்றும் குன்ரு ஒளி வாய்ந்த வைகுண்டத்திற்கன்ரே அதை ஒப்புக் கூறல் வேண்டும்! ஊர் முற்றும் உகப்பில் ஆழ்ந்திருந்ததே! தனித்தனி இல்லமும் அன்ரே மண வீடாய்த் திகழ்ந்தது! இங்ஙனம் என் ஒருத்திக்காக யாவரும் மகிழ்தற்குக் காரணம் யாதாயிருக்கக்கூடும்! எம்பெருமானே என்னை வந்து அங்கீகரித்ததன்பொருட்டா? அன்றன்று! 'நம் பெரியாழ்வார் தாம் வளர்த்த மகளை ஸ்ரீமந் நாராயணனுக்கே ஈந்து உயர்வடைந்தனரே! இவரல்லரோ பக்தர்! இத்தூயரல்லரோ பிரபந்நர்! இவருக்கு ஒப்பாவார் இவ்வுலகில் யார்? இவர் பண்ணிய புண்ணியம் பலித்தது! இவர் தவம் முற்றுப் பெற்றது! இவரே பெரியாழ்வார் என்னும் பேருக்குத் தக்கவர்! அவ்வுலகிற் சென்று அடையக்கூடிய இன்பத்தை இவ்வுலகத்திலேயே அடைந்துவிட்டார்! இனி இவருக்குப் பரமபதம் தேற்றம் என்பதற்கு ஐயம் யாது?' என்னும் உயர் எண்ணங்கள் அல்லவா நாட்டாரை ஆனந்தத்தில் ஆழ்த்தின? பெரியாழ்வார் பெண் கொடியாகத் தோன்றினேனே! இதனுலன்ரே எனக்கு இப்பெருமை! இஃதும் இறைவர் இன்னருளே!" என உன்னிக்கொண்டிருக்கும்போதே, மறுபடியும் தாம் கண்டன யாவும் கனவு என்னும் கருத்துத் தோன்றிற்று. முகம் சாம்பியது; உள்ளம் வருந்தியது. ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்கின்ருர். இந்நிலையில் தம்மையும், பொழுது புலர்ந்ததையும் முற்றும் மறந்தார்; எழுந்து வெளிப்போந்திலர். ஆதித்தன் தன் வெண்ணிறக் கிரணங்களைப் பரப்பி மேற்கிளம்பியும்

கோதையார் பள்ளியறை விட்டு வெளி வாராதது தோழியருக்குக் கலக்கத்தை உண்டாக்கிற்று. "கோதையாருக்கு உடல் நலமில்லையோ! இரவு தூக்கமின்றி இப்போதுதான் துயில்கின்றாரோ! வேறு யாதாயிருக்கும்!" என அச்சமுற்றனர்; மெல்லெனச் சென்று வாயிற் படியண்டை நின்றனர். சிறு அரவமும் இல்லை. கதவின் தொளை வழி நோக்கினர். ஒன்றும் புலப்பட்டிலது. அவர்கள் மனம் பின்னும் பதைபதைத்தது. நெஞ்சம் விரைந்ததேயன்றி, அவர்கள் உடல் விரைந்து காரியம் இயற்ற இடந்தரவில்லை. செல்வச் சிறுமியினிடம் பெருந்தகைமையோடு நடந்துகொள்ள வேண்டும் அல்லவா? அவர்கள் ஓதை இன்றிக் கதவைத் திறந்தார்கள். கோதையார் விழித்துக்கொண்டே படுக்கையில் சாய்ந்திருந்தார். இவர் நோக்கு அவர்கள் மாட்டுத் திரும்பவே இல்லை. அவர்கள் வரவை இவர் அறிந்திலர். இவர் சிந்தை எதை எதையோ சிந்தித்துக்கொண்டிருந்தது. தோழியரும் இவர் நிலையை ஒருவாறு தெரிந்து, அடிமேலடி வைத்து, அருகில் சென்றனர். அதையும் இவர் உணர்ந்திலர். ஒருத்தி சிறிது குனிந்து இவர் முகத்தை நோக்கி, நகை செய்தாள். அப்போதுதான் இவர் உணர்ந்தார்; காணுப் பொருள்களைக் கண்டவர் போன்று, மிரண்ட பார்வையுடன் தோழியரை நோக்கினர். இது, நீண்ட நேரம் உணர்வற்றிருந்த ஒருவர் உணர்வைப் பெற்றதைப் போன்று காணப்பட்டது. தோழியர் அன்னையாரை நோக்கி, "அம்மணி, ஏன் ஆழ்ந்த சிந்தனை? இங்ஙனம் மெய்ம்மறந்திருத்தற்குக் காரணம் யாது? துயில் உணர்ந்தும் படுக்கையிலேயே இருத்தல் ஏனோ? உங்கள் கண்ணையும் மனத்தையும் ஒருங்கே கவர்ந்த மாட்

சிப் பொருள் எதுவோ? எங்கட்குத் தெளியக் கூறுதல நலம்," எனப் பணிவுடன் இறைஞ்சி நின்றனர்.

சிறிது போழ்து கோதையார் நா ஒரு வார்த்தையையும் வழங்கிற்றிலது. பின்பு, "என் அருமைத் தோழியரே, யான் இன்று கண்ட காட்சியும், துய்த்த இன்பமும் செப்புந்தரம் உடையனவோ! இன்னும் சிறிது போதேனும் அவ்வின்பத்திலேயே இருக்கப் பெற்றிலேனே! அளப்பிலா ஆனந்த வாழ்வில் அமர்ந்திருக்கும் ஒருவரைக் கொடுங்கூற்றம் கொடுபோதல் போன்றன்றே, இவ்விழிப்பு என் எல்லையற்ற இன்பத்தைக் கொள்ளை கொண்டுவிட்டது! இப்பேற்றைக் கனவிலேனும் பெற்றேனே! இழந்த கண்ணைப்பெற்று மறித்தும் இழந்தது போன்றன்றே என் நிலை ஆயிற்று! ஏன் இன்னும் சில விநாடிகளேனும் துயிலாதொழிந்தேன்? எம்பெருமான் என் கரத்தைப் பிடிக்கும் பேற்றைப் பெற்றும், அவர் செவ்வாய் திறந்து இயம்பும் ஒருவார்த்தையையேனும் கேட்கும் தவமியற்றிலேனே! இன்னும் சிறிது நேரம் விழியாதிருப்பின், அப்பாக்கியமும் கிடைத்திருப்பினும் கிடைத்திருக்கலாம்! பறவைகளின் ஒலியும், மலர்களின் மணமும், வேத ஒலியும், பகலவன் பாரிப்பும் அல்லவா எனக்குப் பகைகளாய் நின்றன! எந்த இயற்கைப்பொருள்கள் ஒருகால் எனக்கு இன்பமூட்டினவோ, அவைகளே இன்று என்னைத் துன்பத்தில் ஆழ்த்திவிட்டனவே! அந்தோ! இனி ஒரு முறையேனும் இத்துணைச் சீரியகனவு எனக்கு உண்டாகுமா? அவ்வமயம் தோன்றிய காட்சிகள் கனவேனும், அவற்றுள் ஒன்றுகூட இன்னும் என் மனத்தை விட்டு அகன்றிலதே! இப்போதும் அவை நடைபெறுதல் போன்றல்லவா என் கண்முன் காட்சியளிக்கின்றன!

இப்பெரும்பேற்றை என்று உண்மையாகப் பெற்று உய்வேன்! அது கைகூடாதென்பதுதான் என் துணிபு! ஏன்? அவர் எவ்வளவு உயர்ந்தவர்! யான் எவ்வளவு தாழ்ந்தவள்! இம்முறையில் இருவருக்கும் தொடர்பு உண்டாதல் யாங்ஙனம்?

**"நல்லவென் தோழீ! நாகணைமிசை நம்பரர்**
**செல்வர் பெரியர்; சிறுமானிடவர்நாம் செய்வதென்?"**
—நா-தி-10-10

"என் அருமைத் தோழிகளே, இப்புண்ணிய இரவில் யான் கனவில் கண்ட காட்சிகளை உங்களுக்குக் கழறின் அல்லால் நீங்கள் அதன் சுவையை உணர மாட்டீர்கள். என்னோடு நீங்களும் இன்பந்துய்க்க வேண்டாவோ?

**"மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்**
**கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீ நான்."**
ஷை 6-6

**"செம்மை யுடைய திருக்கையால் தாள்பற்றி**
**அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீ நான்."** ஷை 6-8

**"அரிமுகன் அச்சுதன் கைம்மேலென் கைவைத்துப்**
**பொரிமுகந் தட்டக் கனாக்கண்டேன் தோழீ நான்."**
ஷை 6-9

**"அங்கவ னோடும் உடன்சென்றங் கானைமேல்**
**மஞ்சன மாட்டக் கனாக்கண்டேன் தோழீ நான்."**
ஷை 6-10

எனத் தம் தோழியர் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு விஷயத்தைப் பகர்ந்து உவகை உறுகிறார்.

## 8. ஆண்டாளைத் திருவரங்கன் ஆட்கொள்ளல்

எம்பெருமானை அடைய மிக்க ஆற்றுமையால் அரற்றிக்கொண்டிருந்த அன்னையாரை அங்கீகரிக்கப் பெருமான் திருவுள்ளம் விழைந்தது. அவ்விழைவைத் திருமால் பெரியாழ்வாருக்கும், திருவரங்கத்தின் அர்ச்சகருக்கும் சொப்பனத்தின் வாயிலாகத் தெரிவித்தார். அஃது இரு திறத்தினருக்கும் ஆனந்தத்தையும் வியப்பையும் உண்டாக்கிற்று. இறைவன் கட்டளைப்படி ஆண்டாளைத் திருவரங்கம் அழைத்துச்செல்ல ஆழ்வார் மனம் விரைந்தது. ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து திருவரங்கம் வரை மங்கலப் பொருள்களால் அலங்கரிக்கும் தொண்டை, அக்காலத்திலிருந்த சோழ அரசனை **வல்லப தேவன்** மிக்க ஆர்வத்துடன் ஏற்றுக்கொண்டான். பொது மக்கள் திரளும், ஞானியர் குழுவும், பக்தர் கூட்டமும், பல்லாண்டிசைக்கும் பாகவதர் பெருக்கும் சிவிகையைச் சூழ்ந்து சென்றன. எங்கும் முரசம்; எங்கும் இசைப் பாட்டு; எங்கும் திருவாய்மொழி; எங்கும் பல்லாண்டு; எங்கும் குதூகலம்; எங்கும் நகைப்பு; எங்கும் உவகை. இம்முறையில் ஸ்ரீவில்லிபுத்தூர் தொடங்கி, திருவரங்கம் வரை ஓரே ஆனந்த ஆரவாரம் நிரம்பி இருந்தது. இப்பெரு விழாவிற்கு இடையில் பெரிய பெருமாள் சந்நிதி ஸ்ரீபாத தாங்கிகள் அன்னையார் வீற்றிருந்த முத்துச் சிவிகையைத் தாங்கிச் சென்றார்கள். அஃது அரங்கநாதன் சந்நிதி மூலஸ்தானத்தில் இறக்கப்பட்டது. அச்சிவிகையைச் சுற்றி விடப்பட்ட மெல்லிய பட்டுப் படாத்தை நீக்கியதும், மேகத்திரளை நீக்கி வெளிப்படும் முழுச்சந்திரன் போன்றும், நீலக்கடலினின்றும் கிளம்புகின்ற இளஞ்சூரியன் போன்றும்,

தெய்வப் பாவையார் வெளிப் போந்தார். இவர் மும் மலக் கட்டினின்றும் விடுபட்ட சுத்தான்மாவைப் போன்றும், மாசு நீங்கிய மாணிக்கத்தைப் போன்றும் ஒளிர்ந்தார். இவர் உடல் இவருக்குப் பொறையின்றி மென்மையாய்த் தோன்றியது. தம்மீதிருந்த பெருஞ் சுமை இறங்கிவிட்டதாக இவர் உணர்ந்தார்.

பின்பு பெரிய பெருமாள் இலங்கை நோக்கி நாக சயனத்தின்மீது சயனித்திருக்கும் இடத்தை நோக்கிச் சென்றார். நிதி பெற்ற நித்திய தரித்திரன் போன்றும், கண்ணொளி பெற்ற பிறவிக் குருடன் போன்றும் இவர் உவகையால் உந்தப்பட்டார். தாய்ப் பசுவைக் கண்ட கன்றென இவர் மனம் விரைந்தது. ஆயினும், அளவு கடந்த ஆனந்தம் இவருக்குக் கால் நடை தந்திலது. மன விரைவும் உடல் மெலிவும் வாய்ந்த அன்னையார், ஒருவாறு கடல் நிறங்கொண்ட அரங்க நாதன் அருகில் அணைந்தார்.

இவர் கண்கள் பெருமானை ஒருமுறை உற்று நோக்கின. திருவரங்க நாதனுடைய குழல், வாய், கண், கொப்பூழ் இவைகளின் அழகு இவர் கண்களைக் கவர்ந்தது. இவர் அவ்வழகில் ஈடுபட்டு நின்றார். அவனுடைய திவ்விய மங்கள விக்கிரகமும், ஆன்ம சொரூபமும் இவருக்குப் புலனாகின்றன.

**“ திண்ணார் மதில்சூழ் திருவரங்கனார் ”**

—நா-தி-11-7

**“ தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனார் ”**

ஷை 11-8

எனத் திருவரங்கனை இறைஞ்சி நிற்கிறார். அப்பெருமான் இவர் விரும்பிய கண்ணனாகவே காட்சி அளிக்

கிருன். அவ்வமயம் நம் தெய்வப் பாவையாரின் எண்ணம் எங்குச் செல்லுகிறது? கண்ணன் லீலைகளிலும், அவன் பெருமிதங்களிலும், அவன் ஆஶ்ரிதர் மாட்டு வைத்துள்ள அன்பிலுமேயாகும்.

அவன் செயல்களின் பேரின்பத்தைத் துய்க்கக் கருதிய இவர், தாம் ஒருவரே இருந்து அனுபவிக்க இயலாதென்றும், அந்தக் கரை காணு இன்பவெள்ளம் ஒருவர் உள்ளமாகிய பாத்திரத்தில் கொள்ளாதென்றும் உணர்கிருர். ஆதலின், தம்மையே இருவராக வைத்துக் கொண்டு, ஒருவர் வினுதல் ஒருவர் விடையளித்தலாகப் பாவித்து, தம் ஒருவர் நெஞ்சுள் மட்டும் கொள்ளா விஷயத்திற்குச் சிறிது போக்கு வீடு தேடிக்கொள்ளுகிருர். இதை ஆன்மா கேட்டலும், அறிவு விடையளித்தலும் எனக் கொள்ளினும் கொள்ளலாம். இங்கு இவருக்கு உவகை வெள்ளம் கரை புரண்டோடுகிறது. முன்பு இவர் எத்துணை ஆற்ருமையால் அலமந்தனரோ, அத்துணையினும் பலமடங்கு மிக்க ஆனந்தத்தில் ஆடித்திளைக்கிருர் இப்போது. இவர் கருதிய பொருளைக் காணக்காண உள்ளம் குதுகலிக்கிறது.

**“ அனுங்க என்னைப் பிரிவுசெய்**
**தாயர் பாடி கவர்ந்துண்ணும்**
**குணுங்கு நாறிக் குட்டேற்றைக்**
**கோவர்த் தனனைக் கண்டீரே ?—**
**கணங்க ளோடு மின்மேகம்**
**கலந்தாற் போல வனமாலை**
**மினுங்க நின்று விளையாட**
**விருந்தா வனத்தே கண்டோமே.”**

**—நா-தி-14-2**

“ கார்த்தண் கமலக் கண்ணென்னும்
நெடுங்கயிறு படுத்து என்னை
ஈர்த்துக் கொண்டு விளையாடும்
ஈசன் றன்னைக் கண்டீரே ?—
போர்த்த முத்தின் குப்பாயப்
புகர்மால் யானைக் கன்றேபோல்
வேர்த்து நின்று விளையாட
விருந்தா வனத்தே கண்டோமே.”-நா-தி-4-14

“ பொருத்த முடைய நம்பியைப்
புறம்போ லுள்ளும் கரியானைக்
கருத்தைப் பிழைத்து நின்றஅக்
கருமா முகிலைக் கண்டீரே ?—
அருத்தித் தாரா கணங்களால்
ஆரப் பெருகு வானம்போல்
விருத்தம் பெரிதாய் வருவானை
விருந்தா வனத்தே கண்டோமே.” ஷை 14-7.

எனக் கூறிக்கூறி ஆனந்தத்தில் ஆழ்கிறார் ; பின்பு ஒன்றும் தோன்றாது நின்றபடியே நிற்கிறார். இரும்பைக் கவரும் காந்தம் போன்று அழகிய மணவாளன் அன்னையார் மனத்தைத் தன் வசமாக்கிக்கொண்டான். கோதையார் தம் வசமிழந்தனர். தாம் உடலைத் தாங்கி இருப்பதாகவே அவருக்குக் காணப்படவில்லை. அந் நிலையில் நாக சயனத்தை மிதித்தேறிய சூடிக்கொடுத்தார் எம்பெருமானோடு கலந்து மறைந்தார். பெரிய பெருமாள் என்னும் திருநாமம் பெற்றுப் பிரணவாகார விமானத்தில் வீற்றிருக்கும் அரங்கநாதன் மார்பே இவர் உவப்புடன் நித்திய வாசம் செய்வதற்கு இடமாய்த் திகழ்ந்தது. பூமன்னு மாது பொருந்திய மார்பினனன்றோ அவன் ! பிரபந்நரின் ஆன்மாவை மட்டும் ஏற்கும்

ஈஸ்வரன் நம் அன்னையாரை உடலோடு அங்கீகரித்தான். இது வியப்பினும் வியப்பன்றோ! இங்கு, "வேர்ச்சூடு மவர்கள் மண் பற்றுக் கழற்றாதாப் போலே, ஜ்ஞானியை விக்கிரகத்தோடே ஆதரிக்கும்" என்னும் பிள்ளை லோகாசாரியர் கட்டுரையை நோக்குக.

இந்நிலையில் பெரியாழ்வார், வல்லபதேவன் முதலியோர் ஆண்டாள் சென்ற இடமறியாது தயங்கினர். இவருக்கு என்ன நேர்ந்ததென்றும் ஆழ்வாருக்குத் தோன்றிற்றிலது. அவர் உன்மத்தம் பிடித்தவர் என நின்றனர். வியப்பும் கவலையும் அவரை வாட்டின. மணமுடித்துச் செல்லக் கொண்டு வந்த மகளார் மாயமாய் மறைந்தது அவருக்குப் பெருந்துயரை விளைத்தது. பார்த்துக் கொண்டிருக்கும் போழ்தே பறந்து போன மகளாரைப் பற்றி அவர் யாரைக் கேட்பார்? எங்குச் சென்று தேடுவார்? அவருக்கு ஒன்றும் புலப்பட்டிலது. அவர் கண்ணையும் செல்வத்தையும் இழந்த பிறவிக்குருடனும் வறுமையாளனும் போன்றார்! "அந்தோ! என் அருமை மகளை—கண்ணிற்கினிய கனியை—பெறற்கரிய பேரமுதை—மனத்துக்கினியாளை—புலமைப் பொக்கிஷத்தை—ஞானக் கொழுந்தை—பக்திப் பாவையை—ஈஸ்வர இன்னமுதை யான் எங்குச் சென்று காண்பேன்! பெரிய பெருமாளிடம் கொண்டு வந்த என் பெண்கொடி என்ன ஆயினளோ யான் அறியேனே! இந்த மாயன்தான் என் மகளை மயக்கி இருத்தல் வேண்டும்! இவனே அவள் மறைவிற்குக் காரணம்! இவனிடம் வந்த என் அருஞ் செல்வியை வேறு யாவர் கொண்டு செல்வார்! யாருக்கு அத்துணைத் தைரியம் உள்ளது! மலர் பூத்த மல்லிகைக் கொடியன்ன என் மகளை மறைத்து விட்டு ஒன்றும் அறியாதவன் போன்று சயனித்திருக்

கும் இவன் மன வன்மைதான் என்னே! தான் ஏற்றுக்கொள்ளினும் என் முன் காட்சியளிக்குமாறு செய்வான் என்றன்றோ யான் கருதினேன்! என் கருத்திற்கு மாறாக நடந்துவிட்டதே! இதற்கென் செய்வேன்!" என ஆழ்வார் மனங்கலங்கி நின்றார்.

பெரியாழ்வார் மனக்கவலை பெருமாள் நெஞ்சில் தைத்தது. பக்தர் மனம் பதற எம்பெருமான் தாங்குவானோ? ஆதலின், உலகமுண்ட வாயன், "உம் மகளை யாம் அங்கீகரித்துக்கொண்டோம். நீர் கவலற்க! ஸ்ரீவில்லிபுத்தூர் சென்று சில நாட்கள் கைங்கரியமியற்றிப் பின்பு எம்மை அடைவீராக!" என அர்ச்சகர் மூலம் தெரிவித்தான்.

அவ்வார்த்தைகள் பெரியாழ்வாரை வியப்பிலாழ்த்தின. தம் தூய புதல்வியாரைத் தம் கண்ணிற்கு இலக்காகாது ஒளித்துவிட்டானே என்னும் துயரம் அவருக்குப் பெருகிற்று. ஆதலால்,

"ஒருமகள் தன்னை யுடையேன்
உலகம் நிறைந்த புகழால்
திருமகள் போல வளர்த்தேன்
செங்கண்மால் தான்கொண்டு போனான்;
பெருமக ளாய்க்குடி வாழ்ந்து
பெரும்பிள்ளை பெற்ற அசோதை
மருமக ளைக்கண்டு கந்து
மணாட்டுப் புறஞ்செய்யுங் கொல்லோ!"

—பெ-திரு-3-8-4

"தம்மாமன் நந்தகோ பாலன்
தழீஇக்கொண் டென்மகள் தன்னைச்
செம்மாந்தி ரேயென்று சொல்லிச்
செழுங்கயற் கண்ணும்செவ் வாயும்

கொம்மை முலையு மிடையும்
கொழும்பணைத் தோள்களும் கண்டிட்டு
இம்மக ளைப்பெற்ற தாயர்
இனித்தரி யாரென் னுங் கொல்லோ !"

—பெ-திரு-3-8-5

" நாடும் நகரு மறிய
நல்லதோர் கண்ணாலஞ் செய்து
சாடிறப் பாய்ந்த பெருமான்
தக்கவா கைப்பற்றுங் கொல்லோ !" ௸ 3-8-6

" இடையிரு பாலும் வணங்க
இளைத்திளைத் தென்மக ளேங்கிக்
கடைகயி றேபற்றி வாங்கிக்
கைத்தழும் பேறிடுங் கொல்லோ !" ௸ 3-8-8

" வெண்ணிறத் தோய்தயிர் தன்னை
வெள்வரைப் பின்முன் னெழுந்து
கண்ணுறங் காதே யிருந்து
கடையவும் தான்வல்லள் கொல்லோ !
ஒண்ணிறத் தாமரைச் செங்கண்
உலகளந் தான்என் மகளைப்
பண்ணறை யாப்பணி கொண்டு
பரிசற ஆண்டிடுங் கொல்லோ !" ௸ 3-8-9

எனக் கதறிக்கொண்டே எம்பெருமான் பணியை ஏற்று ஸ்ரீவில்லிபுத்தூருக்கு எழுந்தருளினார். தம் இல்லத்திற்குள் நுழைந்தவுடன் அவருக்கு முன்னையினும் பெருந்துன்பம் மேலிட்டது. அன்னம் போன்று அங்குமிங்கும் உலவிக்கொண்டும், குயில் புரைய இசையைக் கூட்டிக்கொண்டும், என்றும் நகை முகத்தோடு நடமாடிக்கொண்டும், விளக்கென விளங்கிக்கொண்டும்,

வெளிச்சென்று வரும் தம்மை உவகையுடன் வரவேற்று உபசரித்துக் கொண்டும் இருந்த தம் மகளாரைக் கண்டிலர். தம் வீடு காடு போன்று காணப்பட்டது. எத்தனையோ பெயர் அவணிருந்து குடிபோய்விட்டதாகக் கருதுகிறார்; ஒன்றுந் தோன்றாது தயங்குகிறார். தம் இல்லம் பயனற்றதாக அவருக்குத் தோன்றுகிறது. 'இந்த இல்லில் யான் எங்ஙனம் வாழ்வேன்!' என அலமருகின்றார்.

**"நல்லதோர் தாமரைப் பொய்கை**
**நாண்மலர் மேல்பனி சோர**
**அல்லியும் தாது முதிர்ந்திட்**
**டழகழிந் தாலொத்த தாலோ!**
**இல்லம் வெறியோடிற் றாலோ!**
**என்மக ளௌங்கும் காணேன்!**
**மல்லரை யட்டவன் பின்போய்**
**மதுரைப்பு றம்புக்காள் கொல்லோ!"**

—பெ-திரு-3-8-1

எனச் சின்னாட்கள் வரை மனம் புழுங்கினார். அவர் வருத்தம் வற்றிற்றில்லை. நாளேற ஏறச் சிறிது மனந் தேறினார். நாள் செய்வது நல்லார் செய்வரோ? "பெருமாள் பேணிக் கொள்ளத்தக்க ஒரு பெண்கொடியைப் பெற்றேனே! அவன் உகந்தங்கீகரிக்கும் உத்தம மகளை வளர்த்தேனே! யானல்லவோ பாக்கியவான்! என் அருமைப் புதல்வி அல்லவா பாக்கியவதி! தானங்களிற் சிறந்தது கன்னிகா தானமன்றோ? அதிலும் எம்பெருமானுக்கு இத்தானத்தை வழங்கிய என் பேற்றை என்னென்று இயம்புவது! இத்தகைய பேறன்றோ எனக்குக் கிடைத்தது! மலர் மாலை தொடுத்து எம்பெருமானுக்கு ஈயும் கைங்கரியம் ஒன்றில்மட்டும் என்னை அவன் நிறுத்தினன் இல்லை. மகளை மாண்புற வளர்த்துக் கொடுக்கும்

இத்தூய கைங்கரியத்திலுமன்றோ என்னை இறுத்தினான்! இதைக் காட்டிலும் சீரிய கைங்கரியம் வேறு யாது? இவ்வுலகில் இத்தொண்டைக் கைக்கொண்டார் யாவர்? வேறு யாருக்கு இப்பணி வாய்த்தது? ஆதலின், யானே எம்பெருமான் உண்மை அடியான்!" எனத் தம் பேற்றைத் தாமே நினைந்து நினைந்து ஆனந்தங் கொண்டார். அவர் காலம் இவ்வானந்தத்திலும் எம்பெருமான் கைங்கரியத்திலுமே கழிந்தது. அவருக்கு அன்றையிலிருந்து 'பெரியாழ்வார்' எனப் பெயர் வழங்கலாயிற்று. இறுதியில் அவர் எம்பெருமான் திருநாட்டை அலங்கரித்தார்.

"இவர் பெருமை மற்றோர்க்குக் கிடைக்குமோ? பெட்புடைய பெண் கொடியை வளர்த்துப் பெருமானுக்கீயும் பெட்பன்றோ இவருக்கு வாய்த்தது! இவரல்லரோ ஆழ்வார்களுள் சிறந்தவர்!" என அந்நாட்டினர் ஆழ்வாரைப் புகழ்ந்து நின்றனர்.

"உண்டோ பெரியாழ்வாருக் கொப்பொருவர்?" எனப் பெரிய ஜீயர் அருளிச்செய்த சொற்றொடரைக் காண்க!

வரலாறு முற்றிற்று.

# II. ஆராய்ச்சி

## 1. பெயர்களின் தோற்றத் தேற்றம்

### நூற்பெயரின் சிறப்பு

நற்குணக் குன்றனைய நம் கோதையாருக்கு உயர் பொருள்களையே உருவெனக்கொண்ட பெயர்கள் பல வாய்ந்திருத்தல் யாவரும் அறிந்ததே. அவற்றுள் ஏதேனும் ஒன்றை இந்நூலிற்கு மகுடமாகச் சூட்டாது, முதலில் தந்தையார் பெயரை நிறுத்தி, பின்பு இவரை ஒரு பெண்கொடி எனப் பகருதற்குக் காரணம் யாதோ எனச் சிலர் ஐயுறலாம். இவ்வையம் நீங்க எவற்றைக் காண வேண்டும்? ஆழ்வார்கள் அருளிச்செயலையும், நம் அன்னையாருடைய அழகிய சொற்களையுமே. ஆழ்வார் ஒவ்வொருவரும் தம் அரிய கருத்தைப் பத்து அல்லது பதினொரு பாசுரங்களில் தெரிவித்து, இறுதியில் அவற்றைக் கற்போர் அடையும் பயனையும் தம் பெயரையும் அறிவித்தல் வழக்கு. இம்முறையையே மேற்கொண்ட நம் கோதையார், ஒவ்வொரு திருமொழியின் இறுதியிலும் பிறர்க்குத் தம்மை அறிமுகப்படுத்துங்கால், தம் திருப்பெயரை மட்டும் இயம்பினார் இல்லை. இவர் தம் ஒவ்வொரு திருமொழியின் ஈற்றிலும், தம் தந்தையாராகும் பெரியாழ்வாரை முன்னிட்டே தம்மை உலகிற்குத் தெரிவித்துக்கொள்ளுகிறார். அங்ஙனமாயின், நம் ஆண்டாளின் திருவுள்ளக் கருத்து யாது? தம்முடைய ஞான பக்தி வைராக்கியங்களுக்கு அடிகோலியாய் இருந்த தம் தந்தையாரை விட்டுத் தாம் தனியே நிற்றல் தகுதி அன்று என்பதன்றோ?

ஆனால், இன்னுமோர் ஐயம் இங்குத் தோன்றலாம். என்ன? அன்னையார் தம் தந்தையார் திருப்பெயரைப்

பல இடங்களில் **விஷ்ணு சித்தர்** என்றும், சில இடங்களில் **பட்டர் பிரான், புதுவையர் கோன்** என்றும் வழங்குகின்றனரே அல்லாமல், எங்கும் **பெரியாழ்வார்** என வழங்கிற்றிலரே! அங்ஙனமாயின், யாம் மட்டும் இந்நூலிற்குப் **பெரியாழ்வார் பெண் கொடி** எனப் பெயர் கூறுதல் யாங்ஙனம் பொருந்தும்? விஷ்ணு சித்தர் என்பது அவர் பிள்ளைத் திருநாமம். பட்டர் பிரான் என்பது அவர் குடிப் பெயர். புதுவையர்கோன் என்பது அவர் தோன்றிய ஊரைக் குறித்து ஏற்பட்டது. பெரியாழ்வார் என்னும் திருநாமமோ, இத்துணைச் சிறு காரணங்களைக் குறித்து வந்ததன்று! உலகம் யாவும் பல்லாண்டுகள் வாழுமாறு அருள் புரியும் எம்பெருமானுக்கே இவர் பல்லாண்டு பாடும் பெரியவராய் இருந்தமையின், இவருக்குப் பெரியாழ்வார் என்னும் திருநாமம் ஏற்பட்டது. இஃதொன்று மட்டுமன்று; பெறலரிய ஒரு பெண்கொடியை எடுத்து வளர்த்துத் திருமாலுக்கு ஈந்து, "நீர் எனக்கு மாமனார் ஆனீர்!" என எம்பெருமானே பகரக்கூடிய பெரிய நிலையில் நிற்கும் பேறு வேறு யாருக்கு அமைந்தது? ஆதலின், மற்ற ஆழ்வார்களைக்காட்டிலும் இவர் பெரியார் என்பதைக் காட்டுதற்கு அறிகுறியாய் இருப்பது இத்திருநாமமேயாகும். குரு பரம்பரையில் '**பெரியாழ்வார்** வைபவம்' என்றும், நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்தில் '**பெரியாழ்வார்** திருமொழி' என்றும் தலைப்பு அமைத்திருத்தலைக் காண்க!

இவை மட்டுமன்றி, இவ்விருவர் நூல்களுக்கும் ஒரு தொடர்புமுள்ளது: பெரியாழ்வார் திருமொழியில் கண்ணன் இளங்கொழுந்தாய், அழகு துலங்க, யாவர் மனத்தையும் கவரச் சின்னஞ்சிறுவனாய் வளர்ந்து, தன் இளமை விளையாட்டுகளோடு விளங்குகிறான்;

நாய்ச்சியார் திருமொழியிலோ, கண்ணன் காளையாகித் தன் வீரம் விளங்க, கெழுமிய அன்புடையார் நெஞ்சம் பூரிக்க நிறைந்த அழகோடு ஒளிர்கிறான். ஆதலின், இவ் விருவர் நூல்களும் ஒருவனைப் பற்றியே புகலும் இரு பிரிவுகள் எனப் பகரலாம். கண்ணன் ஒருவனையே தந்தையார் புதல்வனாகவும், மகளார் காதலனாகவும் பாவிக்கின்றனர். பெரியாழ்வார் நாவில் வளர்ந்த மகன், ஆண்டாள் உள்ளத்தில் ஊசலாடுகிறான். பெரியாழ்வார் பேணி வளர்த்த கற்பகத்தருவில் சூடிக்கொடுத்த சுடர்க் கொடி சென்று படர்கிறது. இவ்விருவருள் ஒருவர் இறையை வளர்க்கவும், மற்றொருவர் அவ்விறையைச் சேர்ந்து இன்பந் துய்க்கவும் வாய்ந்த இவ்வாய்ப்புத் தான் அருமையுடையதாகும். இது யாவராலும் கொண் டாடற்பாலதே! இவ்விருவருக்கும் இவர்தம் நூல்களுக் கும் உள்ள தொடர்பை இங்ஙனமே நெடுகப் பேசிக் கொண்டே செல்லலாம். விரிவிற்கஞ்சி நிறுத்தப்பட்டது.

இனிப் 'பெண் கொடி' எனப் பேசியதை நோக்கு வாம்: பெண்களைக் கொடியாக உருவகப்படுத்தும் வழக்கு இலக்கியங்களில் பல இடங்களிலும் உண்டு. இன்னும் பரமான்மாவாகிய புருஷ தத்துவத்தைக் கோ லாகவும், ஜீவான்மாக்களாகிய பெண் தத்துவங்களைக் கொடிகளாகவும் உருவகப்படுத்தும் முறை நம் ஆழ்வார் களிடத்தும் காணலாம். ஆழ்வார் பதின்மரும் ஒரே கருத்துடையராதலின், தோற்றுவாயில் இயம்பிய **பூதத்தாழ்வார்** திருவாக்கை மட்டும் எடுத்துக் காட்டு வோம்:

> " **கோல்தேடி யோடும் கொழுந்ததே போன்றதே**
> **மால்தேடி யோடும் மனம்.**"
>
> —இரண்டாம் திருவந்தாதி, 27

ஆயினும், இலக்கியங்களையும், மற்ற ஆழ்வார்களின் கருத்தையும் கொண்டே யாம் இங்கு இவரைக் கொடி என வழங்கினேமில்லை. இவரே தம்மைக் கொடியெனப் பகருகிறார். கோதையார், திருமால் நிறத்தை நினைப்பூட்டும் கறுத்த மேகக் கூட்டங்களைக் காண்கிறார். அவை வேகமாய்ச் செல்கின்றன; அவை தாம் நாடும் திருவேங்கடத்திற்கே போகின்றன என்பது நம் செல்வியார் எண்ணம். ஆதலின், அவற்றினிடம் தம் ஆற்றாமையைத் தெரிவித்து, அவைகளை வேங்கடத்துறையும் வேதத்தலைவனுக்குத் தம் உள்ளக் கருத்தை வெளியிடுமாறு இறைஞ்சுகிறார். இறுதியில் இவருக்கு ஓர் எண்ணம் தோன்றுகிறது. என்ன?

"இவை நமக்கு மறு மாற்றம் பகராமையின், இவை அவண் செல்வன அல்ல. ஆதலின், திருவேங்கடத்தையே இடமாகக் கொண்டு வாழும் மேகங்களிடம் நம் குறையைக் கூறுதல் நலம்," என உறுதி கொள்கிறார். அம்மேகங்களை விளித்து, "இம்மைக்கும் மறுமைக்கும் அவனே கதி எனக் கருதி வாழும் என்னை அவன் நோக்கானேல், அவனையே நாடி நிற்கும் ஒரு பெண் கொடியை வதை செய்தான் என்னும் பழிப்பு அவனைச் சாரும். அதனை அறிந்தால் உலகத்தார் அவனை மதியார் என்னும் செய்தியை அவனுக்குத் தெரிவியுங்கள்," எனக்கூறுகிறார்.

**" வேங்கடத்தைப்**
**பதியாக வாழ்வீர்காள்!**
**கதியொன்றும் தானவான்**
**கருதாது, ஓர் பெண்கொடியை**
**வதைசெய்தான் என்னும்சொல்**
**வையகத்தார் மதியாரே."** —நா-தி. 8-9.

இஃது எத்துணை உயரியகருத்து என்பதை நோக்குதல் வேண்டும். தம் ஆன்ம தத்துவத்தையும், ஈஸ்வர தத்துவத்தையும் உணர்ந்து பேசும் இடமன்றோ இது! எங்ஙனம் சடகோபர் தாம் பெண் நிலையை அடைந்த போது, "ஈஸ்வரன் என் ஒருத்தியை அங்கீகரிக்கவில்லையேல், உலகம் யாவற்றையும் தனக்கு உடலாகக் கொண்டுள்ள அவன் நாராயண தத்துவத்திற்கு ஓறுவாய் (மூளி) ஏற்படும்," எனப் பகர்கிறாரோ, அங்ஙனமன்றோ நம் அருட்செல்வியாரும் அருளுகிறார்? கோதையார் ஈஸ்வரனுக்கும் தமக்கும் உள்ள தொடர்பை எடுத்துக் காட்டும் இடங்கள் பலவற்றுள்ளும் அவனைக் கொம்பென மறைவாகவும் தம்மைக் கொடியென வெளிப்படையாகவும் தொடர்பு படுத்தி இயம்பும் இவ்விடம் சிறந்ததென்பதை அறிஞர் அறிவர். ஆதலின், அவனுக்கே தாம் உரியர் என்னும் கருத்தை ஈண்டு வற்புறுத்தியிருக்கும் கொடி என்னுஞ் சொல்லே நம்மனத்தில் தோன்றிற்றுப்போலும்! 'பெரியாழ்வார் பெண் கொடி' என்னும் இவ்வுயரிய தலைப்பைக் கோதையாரே மனத்தில் உதிக்கச் செய்தார் என்பதுதான் அடியாளின் எண்ணம். ஏன்? அடியாளின் புல்லறிவு இவ்வரிய தலைப்பைத் தேர்ந்தெடுக்கும் வன்மை வாய்ந்ததன்று என்பதை யான் நன்குணர்வேன்.

## கோதையார்

உலகில் உள்ள பொருள்களுள் ஒவ்வொன்றையும் பிரித்தறிதற்பொருட்டு, அவற்றிற்கு ஒவ்வொரு பெயரிடுதல் மரபு. அப்பெயர் **இடுகுறி** என்றும் **காரணக் குறி** என்றும் இரு வகைப்படும். காரணம் ஒன்றும்

இன்றி, இன்ன பொருள் என அறிந்துகொள்ளுதற் பொருட்டு மட்டும் இடும் பெயரை இடுகுறிப்பெயர் என்பர். ஏதேனும் ஒரு காரணத்தைக்கொண்டு சூட்டும் பெயரைக் காரணப்பெயர் என்பர். எல்லாப்பொருள் களின் பெயரும் இவ்விரண்டனுள் அடங்கும். மக்கள் எவருக்கும் பிள்ளைத் திருநாமம் இடுகுறியாகவே அமை தல் வழக்கு. ஆனால், சிலருக்கு வளர்ந்த பின்பு அவர் புரியும் தொழிலைக்கொண்டோ, செல்வத்தைப் பற் றியோ, குடியைக் குறித்தோ, குணத்தை ஒட்டியோ பெயர்கள் ஏற்படுதல் உண்டு. அவை காரணப் பெயர் களாகும். ஆழ்வார்களுள் பெரும்பான்மையோருக்கு முதலில் இடுகுறிப் பெயரும் பின்பு காரணப் பெயரும் அமைந்துள்ளன. ஈதன்றியும், சிலருக்குப் பச்சைப் பசுங்குழவிப் பருவத்தில் இடப்பட்ட இடுகுறிப்பெயரே அவரியற்றிய தவத்தால் பின்பு காரணப் பெயர் ஆய்விடுதலும் உண்டு. இக்கூட்டத்திற் சேர்ந்தவரே நம் பெரியாழ்வார். அவர் பிள்ளைப்பெயராகிய விஷ்ணு சித்தர்* என்னும் இடுகுறிப்பெயர் பின்பு அவருக்குக் காரணப் பெயராய் அமைந்ததைக் காண்க! இதுதான் காரண இடுகுறிப் பெயர் என்று வழங்கப்படுகிறது. இஃது ஒருவருக்கு அமைதல் மிகவும் அருமை.

ஆனால், நம் அன்னையாருக்கு அமைந்த இப்பெய ரோ, மற்றவர்கள் பெயரைப் போன்று இடுகுறிப் பெயருமன்று; பெரியாழ்வார் பெயரைப் போன்று காரண இடுகுறிப் பெயருமன்று. இவர் தோன்றும் போதே காரணத்தோடுங் கூடிய பெயரையே வாய்க்கப்

* விஷ்ணு சித்தர் - விஷ்ணுவைச் சித்தத்தில் அமைத் துத் தியானிப்பவர்.

பெற்றார். பின்பும் காரணப் பெயர்கள் பல இவரை நாடி வந்தன. மற்றவர்களைக்காட்டிலும் இவர் மேற்பட்டவர் என்பதற்கு இஃதும் ஒரு சான்றாகும். ஆயினும், பண்டு, ஒவ்வொரு பொருளுக்கும் காரணத்துடனே பெயரமைந்தது எனவும், எங்ஙனமோ சிலவற்றின் காரணங்கள் நாளடைவில் அறிதற்கியலாது போயினமையின், பலவும் இடுகுறிப் பெயர்களாயின எனவும் சொல்லப்படும். ஆனால், இங்கு நாம் தற்கால ஆட்சியை மேற்கொண்டோம்.

இவருக்குப் பெரியாழ்வாரால் சூட்டப்பட்ட பிள்ளைத் திருநாமம், '**கோதை**' என்பது. கோதை என்பதற்கு '**மாலை**' என்பது பொருள். இச்சொல் ஆகுபெயராய்ப் பெண்பாலை உணர்த்தும். இது நிற்க.

நம் அன்னையார் மலர் வனத்தில் பச்சைப் பசுங் குழவியாய்க் கிடந்தபோது இவர் மார்பிலும் அளகத்திலும் உதிர்ந்திருந்த தேனாரு மலர்களின்மீது வண்டுகள் படிந்திருந்ததைக் கண்ட பெரியாழ்வார், இவருக்குச் 'சுரும்பார் குழற்கோதை' எனத் திரு நாமம் சூட்டினார் என்பதைச் சில நூல்களில் காண்கின்றோம். ஆயினும், பெரியாழ்வார் ஞானத்தையும், இக்குழவியார் பெட்பையும் இந்நிலையிலேயே நிறுத்திச் செல்ல அறிஞர் உடன்படார் என்பது திண்ணம். அங்ஙனமாயின், மற்ற மக்களைக்காட்டிலும் யாவற்றிலும் செம்மை வாய்ந்த இவ்விருவருக்கும் வேறுபாடு தோன்றுதல் யாங்ஙனம்?

பெரியாழ்வார் குழவியைக் காண்கின்றார். உடலொளியும், உயிரொளியும் கலந்து காலுகின்றன; முக அழகும் உள்ளழகும் உருக்கொண்டு மிளிர்கின்றன.

உயர் ஞானியாராகிய ஆழ்வார், "இம்மகவின் அழகு என்னே! இவ்வழகு எம்பெருமான் மனத்தையும் கவரத்தக்கது! என்ன வியப்பு! என்ன வியப்பு! இச் சிசுவின் முடியில் வண்டுகள் படிந்து படிந்து இனிய பண்ணோடு கிளம்புகின்றனவே! இம்முடியில், வண்டுகள் விரும்பும் என்ன மணம் உள்ளதோ, யான் அறியேன்! இத்தோற்றங்களைக் காணுங்கால் இம்மகவிற்குச் 'சுரும்பார் குழற்கோதை' என்னும் திருநாமம் சூட்டலே தகுதி என என் நெஞ்சம் உன்னுகிறது," எனத் தீர்மானித்தே, அவர் இத்தெய்வக் குழவிக்கு இச்சீரிய பெயரைச் சூட்டியிருத்தல் வேண்டும்.

இனி நம் அன்னையார் இப்பெயரை எம்முறையில் கொள்ளுகிறார் என்பதை நோக்குவோம்: இவர் வெளிப்படுத்திய திருப்பாவையின் இறுதியிலோ, திருமொழியின் பல இடங்களிலோ எப்பெயரை அமைக்கிறார்? தம் சிறப்பையும் உயர் பொருள்களையும் உணர்த்தா நிற்கும் பெயர்கள் பல தமக்கு வாய்ந்திருப்பினும், அவற்றுள் ஒன்றையேனும் இவர் கைக்கொண்டாரில்லை. பின்னை எதையோ எனின், இவர் பெருமை தோன்றக் கூறிக்கொள்ளுவது, தம் தந்தையார் தம்மை எப்போதும் அன்புடன் அழைக்கும் கோதை என்னும் திரு நாமத்தையே ஆகும். இதனாலேயே இவர் இப்பெயரிடத்துக் கொண்டிருக்கும் அன்பும் மதிப்பும் நன்கு புலனாகவில்லையா? மற்றப் பெயர்களைக்காட்டிலும் இத்திருநாமம் சிறந்ததென்பதற்கு இஃதொன்றே சாலுமன்றோ? இங்ஙனம் பல இடங்களிலும் நம் ஆண்டாள், தந்தையார் தம்மைச் செல்வமாக அழைத்த 'கோதை' என்னும் நாமத்தையே பொருத்தியிருப்பினும், அவர் தமக்கிட்ட 'சுரும்பார் குழற்கோதை'

என்னும் முழுப் பெயரையும் இவர் மறந்தாரில்லை. இவர் இதைச் சிறந்த ஓரிடத்தில் கூறிக்கொள்ள வேண்டுமெனத் தீர்மானித்தார் போலும்! அங்ஙனம் செய்தற்குத் தகுதியானதும மேம்பட்டதுமான ஓரிடம் இவருக்குக் கிடைத்தது. அஃது எந்த இடம்? பறவைகள், கனிகள், கொடிகள், மலர்கள், வண்டுகள் முதலிய இயற்கைப் பொருள்களைக் காண்கிருர். அவை எம் பெருமான் நிறம், புன்சிரிப்பு, வடிவம் முதலியவற்றை இவருக்கு நினைப்பூட்டுகின்றன. அங்கு இறைவன், இயற்கை நிறமும் அழகும் வாய்ந்து புன்முறுவல் கொண்டு தம் எதிர் நிற்பதாக ஓர் உணர்ச்சி இவருக்கு உண்டாகிறது. இவ்வுணர்ச்சியில் ஆனந்தமும், ஆற்ருமையும் கலந்து மிளிர்கின்றன. யாங்ஙனம்? 'நம்பெருமான் ஒளிந்திருக்கும் இடத்தைக் காணப்பெற்ருேமே!' என்பதால் ஆனந்தமும், 'அவனை அடைந்து இன்பமுற இயலவில்லையே!' என்பதால் ஆற்ருமையும் இவருக்கு அமைகின்றன. தம்மைத்தாம் சிறிது மறக்கிருர்; பின்பு உணர்வடைகிருர். இன்னெரு புறம் செந்தாமரைமேல் படிந்துள்ள வண்டுகள் இவர் கண்ணுக்குப் புலனுகின்றன.

> **"செங்கண் கருமுகிலின் திருவுருப் போல்,மலர்மேல்**
> **தொங்கிய வண்டினங்காள்!"** —**நா. தி. 9 - 5**

என அவ்வண்டுகளை அழைக்கிருர். செந்தாமரைமலரை அவனுடைய திருமுகம் திருக்கண் திருவாயாகவும், வண்டுக் கூட்டத்தை அவன் திருமேனியாகவும் கோதையார் காண்கிருர். இன்னும் சிறிது போழ்தில் அவ்வண்டுகள் தம் கூந்தலிலுள்ள தேன் நிரம்பிய மலர்களில் வந்து மொய்க்கின்றன. அவ்வமயம்

அவன் திருமேனியே தம்மாட்டு வந்து பொருந்துவதாக இவருக்கு ஓர் உணர்ச்சி ஏற்படுகிறது. உள்ளத்தில் உவகை ஊறுகிறது. இஃதொன்றுமோ? அச்செந்தாமரை மலரிலிருந்து பண்ணோடு (ரீங்காரத்தோடு) கிளம்பிய வண்டுகள் இவர் குழலிலும், இவர் குழலிலிருந்து இசையோடு எழுந்த வண்டுகள் அச்செந்தாமரை மலரிலுமாகப் படிகின்றன. இச்செல்கையும், வரவும் அன்னையாருக்கு அவன் செய்தியைத் தமக்கும், தம் செய்தியை அவனுக்கும் சென்றுரைக்கும் தூதுவர் நிலையை நினைப்பூட்டுகின்றன. இஃது உண்மை நிகழ்ச்சி எனவே நெஞ்சிற்கொள்கிறார். "என்ன மகிழ்வு! என்ன மகிழ்வு! யான் இந்தச் சோலைக்கு வந்தது நல்ல வேளை போலும்! யான் எம்பெருமான் உருவத்தைக் காண்பதல்லாமல், அவன் பரிசத்தையும் பெறப் பெற்றேனே! அன்றியும், எங்கள் கருத்துகளும் ஒன்றோடொன்று கலக்கின்றன. ஈதன்றோ நல்ல நாள்! இத்தகைய பேற்றுக்கு நிலைக்களனாய் இருப்பன எவை? இவ்வண்டுகளும் என் கூந்தலுமே அல்லவா? இவை இரண்டிற்கும் நன்றி செலுத்துதற்கேற்ற பெயரையே யான் இங்குச் செப்புதல் வேண்டும். இப்பெயரும் எனக்குப் புதுவதன்று; என் தந்தையாரால் முன்னரே எனக்கு இடப்பட்டதேயாகும். அவர் முக்காலமும் உணர்ந்த ஞானியரல்லரோ? பிற்காலத்து நிகழவிருக்கும் இந்நிகழ்ச்சியை உளங்கொண்டுதான் அவர் இத்திருப்பெயரை எனக்கு இட்டனர் போலும்! இதுகாறும் 'சுரும்பார் குழற் கோதை' என்பதை யான் இடுகுறியெனக் கருதி இருந்தேன்; இன்றே இது காரணப் பெயர் என்பதை அறிந்தேன். இவ்வமயம் யான் கண்ட உயரிய காட்சிகளைத் தெரிவித்துள்ள இப்பத்தும் மிகச் சிறந்தனவாத

லால், இவற்றைப் பாராயணம் செய்வதால் உண்டாகும் பயனும் சிறந்ததாகவே இருத்தல் வேண்டும்," எனக் கருதிய கோதையார்,

" சுந்தரனைச் சுரும்பார்குழல்
    கோதை தொகுத்துரைத்த
செந்தமிழ் பத்தும்வல்லார்
    திருமாலடி சேர்வார்களே." —நா. தி. 9-10.

எனக் கூறுகிறார். ஈண்டு,

" செழுங்குழல்மேல்
மாலைத் தொடைதென் னரங்கருக் கீயும் மதிப்புடைய
சோலைக் கிளி."

என்னும் திருக்கண்ண மங்கையாண்டான் வாக்கையும் நோக்குக. இவற்றால் மற்றப் பெயர்களைக்காட்டிலும் இஃது உயர்ந்ததெனக் கொள்க.

## திருப்பாவைச் செல்வியார்

கோதையார் உலகம் உய்தற்பொருட்டுத் **திருப்பாவை** என்னும் ஒரு நூலை இயற்றித் தந்தமையின் இவருக்கு இப்பெயர் வழங்கலாயிற்று. இந்நூல் எதைக் குறிக்கிறது? **மார்கழி நீராட்டம்** என்னும் ஒரு தூய நோன்பையே குறிக்கிறது.

'திருப்பாவைச் செல்வியார்' என்பதில் 'திரு, பாவை, செல்வியார்' என்னும் மூன்று சொற்கள் சேர்ந்திருப்பினும், முதல் இரு சொற்களையும் திருப்பாவை என்னும் நூலைப்பற்றிக் கூறுங்கால் ஆராய வேண்டி இருத்தலின், இங்குச் செல்வியார் என்னும் சொல்லைமட்டும் காண்பாம். செல்வம் என்பது பெரும்பான்மையும் எதைக் குறிக்கிறது? பொருளையேயன்றோ? ஆயினும்,

**" குன்றத் தனை இரு நிதியைப் படைத்தோர்**
**அன்றைப் பகலே அழியினும் அழிவர்."**

—நறுந்தொகை

என்னும் ஆன்ரோர் வாக்கிற்கு இலக்காய் நிற்கும் நிலையற்ற பொருட்செல்வம் ஒன்றில் மட்டும் நம் பெருந்தகையார் சிறந்து விளங்கினர் அல்லர். அங்ஙனமாயின், இவர் அறிஞர் நோக்கிற்கு இத்துணை இலக்காய்நிற்றல் அருமையே! இவரிடம் பொருட்செல்வத்துடன் அறிஞரால் மதிக்கப்படும் கலைச் செல்வம், அருட்செல்வம், கைங்கரியச் செல்வங்களும் பொருந்தியிருந்தன ;

**" பொன்னியல் மாடங்கள் சூழ்ந்த**
**புதுவையர் கோன்பட்டன் கோதை "**

—நா-தி-3-10

என்பது இவர் செல்வச் சிறப்பைக் குறிக்கவில்லையா? இவர் நூல்களே இவருடைய கலைச் செல்வத்திற்குச் சான்று பகராவோ? இவர் எம்பெருமான் அருள் பெற்று இன்புற்றார் என்பது, ' வங்கக் கடல் கடைந்த ' என்னும் திருப்பாவை இறுதிப் பாசுரத்தால் தெள்ளிதின் வெளிப்படுகிறது.

**" எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு**
**உற்றோமே யாவோம்; உனக்கேநா மாட்செய்வோம்."**

—திருப்பாவை, 29

என்னும் சொற்றொடர் இவர் கைங்கரியச் செல்வத்தையே விரும்பினார் என்பதை நன்கு விளக்குகின்றது.

அன்றியும், தாம் ஒருவராகவே நலன்களைத் துய்த்து இன்பமுறும் குறுகிய எண்ணமுடையார் கூட்டத்தில் சேர்ந்தவரல்லரே நம் பெருந்தகையார்! ஆதலின், 'யான் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்' என்பதற்கேற்ப,

தாம் அடைந்த இன்பத்தைத் தம்மொத்த அரிவையரும் அடையுமாறு செய்து, அதனால் உண்டாகும் ஆனந்தத்தில் ஆழ்ந்து நிற்கிறார்.

இத்திருநாமம் மற்றத் திருநாமங்களைப் போன்று நமக்கு நம் அன்னையாரை மட்டும் அறிமுகப்படுத்தி நிற்கவில்லை. இப்பெயர் நினைவிற்கு வந்தவுடன் நம்மை எங்கு ஈர்த்துச் செல்லுகிறது? இப்பெயரைப் பூண்ட நூலினிடத்திலன்றோ?

இத்திருப்பாவையை ஒரு சிறு உலகம் என்னலாம். இஃது எதனால் ஆக்கப்பட்டுள்ளது? இனிய செந்தமிழினாலேயே! இவ்வுலகம் தூய மக்களும், மக்களுடைய உடலை வளர்க்கும் மழையும், அவர்தம் ஆன்மாவை வளர்க்கும் இறையும் அமைந்தது. அறிஞர் இவ்வுலகில் நுழைந்து நுழைந்து இன்பந் துய்க்கின்றனர். சில்லாண்டுகளில், அன்றிச் சில யுகங்களில், அழியும் உலகமல்லவே நம் பெரியார் சிருட்டித்த திருப்பாவையாகிய இவ்வுலகம்! இறைவனால் தோற்றுவிக்கப்பட்ட இந்நில உலகம் எத்துணைக் காலம் நிலைபெற்று நிற்குமோ, அத்துணைக் காலமும் இச்சிறு உலகமாகிய நூலும் அழியாதிருக்குமன்றோ? ஆதலின், இந்நூலைப்பற்றி இவருக்கு அமைந்த இப்பெயரும் அழியாதென்பதில் தடை யாது? இத்திருப் பெயர் மற்றப் பெயர்களைக் காட்டிலும் சிறந்ததென்பதற்கு இஃதும் ஒரு காரணம் எனக் கொள்க.

சிலந்தி ஒன்று தன்னுள் பொருந்திய நூலை வெளி விட்டு ஒரு வலை பின்னுதல் போன்றன்றோ, நம் திலக மனையார் தம்முள் மறைந்திருந்த உயர் கருத்துகளை விரித்து ஓர் அழகிய உலகை அமைத்துள்ளார்? ஆயி

னும், அச்சிலந்தி வலையோ, அதன் நலத்திற்கென வனை யப்பட்டு, அதற்கு மட்டும் இன்பமளியாநிற்கிறது. இதுவோ, பிறர் நலத்திற்கெனவே ஆக்கப்பட்டு, யாவருக்கும் எல்லையற்ற ஆனந்தத்தை ஊட்டாநிற் கிறது.

மற்ற ஆழ்வார்களும் அழகிய பாசுர உலகங்களை அமைத்துள்ளார்கள். அங்ஙனமாயின், இவ்விரு உலகங்கட்கும் உள்ள வேறுபாடு யாது? உலகம் என் பது உயர்ந்தோரைக் குறிக்கும் அல்லவா? மற்றவர் உலகங்களிலோ, தம் உபதேசத்திற்குச் செவி கொடா தாரும், ஐஸ்வரிய கைவல்யச் செல்வங்களை நாடி நிற் பவரும், சுதந்தரருமே குடி ஏறியுள்ளனர். இத்தகை யோர் யாங்ஙனம் உயர்ந்தோராவார்? நம் அன்னையார் உலகிலோ, இவர் போதனைக்குச் செவி சாய்த்து இவரோடு கலந்து செயல் புரிபவரும், எம்பெருமானாகிய அழியாச் செல்வத்தையே விழைந்து நிற்பவரும், ஆன்ம குணமாகிய பார தந்திரியத்தை இயற்கையாகவே பெற்றவருமாகிய ஆயர் மங்கையரல்லரோ அமைந் துள்ளனர்? இவரை உயர்ந்தோர் எனக் கூறுதற்குத் தடையாது? இன்னும் மற்றவர்கள் உலகில் தேவதாந் தரங்கள் (மற்றத் தெய்வங்கள்) காட்சி அளிக்கின்றன. திருப்பாவைச் செல்வியார் உலகிலோ, திருமால் தவிர வேறு கடவுளர் தலை காட்டிலர். ஏன்? நம் செல்வியார் மனம் திருமாலோடு ஒன்றிக்கலந்து நின்றது. இந்நிலை யில் வேறொன்று தோன்ற இடமேது? வேறு எந்த ஆழ் வார், தம் நூலாகிய உலகில், 'ஒன்றே தேவும், ஒன்றே உலகும்,' என்பதை நிலை நாட்டியுள்ளார்? நம் பெருந் தகையார் இயற்றிய உலகம் மாற்றற்ற பசுந்தங்கத் தால் ஆக்கப்பட்டது. மற்றவையோ, பிற உலோகங்

கள் கலந்த பொன்னால் சமைந்துள்ளன. இம்முறையில் இதன் ஒளிக்கும், மற்றவற்றின் ஒளிக்கும் வேறுபாடு தோன்றுதோ? இப்பெற்றிகளை நன்கு ஆராய்ந்தறிந்தயார்தாம், மற்ற ஆழ்வார்களின் நூலுலகங்களைக்காட்டிலும் நம் கோதையாரின் நூலுலகம் மேன்மையுடையது என்பதை ஒப்புக்கொள்ளாமல் இருக்க முடியும்!

இத்துணைச் சிறப்புகள் வாய்க்கப்பெற்ற நூலுலகத்தை அமைத்ததனாலன்றோ இவருக்குத் திருப்பாவைச் செல்வியார் எனப் பெயரமைந்தது? இப்பெயரைத் தாம் தம் நூலில் கூறிக்கொள்ளாததற்குக் காரணம், தற்புகழ்ச்சியாய் முடியும் என்னும் கருத்துப் போலும்! பெருந்தகையாளர் தம் சிறப்புப் பெயர்களை அறிஞர் வாயிலாகக் கேட்டு இன்புறுதலன்றித் தாமே எடுத்துரைக்க இசைய மாட்டாரல்லரோ?

**" அரங்கற்குப்**
**பன்னு திருப்பாவைப் பல்பதியம்—இன்னிசையால்**
**பாடிக் கொடுத்தாள்நற் பாமாலை."**

என **உய்யக் கொண்டார்** இவரைத் 'திருப்பாவை பாடிக் கொடுத்தாள்' என வழங்குதலை நோக்குக. ஆகவே, பாகவதர் இல்லத்திலும் உள்ளத்திலும் என்றும் தவழ்ந்துகொண்டிருக்கும் இந்நூலால் ஏற்பட்ட இத் திருநாமம் மற்றவற்றைக்காட்டிலும் ஏன் உயர்வுடையதாகாது?

## ஆண்டாள்

**ஆண்டாள்:** இச்சொல் ஆள் என்னும் பகுதியினடியாகப் பிறந்த பெண்பாற்படர்க்கை வினையாலணையும் பெயர். இப்பெயர் இவருக்கு எப்போது வழங்கப்பெற்றது? எம்பெருமான் ஒருநாள் இரவு பெரியாழ்வார் கன

வில் தோன்றி, "உன்னிடம் வளர்ந்துவரும் சிறுமி, பூமகளின் அமிசம். அவள் இவ்வுலகத்தை ஆளவந்தவள். யாம் விரும்புவன அவள் சூடிக்கொடுத்த மாலைகளே," எனத் திருவாய் மலர்ந்தருளி மறைந்தனன்; தம் எண்ணத்தை அர்ச்சையிலும் தெளித்துக் காட்டினன். இச்செயலைக் கண்ட ஆழ்வார், "எம்மை ஆண்டாள் இவளே!" எனத் தம்மகளாரைத் தழுவிக்கொண்டனர். அன்றையிலிருந்தே இத்திரு நாமம இவருக்கு வழங்கலாயிற்று. இறை பக்தியில் ஆழ்ந்து நின்ற காரணத்தினுல் ஆழ்வார்கள் எனப் பெயர் பெற்ற பன்னிருவருள் ஆண்டாளும் ஒருவராதலின், இவர் பக்தியைப்பற்றி நாம் பகரவேண்டிய அவசியமில்லை. ஆனுல், மற்றவர்களைப் போன்று நம் பூங்கொடியார் எம்பெருமான் பக்தியோடு மட்டும் நின்றிலர்; உலக உயிர்களையும் ஈஸ்வரனையும் ஆளுந்திறமையையும் பெற்றிருந்தனர். இதைத் தெள்ளிதிற் குறிக்க எழுந்ததே ஆண்டாள் என்னும் இத்திருநாமம்.

இவர் உயிர்களை எங்ஙனம் ஆள்கிருர்? இறையின் இயல்புகள், அவன் உத்தமக்குணங்கள் ஆகியவற்றை இவர் இயற்கையோடும், உலகப்போக்கோடும் கலந்து கலந்து உயிர்களுக்கு ஊட்டுகிருர். அவற்றைச் செவி ஏற்ற மங்கையர் திரள்திரளாக இவரிடம் வந்து குழுமுகின்றனர். அவர்தம்மைக் கொண்டுபோய் இவர் எம்பெருமானிடம் ஒப்புவிக்கிருர். அவர்கள் கைங்கரியப் பயனைப் பெற்று உய்கின்ருர்கள். இச்செயலைத் திருப்பாவையில் காணலாம்.

இவர் ஈஸ்வரனை ஆளுதல் யாங்ஙனம்? ஈஸ்வரன் சேதனரைத் திருத்துதற்பொருட்டுப் பல பிறவிகளையும் எடுத்துப் பல முயற்சிகளையும் மேற்கொண்டான்.

பயன் கிடைத்திலது. நம் அன்னையாரோ, மக்கள் குற்றங்களைக் கண்டு சினமுற்றிருக்கும் இறைவனை நல்லுரைகளால் மகிழ்வித்துச் சேதனரை ஆட்கொள்ளுமாறு செய்கிறார். இதனால், ஈஸ்வரன் சேதன லாபத்தைப் பெறுகிறான். இங்ஙனம் இருபாலாரையும் தக்க முறையில் ஆளுகின்றமையின், இவருக்கு '**ஆண்டாள்**' என்னும் திருநாமம் எத்துணைப் பொருத்தமுடையதாயிற்று! இச்செயலை மற்ற ஆழ்வார்களும் மேற்கொண்ட போதினும், அவர்களுக்குப் பயன் கைகூடிற்றிலது. இது நிற்க!

இறைக்குப் பரமபதம், பாற்கடல், அவதாரம், அந்தர்யாமித்துவம் (உயிர்களின் உள்ளுறைதல்), அர்ச்சாவதாரம் என ஐந்து நிலைகள் உண்டு. இவற்றுள் அர்ச்சாவதாரமே கடவுட் குணங்கள் யாவும் நிரம்பப் பெற்ற இடம் என்பதற்குப் பல சான்றுகள் உள. இது சாஸ்திரங்களும் ஆராய்ச்சியாளரும் ஒப்புக்கொண்ட ஒன்று. மக்கள் எம்பெருமான் திருவருளைப் பெறுதற்கு இதுவே தக்க இடம். ஆகவே, நம் பொற்புடையாருக்கு அர்ச்சாவதாரத்தில் அமைந்த பெயர் எது? 'ஆண்டாள்' என்பதே! அறிந்தவரோ அறியாதவரோ ஆண்டாள் சந்நிதி, ஆண்டாள் நீராட்டம், ஆண்டாள் திருக்கலியாணம் என இப்பெயரையே இட்டுச் செப்புவதைக் காண்க. உய்யக்கொண்டாரும், 'அன்னவயல் புதுவை ஆண்டாள்' எனவே வழங்குகிறார்.

நம் திலகமனையார் முக்காலத்திலுள்ள மக்களையும் ஆளுந்திறமை வாய்ந்தவராவர்: முன்புள்ள ஆயர் மங்கையராகவே தம்மைப் பாவித்துச் செயலியற்றியமையின், அஃது அம்மங்கையர்களுக்கு நலமளித்தது. இவர் காலத்திலிருந்த உலகமும் இவரால் இறையருளைப்பெற்

றுச் செம்மையடைந்தது. பிற்காலத்தவரும் எல்லாத் தலைமுறையும் இவர் வரைந்து வைத்துப்போன உயர் கருத்துகளால் பண்புற வழியுள்ளது. ஆதலின், இத் திருப்பெயர் எத்துணைச் சீர்மையுடையதாகும்! தெய்வத்தன்மை வாய்ந்த இப்பெயரை, மற்ற ஆழ்வார்களின் பெயர்களோடும், இவருக்கு அமைந்த மற்றப் பெயர்களோடும் ஒப்புக்கூறல் யாங்ஙனம் இயலும்! இதன் சிறப்பே தனிப்பட்டதெனக்கொள்க.

## சூடிக்கொடுத்த நாய்ச்சியார்

ஆண்டாள் சூடிக்கொடுத்த மாலைகளே எம்பெருமான் ஆர்வத்துடன் அணிந்து இன்புறக் காரணமாயிருந்தமையின், பெரியோர் இவரைச் **சூடிக்கொடுத்தார்** என வழங்கினர். '**திருப்பாவை**' என்னும் பிரபந்தத்தைப் பாடிக் கொடுத்ததனால் இவர் யாங்ஙனம் **செல்வியார்**, எனப் பெயர் பெற்றாரோ, அங்ஙனமே பூமாலையைச் சூடித் தந்ததனால் இவர் **நாய்ச்சியார்** என்னும் பெயர் வாய்க்கப்பெற்றார். நாய்ச்சியார் என்பதற்குத் '**தலைவியார்**' என்பது பொருள்.

இவர் எவற்றிற்குத் தலைவியாராவர்? உலக உயிர்களுக்கும், உயிர்களின் உள்ளுறையும் இறைக்கும் இவரே தலைவியார் எனக் கொள்ளலாம். யாங்ஙனம்? தலைமையை ஈயும் இயல்புகள் இவரிடத்தில் உள்ளன. இவர் அன்பையும் அருளையும் கொண்டுள்ளார். இவைகளினால் இவருக்கு ஓர் அழகு தோன்றுகிறது. இவ்வழகு ஒருவராலும் இயற்ற முடியாத காரியத்தையும் இயற்றித் தருகிறது. இவை பெண்மைக்கு இயல்பாய் அமைந்த குணங்கள். இவற்றாலேயே பெண்மை தலைமை வகிக்கிறது; போற்றப்படுகிறது; உயர் நிலையில்

அல்ல. ஆண்மை பெண்மையினிடத்திலிருந்தே இக் குணங்களைப் பெறுதல் வேண்டும். அங்ஙனம் பெருத ஆண்மையால் தீமை அன்றி நலம் விளைதல் இல்லை. இத் தன்மை ஓரறிவுயிர் முதல் ஆறறிவு பெற்ற மக்கள் வரையில் அமைந்துள்ளது மட்டுமே அன்றி, இறையி னிடத்தும் பாய்கிறது. இறைவன் தன் சுதந்தரமான ஆண்மைக் குணத்தால் உயிர்களுக்கு அருள் புரிய மறுத்து நிற்கிருன். அவ்வமயம் அருளையே உருவெனக் கொண்ட அன்னையார், மக்களிடம் பரிவு கொண்டு, இறைவனுக்கு நல்லுபதேசம் (புருஷகாரம்) செய்கிருர். அதனுல் அவன் சுதந்தரம் மாய்ந்து, வாத்ஸல்யம், ஸ்வா மித்துவம், ஸௌலப்பியம் - முதலிய ஆறு குணங்களும் தலை எடுக்க, உயிர்களுக்குக் கருணை புரிகிருன். ஆண் மை தனித்திருப்பின் உலகியல் நடைபெருது என்பது உறுதி. பெண்மையை விட்டு ஆண்மை தனித்திருக்க வும் இயலாது. இங்கு, "இவளோடே (பிராட்டியோடு) கூடியே வஸ்துவினுடைய உண்மை" என்னும் **பிள்ளை லோகாசாரியர்** அருள் வாக்கை நினைக்க. இதனுற்ருன் அறிஞர், மனம் வாக்கிற்கு எட்டாத பரம்பொருளுக்கு உருவத்தைக் கற்பிக்குங்கால், ஆண்மையும் பெண்மை யும் கலந்த ஓர் உருவத்தையே கற்பிக்கின்றனர். 'இலட் சுமி நாதன், ஸ்ரீமந் நாராயணன், ஸ்ரீயப்பதி' என்னும் சொற்ருெடர்களை நோக்குக.

பெண்மைக்கு இயல்பாக அமைந்த குணங்கள் அன்பும் அருளும் என்பதை முன்னரே கூறிேனும். இனி இவற்றை விரிவாகக் காண்போம்:

உலகம் எதனுல் கட்டுப்பட்டுள்ளது? எதனுல் நடைபெறுகிறது? எதனுல் அறிவைப் பெறுகிறது? எதனுல் உயர்வுறுகிறது? எதனுல் இன்புறுகிறது?

அன்பினாலேயே ஆகும். இவ்வன்பினாலேயே உலகமும் உயிர்களும் நிலைபெறுகின்றன. இஃது இன்றேல், இவ் விரண்டும் இல்லாதொழியும். "அன்பின் வழியது உயிர் நிலை," என்னும் பொய்யா மொழியார் வாக்கு இங்கு நினைவிற்கு வருகிறது. அன்பு முதிர்ந்து ஆர்வ மாகி, அவ்வார்வம், கனிந்த நெஞ்சை உண்டாக்கி, அக் கனிந்த நெஞ்சினிடம் ஒளிரும் ஞானச்சுடர் இறை வனைக் காணச் செய்கிறது. முதன்மையில் தம்மோடு நின்ற அன்பு, விரிந்து பரந்து உயர்ந்து இறை மட்டும் செல்லாநிற்கிறது. இத்துணைப் பண்பமைந்த அன்பை எதனிடம் காண்கின்றோம்? பெண்மையினிடமா, ஆண் மையினிடமா? 'தாயன்பு' என அன்பைத் தாயினிடம் வைத்தன்றோ உலகம் போற்றுகிறது? இதனால், தேர்ந்த பொருள் யாது? நம் ஆண்டாள் தம் பெண்மைக் குணங் களுள் ஒன்றாகிய அன்பினால் உலகத்தைத் தம் வசப் படுத்தி உயிர்களைத் திருத்தி அமைக்கிறார் என்பதாகும். அன்பினால் ஆகாத காரியமுண்டோ?

இனி, இவரது மற்றொரு குணமாகிய அருளை நோக் குவாம்: அருளன்றோ உலகத்தை ஆளுவது! அருளன் றோ உயிர்களுக்கு இன்னலம் புரிவது! அருளன்றோ தெய்வ இயல்பை உண்டாக்குவது! அருளன்றோ பெருந் தகைமையை ஈவது! அருளன்றோ யாவற்றையும் தன்னை அடையச் செய்வது! அருளன்றோ மனத்திற்கு ஆறுதலளிப்பது! அருளன்றோ தன்னலத்தை ஒழிப்பது! அருளன்றோ பிறர் குற்றங்களைப் பொறுப்பது! அரு ளன்றோ யாவரையும் தன்னோடு ஒப்ப நோக்குவது! அருளன்றோ பிறரை உயர் நிலையில் ஏற்றுவது! அரு ளன்றோ பிறரிடம் இரக்கங் கொள்வது! இத்துணை நலங்கள் யாவும் அமைந்துள்ள இவ்வருளை இயற்கை

யாகக் கொண்டது பெண்மையன்றோ? அங்ஙனமாயின், பெண்மையையே ஏன் இறையாகக் கொள்ளுதல் கூடாது? எங்ஙனம் பெண்மையை விட்டு ஆண்மை நில்லாதோ, அங்ஙனமே ஆண்மையை விட்டுப் பெண்மையும் நில்லாதாதலின், இவ்வருட்குணத்தை இயற்கையாகப் பெற்ற பெண்மை, இதை ஆண்மைக்கு ஊட்டி ஊட்டி, அதனோடு கலந்து தொழில் புரிகிறதெனக் கொள்க.

இதனால் கிடைத்த பொருள் யாது? நம் கோதையார் பெண்மைக் குணங்களுள் ஒன்றாகிய அருளால் உயிர்களை இறையிடம் கொண்டுபோய்ச் சேர்க்கிறார் என்பதே. இவ்விரு பண்புகளாலும் இவருக்கு ஒரு தனி அழகு உண்டாகிறது. அவ்வழகால் ஆண்மைத் தன்மை வாய்ந்த இறையை இவர் தம் வசப்படுத்துகிறார். அவ்வழகில் ஈடுபட்ட இறைவன் இவர் சொற்படி நடக்க உடன்படுகிறான். 'சீரிய குணங்கள் வாய்ந்த இப்பெண்மை நமக்கு நன்மையையே அன்றித் தீமையைப் புரியாது' என்னும் நம்பிக்கை ஆண்மைக்கு உண்டாகிறது. இதனால், ஆண்மை வாய்ந்த இறைவன் பெண்மை வாய்ந்த நம் அன்னையாரின் கருத்தின்படியே காரியங்களை நடத்துகிறான். இவர், தம் அருளினால் இறைவனிடம் கொண்டு செல்லும் உயிர்கள் யாவும் பெருப்பேறு பெற்று இன்பந்துய்க்கின்றன.

இங்குச்

> **"சேதனனை அருளாலே திருத்தும்;**
> **ஈஸ்வரனை அழகாலே திருத்தும்."**

என்னும் ஸ்ரீவசன பூஷண வாக்கியங்களை நினைப்பூட்டிக்கொள்ளல் வேண்டும். அன்றியும், **திருமந்திரம், துவயம், சரமஸ்லோகம்** என்னும் மந்திரங்கள் மூன்ற

னுள் சிறந்தது என்றும், மந்திர இரத்தினம் என்றும் போற்றப்படும் துவயத்தில் பிராட்டியாலேதான் பேறு சித்திக்கிறது எனக் கூறப்பட்டுள்ளது. இங்கு உய்யக் கொண்டார் ' சூடிக்கொடுத்த சுடர்க் கொடி ' என்று ஆண்டாளை வழங்குதல் காண்க.

' நாய்ச்சியார் ' என்னும் இப்பெயருக்கு இன்னொரு பெருமையும் உண்டு. இவர் திருவாய் மலர்ந்தருளிய தூய நூற்பெயர்க்கும் இப்பெயரே அடையாய் அமைந்துள்ளது. இயற்றியவர் பெயரையே பெற்றுலவும் நூல்கள் மிகச் சிலவே. ஆழ்வார்களுள்ளும் பெரியாழ்வார் ஒருவருக்கே இப்பேறு வாய்த்தது. அவர் நூலைப் **பெரியாழ்வார் திருமொழி** எனக் கூறுகிறோம். பெரும் பான்மையும் தம் தந்தையார் போக்கையே பின்பற்றிய நம் செந்தமிழ் அன்னையாருக்கும் இம்முறையே அமைந்தது போலும் !

' **நாய்ச்சியார் திருமொழி** ' ஓர் அழகிய ஓவியம். இஃது யாருடைய ஓவியம் ? அழகே திரண்டதெனக் காணும் கண்ணன் ஓவியம். இதைத் தீட்டியவர் யார் ? இவ்வுலகையே ஒரு படமாக வரைந்து காட்டும் ஓவியத் திறமை வாய்ந்த நம் கோதையார். ஓவியந்தீட்ட என்னென்ன வேண்டும்? எழுதப்படுவோர் உருவப்படமும், பல நிறங்களும், தீட்டும் கருவியும் வேண்டும். இவற்றுள் ஒன்று குறையினும் ஓவியம் உருப்பெற்றெழாது என்பது திண்ணம். ஓவியத்தில் அமைய வேண்டிய நம் கண்ணன் திருவுருவம், நம் ஆண்டாள் அகத்திலும் கண்ணிலும் பொருந்திக் காட்சி அளிக்கிறது. மலர்கள், மலைகள், பறவைகள், சங்கு, ஆர்வம் முதலியன பல நிறங்களாய் அமைகின்றன. இவர் ஞானமே சித்திரக்

கோலாகிறது. இந்நிலையில் நம் நுட்ப மதியார் தம் ஞானக்கோலை இயற்கையாகிற நிறங்களில் தோய்த்துத் தோய்த்துப் பெட்பு வாய்ந்த ஒரு கண்ணன் அழகு ஓவியத்தை வரி வடிவில் இறக்கியுள்ளார். இஃது யாவர் மனத்தையும் கவர்கிறது.

உலகில் சிறந்தவர் யாவர்? காவியத்தில் ஓவியத்தைத் தீட்டிக் காட்டும் அறிவுரம் வாய்ந்தவரே அல்லரோ! இவரே அழியாத புகழுடம்பு பெற்றவர்! இவரே என்றும் நிலைத்திருப்பவர்! இவரே சான்றோர்க்குச் சான்றோராய் நிற்பவர்! இவரே கல்விக் குழுவில் நடனம் புரிபவர்! இவரே பல் வேறு திறம் வாய்ந்தோருக்கும் முதன்மை இடம் பெற்றுத் தலைமை வாய்ந்தவர். இதனாற்றான் இச்சிறப்புகள் யாவற்றிற்கும் இடனாய்த் திகழும் நம் தேவியார், தலைவியார் எனும் பொருள் கொண்ட **நாய்ச்சியார்** என்னும் திருநாமத்தைப் பெற்றார் போலும்! உலகளந்த உயர்ந்தோனை எளிமை வாய்ந்த கண்ணனாக ஒரு தெய்வப் பெண்மணியார் வரைந்து காட்டும் ஓவியம் மற்றவற்றினும் உயர்ந்ததன்றோ! இதை வரைதற்கு யாவருக்கும் இயலுமோ? இதற்கு ஒரு சிறந்த தலைமை வாய்ந்தவர் அல்லவா வேண்டும்! இவரைப் போன்றே இந்நூலும் தலைமை உற்றதென்பதைப் பேரளவிலும் காட்ட வேண்டுமன்றோ! அதன் பொருட்டே இவ்வுயரிய நூலிற்கு '**நாய்ச்சியார் திருமொழி**' என்னும் குறி அமைந்ததெனக் கொள்க. ஆகவே, இத் திருநாமம் பல காரணங்களினால் இவருக்கும் இவர் நூலிற்கும் பொருத்தமுடையதாயிற்று. நாய்ச்சியார் என்பது பிற்காலத்தில் **நாச்சியார்** என மருவியது.

இவற்றால் விளங்குவது யாது? உயிர்களுக்கும் இறைக்கும் இவரே தலைவர் என்பதன்றோ?

இம்முறையில் இறைக்கும் தலைவராய் நிற்கும் இவர் மற்ற ஆழ்வார்களைக்காட்டிலும் உயர்ந்தவர் எனக் கூறுதல் மிகையன்றோ? இவருக்கு அமைந்த மற்றத் திருநாமங்கள் உயிர்களுக்கும் இறைக்கும் இவர் தலைமை பெற்றவர் என்னும் உயரிய பொருளைக் காட்டாமையின், மற்றவற்றைக்காட்டிலும் இது மேம்பட்டது எனக் கொள்ளுவதில் குறை யாது?

## பாவையும் மொழியும்

இத்தலைப்பு நம் அன்னையார் உள்ளமாகிய ஊற்றிலிருந்து ஆர்வத்துடன் சுரந்த சொற்றொடர்கள் அமையப் பெற்ற இரு நூல்களைக் குறியாநிற்கும். இவ்விரண்டிற்கும் பொதுவாக அமையப் பெற்ற அடைமொழி **திரு** என்பது. எம்பெருமான் அர்ச்சாவதாரமாய் எழுந்தருளியிருக்கும் திவ்விய க்ஷேத்திரங்களுக்கும் அவன் பெருமையைப் பாராட்டும் நூல்களுக்கும் **திரு** என்னும் அடைமொழியை அமைத்தல் வழக்கு. அம்முறையிலேதான் திரு என்னும் இச்சொல்லும் இந் நூல்களுக்கு அமைந்துள்ளதோ எனச் சிலர் கருதலாம். அற்றன்று. 'திரு' என்பதற்கு இலக்குமி, அழகு, செல்வம், தெய்வத்தன்மை எனப் பல பொருள்கள் உண்டு. ஆகவே, புருஷகார பூதையான திருமகளுடைய வழிபாடு, பாகவத சேஷத்துவமாகிற ஆன்ம அழகு, இறைவனுக்குத் தொண்டு பூண்டொழுகுதலாகிய கைங்கரியச் செல்வம், சீரிய பயனைத் தருதற்கேற்ற தெய்வத் தன்மை பலவும் இவ்விரு நூல்களுள்ளும் இடங்கொண்டிருத்தலின், இத்திரு என்னும் அடைமொழி இந்நூற் பெயர்களுக்கு வழங்கப்பட்டதெனக் கொள்க. இனி, இரு நூல்களையும் தனித்தனியே ஆராய்வோம்:

## திருப்பாவை

திரு என்பதன் பொருள் முன்னரே இயம்பப்பட்டமையின், பாவை என்பதை இங்கு நோக்குவோம்: முதல் நூல், கருத்தன், அளவு, மிகுதி, **பொருள்**, செய்வித்தோன், தன்மை, இடுகுறி என்பவற்றுள் ஏதேனும் ஒன்று ஒரு நூலிற்குப் பெயராய் அமைதல் மரபு. அவற்றுள் உட்பொருளே இந்நூலிற்குப் பெயராய் அமைந்தது. "நாமும் நம் **பாவைக்குச்** சாற்றி நீராடினால்", "பிள்ளைகள் எல்லாரும் **பாவைக்** களம்புக்கார்", "எம் **பாவாய்** " என்பன இதை வலியுறுத்தாநிற்கும். நிற்க. பாவை என்பதற்குக் கண்ணின் பாவைஎனப் பொருள் கொள்ளின், கண்ணொளி எனல் ஆகும். மொழி என்பதற்குத் தூய வார்த்தை எனக் கொள்ளின், இறை வழிபாடு எனல் ஆகும். ஆகவே, ஞான ஒளியைப் பெற்று உய்தற்கேற்ற இறையை வழிபடுதல் என இச்சொல்லிற்குப் பொருள் கொள்ளலாம்.

இறைவனை நோக்கி இயற்றப்படும் ஒரு நோன்பை வெளிப்படுத்தும் இந்நூலிற்குத் **திருப்பாவை** என்னும் பெயர் அமைந்தது யாங்ஙனம்? பாவை என்பதற்குக் கண்ணின் பாவை என்பதுமட்டுமே அன்றி, பெண், சித்திரம், பதுமை என்னும் பல பொருள்களும் உண்டு. திருமகளுக்கு ஒப்பாகிய நம் கோதையாரின் உள்ளச் சுனையிலிருந்து பெருகிச் சித்திரிக்கப்பட்ட உயிரோவியமாய்த் திகழ்தலின் இதற்கு இப்பெயர் அமைந்தது போலும்! பாவை என்பதற்கு '**நோன்பு**' என்னும் பொருள் உண்டோ? பண்டு, நாட்டில் மழை இன்றிப் பஞ்சம் நேரின், கன்னி மகளிர் ஓர் ஆற்றங்கரையில் மணலால் ஒரு பதுமை அமைத்து, அதைக் **காத்தியாயனி**

என்னும் ஒரு பெண் தெய்வமாகப் பாவித்துச் சில நாட்கள் நோன்பு நோற்றுத் தொழுவர். உடனே மழை பெய்து நாடு வளமுறும்.

இவ்வழக்கம் மலையாளம் முதலிய நாடுகளில் இன்னும் கொள்ளப்படுகிறது. இங்ஙனம் பாவையைக் கொண்டு நோன்பு இயற்றியமையின், இஃது இருமடி ஆகுபெயராய் இப்பாவையின் பெயர் நோன்பிற்காகி, அஃது அந்நோன்பைப்பற்றிக் கூறும் நூலிற்கு ஆகி வந்தது. அக்காலக் கொள்கையையே நம் திருப்பாவைச் செல்வியாரும் கைக்கொண்டார். ஆயினும், இந்நூலின் பெருமை இத்துடன் நின்றுவிடவில்லை. ஆன்ம அணியாகிய சேஷத்துவச் செல்வத்தையும், எம்பெருமான் முன் பதுமை போன்று கிடக்கும் பாரதந்திரியப் பெட்பையும் குறிக்கின்றமையின், இந்நூல் திருப்பாவை எனப் பெயர் பெற்றதென்பதே சிறந்ததாகும்.

இந்நூலில் பாயிரம், தோழியரைத் துயிலுணர்த்தல், எம்பெருமானை அடைந்து பயன் பெறுதல் ஆகிய மூன்று பகுதிகள் உள்ளன. பாயிரமே ஒரு நூலிற்கு உயிர் நிலை. அது நூற்பொருளைத் தெளித்துக் காட்டற்கு ஓர் ஆடி என்னலாம். இந்நூலில் முதல் ஐந்து பாசுரங்களும் பாயிரம். இது முதற்பகுதி. செல்வம், செயல், குணங்களில் பத்து வகைப்பட்ட ஆயர் பாடிப் பெண்களை அஞ்ஞானத் துயிலிலிருந்து ஞான விழிப்பிற்குக் கொணர்வது இரண்டாம் பகுதி. அம் மகளிரை இறை கைங்கரியத்திற்குத் தகுதியுடையவராகச் செய்வது மூன்றும் பகுதி. இப்பகுதி ஆழ்வார்கள் பதின்மருக்கும் ஊக்கமூட்டித் திருமாலின் அருளைப் பெறச் செய்தலைக் குறிக்கிறதென்றும் அறிஞர் பகர்கின்றனர். ஆக, இந்நூல் அஞ்ஞானத்தில் ஆழ்ந்து கிடக்கும்

ஆன்மாக்களுக்கு ஞானம் ஊட்டி இறையோடு கலந்து இன்பந் துய்க்கச் செய்தலை விளக்குகிறது எனக் கொள்க. அன்றியும் எங்ஙனம் ஓம் என்னும் பிரணவம், திருமந்திரம், துவயம், சரமஸ்லோகம் ஆகிய மூன்று மந்திரங்களின் பொருள்களையும் தன்னுள் கொண்டுள்ளதோ, அங்ஙனமே இந்நூலின் 'மார்கழித் திங்கள்' எனத் தொடங்கும் முதல் பாசுரமும் மற்ற முப்பது பாசுரங்களின் பொருளையும் தன்னகத்துக் கொண்டுள்ளது. இவ்வொரு பாசுரத்தைக்கொண்டே எல்லாப் பொருள்களையும் அறியலாம்.மற்றப் பாசுரங்கள் இதை நன்கு விளக்கி அழகுபடுத்தாநிற்கின்றன. இந்நூல் அறிஞருக்குப் பெரு விருந்தாகும். அன்றியும், இந்நூலை ஒரு விதைக்கு ஒப்பிடலாம். ஏன்? வேர், இலை, பூ, காய், கனிகளைத் தன்னுள் அடக்கிக்கொண்டு சிறு உருவத்தில் காணப்படும் விதையைப் போன்று இதுவும் பல பொருள்களைப் பொதிந்து வைத்துக்கொண்டு சிறு வடிவில் காட்சி அளிக்கிறது; எளிய நடையும், உயர்நோக்கும் உள்ளது. தொடுந்தோறும் நீர் ஊறும் மணற்கேணியென்ன, ஆயுந்தோறும் பொருள் சுரக்கும் இயல்புடையது; எளியார்க்கு எளியது; அரியார்க்கு அரியது; அழகின் அமைப்பு; ஆனந்த ஊற்று; யாப்பின் இலக்கணம்; அணிக்குச் சான்று; ஆன்ம ஆக்கம்; அற நிலையம்; பொருட்பேழை; இன்பத்தேக்கம்; விடுதலை வேட்கை; பாகவதர் பாராயணம்; மார்கழியின் மாண்பு; தூய நோன்பு; பிரபந்நர் உயிர் நிலை; வைணவத் தத்துவம்; கைங்கரியத்திலுற்ற களையறுக்கும் அரிவாள்; அஞ்ஞான மயக்கங்களுக்கு மருந்து; கடவுளைக் காட்டும் விளக்கு; இறைக் காதலை ஊட்டும் இன்னமுது. இதன் சீர்மை இதழிலடங்குவதன்று. இதன் ஆராய்ச்சி தனிப்பட்ட

தாகும். நூலைக்கொண்டு ஆசிரியர் பெருமையை உணர் தற்கு இஃதொரு தக்க கருவியாகும். திருப்பாவைச் செல்வியாரின் அன்பும், ஞானமும், சிறப்பும் வாழ்க!

## திருமொழி

இது நம் செல்வியார் இயற்றிய இரண்டாவது நூல். திரு என்பதைப் பற்றி முன்னரே வெளியிட்டமையின், அதன் ஆராய்ச்சி இங்கு வேண்டுவதில்லை. 'மொழி' என்பதற்குச் சொல் என்பது பொதுப்பொருள். ஒருவர் கருத்தை மற்றொருவர் அறிவதற்கு மொழி பெரிதும் பயன்படுகிறது. மொழி இன்றேல், மக்கள் தங்கள் காரியங்களைச் செவ்வனே முற்றுப்பெறச் செய் தற்கு முடியாது. ஒருவரோடொருவர் கூட்டுறவும் உண்டாகாது.

இம்மொழியை நன்மொழி, தீமொழி, உயர் மொழி, உத்தம மொழி, உயிர் மொழி எனப் பல வகை யாகப் பிரிக்கலாம். நம்மாட்டு அன்புடையார் நம் நலனைக் கருதிச் சில மொழிகளைச் சொல்லுவர். அவை அன்று கடுமையாகக் காணப்படினும், பின்பு ஏற்படும் நலனை நோக்கின், அவை நல்லனவே. நம்மாட்டு அன்பற்றவர் நம்மை வஞ்சித்தற்பொருட்டுச் சில மொழிகளைப் பகருவர். அவை அவ்வமயம் இனிமையாகக் காணப்படினும், பின்பு உண்டாகும் தீமையை நோக்கின், அவை தீயனவே. இறைவனது உயர் செயல்களைப் பகர்ந்து பகர்ந்து நம் மனத்தை ஆனந்தத்தில் ஆழ்த்துவதே உயர் மொழியாகும். இதற்குப் புராண இதிகாசங்களே சான்றுகள். எம்பெருமான் கலியாண குணங்களைப் பேசிப் பேசி அவன் அன்பில் படிந்து படிந்து தாம் இன்பந் துய்த்தல் மட்டுமே அன்றித் தமக்குப் பின்புள்ளாரும்

இறையருளை அடைதற்பொருட்டுத் தீட்டி வைத்த மொழி **உத்தம மொழி** எனப்படும். இதற்கு மற்ற ஆழ்வார்களின் பிரபந்தங்களைக் குறிக்கலாம். உலக உயிர்களைக் காத்தலிலேயே கண்ணும் கருத்தும் செலுத்தும் அருட்கடலாகிய திருமாலைத் தவிர வேறொன்றையும் தம் மொழியில் கலவாதிருத்தல், இறைவன் ஆண்மையிலும் தம் பெண்மையிலுமே இடையறாது மனத்தைச் செலுத்தல், தம் ஆன்மாவின் பெண்மை நிலைக்குத் தகக் காரியஞ் செய்தல், தம்மொத்த மங்கையரும் இன்பந் துய்க்க முயலல், இறைவனோடு இரண்டறக் கலத்தற்கு ஏற்றவாறு தம் வாழ்க்கையைப் பண்படுத்திக்கொள்ளல் ஆகிய இவை யாவும் எக்காலத்தவர்க்கும் பயனளிக்கப் பொறித்து வைத்தல், இப்பண்புகள் வாய்ந்தன எவையோ, அவையே **உயிர் மொழி**யாகும். நம் கோதையார் திருமொழியிலேயே இச்சீர்மைகள் யாவும் அமைந்துள்ளன. வேறொன்றில் இவை யாவற்றையும் ஒருங்கே காணல் அருமை. ஆகவே, நம் அன்னையார் திருமொழியே உயிர் மொழி எனக் கொள்க.

உயிர் மொழியாகிய இத்திருமொழி, ஒரு பிரபத்தி நூல். இறைவனை அடைதற்கு நான்கு படிகள் உண்டு. அவை **கன்மம், ஞானம், பத்தி, பிரபத்தி**களாகும். இவற்றுள் எப்படியைப் பற்றினும், அஃது இறையிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்குத் தடையிலது. ஆனால், இவற்றுள் ஒன்றைக்காட்டிலும் ஒன்று எளிமை வாய்ந்தது. இம்முறையில் இறுதியில் செப்பிய பிரபத்தியே மிக எளிமையானதும், விரைவில் பயனளிப்பதுமாகும். ஆயினும், இதில் மக்களுக்கு நம்பிக்கை பிறத்தல் அரிது. நம்பிக்கை இன்றேல், காரியம் கைகூடுதல் இல்லை. பிரபத்தியின் இலக்கணம் யாது? தன் ஆன்

மாவிற்கு ஆதரவளிக்கும் எனக் கருதும் எல்லாச் செயல்களையும் அறவே விடுதல் வேண்டும்; தன் ஆன்மாவை உய்யச் செய்கிறவன் இறைவன் ஒருவனே என எண்ணி அவன் திருவடிகளையே உபாயமாக (துணையாக)ப் பற்றி, அவனையே உபேயமாக (பலமாக)க் கருதுதல் வேண்டும். இதுவே இப்பிரபத்தியின் இலக்கணம் ஆகும். ஆகவே, பிரபத்தியின் திரண்ட பொருள் யாது? ஈப்வரனையே உபாயமும் உபேயமுமாகப் பற்றுதலே. இவரே பிரபந்நர் எனக் கூறப்படுகின்றனர். இதை மனத்துட்கொண்டு நம் அன்னையார் நூல்களுள் செல்வோம்: திருப்பாவையை உபாய நூலெனவும், திருமொழியை உபேய நூலெனவும் பகரலாம். ஆயினும், திருப்பாவையில் உபேயமும், திருமொழியில் உபாயமும் இல்லாமற் போகவில்லை. மிகுதியைக் கொண்டே இங்ஙனம் வரையறுக்க வேண்டி உள்ளது. திருப்பாவையில் எல்லா உறவும் முறையும் அவனே என்றும், அவனுக்கே தொண்டு புரிதல் வேண்டும் என்றும், வேறொரு மாசும் கலவாத தூய தொண்டைத் தருதற்கு அவனே உபாயமென்றும் முடிக்கும் முடிவை, '**கறவைகள்**', '**சிற்றஞ் சிறுகாலே**' என்று தொடங்கும் பாசுரங்களில் காணலாம். இப்பாசுரங்கள் வேறு இடத்தில் வந்துள்ளமையின், இங்குக் கூறுது விட்டோம். இத்தன்மையில் இஃது உபாய நூலாயிற்று. இவ்வான்மா மோக்ஷ நிலையில் இயற்றும் காரியங்கள் யாவை? எம்பெருமானுக்குக் கைங்கரியம் செய்தலும், அக்கைங்கரியத்தினுல் அவன் கொள்ளும் ஆனந்தத்தை (முகமலர்த்தியை)க் கண்டு தான் இன்புறுதலுமே அல்லவா? இதுதானே வீட்டின் பேறு என்றும், உபேயமென்றும் வழங்கப்படுகிறது? இதைக் கைக்

கொண்டவரல்லரோ, பிரபந்நர் எனப்படுபவர்? இத் திருமொழியில் எவை நடைபெறுகின்றன? நம் அருமணி யார், மேகம், மலர், பறவைகள் யாவற்றிலும் இறைவன் வடிவு, அவன் புன்முறுவல் முதலியன கண்டு அவற்றை வாழ்த்துதல், வணங்குதல் ஆகிய கைங்கரியங்களில் ஈடுபடுகிறார்; இதுவே தமக்குப் புருஷார்த்தம் (பயன்) என்பது இவர் கருத்து. இறுதியில், இவர் தொண்டி னால், ஆனந்தமுற்று ஒளிரும் இறைவனோடு கலந்து இன்பந்துய்க்கிறார். ஆகவே, இதை உபேய நூல் எனக் கூறுதலுக்குத் தடை யாது?

நம் செல்வியார் பிரபத்தியின் முதல் படியிலோ இரண்டாம் படியிலோ நின்றார் இல்லை. எஃது பிர பத்தியின் உயர்படியோ, அதில் நிற்கிறார். இறைவ னையே தமக்கு உபாயமும் உபேயமுமெனக் கருதும் பிரபந்நர் என் செய்கின்றனர்? அவனையே பற்றி அவன் முகமலர்ச்சியையே நோக்கி நோக்கிச் செயல் புரிகின் றனர். அக்கால் அத்தூயோர், அவன் வேறாகவும், தாம் வேறாகவும் அல்லவா இருக்கின்றனர்? இவர் எண் ணமோ, அவனே தாம், தாமே அவன் என்பதன்றோ? இவர் முயல்வதெல்லாம் அவனை அடைதற்பொருட்டே அன்றோ? இந்நிலைக்கும், மற்றவர் நிலைக்கும் எத்தனை தொலைவு உள்ளது! இதனால், இவர் சீரிய பிரபந்நரைக் காட்டிலும் உயர்நிலையில் நிற்கிறார்;. இந்நிலையிலிருந்து சிறிதும் விலகாமல் அவ்வரனுள்ளேயே வதிகின்றமை யின், இவர், காதலில் ஆழ்ந்த ஆழ்வார்களிலும் ஆட்சி இடத்தில் அமைகிறார். இவர் காதல் எங்குள்ளது? பக்தியாகும் காட்டரணைக் கடந்து, பிரபத்தியாகும் அகழியை அகன்று, பெருகிப் பெருகித் தோன்றும் காதலா கும் வானளாவிய மதிலுறுப்பையும் தாண்டி, எதனாலும்

அழிதலில்லாத ஓர் அழகிய உள்ளிடத்தில் அமைந்துள்ளது. இதை இடித்துத் தள்ள யாரால் கூடும்? இவர்தாம், அக்காதல் வரம்பைக் கடந்து வர இயலுமோ? அத்தகைய காதலைச் சொல்லால் தீட்டிக் காட்டுவதே இத்திருமொழி. இந்நூலிற்குத் திருமொழி எனப் பெயரமைந்ததைக்காட்டிலும் காதல் மொழி எனப் பெயரமைந்திருப்பின், மிகப் பொருத்தமாகும்! ஆயினும், 'திரு' என்பதற்குப் பொருள் அழகு என்பதன்றோ? அழகிய மொழி எது? காதல் மொழிதானே? ஆதலாற்றான் இதற்குத் திருமொழி எனப் பெயரிட்டனர் போலும்! இத்திருமொழியில் பாயும் காதல் வெள்ளத்தின் பெருக்கென்னே! அஃது அணை கடந்து செல்லும் அரவம் என்னே! அது பைங்கூழ்களைச் செழிக்கச் செய்யும் பண்பென்னே! அது யாவருடைய அஞ்ஞானப் பிணியையும் ஒழிக்கும் பான்மை என்னே! பலருக்கும் ஞான பக்தி வைராக்கியங்களாகிற நலனை ஈயும் பெட்பென்னே! நம் கற்புடையாருக்கு இக்காதல் வளரும் போக்கை நோக்குதல் வேண்டும்!

மக்கட்பிறவியில் இம்மைக்கும் மறுமைக்கும் பயனளிப்பது எது? வாழ்க்கையைப் பண்படுத்துவது யாது? வாழ்க்கையில் ஒற்றுமையை உண்டாக்குவது எது? வாழ்க்கையை நல்வாழ்க்கையாகச் செய்வது யாது? காதலேயன்றோ? காதல் இன்றேல், ஒரு குடும்பமேனும் கூடி வாழுமோ? இளைஞர்கள் நலமடைவார்களோ? உலகம் ஓங்குமோ? உயிர் தூய்மை அடையுமோ? இறையருள் உண்டாகுமோ? பிறவி நீங்குமோ? ஆன்மா இறையடியில் அமருமோ? இல்லை இல்லை. இவ்வுலகம் எதனால் கட்டுப்பட்டுள்ளது? அவ்வுலகம் எதனால் பிணிக்கப்பட்டுள்ளது? காதலினாலேயே என்பதை மறுக்க வல்லார் யார்?

இக்காதல் உலகக்காதல் என்றும் உயிர்க்காதல் என்றும் இரு வகைப்படும். முந்தியது உலகம் அறிந்ததே ஆயினும், அதிலும் தற்போது உண்மை நிலையைக் காணுதல் அரிதே. அங்ஙனமாயின், உயிர்க்காதலைப் பற்றி என்ன இயம்புவது! உயிர்க்காதலும் இறைக்காதலும் ஒன்றே. கண்ணுற் காணப்படும் பொருள்களிடத்திலேயே உண்மைக் காதலைச் செலுத்தும் வன்மை அற்றோர், கண்ணிற்கும் மனத்திற்கும் எட்டாத ஒரு பொருளிடம் காதலைக் கொள்ளுதல் யாங்ஙனம்? இத்தகைய காதலை ஊட்டுவதன்றோ இத்திருமொழி? இக்காதலைப்பற்றி நம் தமிழ் நாட்டில் தமிழ் மொழியில் எழுந்த இலக்கணங்கள் எத்தனை! இலக்கியங்கள் எத்தனை! சமய நூல்கள் எத்தனை! இக்காதல் நூல்களையே **மனோ தத்துவ நூல்கள்** எனப் பகர்கின்றோம்.

காதலைப்பற்றி இயம்பாநிற்கும் இலக்கண இலக்கியங்களையும் சமய நூல்களையும் ஒரு தட்டிலும், இத்திருமொழியை ஒரு தட்டிலும் வைத்துத் தூக்கின், நம் அன்னையார் திருமொழியே கனத்தினால் கீழிறங்குவதாகும். இறையனாரகப்பொருள், நம்பி அகப்பொருள், கோவைகள் முதலியன தெய்வக்காதலைக் கூறினும், அவை நடைமுறையில் நிகழ்தல் அருமை. அன்றியும், அந்நூல்களில், உயர்காதலாகிய அமுதத்தில் பரத்தையில் பிரிதல் போன்ற நஞ்சும் கலந்துள்ளதன்றோ? அஃதெங்ஙனம் உண்மைக்காதல் ஆகும்! மற்றச் சமய நூல்களில் காணும் இறைக்காதலும், இடையீடின்றி நடைபெறாமல் பிறருக்கு உபதேசித்தல் முதலிய சிற்சிலதடைகளால் ஒளி குறைகிறதன்றோ? இஃதும் எவ்வாறு தூய காதல் ஆகும்? இது மட்டுமோ? தாம் ஒருவரே துய்க்

கும் காதலைஅன்றே அச்சமய நூல்கள் அறையாநிற்கின்றன? ‘சமயம்’ என்பது என்ன? சிலர் ‘சமயம் வேறு, வாழ்க்கை வேறு’ எனக் கருதுவர். சிலருக்குச் சமயம் என்னும் சொல் செவி உற்றதும் அச்சம் தோன்றுநிற்கும். ஏன்? பயனற்ற சில கட்டுப்பாடுகளைச் சமயம்எனக் கருதுவதனாலேயே இத்துன்பம் ஏற்படுகிறது. இன்னும், ‘சமயக் கொள்கையைப் பின்பற்றல் துறவிகளுக்கே இயலும்; இல்லறத்தார் இதற்கு அருகர் அல்லர்,’ என்பது சிலர் எண்ணம். ‘நன்னெறி எதுவோ, அதுவே சமயம்,’ என்பதைச் சிலர் அறியாதிருத்தற்குக் காரணம் யாதோ! முதியோருக்கும், துறந்தோருக்கும், உயர்குலத்தோருக்கும் மட்டுந்தான் இஃது இன்றியமையாததோ? மற்றவருக்கும் வேண்டற்பாலதன்றோ? இதனால், சமயம் என்பது நன்னெறி என அறிந்தாம். இந்நன்னெறிகள் பலப்பல. அவற்றுள் சிறந்தது எது? தாம் துய்க்கும் இன்பம் பிறரும் துய்க்க வழி கோலுதலே ஆகும். அந்நன்னெறி நம் ஆண்டாள் திருமொழியில் நன்கு அமைந்திருத்தலைக் காண்க. ஆகவே, தாம் ஒருவரே இன்பந் துய்க்கும் காதலைக் கூறும் சமய நூல்கள் பலவற்றிலும் மற்றையோரும் இன்பமுற வழி கோலிய நம் அன்னையார் நூலாகிய திருமொழியே உயர்ந்ததாகும். இக்காதலை வெளிப்படுத்தும் சமய நூல் தலைவர்கள் பலருள்ளும் கோதையாரே சிறந்தவராவார்.

சமயத்தின் வழியாகக் காதற்கடலில் மூழ்கிய எத்தலைவர் நூலில், காதலித்த பொருளை அடைதற்பொருட்டுச் சிறு தேவதைகளின் காலில் விழுதலும், பறவைகளிடம் சரணடைதலும், குறி பார்த்தலும், அப்பொருளை நனவில் காணுதல் மட்டுமே அன்றிக் கனவி

லும் கண்டு மகிழ்தலும், இயற்கைப் பொருள்களிடத்து அவன் நிறம், வடிவு, உருவம், இயல்பு இவைகளைக் கண்டு மகிழ்தலும், அவன் இருக்கும் எந்த இடத்திற்கேனும் தம்மைக் கொடுபோய் விடுமாறு தீரத்துடன் செப்பலும், அவன் சம்பந்தப்பட்ட எந்தப் பொருளையேனும் பெற்று ஆறியிருக்க நினைத்தலும் இடங்கொண்டன? தாம் காதலித்த பொருளினிடத்துண்டாகிய அளவு கடந்த ஆர்வத்தை அன்றோ இவைகள் தெரிவிக்கின்றன? இதனால், காதலைக் கழறும் இலக்கிய இலக்கணங்களிலும், சமய நூல்களிலும் நம் சூடிக் கொடுத்தார் திருவாய் மலர்ந்த காதல் நூலாகிய இத்திருமொழியே சீரியதென்பதை அறிந்தாம்.

## திருமொழியின் திரண்ட பொருள்

இவ்வுயிர் மொழி நம் கோதையார் வாழ்க்கையை வரைந்து காட்டும் ஓர் ஓவியம் என முன்னரே கூறியுள்ளோம். முதல் நூலாகிய திருப்பாவையில் திருமாலை அடைய வழி கோலினர்; அவனுக்கே தொண்டாற்றுவதாகத் தீர்மானித்தார். ஆயினும், அதில் அவனை அடைந்து அனுபவிக்கும் பேறு நிரந்தரமாய்க் கிடைத்திலது. ஆதலின், இத்திருமொழியில், மன்னனைச் சேர்ந்து கருதிய பொருளைப்பெற மனங்கொண்டோர் காவலாளர் காலைப் பிடித்தல் போன்று, மாயப்பிரானை அடையக் கருதிய இவர் மன்மதனைப் பற்றுகிறார். இச் செயலைப் பொருத எம்பெருமான், காட்சி அளிக்கிறான். ஆயினும், காலந்தாழ்த்து வந்த அவனோடு வார்த்தை சொல்ல இவர் மனம் இசைந்திலது. அதனால், அவனை நோக்காதவர் போலச் சிற்றில் இழைக்கிறார். அச்சிற்றிலைக் கலைக்க முற்படுகிறான் மாயனாகிய அக்கண்ணன்.

அவ்வமயம் இரு திறத்தினர் நெஞ்சும் கலந்து உறவாடுகின்றது. சிறு போதில் அவ்விறைவனது உருவெளித் தோற்றம் மறைந்துவிடுகிறது. இதனால், அன்னையார் நெஞ்சம் நெகிழ்கிறது. அக்காலத்தில் நல்ல வரனை அடைதற்பொருட்டுப் **பனி நீராடல்** என்னும் ஒரு கொள்கை உண்டு. அதன்படியே இவர் பல பெண்களோடு விடியற்காலையில் பொய்கை ஆடச் செல்லுகிறார். இவர்கள் நிழலைப் பற்றிச் சென்ற கண்ணன், இவர்கள் கரையில் வைத்த அணிகளையும் ஆடைகளையும் வாரிக் கொண்டு குருந்த மரத்தேறி இருக்கிறான். அவனிடம் வழக்கிட்டு அவற்றையும், அவன் அருளையும் பெற்றுக் கோதையாரும், மற்ற மகளிரும் வீடு திரும்புகின்றனர். அவன் பிரிவை ஆற்றாத அன்னையார் கூடலிழைத்துப் பார்க்கிறார். அக்கூடல் இவருக்கு ஒரு விடையும் பகர்ந்திலது. ஆதலின், அருகிருந்த குயில்களை நோக்கி, "எம்பெருமான் என்னைக் கடைக்கணிக்குமாறு கூவுவாய்," என அதன் காலில் விழுகிறார். அஃதும் இவர் எண்ணத்தை முற்றுவிக்கும் வன்மையைப் பெற்றிலது. அல்லும் பகலும் அவன் நினைவிலேயே ஆழ்ந்திருக்கும் அன்னையார், கண்ணன் வந்து தம்மை மணப்பதாகக் கனவு காண்கிறார். அது சொப்பனமாக முடிந்ததை உணர்ந்த பெரியார் மனம் கொதிப்புற்றது. உடனே **பாஞ்ச சந்நியத்தைத்** தன் திருவதரத்தில் பொருத்திய கண்ணன் இவருக்குக் காட்சியளிக்கிறான். இக்காட்சி இவருக்குப் பொறுமையையும், ஆற்றுமையையும் உண்டாக்குகிறது. அவன் திருவதரத்தின் இனிமையைப் பாஞ்சசந்நியத்தினிடம் வினவி வினவிப் பொழுது போக்குகிறார்; மரங்கள், கனிகள், மழை முதலிய இயற்கைப் பொருள்களில் இறையைக் கண்டு கண்டு களிக்கி

ருர். ஆயினும், அவனைச் சேர இயலாமையின், வருத்தம் இவர் மனத்தை வாட்டுகிறது. தம் நிலையைக் கண்டு தம்மினும் துன்புறும் தோழிமார், தாய்மார்களை நோக்கி எம்பெருமான் விரைவில் வந்து தம்மை அங்கீகரிப்பான் என்று இயம்பி, அவர்களைத் தேற்றுகிருர்; தாமும்சிறிது ஆறி இருக்கிருர். சிறிதுபோது கழிந்ததும் ஆற்ருமை மீதூருகிறது. தம்மைச் சுற்றி உள்ளவரை நோக்கி, அவன் அர்ச்சையாய் எழுந்தருளி இருக்கும் ஏதேனும் ஓரிடத்தில் கொடுபோய்த் தம்மை விடுமாறிறைஞ்சுகிருர். அவர்கள் அங்ஙனம் செய்ய ஒருப்பட்டார்களில்லை. அவ்வாறு செய்யாமல் நிற்கும் தம்மனேரை நோக்கி, அவன் தொடர்பு வாய்ந்த எப்பொருளையேனும் கொணர்ந்து தம்மேல் இடுமாறு மன்ருடுகிருர்; இறுதியில் தாம் கருதியவண்ணமே எம்பெருமானிடம் சென்று அவனைக் கலந்து இன்பம் துய்க்கிருர். இஃதே அன்னையார் திருமொழியில் அமைந்த பொருள். இஃதே இவர் வாழ்க்கைச் சித்திரமாகும். நம் அன்னையார் திருவாய் மலர்ந்த இவ்விரு நூல்களும் இத்தூயோரின் பாவனையினுலேயே உருக்கொண்டெழுந்தன என்பதை நாம் மறந்துவிடுதல் கூடாது. இவை எக்காலத்தவருக்கும் இன்பம் ஈயாநிற்கும். இவை கவிஞருக்குக் காவியம்! புலவருக்குப் பொற்புடை ஓவியம்! காதலருக்குக் கற்புப் பெட்டகம்! தத்துவருக்குத் தங்கநிதி! இலக்கணத்திற்கு இருப்பிடம்! இலக்கியத்திற்கு எடுத்துக் காட்டு! தமிழ்க்குத் தாயகம்! சமயச் சான்ருேருக்குப் பத்தி ஊட்டும் புதையல்! இத்தகைய நூல்களைப் பெறுதற்குத் தமிழ்த்தாய் இயற்றிய தவமென்னே! வைணவ உலகத்தின் வரம்பு கடந்த புண்ணியம் என்னே! இந்நூல்கள் என்றும் நிலவுவனவாக! எல்லா உலகிற்கும் இன்பமளிப்பனவாக!

## 2. ஆழ்வார்களிலும் ஆண்டாள் உயர்ந்தவரா ?

### பெண்மையின் பெட்பு

உலகில் ஞான பக்தி வைராக்கியங்களுடன் திகழ்ந்தவர் பல்லோராவர். அவருள் உயர் நிலையில் நிற்பவர்கள் ரிஷிகளும் ஆழ்வார்களுமே. இவர்களுள்ளும் இறை அன்பில் ஒருவரோடொருவரிடை ஏற்றத் தாழ்வுண்டு. இப்பெற்றியைப் பெரியவாச்சான் பிள்ளை மிகத் தெளிவாக விளக்குகிறார்: ரிஷிகளையும் ஆழ்வார்களையும் ஒப்ப நோக்குங்கால், ரிஷிகள் பக்தி அணுவளவிலும் ஆழ்வார்கள் பக்தி மலையளவிலும் காணப்படும். மற்ற ஆழ்வார்கள் பக்தியையும் பெரியாழ்வார் பக்தியையும் நோக்கின், மற்றையோர் பக்தி அணுவளவிலும், பெரியாழ்வார் பக்தி மலையளவிலும் தோன்றுநிற்கும். பெரியாழ்வார் பக்தியையும் ஆண்டாள் பக்தியையும் ஒப்பிடுங்கால், பெரியாழ்வார் பக்தி அணுவளவிலும், ஆண்டாள் பக்தி மலையளவிலும் நிற்கும் என்பது அப்பெரியாரின் துணிபு. இதனால், பக்திக் கடலில் ஆழ்ந்துநின்ற ஆழ்வார்களைக்காட்டிலும் ஆண்டாள் மிக உயர்ந்தவர் என்பதை அறிந்தாம். இவர் இங்ஙனம் பக்தியில் தலை சிறந்து நிற்றற்குக் காரணம் இல்லாமற் போகவில்லை. 'எம்பெருமானுக்கு யாரால் என்ன தீங்கு நேருமோ!' என அஞ்சி, எப்போதும் அவனுக்குப் பல்லாண்டு பாடும் ஆழ்வார் பதின்மருக்கும் இவர் ஒரே மகளாராய்த் தோன்றினவரல்லரா ?

எங்ஙனம் பத்துக் குடும்பங்களுக்கும் ஒரே மகவு தோன்றின் அப்பத்துக் குடும்பத்தினர் பொருட்செல்வமும் அம்மகவையே வந்தடையுமோ, அங்ஙனமே பத்து ஆழ்வார்களுக்கும் ஒரே மகளாராய்த் தோன்றிய இவ

ருக்கும், அவர்கள் ஞானபக்தி வைராக்கியங்கள் யாவும் வந்து சேர்ந்தன. இம்முறையில் இவர் அவர்களைக்காட்டிலும் விஞ்சியவரல்லரோ? அவர்கள் பக்திக் கடலில் மூழ்கினும், பக்தி வேறு தாங்கள் வேருய் நின்றார்கள். நம் ஆண்டாளோ, பக்தியையும் தம்மையும் பிரித்தற்கு இயலா நிலையில் பக்தி மயமாகவே நிலைபெற்றார்.

> "அஞ்சு குடிக்கொரு சந்ததியாய் ஆழ்வார்கள்
> தஞ்செயலை விஞ்சிநிற்கும் தன்மையளாய்"
>
> —உபதேச ரத்தின மாலை, 24.

என்பது இதனை வலியுறுத்தும்.

அன்றியும், இவராலேயே ஆழ்வார்கள் குடி தூய்மை உற்றது; யாவரும் கொண்டாடும் நிலையில் சிறப்புற்றது; விளக்கமுற்றது. இங்ஙனம் இவர் ஆழ்வார்களின் குடியை விளக்க வந்து தோன்றியமையாற்றான், 'வேயர் பயந்த விளக்கு' என்னும் சிறப்புப் பெயர் ஒன்று இவருக்கு அமைந்தது போலும்! இவர் ஆழ்வார்களின் மத்தியில் நடு நாயகமாய்த் தோன்றி, அவர்களையும் அவர்கள் பிரபந்தங்களையும் ஒளிரச் செய்தார். தாவர வர்க்கத்திற்குக் கொழுந்து எங்ஙனம் இன்றியமையாததோ, அங்ஙனமே ஆழ்வார் குலத்திற்கு நம் கோதையாராகிய தளிர் இன்றியமையாததாகும். எங்ஙனம் ஆண்டாளுக்கு மற்றொருவரையும் ஒப்புக்கூற இயலாதோ, அங்ஙனமே இவர் தோன்றிய நாளுக்கும் ஒப்புக்கூறல் இயலாது. இதனை, "ஆண்டாள் பிறந்த திருவாடிப் பூரத்தின் சீர்மை ஒரு நாளைக்கு உண்டோ மனமே! உணர்ந்து பார்; ஆண்டாளுக்கு உண்டாகில் ஒப்பிதற்குமுண்டு," என்னும் பெரியார் வாக்கினல் நன்கு அறியலாம். இது நிற்க.

உலகப் பொருள்களில் **ஆண்மை, பெண்மை** என இரு கூறுகள் உண்டு. இப்பாகுபாட்டை இரு திணைகளிலும் காணலாம். இவ்விரு கூறுகளின் இயல்புகளும் வேறுபட்டன. பெண்மையில் தன்னலங்கருதாமை, தியாகம், பொறுமை முதலிய நற்பண்புகள் இயற்கையாய் அமைந்துள்ளன. இக்குணங்களினலேயே உலகம் நலமடைகிறது. இக்குணங்கள் அமைந்த கூறுபாடே **பெண்மை** எனப் பகரப்படுகின்றது. இவை அமையப் பெருத வெறும் பெண்ணுடல் பெண்ணுகாது. பெண்கள் உயர்வாகக் கருதப்படுதற்கு இக்குணங்களே காரணம். தெய்வப்புலவர் வாழ்க்கைத்துணை நலத்தைத் தம் குறளில் உயிர்க்குயிராய்க் கருதியதே இதற்குத் தக்க சான்ருகும். சாஸ்திரங்களாலும், அறிஞர்களாலும், கடவுளாலும் போற்றப்படுவது இச்சீரிய குணங்கள் நிரம்பிய பெண்மையே! ஒவ்வோர் ஆன்மாவும் இப்பெண்மைக் குணங்களைப் பெற்ருலொழிய, இறையருளை அடைய முடியாதென்பது அறிஞர் கருத்து. இதனுற்ருன், ஞான நிலையுள் ஆடவராய் நின்ற ஆழ்வார்கள், வரம்பு கடந்த பக்தி நிலையை அடையுங்கால் பெண்டிராய் மாறுகின்ருர்கள். ஆழ்வார்கள் தங்களைப் பெண்ணுகப் பாவிக்கின்ருர்கள் எனச் சிலர் கூறுவர். இது பொருத்தமன்று. ஏன்? அவ்வமயம் அவர்கள் நடந்துகொள்ளும் முறையும், மேற்கொள்ளும் அரிய செயல்களும், அவர்தம் மனப்போக்கும் பாவனையால் நடைபெறத் தக்கனவோ? பெரியோர்க்கு இறையன்பில் தோயத்தோய நெருப்பிலிட்ட அரக்கென உள்ளம் உருகி மென்மை அடைகிறது. அம்மென்மைக்கேற்ற பொறுமை முதலிய நற்பண்புகள் அவர்களுக்கு உண்டாகின்றன. இந்நற்பண்புகள் அவர்களுக்குப் பெண்

மையை அளிக்கின்றன. இப்பெண்மைக் குணங்களால் அவர்கள் பெண்ணே ஆய்விடுகின்றார்கள். பெண்மை மென்மை என்பதை அறியாதார் யார்?

அவ்வமயம் ஈஸ்வரன் தலைவனாய் நிற்கிறான்! பெரியோர்களோ, தலைவியர்களாய் நிற்கின்றார்கள். அக்கால் அவர்கள் வாயினின்றுதிக்கும் பாசுரங்களின் போக்கை நோக்குதல் வேண்டும்! என்ன அன்பு! என்ன ஆற்றாமை! என்ன ஊடல்! இஃதே உண்மை அகப்பொருளின் தத்துவம். ஈஸ்வரனை அடைதற்கேற்ற தூய நெறிகள் யாவும் அங்குக் காணப்படுகின்றன. அவர்களுக்குத் தாய்ப் பண்பு, தோழி செயல்கள் யாவும் கைகூடுகின்றன; ஐம்பூதங்களும் இறையாகவே தோற்றம் அளிக்கின்றன. இறையைத்தவிர மற்றப் பொருள் ஒன்றும் அவர்களுக்குப் புலனாதல் இல்லை. திருமாலின் நீல நிறமும், தாமரைக் கண்ணும், அவர்களுக்குக் காட்சி அளிக்கின்றன. அவ்வழகிய உருவில் அவர்கள் புலன்கள் ஒன்றுபடுகின்றன; தங்களை மறக்கின்றார்கள். அவர்கள் கண்களில் நீர் காலுகின்றது. மயிர் சிலிர்க்கிறது; கைகள் கூம்புகின்றன; நா இனிய தமிழ்ப் பாக்களைப் பகர்கின்றது. அவை மக்களுக்கு விருந்தளிக்கின்றன. மற்றப் பல நிலைகளைக்காட்டிலும் இந்நிலையே ஆழ்வார்களுக்கு உயர்நிலை. இவ்வுயர் நிலையில் திளைத்து நிற்கும் ஆழ்வார்களை நாம் வழிபடுவோமாக! ஆயினும், இவ்வுயர்நிலை ஆழ்வார் அனைவர்க்கும் ஏற்பட்டிலது; சிலருக்கே அமைகிறது. அச்சிலருக்கும் இவ்வுயர்நிலை எப்போதும் நிலை நின்று பலனளித்திலது. சிலபோது அவர்கள் இந்நிலையிலிருந்து வேறுபட்டு ஆண்மையை அடைகின்றார்கள். அந்நிலையில் அவர்கள் பேச்சும் போக்கும் பெண்மைக்கு மாறு

பட்டனவே. இங்ஙனமே அவர்கள் வாழ்க்கையும் மாறி மாறி நிகழாநிற்கும்.

நம் பெட்புடையார் வாழ்க்கையோ, இங்ஙனம் மாறுபடும் நிலையை உடையதன்று. இயற்கையாகவே பெண் உடலும், பெண்மைக் குணங்களும் பொருந்தப் பெற்ற நம் பெண் தெய்வம், எப்போதும் பெண்மையி லேயே நிலவுதற்கு ஐயம் யாது? இவரிடம் ஆண்மைக் குணம் அணுக வழி ஏது? இவருக்கு இப்பெண்மைக் குணங்கள் நாளுக்குநாள் பண்பட்டு மென்மையடைந்து தங்கமென உருகி நிற்கின்றன. இவர் உடலும், பேச்சும், போக்கும், குணமும் யாவும் பெண்மையே. எங்குக் காணினும் தம் பெண்மையும், இறையின் ஆண்மையுமே இவருக்குத் தோற்றமளிக்கின்றன. இந்நிலையில் இவர் இறைவனைத் தந்தையாகவும், மகவாகவும், நண்பனாக வும் வழிபடுதல் யாங்ஙனம்? இவர் குறைகளைத் தம் தோழிகளிடம் கூறிக்கொள்ளுவரேயன்றி, தாமே தோழியராகவும், தாயராகவும் மாறி நிற்கும் துன்பம் இவருக்கேது? எம்பெருமானை நாயகனாகவும், தம்மை நாயகியாகவும் கொள்ளும் முறையே இவரிடம் அமை கிறது. இவர் இயற்கைப் பொருள்கள் யாவற்றிலும் இறையைக் காண்கிறார். பார்க்குமிடமெல்லாம் பரம் பொருளாகவே இவருக்குக் காட்சி அளிக்கிறது. இக் காட்சியில் வேறு பொருள்களின் கலப்புண்டாதல்யாங் ஙனம்? 'எங்கும் இறை! எங்கும் இறை!' எனக் குது கலிக்கிறார்; அப்பரம்பொருளோடு ஒன்றுபடக்கலந்து, நிலைபெற்ற இன்பம் துய்க்கிறார். இப்பெற்றியை இவர் திருமொழியில் பளிங்கெனக் காணலாம். இப்பெரும் பேற்றிற்குக் காரணம் யாது? இவருக்கு இயற்கையில் அமைந்த பெண்மையும், அதற்கேற்ற உயர்குணங்

களுமே அல்லவா? தத்துவம் இவ்வாறிருத்தலின், ஆண் உடலைத்தாங்கிய ஆழ்வார்கள் தாமான தன்மை இழந்து பெண் போர்வையைப் போர்த்துத் தம்மைப் பெண் ணெனவே மதித்து எப்பெருமானைக் குறித்துப் பேசும் பேச்சுகளைக்காட்டிலும், பெண் உடலையே இயல்பாகப் பெற்றுள்ள கோதையாராகிய இயற்கைப் பெண் நாயகி யார் எம்பெருமானைக் கூவியழைக்கும் சொற்கள் சிறப் புடையன அல்லவா! நாடக மேடையில் ஓர் அழகிய பெண்ணே சந்திரமதி வேடந்தாங்கி நடித்தற்கும், ஓர் ஆண் மகன் அவ்வேடம் பூண்டு நடித்தற்கும் பெரு வேற்றுமை உண்டு என்பதை அறியாதார் யாவர்? அவ்வேறுபாட்டையே நாம், ஆழ்வார்கள் விஷயத்தி லும், ஆண்டாள் விஷயத்திலும் கொள்ளல் வேண்டும்.

இன்னும் பெண்மையின் பெட்பை நன்கு அறிய ஆன்ம தத்துவத்தினிடம் செல்வோம். எல்லா ஆன்மாக் களும் ஒன்றே! ஒரே தன்மை வாய்ந்தனவே! ஆன்மாக் களுள் யாதொரு வேறுபாடும் இலது. ஆனல், சில ஆன்மாக்கள் ஆண் உடலையும், சில ஆன்மாக்கள் பெண் உடலையும் தாங்கி உள்ளன. இவ்வேறுபாடும் உடலிற் கன்றி ஆன்மாவிற்கில்லை. இஃது உடற்செயல்களுக் குப் பயனளிக்குமே அன்றி, ஆன்மாவின் செயல்களுக்குப் பயனளியாது. ஏன்? ஜீவான்மாக்கள் யாவும் பெண் தத்துவங்களே. பரமான்மா ஒருவனே ஆண் தத்துவ மாய் உள்ளான். இதனலேயே எம்பெருமானுக்குப் **புரு ஷோத்தமன்** என்னும் பெயர் அமைந்தது. ஆண் மக்கள் தங்களை ஆணுகவே மதித்துக் காரியஞ் செய்தல் யாவும் உலகச் செயலோடும், அளவுபட்ட பக்தியோடும் நின்று விடும். அவர்கள் தங்களைத் தாங்கள் மறந்து எல்லையற்ற இறையன்பில் மூழ்குங்கால் செயற்கையாகும் ஆண்மை

தலை காட்டாது மறைகிறது. அவண் இயற்கைப் பெண்மையே தாண்டவமாடுகிறது! அஃதே ஆன்மா பயன் பெறும் காலம்! எம்பெருமான் அருள் வெள்ளத்தில் அமிழ்ந்தாடுவதும் அப்போதே! ஒவ்வொருவரும் பெண் இயல்பை அடைந்தாலன்றி, இறைவன் இன்னருளைப் பெற இயலாது என்பது சாஸ்திர உண்மை. ஆண் உடலைத் தாங்கிநின்ற ஆழ்வார்கள் திருமாலை அடைதற் பொருட்டுத் தம்மைப் பெண்ணெனக் கருதியதே இதற்குத் தக்க சான்றாகும். இதனால், இறைவனை எய்த உன்னும் ஒவ்வோர் ஆன்மாவும் பெண்மையை அடைந்தே தீரவேண்டும் என்பது புலனாகவில்லையா?

இங்ஙனமாயின், இப்பெண்மை இயற்கையாகவே அமையப்பெற்ற நம் அன்னையாரின் பெட்பு, பேச்சில் அடங்குமோ? இவர் பக்திக்கு அளவு கோல இயலுமோ! இங்கு ஆழ்வார்களின் பக்தி அணுவளவிலும் ஆண்டாளின் பக்தி மலையளவிலும் நின்றன எனக் கூறின், வரும் குற்றம் யாது? இன்னும், இச்சீரியர் பக்தியோடு மற்றெவர் பக்தியையும் ஒப்பிட்டு நோக்கவும் இயலாது என இயம்புதலும் பொருந்தும்!

இவற்றால், நம் அன்னையார் இறையன்பில் யாவருக்கும் தலைமை பெற்று விளங்கினார் என்பதை அறிகின்றோம். உலக மக்கள் அடைய வேண்டிய பேறு இதைக்காட்டிலும் வேறொன்று உண்டோ? உயர்நிலை எது? சிறந்த செல்வம் எது? அழியாப் பேறு எது? இறையோடு கலந்து துய்க்கும் இன்பமே அன்றோ? அவ்வின்பத்திற்கு மூலம் பெண்மைக் குணங்களே எனவும், அப்பெண்மைக் குணங்களுக்கு நிலைக்களன் பெண் மகளிரே எனவும் நூல்கள் அறையாநிற்குமாயின், பெண்மையின் பெருமையும் பெண்களின் ஆக்கமும்

எழுத்திலடங்குவனவோ? பெண்களின் பெற்றியை உலகில் நிலை நாட்டுதற்பொருட்டே நம் ஆண்டாள் இங்குத் தோன்றினர் போலும்!

## இரு மாலைகள்

இத்தலைப்பு, பூமாலை பாமாலைகளைக் குறிப்பதாகும். மலர்களாலும் பாக்களாலும் தொடுக்கப்படுதலின், இவை இப்பெயர் பெற்றன. இவை இரண்டும் எம்பெருமானுக்கு இன்பமூட்டுவனவே. ஆயினும், எப்போது இவை அவன் உண்மை உவப்பிற்குக் காரணமாயுள்ளன? இவற்றைச் சூட்டுவோர், என்று இறைவன் உவப்பை அன்றி வேறொரு பயனையுங் கருதாது நிற்கின்றனரோ, அன்றேயாகும். அப்போதே இவை இரண்டும் தூய்மை பெறுகின்றன. இன்றேல், இவை தன்னலமாகிய மாசிற்றோய்ந்தனவே! எம்பெருமானுக்கு இவ்விரு மாலைகளையும் பயன் கருதாது அளிக்கும் பேறு யாவருக்கும் கிடைத்தல் இல்லை! இச்சீரிய பேறு நம் ஆழ்வார்களுள் தொண்டரடிப்பொடி ஆழ்வாருக்கும், பெரியாழ்வாருக்கும், ஆண்டாளுக்குமே வாய்த்தது. ஆயினும், முன்னைய இருவரினும் நம் ஆண்டாளே இதற்கு மிகவும் பொருத்தமானவராவார். ஏன்? அவர்களுக்கோ, இத்தொண்டு வளர்ந்த பிறகு கிடைத்தது. இவருக்கோ, இஃது இளமையிலேயே அமைந்தது. அவர்கள் தாங்களே இக்கைங்கரியத்தை மேற்கொண்டார்கள். நம் கோதையாரோ, தம் தந்தையாராகிய பரமபாகவதர் மூலமாக இதைப் பெற்றார். மலர் வனத்தில் தோன்றி, என்றும் எம்பெருமான் குணங்களையே பாராயணஞ் செய்துகொண்டிருக்கும் பாகவதர் இல்லத்தில் வளர்ந்த நம் கோதையாருக்கு இதனினும் வேறெந்தத்

தொண்டு தகுதியுடையதாகும்! இவர் மலரன்ன மெல்லியல்பு, பூமாலை பாமாலைகளைப் புனைதலாகிய தொண்டில் நுழையாது, வேறெதனில் நுழையாநிற்கும்! அவர்களுக்கேனும், கொத்துதல், நடுதல் முதலியன செய்யுங் காலங்களில் மனம் எம்பெருமானை விட்டுச் சிறிதுவிலகி இருக்கக் கூடும்! அத்தொழிலும் அற்ற நம் அன்னையாருக்கு அச்சிறுவிலகுதலும் ஏற்படுதற்கு இடமில்லையே! எப்போதும் அவனைச் சிந்தித்தலும், அவனைப் பாடுதலும் அன்றி இவருக்கு வேறு தொழில் ஏது? இறைக்கென வைத்த மாலைகளைத் தாம் அணிந்து அழகு பார்த்தனரே! இஃது எதைக் காட்டுகிறது? 'அவனுடைமை எனக்குரியது; என்னுடைமை அவனுக்குரியது,' என்னும் தத்துவத்தையே அன்றோ? இப்பேறு மற்றவருக்கு வாய்த்ததோ? இறைவன் இவர் சூடிய மாலைகளையே தான் சூடவேண்டும் என ஒருநிலையில் நின்று அவற்றை அணிந்து ஆனந்தமடைந்தனனே! இப்பெற்றிதான் மற்ற ஆழ்வார்களுக்கு அமைந்ததோ? கண்ணனும், கண்ணனாகவே காட்சியளிக்கும் அரங்கநாதனும், இன்னும் இரண்டொருவரும் தவிர, மற்றையோர் இவர் மனங்கனிந்த பாமாலையைப் பெறும் புண்ணியமியற்றிலரே! கண்ணன் ஒருவனிடத்திலேயே தம் நெஞ்சம் ஒன்றிப் புறமொன்றும் காணாத ஒருமை நிலையும், இறுதியில் அவனையே கலந்து துய்க்கும் இன்பநிலையும் மற்ற ஆழ்வார்களுக்குக் கிடைத்திலவே! இதனால், பூமாலை பாமாலைகளாகிற இவ்விரு கைங்கரியமும் செய்தோர் யாவரிலும் உன்னத இடத்தில் இருந்து ஒளிருவோர் இவர் ஒருவரே எனத் தெளிந்தாம்.

> **" பாடிக் கொடுத்தாள்நற் பாமாலை; பூமாலை**
> **சூடிக் கொடுத்தாளைச் சொல்லு."**

## ஆன்ம அழகு

'ஆன்மா' என்பது எது? நம் கண்ணுற்காணும் இப்பருவுடலின் வேறுபட்டது; உடலை ஏவித் தொழில் கொள்ளக்கூடியது; நுண்ணியது; ஞானம் நிறைந்தது; ஞானமாகவே ஒளிர்வது; ஊனக்கண்ணுல் காண முடியாதது. இதற்கு இன்னும் பல இலக்கணங்களுமுண்டு. அவை ஈண்டு வேண்டற்பாலன அல்ல.

இத்துணை இயல்புகள் வாய்க்கப் பெற்ற ஆன்மாவிற்கு அழகு யாது என்பதை நோக்குவாம்: ஒவ்வொருவர் ஒவ்வொன்றை இதற்கு அழகு எனக் கூறுவர். கல்வி, அறிவு, ஒழுக்கம் முதலியனவும் ஆன்மாவிற்கு அழகு செய்வனவே. இவை யாவும் இருப்பினும், எஃது ஆன்மாவை வளர்க்கும்? எஃது ஆன்மாவை ஒளிரச்செய்யும்? எஃது அதற்கு அணியாகும்? எஃது அதற்கு அரணுகும்? அதன் ஞானத்திற்குப் பயன் யாது? இறை அன்பே என ஓர்க. கல்வி அறிவு ஒழுக்கங்களும், இன்ன பலவும் இறையன்பிற்கு அடிகோலிகளாய் உள்ளனவே அல்லாமல், அவற்ருலேயே ஆன்மா பயன்பெற இயலும் என்பது வெறுமயக்கே! பொருட்செல்வம் எங்ஙனம் அறிவுச் செல்வத்திற்குக் காரணமாகாதோ, அங்ஙனமே மேற்கூறியவைகளும், இறையன்பிற்குக் காரணங்களாகா!

இங்கு,

> **"கற்றதனுல் ஆய பயனென்கொல் வாலறிவன்**
> **நற்றுள் தொழாஅர் எனின்?"**

என்னும் குறள் நினைவிற்கு வருகிறது. இறையன்பினுல் தம் ஆன்மாவை அழகு செய்தவர் யாரோ, அவரையே **ஞானியர்** என்றும் **பக்தர்** என்றும், பிரபந்நர் என்றும்

வழங்குகின்றோம். அவர்களாலேயே உலகியல் நடைபெறுகிறது. அவர்கட்கே உலகம் கட்டுப்பட்டுள்ளது. இறை அன்பால் ஆன்மாவை அழகுபடுத்தினவருள் நம்முடைய ஆழ்வார்கள் சிறந்தவர்கள். அவருள்ளும் நம் கோதையாரே தலை நின்றவராவார். ஆன்மாவின் அழகு இத்துடன் நின்றுவிடுகிறதா? இல்லை இல்லை. இவ்விறை அன்பு ஆன்மாவிற்குப் புறவழகாகும். இதை ஆன்மாவாகிய மலர்க்குப் **புறவிதழ்** எனவும் கூறலாம். இதற்கு அகவிதழன்ன உள்ளழகு ஒன்றுள்ளது. அஃது எம் பெருமானுக்குத் தொண்டு பூண்டொழுகும் பாகவதர்க்கு (அடியார்க்கு) அன்புடையராய், அவர்களுக்கு அடிமைப்பட்டுச் சேஷ பூதராய் ஒழுகுதலே. இதுவே ஆன்மாவிற்கு உரிய இலக்கணம். ஆன்மாவின் வடிவம் இஃதே. அகவிதழ் இனறேல் எங்ஙனம் அலர் இன்றோ, அங்ஙனமே அடியார் தொண்டு இன்றேல் ஆன்மா இன்றெனக் கூறலாம். இன்னும் ஊன்றி நோக்கின், அடியார் அன்புதான் ஆன்மா. ஆன்மாதான் அடியார் அன்பு. இரண்டும் தனித்தனி பொருள்கள் அல்ல எனக் காணலாம். இதனால், ஆன்மாவிற்குப் புற அழகு **இறை பணி** என்பதும், உள்ளழகு **தொண்டர் பணி** என்பதும் உணர்ந்தாம். இப்பணியைத்தான் ஆழ்வார்களும் மேற்கொண்டார்கள். **விப்பிர நாராயணர்** தம்மைத் **தொண்டரடிப்பொடி** எனக் கூறிக்கொள்வதைக் காண்க. பதின்மருக்கும் உயிராய்த் திகழும் **சடகோபர்**,

> " **பொன்னாழிக்கை என்னம்மான்**
> **நீக்க மில்லா அடியார்தம்**
> **அடியா ரடியா ரடியார்எம்**
> **கோக்கள் ; அவர்க்கே குடிகளாய்ச்**
> **செல்லும் நல்ல கோட்பாடே.** "

—திருவாய் மொழி, 8-10-10.

எனக் கூறுவதும் நோக்கத் தக்கது. ஆயினும், இவர்கள் இப்பாகவதர் தொண்டை ஆங்காங்கே வெளிப்படுத்தியுள்ளார்களே அன்றித் தங்கள் நூலில் அதையே போக்காகக் கொண்டார்களில்லை. நம் ஆண்டாளோ, தம் நூல் தொடக்கத்திலிருந்து முடிவு வரையில் பாகவதரையே பின்பற்றுகிறார். முதலிலும் பாகவதரை முன்னிட்டே கண்ணனிடம் செல்லுகிறார்; பாகவதரையே தெய்வங்களெனக் கொள்ளுகிறார்; அவரே தமக்குச் சரண் எனக் கருதுகிறார்; பயன் பெறும்போதும் அவர்களோடு கலந்தே பண்படைகிறார்; இடையிலும் இயற்கைப் பொருள்களைக் காணுங்கால், அவை இறையைத் தங்களுக்குள் பொதிந்துகொண்டிருக்கும் தொண்டர் எனவே உறுதி கொள்ளுகிறார்; அவைகளிடம் அடைக்கலம் புகுகிறார்; இறுதியிலும் இறைவனைக் கண்டுவந்த பாகவதரையே அணுகி, அவர்களால் உண்மை உணர்ந்து, எம்பெருமானோடு கலந்து, இன்பந்துய்க்கிறார். ஆன்மா, பரமான்மா, கைங்கரியம் இவற்றைக் குறித்து அலசி அலசி இயம்பாநிற்கும் திருமந்திரத்தின் தேர்ந்த பொருள் யாது? அஃது எத்தத்துவத்தை உயிராகக் கொண்டுள்ளது? பாகவத சேஷத்துவத்தையே யாகும்! இதை, "நின்திருவெட்டெழுத்தும் கற்றும் நானுற்றதும் உன்னடியார்க்கடிமை," என்பதனால் அறியலாம். இம்முறையினால் ஆன்ம அழகாகிய அக அழகையே முற்றும் கொண்ட நம் கோதையார் மற்ற ஆழ்வார்களைக்காட்டிலும் உண்மை ஆன்ம அழகு வாய்ந்தவர் எனக் கூறுதற்குத் தடை யாது?

ஆழ்வார் பதின்மருள் தலை நின்றவரும் அவர்களுக்கு உயிராய் அமைந்தவரும் நம்மாழ்வாரே ஆவார். அப்பெரியார் தம் ஆன்மா உய்தற்பொருட்டு எம்பெரு

மான் அருளை நாடியதோடு நின்றாரில்லை. பிறரும் தம் நெறி வர வழி கோலினார். இப்பரந்த எண்ணத்தைத் திருவாய் மொழியிற் காணலாம். ஆயினும், அவர் நன் மொழிக்கு உலகம் செவி சாய்த்திலது. அஃது அவரைப் பெரிதும் வருத்திற்று.

நம் கோதையாரோ, தாமும் மக்களோடு ஒருவராய் இருந்து செயல் செய்யத் தொடங்கினார். உபதேசம் மட்டும் பெரும்பயன் அளியாது என்பது இவர் உறுதிப் பாடு. ஆதலின், தாமே போந்து எல்லோரையும் அஞ் ஞானத் துயிலிலிருந்து எழுப்பி, " சங்கமிருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்," என எம்பெருமானிடம் கொண்டு போய்ப் பேரின்பத்தைத் துய்க்கச் செய்கிறார். இது மட்டுமோ ? எம்பெருமானையும்,

> " அம்பரம் ஊடறுத்து ஓங்கி உலகளந்த
> உம்பர்கோ மானே ! உறங்காது எழுந்திராய்."
>
> —திருப்பாவை, 17.

எனத் துயிலெழுப்புகிறார். மற்ற ஆழ்வார்களுக்கு மயர்வு அற மதிநலம் அளித்த இறைவன் எவனோ, அவனுக்கே இவர் மயர்வு அற மதிநலம் அளித்தார் என்பது அறிஞர் கருத்து. மற்றவர் அறிவைக்காட்டிலும் இவர் அறி வின் மாட்சி என்னே !

நம் சூடிக்கொடுத்தார் மற்ற ஆழ்வார்களைப் போன்று தம் நூலில் பல பொருள்களையும், பல தெய் வங்களையும் கலக்கின்றார் இல்லை. திருமால் ஒருவனையே நோக்குகிறார். இவர் புறக்கண்களுக்கோ, அகக்கண் களுக்கோ வேறொன்றும் காட்சியளித்திலது. இவர் கண் ஒன்றையே நோக்குகிறது ; இவர் மனம் ஒன்றையே பற்றுகிறது; இவர் வாய் ஒன்றையே பேசுகிறது. ஒன்றி

லேயே ஊன்றி, அதில் கலந்து நின்ற ஒருவருக்குப் புற மொன்று தோன்றுமோ? ஒருமையில் பன்மைக் காட்சி ஏது? இவ்வுயர் நிலை யாவருக்கும் கிடைப்பதொன்றோ? இதற்குத் தனிப்பட்ட தவம் வேண்டுமன்றோ? ஆகவே, மற்ற ஆழ்வார்களைக்காட்டிலும் இவர் தவமுடையவர், தனியழகு வாய்ந்தவர் எனச் செப்பல் தகுதியுடையதே!

மற்ற ஆழ்வார்கள் இறைவனுக்குப் பல்லாண்டு பாடியுள்ளார்களா என்பதை அவர்கள் பிரபந்தங் களின் உள் நுழைந்து காணல் வேண்டும். பெரியாழ் வாரோ, திருமாலை, திருவோடும் பஞ்சாயுதங்களோடும் பெரிய திருவடியின்மேல் எழுந்தருளிக் கண்ணையும் மனத்தையும் கவரும் அழகு உருவத்தில் நோக்கு கிறார். அவர் வாய் அவர் அறியாமலே பல்லாண்டு பாடுகின்றது! சிறந்த ஒரு பொருளைக் கண்ணால் காணுங்கால், இச்செயல் சாமானியருக்கும் உண்டாதல் இயல்புதானே? நம் தெய்வப் பாவையாரோ, தம்மனத்தி னால் கண்ணன் அழகு உருவம் முதலியவற்றை உருவகப் படுத்துகிறார்; அவனைச் சிம்மாசனத்தில் இருத்துகிறார். அவன் அழகும், கம்பீரமும், வீரமும் கலந்து ஒளிர்கின் றன. அத்தோற்றம் இவர் கண்ணிலும், மனத்திலும் அடங்கிற்றில்லை! வியப்புப் பொங்கி எழுகிறது. அவன் அழகிற்கும் கம்பீரத்திற்கும் ஆரதி கழிக்கிறார்; அவன் வீரச்செயல்கள் என்றும் நிலைபெறப் பல்லாண்டு பாடு கிறார். இத்தகைப் பல்லாண்டுகளை இவர் நூலில் எங்கும் காணலாம். இவை யாவும் மனத்தின் செயலே! என்னே இவர் மனப்போக்கு! இத்தன்மையில் இவருக்கும் மற்ற ஆழ்வார்களுக்கும் உள்ள ஏற்றத் தாழ்வை அறிவுடை யோர் அறியாமலிருத்தல் யாங்ஙனம்? இஃதன்றோ ஆன்ம அழகு!

சடகோபர், ஞான பக்தி வைராக்கியத்துடன் தோன்றி, இறுதிவரை அவற்றிலேயே ஊன்றி நின்றமையினாற்றான், மற்ற ஆழ்வார்களைக்காட்டிலும் உயர்ந்தோர் என அவரை உலகம் போற்றுகிறது. நம் தெய்வ மகளாரும் அப்பகுதியைச் சேர்ந்தவரே! ஆயினும், ஆழ்வாரோ, அஞ்ஞானத்தையும் அற்பப் பற்றையும் ஊட்டும் உலகத்தாரிடமிருந்து அறவே நீங்கினார்; தனி இடத்தை நாடிச் சென்றார்; எம்பெருமான் அர்ச்சாவதாரத்தின் அருகில் அமர்ந்தார். மக்கள் நடையாடாத தெய்வத்தன்மை வாய்ந்த புளிய மரப்பொந்தே அவருக்கு வாழ்விடமாய்ப் பொருந்தியது! ஊனக்கண் மூடி ஞானக் கண்ணால் என்றும் இறையைக் கண்டு செயல் புரிதற்கும் தக்க வசதிகள் அவருக்கு அமைந்திருந்தன. நம் செல்வியார் வாழ்க்கையோ, ஞான பக்தி வைராக்கியங்கள் உண்டாதற்குச் சிறிதும் இடமற்ற உலக மக்கள் குழுவினிடையிலேயே அமைந்தது. அவர்களோடு சேர்ந்தே சுற்றிச் சுற்றி வருகிறார்; அவர்களுடன் கலந்தே காரியங்களைச் செய்கிறார்; முடிவு வரையும் மக்களை விட்டுத் தனியே பிரிந்தாரில்லை. ஆயினும், இவர் ஞான பக்தி வைராக்கியங்களுக்குச் சிறிதும் பழுது ஏற்பட்டிலது. ஈதன்றோ வன்மை! ஈதன்றோ வீரம்! ஈதன்றோ உள்ளத்தின் உண்மைத் தெளிவு! எது மக்களுக்கு அஞ்ஞானத்தை ஊட்டுமோ, அஃதன்றோ இவருக்கு ஞானத்தை ஊட்டிற்று! உலகக் கூட்டுறவே தமக்கு உயர்வளிக்கும் என்றன்றோ இவர் நினைத்தார்! தாமரையன்ன இயல்பு வாய்ந்த இவரை எப்பற்றுத்தான் பற்றும்? ஆதலினாற்றான் **பெரியவாச்சான் பிள்ளை,** மற்ற ஆழ்வார்களைக்காட்டிலும் இவர் ஞான பக்தி வைராக்கியங்களிற் சிறந்தவர் எனக் கூறிப்

பெருமை பாராட்டுகிறார். இந்த ஆன்ம அழகு, வேறு யாருக்குத்தான் அமைதல் கூடும்!

முன்னர்க் கூறியவாறு பரமான்மா ஜீவான்மாக்களுக்கு ஏற்பட்ட தலைவி தலைவன் தொடர்பன்றோ இவர் நூல் முற்றும் பொருந்தியுள்ளது! இவர் நூலில் அமைந்த தலைவன் யார்? கண்ணன். கண்ணன் கருத்துகள் யாவை? பெண்ணுடலில் நின்று, பாரதந்திரியத்தையே வடிவெனக் கொண்ட பெண் ஆன்மாக்களோடு கூடி ஆனந்தமுறல், அவர்கள் தூய கரங்களால் தொட்ட அன்பு கலந்த பொருள்களைக் களவாடியேனும் உண்டு களித்தல், அவர்கள் கூட்டுறவிலேயே கூடிக் குலாவுதல் முதலியனவே அல்லவா? ஆழ்வார்களுள் இக்கருத்தை ஆழ்ந்துணர்ந்து இதன் வழியே சென்றவர் யார்? இந்த ஆன்ம அழகை முற்றும் கொண்டவர் யார்? நம் கோதையாரே அல்லரோ? இங்ஙனம் இவரைப்பற்றி இயம்பிக் கொண்டே செல்லின், நீளாநிற்கும். இவர் ஆன்ம அழகு இவரைப் பற்றும் யாவருக்கும் அமைவதாக!

## 3. ஆயர் மகளிர்

பண்டு தமிழ் நாட்டில் நிலம் நான்காகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றுள் ஒன்று **முல்லை**. இம்முல்லை நிலத்திற்கு உரியவர் **ஆயர்**. இது முல்லைக்கொடிகளுக்கும் மரங்களுக்கும் இருப்பிடம்; இது பசுக் கூட்டங்களை வளர்த்து வந்த செவிலித்தாய்; ஆனந்தத்தை ஊட்டும் அகம். எங்கும் பச்சைப்பசேலென்ற புற்றரை; எங்கும் நீர் நிலைகள். இவற்றை உண்டு வளரும் ஆனிரையின் ஆற்றல் என்னே! வாங்கக் குடங்களைப் பாலால் நிரப்பும் வளப்பம் என்னே! எங்கும் பால்! எங்கும்

தயிர்! எங்கும் வெண்ணெய்! எங்கும் நெய்! இங்கு எச்செல்வத்திலேனும் குறைவுண்டோ? இதற்குத் தெய்வம் மாயோன்; 'மாயோன் மேய காடுறை உலகமும்' என்பது தொல்காப்பியம்.

இத்துணைச் செல்வம் செறிந்த ஆயர் பாடியில் அந் நிலத்திற்குரிய மாயோனாகிய கண்ணன் தோன்றுகிறான். ஒரு புறம் ஆடல்; ஒரு சார் பாடல்; ஓரிடம் ஆடவர் ஆண்மை விளையாட்டு; ஒரு பக்கம் கன்னியர் களியாட்டம், ஆயர் பாடி குதுகுலத்தில் மூழ்கி உள்ளது.

**"பாடு வார்களும் பல்பறை கொட்ட நின்று**
**ஆடு வார்களும் ஆயிற்றாய்ப் பாடியே!"**

—பெ-திரு. 1-2-2.

பாலும் வெண்ணெயும் படிந்து படிந்து முற்றம் முழுவதும் சேறாயுள்ளது. இக்குதுகுலத்தின் இடையில் நீல நிறக் குழந்தை ஒன்று ஒளிர்கிறது. அதன் அழகு கொழுந்து விட்டு வளர்கிறது. அக்குழவியை யாவரும் கண்ணன் என வழங்குகின்றனர். எளிமையுடையவன் என்னும் பொருள் தரும் இப்பெயருக்கேற்ப, அவன் யாவரிடமும் எளிமை தோன்றப் பழகி வருகிறான். ஆயினும், கன்னியரிடமே அவன் கருணை பெரிதும் காலூன்றுகிறது. கன்னியர் கலங்கா நிலையினரும், களங்கமற்றவருமல்லரோ? மங்கையர் தொட்டு உண்ட வெண்ணெய் அன்றோ அவன் உணவு! அவரோடு கைகோத்தாடும் குரவைக் கூத்தன்றோ அவனுக்குப் பொழுது போக்கு! குழலோசையால் அவர்களைக் கூட்டிக் கூட்டிக் கண்டு மகிழ்தலன்றோ அவன் தொழில்! அவர்களோடு வாதிடுதலன்றோ அவன் வழக்கு!

ஆயர் மங்கையர் வாழ்க்கை யாங்ஙனம் நடைபெறு கிறது? அவனது கருநிறம் அவர்கள் கண்ணைக் கவரு கிறது! அவன் மாயோனல்லனோ! மாயோன் என்பதற் குப் **பரிமேலழகர்** பரிபாடலில் 'கரிய நிறமுடையவன்' எனப் பொருள் கூறியுள்ளதைக் காண்க! அவன் புன் முறுவல் அவர்கள் நெஞ்சை அள்ளிக்கொள்ளுகிறது; அவன் மழலைச் சொற்களும், விளையாட்டல்களும், அவர் கள் உயிரை ஊசலாடச் செய்கின்றன; அவன் கூட் டுறவு அவர்கள் ஆன்மாவை அலக்கழிக்கிறது.

ஒருவரை ஒருவர் ஓரிமை நேரமும் அகல ஒருப் படார். அவர்கள் கூட்டுறவால் அவன் அடைவது ஆனந்தம். அவன் சேர்க்கையால் அவர்கள் அடைவது ஈறிலின்பம். இங்ஙனம் ஒருதலைக் காமமன்றி, இருதலை யும் ஒரே இன்ப வெள்ளம் பெருகிற்று. இவ்வின்ப வெள்ளத்தால் நாடும் வளமுற்றது. இவ்வளத்தால் ஆயரும் மாண்புற்று வாழ்ந்தனர். ஆயர் மகளிருக்கும் மாயோனுக்கும் இத்துணைத் தொடர்பு எக்காலத்தும் உண்டு. அம்மங்கையர், தம் இன்னல்களைப் போக்கு தற்கும் அவனே துணை எனக் கருதும் உறுதியுடைய வர். இதற்கு,

> **"மடந்தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்**
> **கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றத்**
> **தொடர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது**
> **நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே!**
> **நாராய ணவென்னா நாவென்ன நாவே!"**

என மதுரையில் இருந்த ஆய்ச்சியர் கூறிக் குரவைக் கூத்தாடியதே தக்க சான்றாகும். இதனாலன்றோ அவ் வாயர் மகளிர் நம் ஆண்டாளின் மன ஆதனத்தில் சீரிய இடத்தைப் பெற்றனர்?

அச்சேரியிலுள்ள கன்னியர் இங்ஙனம் கண்ணனோடு களித்திருத்தலை முதியோர் ஆற்றிலர்; 'இச்செயல் நம் குலத்திற்கு இழிவை உண்டாக்கும்,' என அவர் கருதினர். உயத்துணரும் நுட்ப மதியற்ற சில ஆயர், கண்ணன் இறைமையையும், கன்னியர் தெய்வக் காதலையும், ஆன்ம பரமான்மாக்களின் பாகுபாடுகளையும் எங்ஙனம் உணர்வர்? ஆதலின், அம்முதியோர் அன்புக் கயிற்றால் கட்டுண்டுழலும் இரு திறத்தினரையும் தனித்தனி பிரித்து வைத்தனர். கன்னியர் நிலவறைகளில் அடைபட்டனர். கண்ணன் யசோதையின் கட்டுப்பாட்டில் அகப்பட்டான். அப்பெண்மணிகள் இன்பப் பெருக்கிற்கு இஃதொரு போக்கு வீடாய் அமைந்தது. இன்றேல் மங்கையர் முடியினும் முடிவர். இதைத் தடுக்கவே இறைவன் இச்சம்பவத்தை நிகழ்த்தினன்போலும்! பெருகி வரும் வெள்ளத்திற்குப் போக்கிடம் இன்றேல், நீர்க்கரை உடைந்தழியாதோ? கன்னியர் மனம் கலங்கிற்று. கணமும் கண்ணனைக் காணுதிருக்கத் தரியாதார் எங்ஙனம் பல நாட்கள் பாராமலிருப்பர்! கண்ணும் கண்ணீருமாய்க் காலங் கழித்தனர், அவர்தம் நெஞ்சம் அழிந்தது; உடல் உரங்குன்றியது; உயிர் ஒடுங்கியது. ஆகவே வனிதையர் ஆற்றொணு ஆற்றாமையால் அலறிக் கொண்டிருந்தனர்.

களங்கமற்ற கன்னியர், இறையன்பு வாய்ந்த இன்னலத்தோர், பண்பார்ந்த பாவையர். அத்தகையோரின் மனப்புண் நாட்டின் நலத்தைக் கெடுக்காமல் விடுமோ? குலப்பெண் வயிறெரிந்தால் தொடிச் சீலையும் பற்றி எரியாதோ? ஆயர் பாடியில் மாரி நின்றது; பைங்கூழ் வாடியது; பசுக்கள் இளைத்தன; பால் வறண்டது; உணவு குறைந்தது; மாந்திடர் உரங்குன்றினர்; பஞ்

சம் எங்கும் பரந்தது ; வறுமை வளங்கொண்டது. என் செய்வார் பாவம் ! ஆயர்நிலை ஆபத்தில் அடி வைத்தது. நாட்டின் வறுமைக்குக் காரணம் கன்னியரின் கலக்கமே என்பதைச் சில முதியோர் உணர்ந்தனர் ; அக்கால வழக்கின்படி மழையின்பொருட்டு மங்கையர் நோன் பிழைக்க வெளி விடப்பட்டனர் ; அவர்களுக்கு வேண் டியவற்றை உதவக் கண்ணனையே கையாளாக அமைத் தனர். உலக முதல்வன் கன்னியர் கையாளாய் அமைந் தது வியப்பினும் வியப்பன்றோ ?

அவ்வமயம் இரு திறத்தினர் களிப்பின் நிலையை யாரால் அளவிட இயலும் ! பிரிந்தவர் கூடினல் பேசலும் வேண்டுமோ ? தம்மைத் தெரியாமலே இன்பப் பெருக்கில் இறங்கினர். மங்கையர் இவனைப் பிரிந்திருந்த துயர் நீங்கக் ‘ கண்ணு, கண்ணு ’ எனப் பன்முறையும் அழைக்கின்றனர் ; ஏதோ வேலை இடுபவர் போன்று நடிக்கின்றனர் ; கண்ணன் அருகடைந்ததும் நகைத்து நிற்கின்றனர் ; கையை நீட்டுமாறு பணிக்கின்றனர் ; சிறிது புல்லைப் பிடுங்கி அவன் கையில் இட்டுத் தொலை வில் எறியச் சொல்லுகின்றனர் ; இந்நிலையில் அவன் கையழகு, முக அழகு, நடை அழகுகளைக் கண்டு கண்டு களிக்கின்றனர். அவனும், அவர்கள் ஏவுதலுக்குப் பணி யாளன் போன்று உடன்பட்டு நிற்கிறன். அன்பரின் பேச்சும், நகையும், ஏவுதலும் அவன் உள்ளத்தில் உவகையை விளைவியாநிற்கின்றன. புன்சிரிப்போடு தொழில் புரியும் கண்ணனுக்கு ஓட்டமும் நடையும் அல்லாமல் ஓய்வேது ? மங்கையர் பலரல்லரோ ? அவன் ஒருவன் என்செய்வான் ! இவை யாவும் கண்ணனுக்கு ஆனந்த லீலையாய் அமைந்தன.

அம்மங்கையர் இங்ஙனம் கண்ணனைக் கையாளாக் கிக்கொண்டதனோடு நின்றனரா? இவன் ஒரு போது தம்மை ஏமாற்றிச் செல்லுவான் என்பதை அவ்வனி தையர் நன்கு அறிவர். இவன் மாயச் செயல்களுடை யவனல்லனோ? ஆதலின், அம்மகளிர், புருஷகார பூதை யான பெரிய பிராட்டியாரையும், அருள் நிறைந்த ஆசாரியனையும் முன்னிட்டுக் கைங்கரியத் தன்மை வாய்ந்த இந்நோன்பைத் தொடங்கினர். ஆசாரியரின் அருட்பணி அவர்கள் தலைமேல் பெய்தது. பகவத் பாகவத குணப்பெருக்குகள் அம்மங்கையர் முன் ஆறு களாய்ப் பெருகின. மழைகால வெள்ளமெனப் பாயும் அதில் அத்தூயோர் மூழ்கி மூழ்கிக் குளித்தனர். அகங் கார மமகாரங்கள் அவர்களை விட்டு ஓடி ஒளிந்தன. என்றும் இறைக்கு அடிமை செய்யும் கைங்கரிய நிதி யைப் பெற்று மகிழ்ந்தனர். இம்முறையில் நோன்பு முடிவுற்றது. மழை பெய்து ஆயர்பாடியும் செழித்தது. மற்ற ஆயரும் வறுமை நீங்கப்பெற்று மனமகிழ்ந்தனர்.

இங்கு ஒரு பொருளைக் குறிக்காமற் செல்ல மன மெழவில்லை: "திருமாலின் அவதாரமெனப் பகரப் படும் கண்ணன், கள்ளத்தனம் செய்தல், பெண்களி டம் முறையற்ற வழியில் நடந்துகொள்ளல் முதலியன தகுதியுடையனவோ? இத்துணைப் பெருந்தகைமையற்ற செயல்களைச் செய்யாநிற்கும் ஒருவரை உயர்ந்தோர் எனக் கூறுதல் யாங்ஙனம்?" எனச் சிலர் வாதிடுவர். இவர் நுட்ப ஆராய்ச்சி அற்றவரேயாவர். இறைவனது இலக்கணம் யாது? அன்புடையாருடன் கலந்து கலந்து அவர்கள் அன்பைப் பெருக்குவித்து அவர்கள் உள்ளத் தையும் உயிரையும் தம் வசப்படுத்துவது அன்றோ? அதையன்றோ உலகில் தோன்றிய கண்ணன் செயலில்

காட்டுகிறான்? 'உள்ளங் கவர் கள்வன்' என்றல்லவா இறைவனைப் பெரியோர் போற்றுகின்றனர்! ஆயர் மகளிரின் வெண்ணெயையா அவன் கவர்ந்தான்! பல்வகையிலும் பண்பட்டுத் திரண்டெழுந்த அவர்கள் அன்புத் திரட்சியையன்றோ அவன் களவாடினன்! அப்பெண்டிர் ஒவ்வொருவரிடமும் தனித்தனியே கலந்து, ஒவ்வொரு கண்ணனாய் இருந்து இன்பந்துய்த்தனனே! அஃது எதைக்காட்டுகிறது! இறை ஒவ்வொருவரிடமும் உயிர்க்குயிராய்த் திகழும் உயர் தத்துவத்தையன்றோ? இன்னும் அவன், பெண்களிடம் மட்டும் இப்பண்பில் பழகியதற்கும் காரணம் இல்லாமல் போகவில்லை. உண்மையை நோக்கின், ஆன்ம தத்துவம் பெண்தானே? அப்பெண் தத்துவம் பெண்ணுடலையும் தாங்கி, பெண்மைக் குணங்களையும் பெற்றிருக்குமேல், இறைமைக்குணம் வாய்ந்த கண்ணன் நெஞ்சம் அவண் விட்டு வேறிடம் செல்லுமோ? அவர்கள் பெண்மைக் குணத்தோடு அல்லவா கண்ணன் புணர்ந்து புணர்ந்து மகிழ்கிறான்? இன்னும் இவற்றைப் பொருத்தமான தத்துவங்களால் தெள்ளிதின் விளக்கிக் கேட்போர் ஒப்புக்கொள்ளுமாறும் வியக்குமாறும் செய்யலாம். அதற்கு இஃது இடமன்று. சுருங்கச் சொல்லின், இவ்விஷயங்களில் வாதமிடுவோர், கண்ணன் இயற்றிய தெய்வச் செயல்கள் பலவற்றையும் அவன் உண்மை இயல்புகளையும் ஆராய்ந்தறிந்து அமைவாராக!

இங்ஙனம் கண்ணன் தம்மை விட்டுச் சிறிது பிரியும் போதெல்லாம், ஆயர் மங்கையர் செயலிலாற்றிய மன்மதனை இறைஞ்சல், சிற்றில் இழைத்தல், ஆற்றில் குளித்து ஆடைகளுக்காகக் கண்ணனை வேண்டி நிற்றல், கூடலிழைத்துப் பார்த்தல் முதலியவற்றை நம் செல்வி

யார் பாவனையில் இயற்றினர். இவற்றை வரலாற்றுப் பகுதியில் விரிவாகக் கூறியுள்ளோம். இஃது அனுகாரமாகும்.

ஆயினும், ஆய்ச்சியரைக்காட்டிலும் நம் தலைவியார் உயர்ந்தோராவார். யாங்ஙனம்? ஒரு செயலை உடலால் செய்வதைக்காட்டிலும் மனத்தினால் இயற்றல் கடினம் என்பதற்கு ஆராய்ச்சி வேண்டுமோ? உடலைப் பயன் படுத்திப் பல அரிய காரியங்களையும் செய்து முடிக்கலாம்! மனத்தைப் பண்படுத்தி ஓர் எளிய காரியத்தையும் முற்றுப் பெறச் செய்தல் எத்துணை அருமை என்பதை அறியாதார் யார்? மனத்தை ஓரிமைப் பொழுது நிறுத்தலும் கடினமன்றோ? அதினும் நம் சூடிக்கொடுத்தார் இம்மனோபாவனைச் செயலிறகு, செல்வம், குணம், செயல் முதலியவற்றுள் பலவகைப்பட்ட ஆயர் மகளிரைத் தம்மோடு சேர்த்துக்கொள்ளுகிறார். கோதையார், பார்ப்பன வகுப்பைச் சார்ந்தவர். ஆயர், இடையர் வகுப்பைச் சார்ந்தவர். இவ்விரு வகுப்பினருக்கும் கூட்டுறவு உண்டானது யாங்ஙனம்? இங்கு இவர்களுக்கு உண்டான கூட்டுறவு உடலைப் பற்றியதன்றே! மனத்தைப் பற்றுக்கோடாகப் பற்றியதன்றோ? இவ்விரு திறத்தினருக்கும், காலம், குலம், ஒழுக்கம் யாவற்றினும் வேறுபாடு உண்டு. இவ்வேறு பாடுகள் எதனால் தோன்றொழிந்தன? இவை யாவற்றையும் மறைத்துநின்றது எது? இறை அன்பேயாகும். கண்ணனது பக்தி ஒன்றே, எல்லா மாறுபாடுகளையும் ஒழித்து ஒன்றுபடச் செய்தது. அன்னையார் நெஞ்சும், ஆயர் நெஞ்சும் ஒன்றோடு ஒன்று கலந்தன. அக்கலப்பு ஒரு காரியத்தையே செய்யத் தொடங்கிற்று; ஒரு பலனையே விரும்பா நின்றது. மனத்தோடு மனம் கலத்தலின் மாண்

பென்னே! கோதையார் ஆயர் மகளிரை 'மாமான் மகளே!' என உறவு பாராட்டுகிருர். திருப்பாவைச் செல்வியார் நா, "குற்றம் ஒன்றில்லாத கோவலர்தம் பொற்கொடியே, நற்செல்வன் தங்காய்" என்று அவரைப் புகழ்ந்து பேசுகிறது. ஆயர் மகளிர் மழலைச் சொற்களையே தாம் திருப்பிச் சொல்லுவதாக உறுதிப்படுத்துகிருர். "ஆய்ச்சியர் சிந்தையுள் குழகனுர் வரில் கூடிடு கூடலே" என்னும் சொற்ருெடரால் ஆய்ச்சியரிடம் இவர் எத்துணை மதிப்புக் கொண்டுள்ளார் என்பது விளங்கவில்லையா? இவர் இயற்றிய செயல் எளிமையுடையதும், இவ்வுலகத்தைப் பற்றியதும் அல்லவே? பரம பக்தர்களாலும் இயற்ற இயலாததன்ருே? அங்ஙனமிருப்பினும் இவர் தொடங்கிய காரியம் இடையில் இற்றதா? இல்லையே! இவர் மனேபாவனை, காரியத்தை முற்றுவித்து, கருதிய பயனையும் அளித்தது; இம்மனப்பான்மை, இறையைக் கனவிலும் நனவிலும் காணச் செய்தது; இறையோடு இரண்டறக் கலந்து இன்பந்துய்க்க நலமளித்தது. என்ன பாவனை! என்ன பாவனை! இப்பாவனையை இடமாகக் கொண்ட உள்ளமன்ருே உயர் உள்ளம்? இவ்வுள்ளத்தின் உறுதி என்னே! திண்மை என்னே! இங்ஙனம் மனத்தைக் கட்டுப்படுத்தி ஒன்றிலேயே பதிய வைக்க யாவருக்கும் கூடுமோ? புறத்தை ஒடுக்கி அகத்தில் ஆழ்ந்திருப்பவருக்கன்ருே இது முடிவது? சான்ருேரும் அஞ்சுவது மனத்திற்கன்ருே? மனத்திற்குக் குரங்கும் தீயும் அல்லவா ஒப்பிடப்பட்டுள்ளன! மனிதன் உண்பது நாழி, உடுப்பது நான்கு முழம், எண்ணுவன கோடி என்பதற்கு ஒவ்வொருவரும் சான்று பகராநிற்பர் என்பதில் ஐயம் யாது? அத்தகைய மனத்தைக் கண்ணிற் காணும்

பொருளிடத்தும், சிறுபோது நிறுத்தலே அருமை. அங்ஙனமாயின், புலனுக்கும் புலப்படாத இறையினிடத்தில் இருத்துதல் யாங்ஙனம்? இத்தகைய மனத்தை நிறுத்தியன்றோ, நம் பெட்புடையார் புண்ணியச்சொரூபனைப் போற்றினர்!

இம்முறையில் உடலினால் செயல் புரிந்த ஆயர் மகளிர் நிலையைக்காட்டிலும், இவர் நிலை எத்துணை உயர்ந்தது! இவர் மனத்தின் மாண்பின் முன்னே அம்மங்கையர் எங்கு நிற்பர்! தம் பாவனையை வரி வடிவில் பொறிக்க வழி கோலிய இவர் செயலோடு, அவர்கள் செயலை எம்முறையில் ஒப்பிடுவது!

இறையை அடைய அஃறிணைப் பொருள்களிடமும் சரணடைந்து நிற்கும் நிலை ஆயர் மகளிர்க்கு ஏது? சங்கத்தைக் கண்டு பொருமல் அவரிடம் காண இயலுமோ? அம்மங்கையர் யாவருடைய பக்தியையும், இவர் ஒருங்கே கொண்டவரல்லரோ? இத்தன்மையில் அவர்களுக்கு இவர் தலைமை வாய்ந்தவர் என்பதற்குத் தடை உளதோ? ஆயர் மகளிர், தம்மைக்காட்டிலும் ஞானத்திலும் பக்தியிலும் குறைந்தவரேயாயினும்,அவர்களோடு கூட்டுறவு கொண்ட இறையை அடைதற்கு அவர்களையே வழி காட்டிகளாகக் கொள்ளுதல் எத்துணைப் பெருந்தகைமை! ஆயர் மகளிர் நாளும் பாகவதர் நெஞ்சில் உறைதல், அன்னையாரால் அல்லவா? இன்றேல், அவர்கள் செயல் என்றோ மறைந்திராதோ? வலியோரைச் சார்ந்த மெலியோரும் மேன்மை உறுவர் என்பது உலகறிந்த பொருளன்றோ? ஒளி பொருந்திய விளக்கு எங்ஙனம் தன்னையும் விளக்கி மற்றப் பொருள்களையும் விளக்குகிறதோ, அங்ஙனமே நம் ஞான ஒளி வாய்ந்த கோதையாரும், தம்மையும் விளக்கி ஆயர் மகளிரையும்

விளக்கி நின்ருர் ; இதனுல், இவர் ஆயர் குலத்திற்கே ஒரு விளக்கென அமைந்தார். யசோதையின் குடலை விளக்கம் செய்தவன் கண்ணன். ஆயர் மகளிர் உயிரை விளக்கம் செய்த உத்தமர் இவர். ஆயர் மகளிரை மட்டுமா ? உலக உயிர்கள் யாவற்றையும் விளங்கச் செய்த விளக்கு இவர் என்னில் வரும் குற்றம் யாது ? இவ்வுலகு உள்ளளவும் இவ்விளக்கு ஒளிராநிற்கு மன்ருே ! ஆகவே, ஆயர் மகளிரையும், உலகத்தையும் ஒளிரச் செய்த வேயர் பயந்த விளக்கு வாழ்க !

## 4. இயற்கை

இயற்கை என்பது யாவருக்கும் இன்பத்தை அளிக்கும் நிதி ; மக்கள் மனத்தைக் கவரும் காந்தம் ; புதுப்புது அழகுகள் தோன்ருநிற்கும் ஊற்று ; புலவர் புலமையை வெளிப்படுத்தும் கலை ; அறிஞர் அகத்தாமரையை அலரச்செய்யும் ஞாயிறு ; இஃது அப்போதைக்கப்போது வெவ்வேறு அணிகளையும், ஆடைகளையும் அணிந்து மிளிராநிற்கும். மண், புனல், மலை, மரம், மலர், மேகம் ஆகிய யாவும் இயற்கைப் பொருள்களே. இறையன்பர் எங்கு இறையைக் காணுகின்றனர் ? இயற்கைப் பொருள்களைக் காணுந்தோறும் அவர்தம் தூய நெஞ்சம் எங்குச் செல்லுகிறது ? அவ்வியற்கையிலேயே பதிந்துவிடுகின்றதா ? இல்லை இல்லை ; இயற்கையைத் தனக்கு உடலாகக் கொண்டுள்ள இறைவனிடத்துச் செல்லுகிறது.

இம்முறையில், “ எம்பெருமானை எங்குக் காண்போம் ! அவன் இன்சொற்களை என்று கேட்போம் !” என ஆர்வங் கொண்டிருந்த கோதையார், நீலநிற மேகங்

களைக் காண்கிறார். அவற்றின் நிறத்தைக் கொண்ட திருமாலாகிய தம் காதலன் அவற்றினோடே போதருவான் என்றும், இன்றேல் அவற்றின் வாயிலாகத் தமக்குச் சில செய்திகள் அனுப்பியிருப்பான் என்றும் உறுதியாக உன்னி, அவற்றைப் பின் வருமாறு வினவுகிறார் :

**"விண்ணீல மேலாப்பு விரித்தாற்போல் மேகங்காள் !**
**தெண்ணீர்பாய் வேங்கடத்தென் திருமாலும்**
**போந்தானோ ?"**

—நா. தி. 8-1

**"மாமுத்த நிதிசொரியும் மாமுகில்காள்! வேங்கடத்துச்**
**சாமத்தின் நிறங்கொண்ட தாளாளன் வார்த்தையென்னே?"**

ஷை 8-2

ஒருவர் கருத்தை மற்றொருவருக்கு அவர்கள் ஏற்றுக்கொள்ளும் முறையில் நயமாக உரைப்பவரையே தூதுவர் என வழங்குகிறோம். அவர்களுக்குக் கல்வி, அறிவு, ஆராய்ச்சி, உயர் குடிப் பிறப்பு, சொல் வன்மை, மனத்திட்பம், கம்பீரத் தோற்றம், அஞ்சாமை என்பன இன்றியமையாதனவாகும்.

இதனை, ஆன்ற குடிப் பிறத்தல், உரு, அன்பு, அறிவு, ஆராய்ந்த சொல் வன்மை, கல்வி பற்றிய திருக்குறளின் அருஞ்சொற்களால் உணரலாம்.

இத்தகையோரே தூது செல்வதற்குப் பொருத்தமுடையவராவர். தூதுவரின் பெருமை மிக உயர்ந்தது, இராமாயணத்தில் அனுமானும், பாரதத்தில் கண்ணபிரானும் தூதுவராய் அமைந்ததை நோக்குக ! இது நிற்க.

நம் கோதையாருக்குத் தூதுவராய் அமைந்தவர் யாவர் ? கோதையாரின் உடல் திருமாலின் பிரிவைத் தாங்காது இளைத்துவிடுகிறது ; கைவளைகள் தாமாகவே

கழலுகின்றன ; இவர் பெண்மைக் குணங்கள் குறைய ஆற்றமை மீதுருகின்றது ; உலகம் அறிய அரற்றுகிறார். இந்நிலையில் தம் ஆற்றமையை உள்ளவாறே இறைபிடம் உணர்த்தற்கு இயற்கையைக்காட்டிலும் இயைந்த பொருள் வேறொன்றும் இலது என்பது இவர்தம் உறுதி. தமக்குத் தூது செல்வதற்குப் பொருத்தமுடையன இவையே என்று தீர்மானித்தார்.

" உலங்குண்ட விளங்கனிபோல் உள்மெலியப் புகுந்தென்னை
நலங்கொண்ட நாரணற்கென் நடலைநோய் செப்புமினே."

—நா. தி. 8-6

" கடலே கடலே யுன்னைக் கடைந்து கலக்குறுத்து
உடலுள் புகுந்து நின்றூறல் அறுத்தவர்க்கு என்னையும்
உடலுள் புகுந்துநின்றூற லறுக்கின்ற மாயற்குஎன்
நடலைகள் எல்லாம் நாரணற்கே சென்றுரைத்தியே !"

ஷை 10-9

மலர்கள் இதழ்களை விரிக்கின்றன ; மணத்தை வீசுகின்றன ; அழகிய நிறத்தோடு மிளிர்கின்றன ; தேனைத் துளிக்கின்றன ; அன்னையார் மனத்தைக் கவர்கின்றன. இவர் இவ்வியற்கை இன்பத்தில் தோய்ந்து தோய்ந்து நிற்கிறார். இது போழ்து, இவரைப் போன்று இயற்கை இன்பத்தை உள்ளபடி துய்ப்பவர் எத்தனை பேர் ? எத்தனை பேருக்கு இவ்வியற்கை, இன்பத்தை ஊட்டுகிறது? செயற்கையிலேயே படிந்து கிடக்கும் தற்போதைய உலகம், இயற்கையின் நுட்பத்தை நுகர்தல் யாங்ஙனம் ? பண்டைப் புலவர் இயற்கையிலேயே படிந்து படிந்து அதன் நலத்தை அள்ளி அள்ளிப் பாக்களின் மூலம் உலகோர்க்கு அளித்தனர். இங்ஙனம இயற்கை மாண்பைக் கவியில் பொருத்தி, கற்போர் மனத்தைக் களிக்கச் செய்யும் கவிஞரும் அருகிவிட்டனர். அன்றியும், இயற்

கைக் காட்சிக்கு இதுபோன்ற நகரங்களில் இடமெங்கே? அழகிய பறவைகள் உண்டா? அப்பறவைகளுக்கு உணவையும் உறையுளையும் ஈயும், இலை, காய், கனி நிறைந்த மரங்கள்தாம் காணப்படுகின்றனவா? இம் முறையில் அவற்றின் இனிய பாடலையும், ஓதையையும், மிழற்றலையும், பேச்சையும் கேட்பது யாங்ஙனம்? அவற்றோடு கொஞ்சிக் குலாவல் எவ்வாறு! நம் அன்னை யாருக்கோ, பறவைகள் கலந்து பேசிக்கொள்கின்றன; புட்கள் சிலம்புகின்றன; கோழிகள் அழைக்கின்றன; குயிலினங்கள் கூவுகின்றன; வண்டுகள் மிழற்றுகின்றன; மஞ்ஞைகள் தோகை விரித்து நடிக்கின்றன.

> **" கீசுகீ சென்றெங்கும் ஆனைச்சாத் தங்கலந்து**
> **பேசின பேச்சரவம் கேட்டிலையோ ?"** —திருப்-7
>
> **" புள்ளும் சிலம்பினகாண் "** ஷை - 6
>
> **" வந்தெங்கும் கோழி அழைத்தனகாண் ; மாதவிப்**
> **பந்தர்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்."**
> ஷை - 18
>
> **" கணமா மயில்காள்! கண்ணபிரான் திருக்கோலம் போன்று**
> **அணிமா நடம்பயின் றாடுகின்றீர்."** —நா. தி. 10-6

என்ன இன்பம்! என்ன இன்பம்! இவ்வின்பத்தை ஊன்றித் துய்க்கும் நம் அன்னையாரின் இயல்பு இம் மட்டோடு நிற்க இடந்தருமோ? அது மலர்கள், பறவைகள், கடல் முதலிய இயற்கைப் பொருள்களின் உள்ளுறை பொருளினிடத்துச் செல்லுகிறது. அப்பொருள் எஃது? இறையன்றோ! அவ்விறையின் முறுவலையும் இன்பச் சிரிப்பையும் முல்லைக் கொடிகளிடத்துக் காண்கிறார்; என்ன மகிழ்வு! என்ன மகிழ்வு!

"போர்க்களிறு பொருமா விருஞ்சோலையம் பூம்புறவில்
தார்க்கொடி முல்லைகளும் தவளநகை காட்டுகின்ற ;
கார்க்கொள் படாக்கள்நின்று கழறிச்சிரிக்கத் தரியேன்."

—நா. தி-9-2

நம் நாட்டில் சகுனம் பார்த்தல், பண்டுதொட்டு உள்ள ஒரு பழக்கம். சகுனம் என்பது பறவைகளின் நிகழ்ச்சியால் உண்டாவதாகும். இதற்குப் 'புள்' என்னும் இன்னொரு பெயருமுண்டு. மாடுபிடி சண்டைக்குப் போவோர், நல்வாய்ப் புள்ளின் சகுனம் பார்த்துச் செல்வர் என்றும், 'காரி' என்னும் பறவை வழி விலக்கின், போருக்குப் போதலை ஒழிவர் என்றும் சங்கநூல்களால் அறிகின்றோம். பல்லி கொட்டுதலைச் சகுனமாகக் கொள்ளல் அகநானூற்றிலும், திவ்வியப் பிரபந்தத்திலும் காணலாம். 'கரிக்குருவி வலமிருந்து இடம் சென்றால், கால் நடையாய்ச் சென்றவர்கள் கனக தண்டி ஏறுவர்,' என்பது பழமொழி. அக்கரிக்குருவிகளே நம் கோதையாருக்குக் குறி பகர்கின்றன ; எம்பெருமான் வரவைச் சொல்லிக்கொண்டு 'மருள்' என்னும் பண்ணைப் பாடுகின்றன. இதைச் செவியேற்ற கோதையார், "இந்நற் சகுனத்தின் பயனை யான் அடைவேனோ ! இஃது உண்மையாக முடியுமோ! இக்குருவிகளின வார்த்தைகள் பொய்க்காமல் பலிக்க வேண்டுமே!" என ஆற்றாமை தோன்ற நிற்கிறார்.

"காலை எழுந்திருந்து கரியகுரு விக்கணங்கள்
மாலின் வரவுசொல்லி மருள்பாடுதல் மெய்ம்மைகொலோ!"

ஷை 9-8

இறை, எங்கும் நிறைந்த ஒரு பொருள் ; எல்லாப் பொருள்களினுட் உள்ளுறையும் ஒரு தத்துவம் ; ஆயினும், அவ்விறை அழகிய இயற்கைப் பொருள்களில்

பெரிதும் காட்சியளிப்பதை அறிஞர் கண்டு களிக்கின்றனர். இயற்கைப் பொருள்களையே மக்கள் தொழுந் தெய்வமாகக் கொண்டிருந்த வழக்குச் சங்க நூல்களிலும், தேச சரித்திரங்களிலும் காணலாம். நாள் ஏற ஏற, இறைக்குச் செயற்கை உருவங்கள் கற்பிக்கப்பட்டன. இவ்வுருவங்கள் ஞானிகளின் பாவனைக்கும், இதிகாச புராணங்களின் போக்கிற்கும் ஏற்ப அமைந்தன. இவ்வுருவங்கள் சந்நிதானங்களில் இன்னும் காட்சி அளிப்பதைக் காண்கின்றோம்! இவ்வுருவத்தின் உள்ளமைந்த அருஞ் சக்தியை நினையாது இவ்வுருவத்தையே இறையெனக் கருதுதல் இறை வழிபாடு ஆகாது. இவ்விக்கிரகத்தின் உண்மைத் தத்துவத்தை மனங்கொண்டு வழிபாடியற்றியவருள் சிறந்தவர் நம் பெரியோர். இது நிற்க.

"பச்சைமா மலைபோல் மேனிப்
பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா! அமர ரேறே!
ஆயர்தம் கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோக மாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே!" —திருமாலை, 2.

அவர்களுள் தலையாயவர் நம் ஆண்டாள். இவர் இயற்கை வனப்பு வாய்ந்த மலர்களையும், வண்டுகளையும் என்ன நோக்கத்தோடு காண்கிறார்! புற நோக்கத்தோடு மட்டுமா? இல்லை இல்லை. இவர் அகக்கண் திறக்கிறது. அவ்வகக்கண்ணிற்கு எது தோற்றமளிக்கும்! இயற்கைப் பொருளின் உள்ளுறையும் பொருளன்றோ! அவ்வுள் தத்துவத்தை ஊன்றி நோக்குகிறார். அம்மலர்களும், அவ்வண்டுகளும் தம்முள் இறையை அடக்கிக்

கொண்டு புறத்தில் அவன்நிறத்தைக் காட்டி மிளிர்கின்றன. அன்னையாருக்கு ஆற்ருமை பொங்கி எழுகிறது! அவற்றை உற்று உற்று நோக்குகிருர்.

"நீங்கள் இழைத்த தவத்தையும் யானிழைத்திலேனே! என்ன நிறம்! என்ன அழகு! என்ன செழுமை! என்ன ஒளி! அவன் திருமேனி ஒளியைப் பெற்று விளங்கும் நீங்களல்லவா புண்ணிய சொரூபிகள்! அவன் நிறத்தையும் உருவத்தையும் பெற்றுத் துலங்கும் நீங்கள் எனக்கு உய்வகை இயம்பீர்களோ! யான் உங்களை அடைக்கலம் புகுகின்றேன். எனக்குச் சரண் ஈயுங்கள்," என்கிருர். இவர் இயற்கைக்கும் இறைக்கும் உள்ள தொடர்பை எம்முறையில் கொண்டிருப்பின் அப்பொருள்களிடம் இங்ஙனம் சரணடைவார் என்பதை ஓர்க!

**" துங்க மலர்ப்பொழில்சூழ்**
**திருமாலிருஞ் சோலை நின்ற**
**செங்கண் கருமுகிலின்**
**திருவுருப் போல்மலர்மேல்**
**தொங்கிய வண்டினங்காள்!**
**தொகுபூஞ்சுனை காள்! சுனையில்**
**தங்குசெந் தாமரைகாள்!**
**எனக்கோர்சரண் சாற்றுமினே."**

—நா. தி. 9-5.

இயற்கை இறைக்கு உடல் என்பதை ஆண்டாள் இன்னும் நன்கு நிலைநிறுத்துகிருர். அம்மழைக்காலத்தில் திருமாலின் திருமேனி நிறத்தைப் போன்ற கோடல் மலர்கள் மலர்ந்தும், அவன் திருவதரத்தைப் போன்ற கொவ்வைக் கனிகள் கனிந்தும் காணப்பட்டன. அவை எம்பெருமானை நினைப்பூட்டிக் கோதையாரை வருத்

னை. அன்னையார் அலமருகின்றார். அவனோடு கலந்திருக்குங்கால் இவருக்கு இன்பமூட்டியவைகளே, பிரிந்திருக்கும் அவ்வமயம் அளப்பிலாத் துன்பத்தை ஊட்டாநிற்கின்றன. அவை தமக்குப் பகைகள் எனக் கருதுகிறார். இவ்வளவில் நின்றாரில்லை. இறைவனே அவைகளைப் போர்க்கோலஞ் செய்து தம்மேல் விடுத்துள்ளான் என உறுதி கொள்ளுகிறார். என்னே இவர் இயற்கைக்கும் இறைக்கும் வகுத்த கூட்டுறவு !

"கார்க்கோடற் பூக்காள் ! கார்க்கடல் வண்ணன்
　　என்மேல் உம்மைப்
போர்க்கோலஞ் செய்து
　　போரவிடுத்தவன் எங்குற்றான்?"

—நா-தி. 10-1.

"கோவை மணாட்டி நீ உன் கொழுங்கனி
　　கொண்டெம்மை
ஆவி தொலைவியேல்
　　வாயழகர் தம்மை அஞ்சுதும்"　　ஷை 10-3.

## 5. வீரம்

ஓர் ஒப்பற்ற வீரன் கையில் வாளைத்தாங்கி ஆண் சிங்கம் போன்று கம்பீரமாகப் போர்க்களம் புகுகின்றான். பகைவர் சேனை திரண்டு தன் முன்னே நிற்கின்றது. அச்சேனைத்திரள் முழுவதையும் தன் வீரக்கண்ணால் காண்கின்றான்; போர் வீரர்களின் வன்மை, படைத்திறன் முதலியன அவனுக்குப் புலனாகின்றன. அப்பகைவரை வெல்லும் அற முறையைத் தன் மனத்துள் வகுத்துக்கொள்கின்றான்; தான் ஒருவனாகவே நின்று நாற்புறமும் சுழன்று சுழன்று வாளை வீசுகின்றான்; பல யானைகளையும், பல படை வீரரையும் வெட்டி

நிலத்தில்சாய்க்கின்ருன்; அவன்போர்க்களத்தில் வாகை சூடி ஆண் சிங்கம் போன்று நிற்கின்ருன். இத்தகை யோன் எவனே, அவனையே உலகம் 'சுத்த வீரன்' என வழங்குகிறது; இச்செயலையே வீரமெனப் போற்று கிறது. இத்தகைய சுத்த வீரரைப்பற்றிப் பாடப்பட்ட பரணிகள் எத்தனை! புகழ்க் கவிகள் எத்தனை! வீர முழக்கங்கள் எத்தனை! அங்ஙனமாயின், இவ்வொரு திறத்தினர் மட்டுந்தான் வீரக் குழுவினருள் அடங்கு தற்கு ஏற்புடையரா? இல்லை இல்லை.

ஒருவர் சில நூல்களை ஆழ்ந்து ஆராய்கிருர்; மற் ெருருவர் சிறந்த நூலொன்று எழுத எண்ணுகிருர்; இன்ெனுருவர் தம் தந்தையாரின் பெயரால் அறநிலையம் ஒன்று நிறுவ உன்னுகிருர். இங்ஙனம் பலர் பல உயர்ந்த செயல்களைப் புரியக் கருதுகின்றனர். இவ்வொவ்வொரு வரும் தாம் தாம் மனங்கொண்ட காரியங்களை முடித் தற்குள் இவர்களுக்கு அளவிறந்த இடுக்கண்கள் நேர் தல் உலகியல்பு. ஆயினும், இப்பெரியோர் அவற்றிற்குச் சிறிதும் தளராமல்,

**"இடுக்கண் வருங்கால் நகுக; அதனை**
**அடுத்தூர்வது அஃதொப்பது இல்."**

என்னும் பொய்யா மொழியை மனத்துட்கொண்டு, தாம் மேற்கொண்ட காரியத்தில் ஊன்றி நின்று, அதை முடித்து, வெற்றியுடன் நிற்கிருர். இம்மனேதிடத்தை நாம் என்னென்று கூறுவது! இஃது வீரமன்ருே! இவ் வீர வெற்றியால், அவருக்குண்டாகும் ஆனந்தப் பெருக்கை அளந்து கூற யாரால் இயலும்! இதை மனத்திருத்தி, நம் கோதையாரை நோக்கின், இவர் வீரத் தொகுதியினருள் முற்பட நிற்பவர் என அறியலாம்.

இவர் ஏன் உலகில் தோன்றினர்? மக்களை அஞ்ஞான இருளிலிருந்து கரையேற்றி ஞான ஒளியில் உலவச் செய்யவே அல்லவா? இவர் வளர்ப்பு எங்கு அமைந்தது? வீரத்தோடு வைணவ மதத்தை நிலை நாட்டி, திருமாலுக்குப் பல்லாண்டு பாடி வீரமுழக்கஞ் செய்த பெரியாழ்வாரிடமன்றோ? தாம் சூடிக்கொடுத்த மாலையையே எம்பெருமான் அணிந்து ஆனந்தமுறுமாறு செய்த வீரம் வேறு எத்தொண்டருக்கு வாய்த்தது? பரமான்மாவை நோக்குகையில், ஜீவான்மாக்கள் யாவும் பெண் தத்துவங்களே என்பதை உறுதிப்படுத்தப் பெண்ணாகவே அவதரித்து, அப்பெருமானை அடைய அகப்பொருள் இலக்கண முறையின்படி ஒழுகி, இறுதியில் அவனை அடைந்து இன்புற்ற வீரவெற்றி எவ்வாழ்வாருக்குக் கிடைத்தது? இங்ஙனம் இவர்தம் வீரங்களைப் பேசிக்கொண்டே செல்லின், அளவு கடந்து விரியா நிற்கும்.

சூடிக்கொடுத்த நாச்சியார் தாம் கருதிய தூய பொருளை அடைய எத்தனை பேரை இறைஞ்சுகிறார்! எத்தனை குறிகளை இழைத்துப் பார்க்கிறார்! எத்தனை பொருள்களைத் தூது விடுகிறார்! எத்தனை பேரிடம் எம்பெருமான் செய்திகளை வினவுகிறார்! கண்ணன் நிறத்தை ஒத்த எத்தனை பொருள்களைக் கண்டு மனந் தளர்ந்து சோர்கிறார்! எத்தனை முறை தம் வளைகளையும், தம் வனப்பையும், வன்மையையும் இழந்து வருந்துகிறார்! கண்ணன் கொடுமைகளைப் பழித்து உரைத்தோரை எத்தனை நாட்கள் எதிர்த்து நின்று அவன் நற்பண்புகளை எடுத்தோதுகிறார்! எம்பெருமான் இருக்கும் இடத்தில் தம்மைக் கொண்டு விடுமாறு எத்தனை சான்றோரை இறைஞ்சுகிறார்! இவை போன்றன ஒன்றா

இரண்டா ? பலவாகும் ! இத்தனை இடையூறுகளையும் எதிர்த்து நின்று இறுதியில் திருமாலை அடைந்து இன்புற்று வெற்றி மாலையைச் சூடி நின்ற நம் வீர மங்கையராகும் அன்னையார், யாரை மணக்க விரும்புகிறார்? பல வீரச் செயல்களிலும் தவழ்ந்து திண்ணிய வீரனாய்த் திகழ்ந்த எம்பெருமானையே அன்றோ? மக்களுள் அன்றித் தேவர்களுள் சிறந்த வீரரும் இவருக்கு வீரராய்த் தோன்றிலர். ஆதலின், 'மானிடரை மணவேன்!' என்கிறார். வீர மங்கையர் வீரரை அல்லாது வேறெவரைத் தமக்குத் தலைவராகத் தேர்ந்தெடுப்பர் ! இவர் வீரக்கொடி வானப் பந்தலில் படர்கிறது ; பாற்கடலில் பாய்கிறது ; இறுதியில் அவதாரத்தில் பதிந்து, அதைச் சுற்றிக்கொள்ள முயலுகிறது. இம்முயற்சி இவரை ஆயர் மங்கையரிடம் ஈர்த்துச் செல்கிறது; அம்மங்கையர் உள்ளக் கிடக்கைகளிலும் செயல்களிலும் நுழைந்து நுழைந்து துழாவுகிறது. இந்நிலையில் அவர்கள் இயற்றிய மார்கழி நோன்பு, இவர் கண்ணிற்குக் காட்சி அளிக்கிறது ! அதைத் தாமும் இயற்றி, அக்கொழு கொம்பை அடைய விரும்புகிறார். இவர் நோன்பு, அழகிய முப்பது பாசுரங்களால் அமைகிறது. இம்முப்பது பாசுரங்களும் முப்பது இரத்தினங்கள் எனக் கூறல் மிகையாகாது. இவற்றுள் பெரும்பாலன இவர் மணக்க விரும்பும் திருமாலின்வீரத்தையே பொருளாகக் கொண்டுள்ளன. இவர் திருமொழியும் இத்தன்மையதே. இவர் எம்பெருமானை,

> " முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று
> கப்பந் தவிர்க்கும் கலியே !" —திருப்பாவை, 20

> " இலங்கையைப் பூசலாக்கிய சேவகா !"—நா-தி-2-8

என அழைத்தலை நோக்குக.

சில இடங்களில் அவன் காட்டிய வீரச் செயல்கள் பலவற்றையும் ஒன்றின்மேல் ஒன்ருக அடுக்கி, ஒரே பாசுரத்தில் பகர்கிருர்.

**" அன்றின் ஞதன செய்சிசு பாலனும்**
**நின்ற நீள்மரு தும்எரு தும்புள்ளும்**
**வென்றி வேல்விறற் கஞ்சனும் வீழமுன்**
**கொன்ற வன்வரிற் கூடிடு கூடலே !"** —நா-தி. 4-7

இங்ஙனம் மார்கழி நோன்பியற்றிய அன்னையார், தாம் விரும்பிய வரங்களைப் பெற, வீரக் கண்ணனை ஓர் அரியாசனத்தில் அமர்த்துகிருர். இப்பாசுரத்தில் கோதையாரின் வீரச் சொற்களும், வீரக் கருத்துகளும், வீர உவமையும், வீரப் போக்கும் கண்டோர் மனத்தைக் கவராதிரா.

இவர் இயம்பியவாறே, இருக்கையில் வந்தமர்ந்த கண்ணனைக் காண்டலும், அவன் வீரச்செயல்கள் ஒவ்வொன்ருக இவர் மனக்கண்ணிற்குக் காட்சி அளிக்கின்றன. அவற்ருலேயே அவனை வாழ்த்தாநிற்கிருர். இவற்றை முறையே 'மாரி மலை முழைஞ்சில்,' 'அன்றிவ்வுலக மளந்தாய் அடிபோற்றி !' என்னும் பாசுரங்களால் அறியலாம். ஈதன்ரே வீரச்செல்வியார் மனப்பான்மை!

இன்னும் இவர் சொற்களில் ஆங்காங்கே பல்வகை வீரங்களும் உருக்கொண்டுள்ளன.

**" கரியலற மருப்பினை ஒசித்துப்புள் வாய்பிளந்த**
**மணிவண்ணற்கு என்னை வகுத்திடு."** ஷை 1-10

**" ஊன்கொண்ட வள்ளுகிரால்**
**இரணியனை உடலிடந்தான்**
**தான்கொண்ட சரிவளைகள்**
**தருமாகில் சாற்றுமினே !"** ஷை 8-5

வீர மகளிராய்ப் பிறந்து, வீரத்தோன்றலையே மணக்கக் கருதி, வெற்றி பெற்ற நம் ஆண்டாளுக்கு யாவரும் வீரராகவே தோன்றுகின்றனர்.

கண்ணன் தந்தையாராகிய நந்தகோபரை நோக்குகிறார். அவர் கரத்தில் கூர்மையான வேல், பகைவரை ஒரே வீச்சில் அழிக்கும் வீரம், மதங்கொண்ட யானைகளையும் எதிர்த்து நிற்கும் தோள் வன்மை முதலியன இவர் கண்ணெதிரில் தோன்றுகின்றன. அவற்றை உருவெனக் கொண்ட பொன் போன்ற சொற்களைக் கோதையார் கொட்டுகிறார்.

**"கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன்"—திரு. 1**
**"உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்."—ஷை 18**

நோன்பு நோற்றற்பொருட்டுத் தமக்குத் துணையாகக் கொள்ளும் தோழியரும், வீரக்குடியில் பிறந்தவராகவே இவருக்குப் புலப்படுகின்றனர். ஆதலின், அவர்களுள் ஒருத்தியை,

**"செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்**
**குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே!"**
ஷை 11

என அழைக்கிறார்.

இவர் நப்பின்னையாரிடம் செல்கிறார்; அவரையும் வீர மாதரெனவே இவர் தீர்மானிக்கிறார். யாங்ஙனம்? அவர் சயனித்திருக்கும் கட்டிலை உற்று நோக்குகிறார். "இக்கட்டில் எதனால் ஆக்கப்பட்டது? கண்ணன் ஓரிமைப்போதில் கொன்று வீழ்த்திய குவலயாபீடம் என்னும் யானையின் தந்தத்தினாலேயன்றோ? இன்றேல் நம் வீரமங்கையார் இதன்மீது அடியைத்தான் வைத்திருப்

பாரோ? கண்ணன் ஒரு வீரமகன் என்றல்லவா இவர் அவனை விரும்புவது? இவ்வழகிய மங்கையரைத் தன் வசப்படுத்த இம்மாயன் செய்த சூழ்ச்சி வியக்கத் தக்கதே! இன்றேல், இக்கட்டழகியாரின் அன்பை அவன் ஒருகாலும் பெற்றிருக்க முடியாதென்பது திண்ணம். இவர் திருமண மாளிகையே, ஏழு காளைகளை அடக்கிய வீர அஸ்திவாரத்தின்மீதன்றோ கட்டப்பட்டது?" என, கண்ணன் நப்பின்னையார் ஆகிய இருவர் வீரத்தையும் கலந்து அனுபவிக்கிறார் நம் கோதையார்.

"குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டிலின்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை"— திருப்பாவை, 19.

எம்பெருமான் கைத்தலத்திருக்கும் சங்கும் வீரத்தோடு துலங்குகிறது. அதைக் கண்ட நாச்சியார், "ஓ நல்ல சங்கே! கொடிய அசுரர் துன்பமுறுமாறு ஒலிக்கும் உன் வீரமென்னே! இவ்வீரம் உனக்கு எப்படிக் கிடைத்தது? கண்ணன் கைத்தலத்து இருக்கும் மேன்மையினாலன்றோ?" என அச்சங்குக்கும் வீரத்தைக் கற்பிக்கிறார்.

"திடரில் குடிஏறித் தீய அசுரர்
நடலைப் படமுழங்கும் தோற்றத்தாய் நற்சங்கே!"
—நா-தி. 7-2.

## 6. ஓவியமும் காவியமும்

உலகில் கலைகள் பலவுள. அக்கலைகளே நாட்டை அணி செய்வன; நாட்டிற்கு உயிரும் அவைகளே. எந் நாட்டில் உயரிய கலைகள் இல்லையோ, அந்நாடு நாடா காது. ஒரு நாட்டின் கலைகளிலிருந்துதான் அதன் மேன்மை, பண்பு, நாகரிகங்களை அறிதல் வேண்டும். இத்தகைய கலைகள் முதன்முதலில் கால்கோள் விழாக் கொண்டது நம் தமிழ் நாட்டிலேயே. வான சாஸ்திரம் போன்ற அரிய கலைகள் நம் தமிழ் நாட்டிற்கே உரியவை. இக்கலைகளை நம் பண்டைத் தமிழர் வெற்றுடலோடு சேர்த்துக் கண்டாரில்லை; இவற்றை உயிரோடு கலந்து இன்பந்துய்த்தனர். இக்கலைகள் வளர வளரப் புறமனம் ஒடுங்கியது; அகமனம் ஒளி விட்டு வளர்ந்தது. அத் தகையோர் உடல் தத்துவத்தையும், உயிருண்மைகளை யும் தெள்ளிதின் உணர்ந்தனர்; பிணியை ஓட்டினர்; ஆயுளைப் பெருக்கினர். இறை வடிவம் அவர்தம் கண் முன் நின்றது. தம் மனத்தூய்மையினால் யாவரையும் திருத்தினர், அவருடைய இனிய வார்த்தைகள் மற் றோரை வசப்படுத்தின. தன்னலங் கருதாது காலங் கழித்தனர். அவர்கள் வாழுமிடம் மட்டுமேயன்றி, எல்லா இடங்களும் அவர்களை நோக்கியே வாழ்ந்தன. அவர்கள் எங்கும் தலைமை பெற்றுத் திகழ்ந்தார்கள். அவர்களிடையில் ஒற்றுமை திகழ்ந்தது. கலை வல்லுந ரிடையே போர் ஏது? மாறுபாடு ஏது? இங்ஙனம் கலைகள் மக்களுக்கு அறிவையும் அன்பையும் ஊட்டி, மதிப்பையும் உண்டாக்கின.

இக்கலைகளுக்கும், தற்காலக் கலைகளுக்கும் எத் துணை வேறுபாடு உள்ளது! பெரிதும் வளர்ந்தோங்கிய

விஞ்ஞானக் கலைகளினல் இப்போது ஏற்பட்டுள்ள பயன் யாது? மிருகத் தன்மையும், கொலையும், கொடுமையுமே அல்லவா ? அந்தோ ! இக்கலைகளினல் தெய்வத் தன்மையைக் காணும் காலம் எப்போது வருமோ, அறியோம்! முன் கூறியவாறு மக்கள் மனத்தைப் பண்படுத்தி, ஆன்மஅறிவை ஊட்டும் கலைகளுள் ஓவியக் கலையும் காவியக் கலையும் சிறந்தனவாகும். அக்கலைஞருள் முன்னவரை ஓவியர் எனவும் பின்னவரைக் கவிஞர் எனவும் வழங்குகிருேம்.

ஓவியரும் உயரிய கலைஞரே. அவர் வரையும் ஓவியமும் ஒரு சிறந்த கலையே. ஓவியத்தில் துறைபோய ஒருவர், அழகிய மரமடர்ந்த காட்டையோ, அழகிய ஒரு மங்கையையோ, இறையின் அருளுருவத்தையோ வரைகிருர். அதனைக் காண்போர்க்கு அவ்வுருவப் பொருளை நேரிற் காண்பது போன்றே ஓர் உணர்ச்சி உண்டாகிறது. அவற்றின் உண்மை உருவங்கள், காண்போர் முன் நிற்கின்றன ; காண்போர் கண்ணையும் மனத்தையும் கவர்கின்றன. அவர் நெஞ்சம் உவகை கொள்ளுகிறது; அவர் அவ்வோவியத்தின் ஒவ்வொரு பகுதியையும் கண்டு கண்டு களிக்கிருர். பொதுமக்களுக்கு வெறும் உணவை அளிக்கும் அவ்வோவியம், அதன் நுட்பமுணர்ந்தவருக்கு விருந்தளிக்கிறது. அவர்கள் நெஞ்சம் அவ்வோவிய அளவிலே நிற்குமோ ? நில்லாது. அஃது ஓவியரிடம் செல்லும் ; அவரிடம் நன்மதிப்புக் கொள்ளும் ; அவரது திறனைப் பேசிப்பேசி மகிழும் ; அவரையும் அவர் கலையையும் வாழ்த்தாநிற்கும். எத்துணை ஓவியங்கள் நம் நாட்டில் இன்றும் காட்சி அளிக்கின்றன ! சித்திரமும் ஓவியத்தில் ஒரு பகுதியேயாகும். நம் ஆலயங்களிலும் பொது இடங்களிலும் எத்தனை அழ

கிய அரிய சித்திரங்களைக் காண்கிறோம்! இத்தொழில் இயற்றுவதற்கு எவ்வளவு பொறுமை வேண்டும்! எத்துணை நுண்ணறிவு தேவை! போலிக் கலைகளில் நெஞ்சம் ஊன்றி இருக்கும் இக்காலத்தில் இத்தெய்வக் கலைக்கு வழி ஏது? இதில் சிந்தை செலுத்தல் எங்ஙனம்! பொறுமை ஏது? ஆதரிப்பவர் யார்? இதைக் கண்டு களிக்கும் நுண்ணறிவுடையார்தாம் எங்குள்ளார்? இவை யாவும் வறண்ட இக்காலத்தில் உயர்ந்த ஓவியக்கலை எங்கேனும் சென்று ஒளியாமல் என் செயும்!

இங்ஙனம் சிறப்பு வாய்ந்த ஓவியக் கலையும் ஆதித்தன் முன் திங்கள் போன்று காவியக் கலையின்முன் ஒளி இழந்து நிற்கும். அறிவுடையோர் வரைந்த ஓர் ஓவியம், அப்படத்தில் அமைந்தவரின் உடற்கூறுகளையும் அவற்றின் அழகுகளையும் மட்டுமே அல்லாமல், அவர் கல்வி, அறிவு, ஆண்மை, பண்பு முதலியவற்றையும் எடுத்துக் காட்டுமோ? ஓவியக்காரன் ஒரு மலர் வனத்தை வரைய எத்தனை நாட்கள் தேவை? எத்தனை துணைக்கருவிகள் வேண்டும்? பொருட்செலவு எவ்வளவு? நற்புலமை வாய்ந்த கவிஞருக்கு அதைத் தம் காவியத்தில் அமைக்கச் சில விநாடிகளே போதுமல்லவா? அன்றியும், காவியம் ஓவியத்தைப் போன்று, அதனைக் கற்போர் ஒரு முறை பார்த்து மன நிறைவைக் கொள்ளக் கூடியதன்றே! பன்முறையும் கற்க வேண்டுமென்னும் அவாவை அஃது எழுப்பாநிற்குமே! எத்தனை முறை காணினும் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு புதுப் பொருள் தோன்றிக்கொண்டே இருக்கும்அன்றோ? புது நீர் ஊறிக்கொண்டே இருக்கும் ஊற்றிற்கன்றோ அதை ஒப்பிடுதல் வேண்டும்! இங்ஙனமின்றேல், அஃது உயரிய கவி எனக் கூறுதற்கு இடமேது? இயற்கைப் புலவரிட

மிருந்து ஒரு நாளைக்கு எத்தனையோ கவிகள் தோன்றுகிற்கும். ஆனால், அவை யாவும் வரி வடிவில் அமைதல் இல்லை. புலவர் மனம், காவியக்கூடம். அவர்கள் நா, காவியத்தைத் தள்ளும் யந்திரம். அந்நா, ஓரிமைப் பொழுதில் பல கவிகளைத் தள்ளாநிற்கும். இச்செயல் ஓவியக்காரருக்கு இயலுமோ ? அவர் ஒன்றிலேயே ஊன்றி அன்றோ பல நாட்களைக் கடத்துவர் ? காவியத்துள் ஓவியத்தைக் காணலாம். ஓவியத்துள் காவியத்தைக் காண இயலுமோ ?

**கவி** எனினும், **பா** எனினும் ஒன்றே. **பா** எங்கு உண்டாகும் ? மக்கள் மனத்தைக் கவரும் அழகிய தோற்றங்கள் எங்கெங்கு உண்டோ, அங்கெல்லாம் பாக்களும் உண்டு. பாவலர் உள்ளத்தில் மலை, கடல், மரங்கள், புற்றரைகள், பறவைகள் முதலிய இயற்கைத் தோற்றங்கள் பதிகின்றன. அவர்கள் நுட்ப மதியால் அவைகள் உடை உடுத்து, அணி அணிந்து புறப் படுகின்றன. அவை முதலில் ஒலி வடிவத்தைப் பெறுகின்றன ; பின்பு வரிவடிவை அடைகின்றன; இம்முறையில் பாக்கள் உருக்கொண்டு ஒளிர்கின்றன. இத்தகையோரையே **இயற்புலவர்கள்** எனக் கூறுகிறோம்.

இச்சீரியோருள் ஒருவரே நம் பெண்ணரசியார். இவர் பாக்களுள் யமகம், திரிபு எனும் சொல்லணிகளும் நாகபந்தம் முதலிய சித்திரக்கவிகளும் இடம் பெற்றில. இவர் எதுகை மோனைகளில் மட்டும் தம் மனத்தைச் செலுத்திலர். சில புலவர் தம் கவியில் சொற்களை மட்டும் அடுக்கிக்கொண்டே செல்லுவர். ஆனால், அவண் பொருட்செறிவைக் கண்டு இன்புற இயலாது. நம் ஆண்டாள் பாசுரங்களிலோ, ஒவ்வொரு சொல்லும்

ஒவ்வொரு மணியாகும். பொருளேயே உருவெனக் கொண்டு துலங்கும். பாக்களுக்கு உயிர் பொருளே என்பதை நன்குணர்ந்தவரல்லரோ இவர்? இம்முறையில் எம்பெருமானாகிய செம்பொருள் இவர் பக்தி வலையிற் சிக்குண்டு, இவர் ஞானக் கண்ணிற்குக் காட்சி அளிக்கிறது. அக்காட்சி அன்னையாரை ஆர்வக் கடலில் ஆழ்த்துகிறது. அவ்வார்வம் உள்ளடங்காமல் பொங்கி வழிகிறது; அஃது அச்செம்பொருளின் உயர் நிலைகளைப் புகழ்ந்து போற்ற இவரை ஊக்குகிறது. இவர் கவிகள் சான்றோர் உள்ளம் போன்றும் களங்கமற்ற நீரோடை போன்றும் தெளிவை உடையன; இனிய ஓசையும், பொருட் செறிவும், ஆழ்கருத்தும் பெற்றுள்ளன; எளிய நடையையும், உயர் பொருளையும் தம்மகத்தே கொண்டிருத்தல் மட்டுமே அன்றி, இனிமையையே உருவெனக் கொண்டவை. இம்முறையில் இவர் பாக்களை இனிய மதுரகவி எனல் மிகையாகாது. அவை முத்தையும் பொன்னையும் வாரி இறைக்கும் மலையருவியைப் போன்றன்றோ அரிய பொருள்களை அள்ளி அள்ளித்தருகின்றன! இத்தகு சீரிய கவிகள் கல்வி கற்றதனாலேயே ஒருவருக்கு அமையும் எனக் கூறல் பெருமயக்கே! இறைவன் இன்னருளே இவற்றிற்குக் காரணமாகும். நம்மனோர் இன்பந் துய்க்க, தாம் எம்பெருமான் அருளை மாந்தித் தமிழ் ஓவியக் கலையை நமக்கீந்த அன்னையாரின் அருட்டிறமென்னே! இவர் பாசுரங்களில் சொற்பொருளினும் குறிப்புப் பொருளே விஞ்சி நிற்கும். அவை இயற்கைப் பொருள்களை உடலாகவும், அவற்றின் அழகை உயிராகவும், அவற்றினுள் இருக்கும் இறையை உயிருக்கு உயிராகவும் பெற்றுத் துலங்கும்.

"உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழு நீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினகாண்."
—திருப்பாவை, 14

"மதயானை போலெழுந்த மாமுகில்காள்! வேங்கடத்தைப்
பதியாக வாழ்வீர்காள்! பாம்பணையான்
வார்த்தை என்னே?" —நா-தி-8-9.

நம் புலமைச் செல்வியார் பாக்களில் ஆங்காங்கே உவமையணிகள் ஒளிரக்காணலாம். அவை இயற்கையி லிருந்தே தோன்றினும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனி உருவத்தைப் பெற்றுள்ளது. அவற்றுள் சில, ஆன்மா வின் பாரதந்திரிய நிலையையும் இறைவன் அருளையும் குறியாநிற்கும். சில, தமக்கும் இறைக்கும் உள்ள தொடர்பைக் காட்டாநிற்கும். சில, அவன் உருவத் தையும் வீரத்தையும் விளக்கும்.

"தடவரையின் மீதே சரற்கால சந்திரன்
இடையுவா வில்வந் தெழுந்தாலே போல்நீயும்
வடமதுரை யார்மன்னன் வாசுதே வன்கையில்
குடியேறி வீற்றிருந்தாய் கோலப்பெருஞ்சங்கே!"
—நா-தி-7-3

'அங்கண்மா ஞாலத் தரசர் அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட் டிற்கீழே
சங்க மிருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்
கிங்கிணிவாய்ச் செய்த தாமரைப் பூப்போலே
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ?
திங்களும் ஆதித் தியனும் எழுந்தாற்போல்
அங்க ணிரண்டுங்கொண்டு எங்கள்மேல் நோக்குதியேல்
எங்கள்மேற் சாபம் இழிந்தேலோர் எம்பாவாய்"
—திருப்பாவை, 22

"நீர்காலத் தெருக்கினம் பழவிலைபோல் வீழ்வேனை,
வார்காலத் தொருநாள்தம் வாசகம்தந் தருளாரே."
—நா-தி-8-8

"பீதக ஆடை யுடைதாழப்
பெருங்கார் மேகக் கன்றேபோல்
வீதி யார வருவானை
விருந்தா வனத்தே கண்டோமே." —நா-தி-14-5

இவற்றால் ஓவியமும் காவியமும் இத்தன்மையன என்பதும், ஓவியத்தினும் காவியமே சிறந்ததென் பதும் அறிந்தோம். இரண்டும் தனித்தனி பொருள் களே ஆயினும், முன் செப்பிய வண்ணம் ஓவியத் தில் காவியத்தைக் காண இயலாவிடினும், அறிஞர் காவியங்களில் பல இயல்புகள் வாய்ந்த ஓவியங் களைக் காண இயலும். காவியம் உயர்ந்தது என்பதற்கு இஃதும் ஒரு காரணமெனத் தெளிக. ஓவியர் தம் படத்தில் தீட்டும் உருவத்தைக்காட்டிலும், கவிஞர் தம் பாவில் அமைக்கும் உருவம் செம்மை வாய்ந்தது; எப் பொருளாலும் அழியாதது ; என்றும் அழுக்கேறாதது ; உள்ளுறைகளைத் தெளித்துக் காட்டுவது; ஓவியருக்கும், காவியருக்கும், மற்றையோருக்கும் விருந்தளிப்பது. இம் முறையில். பாவலருக்கு ஓவியமும் கைவந்துள்ள தென் பது அறியலாம்.

ஆயினும், இங்ஙனம் காவியத்தில் ஓவியத்தை அமைக்க யாவருக்கும் இயலுதல் இல்லை. தம் அறிவை இயற்கை அழகுகளிடத்தில் பதிய வைத்து, அவற்றின் இன்னலங்களை உய்த்துணர்பவருக்கே இஃது கூடுவதா கும். இவருள்ளும் சிலரே, இயற்கையின் புற அழகில் மட்டும் நில்லாமல், அதன் அகத்தில் அமைந்து உருக் காட்டும் இறை மட்டும் செல்வர். அவர் மனக்கண் ணிற்கு இறையின் உருவம், பண்பு, நிறம் முதலியன அதில் காட்சி அளியாநிற்கும். அவற்றைத் தம் காவியத் தில் இறக்குவர். அவை ஓவியமாக உருக்கொண்டு எழும்.

அவற்றுள் சொல்லோவியங்கள் சில; பொருளோவியங்கள் சில. மக்களுடைய புற மனமும் புறப்பொருளைக் காணும் நிலையிலேயே எப்போதும் நிற்பதில்லை. அது தன் முயற்சியால் புறத்திலிருந்து சிறிது உள் நுழைகிறது. இது புறத்திற்கும் அகத்திற்கும் இடைப்பட்ட நிலை. இந்நிலையில் அம்மனம் காவியத்தின் சொல்லோவியத்தைக் கண்டு மகிழ்கிறது. அம்மனத்திற்குப் பொருளோவியத்திற்குச் செல்ல வன்மை ஏது? இன்னும் துருவிச்சென்ற உள் மனம் இச்சொல்லோவியத்தால் இன்புறுதல் இல்லை. அதற்குப் பொருளோவியமே தக்க விருந்து. அகமனம் ஆழ்ந்த பொருளைத்தானே காணும்! அப்பொருளோவியங்களுள்ளும் பல, உலக இயல்களையும் உயிரியல்களையும் வரைந்து காட்டுவனவே; சிலவே, இறையையும் இறைப் பண்புகளையும் தீட்டிக் காட்டும். அவையே உயிர்களுக்கு உறுதுணை! ஆன்மாவைக் கடைத்தேற்றுவனவும் அவையே! அவற்றையே ஞானிகள் நாடிச் செல்வார்கள். நம் மனத்தை உருக்குவனவும் பண்படுத்துவனவும் அவைகளே.

இத்தகைய ஓவியங்களைத் தம் காவியங்களுள் தீட்டிக் காட்டியவருள் நாயன்மார்களும் ஆழ்வார்களுமே சிறந்தவர்கள். அவருள் நம் கோதையாரும் ஒருவர்.

**“ மாரி மலைமுழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்**
**சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து,**
**வேரி மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்துதறி,**
**மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்**
**போதருமா போலேநீ பூவைப்பூ வண்ணா! உன்**
**கோயில்நின்று இங்ஙனே போந்தருளிக் கோப்புடைய**
**சீரிய சிங்கா தனத்திருந்து, யாம்வந்த**
**காரியம் ஆராய்ந் தருள்.” —திருப்பாவை, 23**

இவ்வோவியத்தை நோக்குக ! திருப்பாவைச் செல்வியார், ஆயர் மகளிருடன் கண்ணனிடம் செல்லுகிறார்; தாம் வந்த காரியத்தை ஆராய்ந்து அருளுதற்கு ஓர் அரியாசனத்தைக் கண்ணனுக்கு அமைக்கிறார். அவன் மேற்கொள்ளவேண்டிய முறைக்கு வீரம் வாய்ந்த சிங்கத்தின் செயல் ஓவியமாக அமைகிறது. இவர்,பல இடங்களில், அவன் புன்முறுவல், திருவுருவங்களை, கொடிகள், வண்டுகள், சுனைகள் முதலிய இயற்கைப் பொருள்களால் சித்திரித்துக் காட்டுகிறார். இத்தகைய சித்திரங்கள் இவர் நூல்களில் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன. இத்திறம் யாவர்க்கும் அமைவதொன்றோ ? இது நிற்க.

இயற்கைப் பொருள்களில் ஆண்மையும் பெண்மையும் கலந்துள்ளன. இவ்வியற்கையின் உள்ளுறையும் இறையினிடத்தும் இவ்விரு கூறுகளும் உண்டு என்பதைத் தெள்ளிதின் உணர்ந்தவர்கள் நம் ஆழ்வார்கள். அவர்கள் இறையைப் பற்றிப் பேசும் பல இடங்களிலும் பெண்மையைத் தாய் எனவும், ஆண்மையைத் தந்தை எனவும் போற்றுகிறார்கள். இறையின்கண்ணுள்ள பெண்மையை, ஒவ்வொருவரும் இன்றியமையாது பேணுதல் வேண்டும். ஏன் ? ஆண்மையில் பெண்மைப் பண்புகளாகும் பொறுமை, தியாகம் முதலிய குணங்கள் பொருந்துதலும் அருள் கனிந்த உள்ளம் அமைதலும் அருமை. ஆன்ம உய்விற்கு உதவி புரிவதும், ஆன்மாக்களைத் திரட்டிக் கொண்டுபோய் ஆண்மையினிடம் சேர்ப்பதும் இக்குணங்கள் அமைந்த பெண்மையேயாகும். பெண்மை இன்றேல் எங்ஙனம் நில உலகம் இல்லாதொழியுமோ, அங்ஙனமே இறையில் பெண்மை இன்றேல் நித்திய உலகமும் இல்லாதொழியும். ஏன் ?

ஆண்மை, சுதந்திரமும் கடின உள்ளமும் உடையதாதலின், அஃது உயிர்களின் பாவத்தைப் போக்கி, ஓர் ஆன்மாவையும் ஏற்றுக்கொள்ளாது. இன்னும் ஊன்றிக் கூறின், எத்துணைத் தூய ஆன்மாவும் இறையினிடம் அணுக முடியாதெனவே கூறிவிடலாம். இதை உண்மைப்படுத்தப் பல புராணக் கதைகள் உண்டு. இத்தகைய மேன்மைகள் வாய்ந்த பெண்மையை, ஆண்மையில் நின்ற ஆழ்வார்கள் வழிபடுதற்கும், பெண்மையையே இயற்கையாகப் பெற்ற நம் திலகமனையார் பேணுதற்கும் வேறுபாடு இல்லாமற் போதல் யாங்ஙனம்? பெண்ணுடலைத் தாங்கி, பெண்ணுலகில் தோன்றி, பெண்ணுலகில் கலந்து, பெண்மைக் குணங்கள் வாய்ந்து வாழ்ந்த இவர், இறையினிடம் உள்ள பெண்மையின் இனிமையை நன்கு உணர்வாரல்லரா? இவரே, அப்பெண்மையைப் போற்றும் வகை அறிபவர்; அப்பெண்மையிலிருந்து அடையும் பயனை உணர்பவர்; அதனோடு கூடிக் குலாவும் நேர்மையைக் காண்பவர். அப்பெண்மையைக் கொண்டே ஆண்மையை வசப்படுத்தும் வகை இவருக்கே தெரியும். அதைத் துணைபற்றியே, ஆண்மை இடம் போதருவார்; அதை ஏவியே ஆண்மையை விழிக்கச் செய்வார்; அதன் உதவியினாலேயே, ஆண்மையின் அருளைப்பெற்று இன்பந்துய்ப்பார்.

> **"நந்தகோ பாலன் மருமகளே! நப்பின்னாய்!**
> **கந்தங் கமழும் குழலீ! கடைதிறவாய்;**
> **வந்தெங்கும் கோழி அழைத்தனகாண்; மாதவிப்**
> **பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்;**
> **செந்தா மரைக்கையால் சீரார் வளை ஒலிப்ப,**
> **வந்து திறவாய் மகிழ்ந்து."** —திருப்பாவை, 18

இவ்வோவியத்தில் பெண்மை ஒளிர்வதைக் காண்க. இந்த இடமே அன்றோ நம் கோதையார் முதன்முதல்

இறையைச் சென்றடையும் இடம்? இங்கு யாரைப் பற்றுகிறார்? பெண்மையையே அல்லவா? ஆண்மையை நாடும்போதும் எந்நெறியைப் பற்றிச் செல்லுகிறார் என்பதைக் காணுதல் வேண்டும்.

> "நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்;
> உக்கமும் தட்டொளியும் தந்துன் மணாளனை
> இப்போதே எம்மைநீ ராட்டு." —திருப்பாவை, 21

ஆண்மையை ஊக்குவதற்குப் பெண்மையையே நாடுதலும், ஆண்மையோடு தாம் கலந்து இன்பந்துய்த்தற்குப் பெண்மையையே துணை தேடுதலும் எத்துணைச் சால்புடையனவாகும்!

இம்முறையில், நம் செல்வியார், இறையை அடைய அடிகோலுங்கால் பற்றுவதும் பெண்மையே! இறையருளை நாடும்போது கொள்வதும் பெண்மையே! இறையோடு கலந்து அவன் அருள் நீரில் மூழ்கி இன்புறும்போது பேணுவதும் பெண்மையே! இஃதே இறையருளை விரைவில் அடைதற்குத் தக்க கருவி என்பதை இவர் நன்கு உணர்ந்தார். இந்நுட்பத்தை நுணுகி அறிய இயற்கையிலேயே பெண்மை வாய்ந்தவர்க்கன்றி மற்றையோர்க்கு இயலுமோ? ஆதலின், காவியத்தில் ஓவியத்தைத் தீட்டிக் காட்டும் மற்ற ஆழ்வார்களைக் காட்டிலும், இறையின் இரகசியம் அறிந்தும், பெண்மைக்கே முதன்மை ஈந்தும், பெண்மையைத் தனித்தும், பெண்மையோடு ஆண்மையைக் கலந்தும் வரைந்து காட்டும் நம் கோதையார் உயர்ந்தவர் என்பதை மறுப்பவர் யார்? பெண்மை வாழ்க! பெண்மையைப் பேணும் உலகம் வாழ்க! இறையில் பெண்மையைக் கண்டு களிக்கும் நம் பெட்புடையார் வாழ்க!

## 7. தமிழ்

தமிழ் என்பதற்கு இனிமை என்பது பொருள். தமிழ் ஆயுந்தோறும் இன்பம் தரும் என்பது பெரியார் வாக்கன்றே! தமிழின் ஒலியும் இனிமை, சொல்லும் இனிமை, பொருளும் இனிமை, செயலும் இனிமை. எங்ஙனம் மக்களுக்குக் கடுமை செயற்கையோ, அங்ஙனமே தமிழிற்கும் கடின சொற்கள் செயற்கை எனக் கொள்க. தெய்வ அருள் வாய்ந்த பொருள் யாவும் இனிமையுடையனவே! இயற்கைப் பொருள்கள் எத்துணை இனிமையுடையன! அங்ஙனமாயின், அவ்வினிய இயற்கைப் பொருள்களைத் தனக்கு உடலெனக் கொண்ட இறையின் இனிமையைக் கூறுதலும் வேண்டுமோ! இங்ஙனம் இனிமை வாய்ந்த இறைவனை எச்சொற்களால் வழுத்துதல் வேண்டும்! எம்மொழியில் வழுத்தின் இறைவன் உள்ளங்குளிரும்! இனிமை வாய்ந்த மொழியாலன்றோ! அஃது எது? தமிழே என்பதை மறுப்பவர் யார்? இதனாற்றான் நாயன்மார்களும், ஆழ்வார்களும் தமிழ்ப் பாசுரங்களினாலேயே இறைவனை வழுத்தினார்கள். இவர்களுள் ஆண்டாளும் ஒருவராவர். ஆனால், அவர்களைக்காட்டிலும் இவர் உயர்ந்தவர் எனக் கொள்க. ஏன்? அவர்கள், தம் பாசுரங்களைத் தமிழில் பாடியதாகக் கருதினார்களே அல்லாமல், இவரைப் போன்று தமிழே தம் பாசுரங்கள் எனச் செப்பினார்கள் இல்லை. தமிழும் தம் பாசுரங்களும் வேறல்ல என்பது இவர் கருத்து. இதற்கு,

**"கோதை வாய்த் தமிழ் வல்லவர்"**
**"கோதை சொல் தூய தமிழ் மாலை"**

"கோதை தமிழ் ஈரைந்தும்"

என்னும் இச்சொற்றொடர்களே தக்க சான்றுகளாகும்.

தமிழ் அன்னைக்கு மணிமேகலையும், சிலப்பதிகாரமும் முறையே மேகலாபரணமாகவும், காற்சிலம்பாகவும் உள்ளன என்னும் ஒரு வழக்குண்டு. கவிச்செல்வியார் நூல்களோ, இங்ஙனம் ஒப்புப்படுத்தும் முறையில் இல்லை. இவர் சொற்கள் தமிழன்னையின் வடிவம். அச்சொற்களின் பொருள் தமிழன்னையின் உயிர். தமிழன்னை வேறு, இவர் நூல்கள் வேறு எனப் பிரித்தறிய லா நிலையிலுள்ளது. இந்நூல்களில் அமைந்துள்ள அகப்பொருள் தத்துவங்கள் தமிழ்த்தாய்க்கு உயிர்க்குயிராய் இலங்குகின்றன. கோதையார், இயற்கையில் படிந்து படிந்து எத்தனை நிற ஆடைகளைத் தமிழன்னைக்கு அணிவிக்கிறார்! வீரம், சான்றாண்மை, சீர்திருத்தம், காதல் முதலிய எத்தனை அணிகளை அவருக்குப் பூட்டுகிறார்! இவற்றைப் பெற்ற தமிழன்னை நம் ஆண்டாள் நூலில் மகிழும் மகிழ்வு என்னே! இங்ஙனம் நம் கோதையார் ஒழுகிக்கொண்டதற்குக் காரணம் இல்லாமற் போகவில்லை. தமிழ்த்தாய் இவர் மருங்கிலே அன்றோ வளர்கிறாள்! இதற்கு,

'ஏன மருப்பிலே பயின்ற பாவை
மருங்கிலே வளருகின்றாள்.' —வில்லி பாரதம்

என்னும் புலவர் வாக்கை நோக்குக.

இத்தமிழ், '**இயல், இசை, நாடகம்**' என முத்திறப்படும். இம்மூன்றும் சேர்ந்த போதே தமிழ் முற்றுப் பெறுகிறது. நம் தமிழ் நாட்டில் ஒரு காலத்தில் இசையும் நாடகமும் சீரிய குறிக்கோளுடன் உயர் உருவம் பெற்று விளங்கின என்பது அறிஞர் அறிந்ததே. பல காரணங்களினால், இடைக் காலத்தில் இவற்றிற்கு வீழ்ச்

சியும், இழிவும் ஏற்பட்டன. இவை, இப்போதுள்ள நிலையிலிருந்து உயர்ந்து புத்தம் புதிய உருவத்தைப் பெற்றுத் துலங்க வேண்டும் என்பது சிலர் கருத்து. நம் கோதையார் நூலில் இவை மூன்றும் விரவி இருத்தலைக் காணலாம்.

மற்ற ஆழ்வார்களின் சீரிய அமைப்பு வாய்ந்த பாக்களைக்காட்டிலும், நம் கோதையார் பாக்களின் அமைப்பு, உயர்வும் அழகும் சீர்மையும் வாய்ந்தது என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுவர். ஆதலின், இவர் நூல்கள் இயற்றமிழிற்கும் இருப்பிடம் எனக் கூறுவதில் குறை இல்லை.

இவர் நூல்களுள் நாடக அமைப்புகள் முற்றும் அமைந்துள்ளன. நாடகத்திற்கு வேண்டுவனவாகிய ஒன்பது சுவைகளும் இவற்றுள் உண்டு. அன்றியும், எம்பெருமானைக் காளியன் உச்சியாகிய நாடக மேடையில் ஏற்றி நடிக்கச் செய்கிறார். அவனைக் கூத்தனென்றே இவர் நா வழங்குகிறது. மயில்கள் கண்ணன் கோலத்தைக் கொண்டு தம் முன் நடிப்பதை இவர் கண்டு கண்டு மகிழ்கிறார். இம்முறையில், இவருக்கு நாடகத்தில் இருக்கும் சுவையையும், இவர் தம் நூலில் நாடகத்தைப் பொருத்தும் இடத்தையும், அதைப் பண்படுத்தும் நேர்மையையும் நோக்குக! விரிப்பிற் பெருகும்.

**“ குதிகொண் டரவில் நடித்தாய் !”** —நா. தி. 3-2

**“ வாய்த்த காளியன்மேல் நடமாடிய கூத்தர் ”**

—ஷை 4-3

**“ கானமாமயில்காள் கண்ணபிரான் திருக்கோலம் போன்று அணி மாநடம் பயின்றாடுகின்றீர்.”** ஷை 10-6

உலகம் இசையால் ஆக்கப்பட்டுள்ளது. காற்றில் இசை உண்டு ; கடலில் இசை உண்டு ; மழையில் இசை

உண்டு ; மரத்தில் இசை உண்டு. இசை இல்லாத இடமு முண்டோ ? இறைவன் இசைக்குக் கட்டுப்பட்டவனல்லனே ? நம்பாடுவான் இசையைப் பாடிப் பேறு பெற்றதை அறிந்த ஆண்டாள், தாமும் இறைவன் இன்னருளைப் பெறத் தம் நூல்களை இன்னிசையோடுங் கலந்து பாடியருளினார் என்னும் ஒரு சரிதமும் வழங்கப்படுகிறது.

திருப்பாவைச் செல்வியார், இங்ஙனம் இசையே பேரின்பமடைதற்குத் திறவுகோல் எனக் கருதினும், அவ்விசையையும் இவர் எப்போது விரும்புகிறார் ? எப்போது எதிர்கொண்டழைக்கிறார் ? எப்போது தமக்கு இன்பமளிப்பது என எண்ணுகிறார் ? இறைவன் அருள் தம்மைச் சார்ந்தபோதும், அவன் தம்மைக் கூடியபோதுமே ஆகும். இவர் இனிய குரலால் எம்பெருமான் கலியாண குணங்களைப் பண்ணெனப் பாடுகிறார். தம் மினம் எனக் கருதிய குயிலினங்கள் இவரிடம் வந்து கூடுகின்றன ; இனிமையாகப் பாடுகின்றன. அவற்றின் இன்னிசைப்பாட்டு இவர் செவியைத் தொளைக்கிறது. " யான் எம்பெருமானுடன் கலந்திருந்த போது அமுதன்ன இனிமையை ஈந்த இவ்விசைப்பாட்டு, இப்போது என் உயிரை வாட்டுகிறதே! என் செய்வேன்! இக்குயில்கள் என் நிலையை அறிந்திலவே! இனி என்னால் தாங்க முடியாது! யான் என் நிலையை இவைகட்கு அறிவுறுத்துதல் வேண்டும்," எனத் தீர்மானித்து, " ஓ குயில்களே, ஈதென்ன பாடல்! உங்கள் இசைப்பாட்டைக் கேட்கும் வன்மை எனக்கில்லை. வேங்கடச் செல்வன் எனக்கு நல் வாழ்வு தந்து, என் மாட்டு அருள் புரிகுவனேல், அவ்வமயம் நீங்கள் வந்து பாடுங்கள். அப்போதுதான் உங்கள் இன்னிசையை அமைதியுடன் கேட்டு ஆனந்த

முறுவேன்," எனப் பகருகிறார். இவ்வாறு இசையில் இயைந்து நின்ற நம் கோதையார், தம்முடைய பாசுரங்களை இசைத் தமிழெனவும், இசையோடு கலந்தே அவற்றைத் தாம் செப்பியுள்ளதாகவும் இயம்புகிறார்.

"இன்னிசையால் சொன்ன மாலை ஈரைந்தும்"

—நா. தி. 3-10

"இன்னிசையால் சொன்ன செஞ்சொல் மாலை"

ஷை 12-10

இதனால், நம் சூடிக்கொடுத்தார் நூல்களில் முத்தமிழும் கலந்துள்ளன என அறிந்தாம். இம்மூன்றும் கலந்த போதே தமிழிற்கு ஒரு குறைவற்ற உருவம் ஏற்படுகிறது. பண்டைய சங்கங்கள் இம்முத்தமிழையும் தனித்தனி பிரித்துக் காணவில்லை. இம்மூன்றையும் சேர்த்தே பார்த்தன; ஆய்ந்தன; இன்பந் துய்த்தன. இம்மூன்றும் ஒன்றே என்பது சங்கத்தினர் கருத்து. இடைக்காலத்தில் இசை நூல்களும் நாடக நூல்களும் மறைந்தொழிந்தன. தற்சமயம் **சிலப்பதிகாரம்** ஒன்றுதான், முத்தமிழையும், சங்கத்தின் போக்கையும் காட்டிக்கொண்டு நிற்கிறது. சங்கத்தின் உயர் எண்ணத்தையும், தமிழின் தகைமையையும் விளக்குதற்பொருட்டே, நம் அன்னையார் தம் நூலில் முத்தமிழையும் பொருத்தி, இறுதியில் 'சங்கத் தமிழ் மாலை முப்பதும்' எனச் செப்பிப் போந்தார். இதனால் நம் செல்வியாரின் நூல்கள் தமிழின் முழு உருவத்தையும் பெற்று விளங்குகின்றன என்பதை அறிந்தாம்.

இன்னும் இவர் வணங்கிய தெய்வங்கள் எவை? முதன்முதலில் தமிழின் எல்லை நிலமான வேங்கட மலையில் எழுந்தருளி இருக்கும் திருவேங்கடத்தானுக்கு, அவனைப்போன்ற நிறத்தையும், அவனை ஒத்த

கருணையையும் உடைய மேகத்தைத் தூது விடுகிறார். பின்பு தமிழ் தழைத்தோங்கிய பாண்டி நாட்டு அழகரிடம் செல்லுகிறார்; தமக்குப் புலப்படும் பொருள்கள்யாவும் அழகர் நிறத்தையே கொண்டு ஒளிர்வதாகக் காண்கிறார்; அவருக்கே வெண்ணெயையும், அக்கார அடிசிலையும் ஊட்டுகிறார்; இறுதியில் சோழவள நாட்டில் எழுந்தருளி இருக்கும் திருவரங்கச் செல்வனை நோக்குகிறார். அவனுடைய நாகணையும், அவன் திருச்சயனமும் இவர் மனத்தைக் கவர்கின்றன. காவை விரிக்கும் காவிரியும், ஏழு மதில்களும் இவர் நோக்கையும் மனத்தையும் இழுக்கின்றன. அவ்வரங்கனிடமே சென்று இரண்டறக் கலந்து மறைகிறார். இவர் தமிழையும், தமிழ் நாடுகளையும், தமிழ்த் தெய்வத்தையும் போற்றிய போக்கு என்னே! நம் அன்னையார் நூலும் தமிழும் நிலைநின்று வழங்குவனவாக!

## 8. சால்பு

எல்லாப் பெருங்குணங்களும் நிறைந்த தன்மைதான் 'சால்பு' எனக் கூறப்படுவது. சால்பமைந்தவர் எவரோ, அவரே சான்றோர் என வழங்கப்படுகின்றனர். சான்றோர் செயலும், சொல்லும், மனமும் வஞ்சனை அற்றன. தன்னலப் பேய் அவரிடம் தலையசைத்தல் இல்லை. பிறர் நலம் பேணுதலே அவர் உயிர் வாழ்க்கை. தமக்கு இன்பமூட்டுவன எவையோ, அவற்றின் மூலமாகவே பிறருக்கும் இன்பமூட்ட முயல்வர். தமக்குப் பிறர் புரிந்த தினையளவு நன்றியையும் பனையளவாகக் கருதும் பெருந்தகைமையை அவரிடம் காணலாம். அவர் விரிந்த உள்ளம், யாவரையும் தம் உடன் பிறந்தாராகவும், சுற்றத்தினராகவும் கருதாநிற்கும். தாம் துய்க்

கும் நலனைப் பிறருக்கும் பகுத்தளித்து மகிழ்தல் அவா தம் இயல்பு. இவ்விலக்கணங்களை மனத்திருத்தி நம் ஆண்டாளிடம் செல்வோம்.

திருப்பாவைச் செல்வியார், மற்ற ஆழ்வார்களைப் போன்றவரல்லர்; ஈப்வரி எனக் கொண்டாடும் நிலை வாய்ந்தவர். இத்தகையார் உலகில் தோன்றி உழலு வதற்குக் காரணமென்னை? நம்போன்றுரை உய்வித் தலே அன்றோ? அதனினும், இவர் மங்கையர் மாட்டுக் காட்டிய கருணைத் திறத்தைக் காணுதல் வேண்டும்! கண்ணன் எங்ஙனம் கன்னியர் உண்மை உயர்வை உணர்ந்து ஒழுகினனோ, அங்ஙனமே அன்னையாரும் அவர்களை உத்தம உறவினராகக் கொண்டார்.

ஆண்டாள், ஆயர் மங்கையர் கண்ணனை அடைய நோற்ற மார்கழி நோன்பைத் தாமும் இயற்றி அவனைச் சேர விழைகிறார். ஆனால், ஆயர் பெண்களுக்குச் செய லில் நடைபெற்ற அந்நோன்பு, இவர்க்குப் பாவனையில் அமைகிறது. அப்பாவனையிலும் இவர் இறை இன்பத் தைத் தாம் ஒருவரே நின்று துய்க்க எண்ணிலர். இவர் அருளுள்ளம், தம்போன்ற மங்கையர் பலரையும் உடன் கூட்டிக்கொள்ளுகிறது. இறை இன்பத்தைப் பல ருடன் கலந்து துய்க்க உன்னிய இவர், அன்பும் அச் சமும் கலந்த சொற்களால் ஆயர் மகளிரை அஞ்ஞானத் துயிலிலிருந்து ஞான விழிப்பிற்குக் கொணர்கிறார். இதைத் திருப்பாவைப் பத்துப் பாசுரங்களில் காண லாம். தாம் துய்க்கும் இன்னலத்தைப் பலருக்கும் பகிர்ந் தளிக்கும் பெருந்தகைமை என்னே! இதனுடன் நிற் கின்றனரா? எம்பெருமானையுமன்றோ துயிலுணர்த்து கிறார்!

"கூவுவான் வந்து நின்றோம் கோது குலமுடைய
பாவாய்! எழுந்திராய்." —திருப்பாவை, 8

"அம்பர மூடறுத்து ஓங்கி உலகளந்த
உம்பர்கோ மானே! உறங்காது எழுந்திராய்."
ஷை. 17

இவர் கண்ணனைக் கனிவுடன் விளிக்கும் இடங்களுக்குச் சென்று காண்போம். அங்கும் அவனை அன்புடன் ஆதரித்த தாய் தந்தையரை மறந்திலர். யசோதையைச் செப்புங்கால் அவள் அழகையும், மேன்மையையும் வெளிப்படுத்துகிறார். இவர் சொற்களில் நந்தகோபருடைய மறமும் அறமும் உருக்கொண்டெழுந்துள்ளன.

"ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்" —திருப். 1

"கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே! குலவிளக்கே!
எம்பெரு மாட்டி யசோதாய்! அறிவுறாய்." —ஷை, 17

"கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோ பன்குமரன்"
—ஷை. 1

"அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும்
எம்பெருமான் நந்தகோ பாலா! எழுந்திராய்."
—ஷை. 17

இங்கு இவ்விருவரையும் 'எம்பெருமாட்டி, எம்பெருமான்' எனக் கூறும் கோதையார் பெருமிதத்தை நோக்குக!

எம்பெருமானைக் காணச் சிறு பொழுது தாமதம் ஏற்படினும், கோதையார் மனம் எங்குச் செல்லும்! தம் தந்தையாரிடமே. இவர் எம்பெருமானைக் காண விழைகிறார். அவனோ, வந்து முகம் காட்டிலன். இவர் சிறிது சிந்தித்தார். இவர் மனத்தில் ஓர் உயர் எண்ணம் குதித்தெழுந்தது. அதைத் தம் தோழிகளிடம் தெரிவிக்கிறார். "என் உயிர்த்தோழியே, நாம் விரும்பும் நம்

பெருமாள் பெருஞ்செல்வர்; யாவரினும் மேம்பட்டவர். நாமோ, மக்கள் தொகுதியைச் சார்ந்தவர்; மிகத் தாழ்ந்தவர்; பக்தியில் கடைப்பட்டவர். இத்தன்மை வாய்ந்த நம் அழைப்பிற்கு அவர் இணங்கி எழுந்தருளுவரோ? ஸ்ரீ வில்லிபுத்தூர்த் தலைவரும், என் தந்தையாருமாகிய பெரியாழ்வார் அன்புடன் அழைப்பரேல், அவர் கட்டாயம் வந்தே தீருவார். அப்போது நாம் அவரைச் சேவித்து இன்புறுவோமாக!" என இயம்பினார். பிராட்டி நிலையில் நிற்கும் கோதையார், இறைவனை வருவிப்பதில் தம்மைக்காட்டிலும், தம் தந்தையார் சீரியர் என்பதை உலகிற்குக் காட்டும் பெருந்தகைமையை உய்த்துணர்க!

தாம் எம்பெருமான் பிரிவை நினைத்துத் துன்புறுங் காலத்தும், தாயினிடத்தும், தோழிகளிடத்தும் இவர் மிக நாகரிகமாகவே நடந்துகொள்ளுகிறார். ஒரு தீய சொல்லும் இவர் வாயினின்று வெளி வந்திலது. ஆழ்ந்த ஆற்றாமையும் கவலையுங்கூட இவரை வரம்பு கடந்த செயல்களில் நுழைத்தில. மறந்தும் கொடிய சொற்களைச் சொல்லல் ஒழுக்கமுடையாரிடம் உண்டாகுமோ? நாவை நற்சொற்களில் பழக்கி வைத்தல் சான்றோர் இயல்பன்றோ!

**"எழிலுடைய அம்மனைமீர்! என்னரங்கத் தின்னமுதர்"**

—நா. தி. 11-2

ஈஸ்வரனிடம் பக்தி செய்து அவனுக்குத் தொண்டு பூண்டொழுகுவோர் இரு திறப்படுவர்: இவ்வுலகச் செல்வங்களையேனும், வீட்டின் பேற்றையேனும் கருதி இறைவன் மாட்டு அன்பு செலுத்துவார் ஒரு சாரார்; அவன் தத்துவத்தையும், ஆன்மாவின் உண்மை நிலையினையும் ஆய்ந்து, எம்பெருமானுக்கே இன்பத்தை (முக

மலர்ச்சியை) ஊட்ட வேண்டுமென்னும் ஒரே எண்ணத்தைக் கொண்டு, அவனிடம் பக்தி செலுத்தி அவனுக்குக் கைங்கரியஞ் செய்வார் மற்ருெரு சாரார். இவருள் பிந்தியவரே, உண்மைப் பக்தராவர். இத்தகையார் வாழ்த்தும் அர்ச்சனையுமே தூய்மை உடையனவாகும். யாங்ஙனம் பெரிய கடார அமுதமும் ஒரு துளி மோரால் திரிந்துவிடுகிறதோ, அங்ஙனமே உயர் பக்தியும் சிறு பயனைக் கருதுவதால் தூய்மை அற்றுவிடுகிறது. மேற்கூறிய யாவற்றிலும், இதுவே உயர்ந்த சால்பெனக் கொள்க! ஏன்? இச்சால்பு ஆன்மாவைப்பற்றியதாய், பிறந்ததன் பயனை அளிக்கக் கூடியதாய் உள்ளதன்ருே!

இத்தொகுதியினரைச் சார்ந்த நம் ஆண்டாளின் திருவாக்குகளை நோக்குக :

“ **தூயோமாய் வந்துநாம் தூமலர்தூவித்தொழுது** ”

—திருப். 5

மற்ற ஆழ்வார்களும், இத்துணைத் தூய தொண்டைப் புரிந்தவரே. ஆயினும், நம் ஆண்டாள் அதற்கு மேலும் உயர் நிலையில் நிற்கிருர்: திருமாலிருஞ்சோலை நம்பிக்கு அக்கார அடிசிலையும், வெண்ணெயையும் நூறு தடாக்களில் நிறைத்து வைக்கிருர்; இவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு அழகரை இறைஞ்சுகிருர். இக் கைங்கரியத்தோடு நிற்க மனமற்ற நம் அன்னையார். “இவற்றை அமுது செய்து அடியாள் இருதயத்தில் வந்து தங்கின் இன்னும் நூருயிரத் தடாக்கள் வெண்ணெயும், அக்கார அடிசிலும் தருவேன். அதனுடன் நின்றுவிடுவேனே? இல்லை இல்லை. ஆழ்வாரைப் போன்று உமக்கு என்றும் எல்லா விதக் கைங்கரியங்களையும் புரிவேன்,” எனப் பகர்கிருர்.

"இன்றுவந் தித்தனையும் அமுதுசெய்திடப் பெறில்நான்
ஒன்று நூறாயிரமாகக் கொடுத்துப் பின்னுமாளும் செய்வன்
தென்றல் மணங்கமழும் திருமாலிருஞ் சோலைதன்னுள்
நின்றபிரான் அடியேன் மனத்தேவந்து நேர்படிலே"
—நா. தி. 9-7

ஈதன்றோ உயரிய கைங்கரியமென்பது? கரும்பு தின்னக் கூலி கொடுப்பாரைப் போன்று தாம் அன்புடன் ஈந்த இனிய பண்டங்களை ஏற்றுக்கொள்ளுதற்கு மன்றோ தொண்டு செய்ய மனங்கொள்ளுகிறார்? வைஷ்ணவ உயிர் நிலையாகிய கைங்கரியத்திற்கும், இன்னொரு கைங்கரியம் புரியும் இஃது எத்தொகுதியைச் சார்ந்தது? எவ்வாழ்வார் இத்தகைய கைங்கரியத்தில் நுழைந்தார்? இங்ஙனம் வைஷ்ணவ இரத்தினமாகிய கைங்கரியச் செல்வத்தைப் பூண்டொழுகிய இவர் சான்றாண்மையை என்னென்றியம்புவது! இவர் சால்பன்றோ சீரிய சால்பு!

## 9. சீர்திருத்தம்

### குலத்தை நோக்காத உயர் குணம்:

ஒரு தேசத்தில், ஒரு நாட்டில், ஓர் ஊரில், குறைபாடுகள், குழப்பங்கள் தோன்றுங்கால், ஆங்காங்கே சில பெரியார் தோன்றிப் பல நலன்களை விளைவித்தல் இயல்பு. இயற்கையே இதற்கு வழி கோலுகிறது. இயற்கையைத் தடுக்க யாரால் இயலும்! சில போது இறைவனும் இக்கோட்பாட்டை மேற்கொண்டு உடல் தாங்கி உலகில் இறங்குகிறான். இறையின் அருளைப் பெற்ற சீரிய ஆன்மாக்களும் உலகிற்கு வருகின்றன; அவைகள் உலகை ஒழுங்குமுறையில் நிறுத்துகின்றன; அவ்வொழுங்கு சான்றோரால் போற்றத்தக்கது; அழி

வற்றது ; உண்மை வாய்ந்தது ; உயர்வுற்றது ; யாவர் மனத்தையும் திருத்தக்கூடியது ; சீர்மை வாய்ந்தது. இதுவே ' **சீர்திருத்தம்** ' என வழங்கப்படுகிறது. இச்சீர் திருத்தக்காரருள் நம் **கோதையா**ரும் ஒருவர்.

நம் தமிழ் நாட்டில் தலை சுழன்றுடுவது எது ? ஒற்றுமையை ஒழிப்பது எது ? பல பிரிவுகளையும் உண்டாக்குவது எது ? பிணக்குகளுக்குத் தாய்மை வகிப்பது எது ? ஜாதி வேற்றுமையே அன்றே ? இதை மறுப்பவர் யார் ? மக்கள் கூட்டுறவைக் கெடுப்பதற்கு இஃதொரு நச்சுப்பூண்டு. இந்நச்சுப்பூண்டை நம் தெய்வப் பாவையார் எங்ஙனம் களைந்தெறிந்தார் என்பதை நோக்குவோம் :

நம் திருப்பாவைச் செல்வியார் அந்தண குலத்தில் தோன்றினர் ; அந்தணருக்குத் தலைமை பெற்ற பெரியாழ்வாரிடம் வளர்ந்தார் ; வேதியர் குழுவிற் பயின்று வந்தார். இம்முறையில் வேறு குலத்தார் கலப்பு இவருக்கு ஏற்படுதற்கு வழி ஏது ? ஆயினும், நம் கோதையார் பரந்த உள்ளம் எங்ஙனம் நடைபெறுகிறது ? என்ன இயற்றுகிறது எனக் காணல் வேண்டும்.

அன்னையார், குலத்திலும் ஞானத்திலும் குறைந்த ஒரு குழுவினரிடம் செல்லுகிறர் ; அவர்களோடு கூடிக் குலாவுகிறர். இவர் அம்மட்டோடு நிற்கின்றனரா ? இல்லை இல்லை. அவர்களைப் போன்ற உடை, அவர்களைப் போன்ற நடை, அவர்களை ஒத்த பேச்சு, அவர்களனைய செயல் இவற்றுள் இவர் அவர்களாகவே ஆய்விடுகிறர் ; அவர்கள் வேறு, இவர் வேறு எனப்பிரித்தற்கியலா நிலையில் நிற்கிறர். இக்குழு எது ? இடம் வலம் அறியாத இடையர் குழு; அதிலும், மங்கையர் கூட்டம்.

அவர்கள் ஒவ்வொருவரையும் தாமே சென்று துயி லெழுப்புகிறார். இவர் வாய் மங்கையர் சீர்மைகளை,

"நாயகப் பெண்பிள்ளாய் !"

"கோது குலமுடைய பாவாய்!"

"நற்செல்வன் தங்காய் !"

எனப் பகருகின்றது. இன்னும், "நோன்பின் பலம் கைபுகுந்து, சுகத்தை இடைவிடாமல் துய்த்துக்கொண் டிருப்பவளே! எங்களுக்குத் தலைமையானவளே !" என் னும் பொருள்பட "நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம் மனாய் !" என அவர்களை உன்னத நிலையில் ஏற்றுகிறார். இவர் செய்யப்புகுந்ததோ, உயரிய செயல்; இறையருளை அடையக்கருதி இயற்றும் நோன்பு. இத்தூய செயலிற் கன்றோ, இடைக்குல மங்கையரைத் தம்முடன் சேர்த் துக்கொள்ளுகிறார் ! அவ்வனிதையரைத் தம்மோடு ஒப்பவும் இவர் நினைத்திலர். தம்மினும் அம்மங்கையர் உயர்ந்தவர் என்பதே இவர் எண்ணம். இன்றேல், இவர் சென்று அவர்களை எழுப்புவாரோ? அத்தாழ் குலத்தவர் கூட்டுறவினால் இவர் தொடங்கிய நோன் பிற்கு ஏதேனும் குறையேற்பட்டதோ? அது கைங் கரியச் செல்வத்தைப் பெற்றன்றோ நன்கு முடிவுற்றது ! இவர் நோக்கியது அவர்தம் குலத்தையா, அன்றிக் குடி யையா? இவர் பார்வைக்கு இலக்காகியது அவர்கள் பக்தியன்றோ! அம்மங்கையரின் பயன் கருதாத தொண் டன்றோ இவர் மனத்தைக் கவர்ந்தது ! மற்றவர் நெஞ் சம் இதற்கு உடன்படுமோ? என்ன விரிந்த எண்ணம்! என்ன தூய நினைவு ! பக்தி ஒன்றையே நோக்கும் பண் பென்னே ! இஃதன்றோ உயரிய சீர்திருத்தம் ? ஏன் நம் தமிழ் நாடு, இத்தகைய பெருமிதத்தை மறந்து வரவரக் குலக்கட்டில் குறுகிச் சென்றதோ, அறியோம் !

## நோன்பு:

ஒரு தெய்வத்தின் அருள் பெறுதற்பொருட்டு மேற்கொள்ளும் செயல் '**நோன்பு**' எனக் கூறப்படும். நோன்பு இழைக்கப் புகுவோருக்கு ஒற்றுமை இன்றி யமையாதது. அன்றியும், அவர்களுக்குப் பொறுமை, அறிவுடைமை, சினங்கொள்ளாமை, கோட்பாடுகளி லிருந்து தவறாமை, அற்ப இன்பத்தை நாடாமை, மனந் தளராமை முதலியன வேண்டற்பாலனவாகும். இன் றேல், எடுத்த காரியம் முடிவுறாமையே அன்றிப் பழியும் பாவமும் வந்து சேரும்.

'நோன்பு' என்னுஞ் சொல்லிற்குச் சிலர் 'விரதம், பண்டிகை' எனப் பொருள் கூறுகிற்பர். ஆனால், விரதத் திற்கும் பண்டிகைக்கும் பெரிதும் வேறுபாடு உண்டு. இக்காலத்தவருள் சிலர் இவ்வேறுபாட்டை அறிந்தி லர். 'பண்டிகை' என்பதைக் 'கொண்டாட்டம்' என வும், 'விரதம்' என்பதை 'நோன்பு' எனவும் கொள்ள லாம். நம்மனோர், பண்டிகை நாட்களைப் போன்றே நோன்பு நாட்களிலும், பல சிற்றுண்டிகளையும் பலகாய் கறிகளோடுங் கூடிய சோற்றையும் உண்டு வயிற்றை நிரப்புகின்றனர். ஒழிந்த நேரத்தில் வம்பளத்தலும் வேறு. இந்நிலையில், இவர்கள் இரண்டிற்குமுள்ள வேறுபாட்டை உணர்தல் யாங்ஙனம்? அவ்வையார் 'நோன்பெனப்படுவது கொன்று தின்னாமை,' எனக் கூறிப் போந்ததை நோக்குக! உலக வாழ்க்கையில் உழன்று திரிவோர், விரத நாட்களிலேனும் வரன்முறை யற்றுப் பலவற்றையும் கொன்று தின்னுதலை ஒழித்தல் வேண்டும் என்பதே இச்சொற்றொடரின் பொருளா கும். சீர்திருத்தக்காரராகிய திருப்பாவைச் செல்வியார்

இந்நிலையோடு நின்றாரில்லை. இன்னும் இவர் உள்ளம் உயரச் செல்கிறது. இவர் நோன்பின் நுட்பத்தை உணர்கிறார். அதற்கு ஒரு சீர்திருத்தம் வேண்டற்பாலதென்பது இவர் கருத்து.

**" வையத்து வாழ்வீர்காள்! நாமும்நம் பாவைக்குச்**
**செய்யும் கிரிசைகள் கேளீரோ! பாற்கடலுள்**
**பையத் துயின்ற பரமன் அடிபாடி**
**நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி**
**மையிட் டெழுதோம் மலரிட்டு நாம்முடியோம்**
**செய்யா தனசெய்யோம் தீக்குறளை சென்றோதோம்**
**ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி**
**உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்!"**

திருப்பாவை, 2

நோன்பை மேற்கொள்ளுவோர் இறைவனுக்கு இன்பமூட்டுவனவற்றையே இயற்றுதல் வேண்டும். தமக்கு இன்பமளிக்கும் பால், நெய் முதலிய சுவைப் பொருள்களை உண்ணுதல், மையினாலும் மலரினாலும் தம்மை அலங்கரித்துக்கொள்ளுதல், கோளுரைத்தல் முதலியவற்றுள் நுழைதல் கூடாது. விடியற்காலையில் துயிலுணர்ந்து எம்பெருமான் திருநாமங்களை நாவார வாழ்த்துதல், பெரியோருக்கும் ஏழைகளுக்கும் தம்மாலியன்றதை ஈதல் முதலியவற்றை மேற்கொள்ளல் வேண்டும் என்பவற்றைத் தம் பாசுரத்தில் நன்கு தெரிவிக்கிறார். மக்கள் தூய்மை அடைதற்கு இஃதொரு சீரிய சீர்திருத்தமெனக் கொள்க.

## அன்பு மணம் :

ஒரு பொருளினிடம் ஏற்படும் ஊன்றிய அன்பு, காதலாக மாறுகிறது. இக்காதலின் இயல்பு, **'காதல், அக அமைப்பு'** என்னும் தலைப்புகளில் சிறிது விளக்கப்

பட்டுள்ளது. ‘காதல் மணம்’ என்பது தெய்வத்தன்மை வாய்ந்தது. இம்மணத்தில் நுழைவோருக்கு உறுதியான உள்ளமும், விடா நட்பும் வேண்டற்பாலன. கல்வி, அறிவு, பண்பு, வயது முதலியவற்றில் இருவருக்கும் ஒத்தநிலை இன்றியமையாதது. கண்ட போது நட்புக்கொண்டு கருதிய போது விடுதல் காதல் ஆகாது. அது மிருகக் காமத்திற்கு ஒப்பாகும். அதைக் காதல் மணம் என யாங்ஙனம் வழங்குவது ?

இக்காதல் மணம் ஒருவரை விட்டு ஒருவர் பிரிய இடந்தருமோ ? பிரியினும், உயிர் வாழச்செய்யுமோ ? வாழினும், உயர்வு உண்டாகுமோ ? இறையருளால் உடலும் உயிரும் சேர்ந்திருத்தல் போன்றன்றோ, காதலால் ஒரு தலைவியும் தலைவனும் பிணிப்புற்றிருக்கின்றனர் !

“ உடம்பொ டுயிரிடை யென்னமற் றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு.”

எனத் தெய்வப்புலவர் கூறுவதைக் காண்க. இப்பிணிப்பை அகற்ற எச்செயலால் இயலும் ! இஃது அழகு, செல்வம், குலம், கோத்திரம், நிலை இவற்றைக் கருதுமோ ? இதனிடம் ஆராய்வு ஏது ? ஒருவரை ஒருவர் காண நேர்ந்ததும், இருவர் கண்களும் உள்ளமும் ஒன்றோடு ஒன்று கலந்து உறவாடுகின்றன. இதில் ஒரு வித உயிர்க் கலப்பு ஏற்படுகிறது. இக்கலப்பின் வழியாக உண்டாவதே உண்மைக் காதலாகும். இக்கூட்டுறவை யாரால் பிரிக்க முடியும்? யாரால் தடுக்க முடியும்? ஒருவர் பிரிப்பது உடலையன்றோ ? உயிரைப்பிரித்து வைத்தல் எவருக்கேனும் கூடுமோ ? ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிந்திருப்பினும், அவர்தம் காதற்புணர்ச்சிக்குப் பிரிவு ஏது? இஃது அவர்கள் முயற்சியினாலோ, அன்

றிப் பிறர் ஆராய்ச்சியினாலோ ஏற்பட்டதன்றே! தெய்வ அருளால் நிகழ்ந்த செயலன்றோ இது? இதன் சிறப்பு எவரால் அளந்து கூற இயலும்! இதுவே நம் தமிழ் நாட்டின் மணத்தின் இயல்பு.

தற்போது இத்தகைய காதல் உதித்தற்குத் தக்க கல்வி ஏது? அறிவு ஏது? அதற்கேற்ற பண்பு வாய்ந்த மக்கள்தாம் எங்கே? ஆயினும், தற்போது ஒரு பெண் மகளும், ஓர் ஆண்மகனும் தம்மிற் சம்மதித்து, வேறொருவர் கருத்தையும் நோக்காது செய்துகொள்ளும் மணம் காதல் மணம் என்னும் ஒரு பெயரைப் பெற்றுள்ளது. இதைக் 'காதல் மணத்தின் போலி' எனத்தான் கொள்ளல் வேண்டும். ஏன்? மணமுடிந்த பின்னாட்களில் எத்தனை குறைபாடுகள்! எத்தனை முறை பிரிவுகள்! மனவேறுபாடு எவ்வளவு! இங்ஙனமாயின், இஃதெங்ஙனம் உண்மைக் காதல்மணமாகும்? இவ்வுண்மை அறியாத உலகம், இதையே உண்மைக் காதல் மணம் என உறுதிப்படுத்துகிறது; பிணபு பிளவுகளைக்கண்டு இகழ்கிறது; பெரியோர் கூட்டுறவின்றிச் செய்யும் காதல் மணத்தின் கதி இதுவே எனத் தீர்மானிக்கிறது; அக்காதலர்கள், தம் குலத்திலும், சான்றோர் கூட்டத்திலும் சேர்தல் கூடாது என்னும் கட்டுப்பாட்டை உண்டாக்குகிறது. அந்தோ! காதலின் கன்மம் என்னே! பிற நாட்டின் கூட்டுறவன்றோ நம்மை இத்தகைய போலியில் நுழையச் செய்கிறது! இகழ்ச்சியையும், நகைப்பையும் பெறச் செய்கிறது! இப்போலிப் பேய் என்று நம் நாட்டை விட்டு ஒழியுமோ! எப்போது காதல் மணத்திற்குக் கண்ணியம் ஏறபடுமோ! அன்றன்றோ உலகம் நன்முறையில் உருப்படுவது! தேவருலகம் எனத் துலங்குவது! இல்லறம் நல்லறமாவது!

நன்மக்கள் தோன்றுவது ! அம்மக்கள், வன்மையும், வீரமும், அறிவும் பெற்று விளங்குவது ! பழைய தமிழ் நாட்டுக் காதல் மணம விரைவில் இடம் பெறுவதாக !

உண்மைக் காதல் மணத்தில் ஊன்றி நின்ற சீர் திருத்தக்காரராகிய நம் கோதையார், தெய்வக் காதல் எத்துணைச் சிறப்புடைத்து என்பதை விளக்கிக் காட்டுகிறார்; முதலில் தம் காதலன் இன்னான் எனத் தேர்ந் தெடுத்துக்கொண்டார்; தம் கருத்தினால் தேர்ந்தெடுத் தவனை அல்லாது வேறொருவரையும் கண்ணால் காண வும் விரும்பிற்றிலர். ஆயினும், அவனை அடையும்போ தடையலாம் என ஆறி இருந்தனரோ? அங்ஙனமா யின், அஃது எங்ஙனம் உண்மைக் காதலாகும்? தலை வனை அடைய எத்தனை முயற்சிகள் ! எத்தனை பேரை இறைஞ்சுதல்! எத்தனை வழிகளைத்தேடுதல்! எங்கெங்கு அக்காதலனைக் கண்டு கண்டு களித்தல்! அவன் விரும் பிய பொருள்களுள் ஒன்றையேனும் தாம் பெறக்கொள் ளும் ஆர்வம் என்னே ! அக்காதலனோடு கலந்து இன்பந் துய்க்கு மட்டும் இவர் நின்றனரா? இருந்தனரா? உடல் பேணினரா ! உணவேது? உறக்கமேது ! மகிழ் வேது !

உண்மையை நோக்கின் இவருக்கு இத்துணை ஆற் றாமை எற்றுக்கு ! இவரோ, தெய்வப்பாவை. இவர் காதலுக்குப் பாத்திரமானவனோ, எல்லாம் வல்ல இறை வன். இவரின்றி அவனில்லை; அவனின்றி இவரில்லை. இவர்கள் சேர்க்கை என்றும் நித்தியமாக உள்ளது. இவ் விருவரும் ஒருவரை விட்டு ஒருவர் பிரியின், உலகமே இல்லை. இவர்கள் எங்கிருப்பினும் இவர்கள் கூட்டுற விற்கு ஊறேது? ஆகவே, நம் காதற்கொழுந்திற்கு, இத் தகைய ஆற்றாமைக்கு இடமேயில்லை. ஆதலின், இவர்

இவ்வாற்றுமையைத் தம்பொருட்டுக் கொண்டார் என இயம்புதல் எட்டுணையும் பொருந்தாது. உலகம் திருந்து தற்பொருட்டு இவர் மேற்கொண்ட பலவற்றுள் இக் காதல் போக்கும் ஒன்று. இது சீர்திருத்தங்களுள் தலை சிறந்ததாகும். இச்சீர்திருத்தத்தின் உண்மை உணர்ந்து உலகம் உய்வதாக!

## இறை வழிபாடு :

மக்கள் வாழ்க்கை பண்புறுதற்கு இறை வழிபாடு இன்றியமையாதது. வழிபாடு அற்ற வாழ்க்கை வள முறுதல் இல்லை. இதுவே நீதியை ஊட்டுவது; நன் னெறியைக் காட்டுவது; மனத்தை மாண்புறச் செய்வது; உலகத் துன்பங்களை ஒழிப்பது; நிலையான இன்பத்தை அளிப்பது. மாக்களிலிருந்து மக்களைப் பிரித்துக் காட்டுவதும் இதுவே. இத்தகைய வழிபாட்டிற்கு அடிப் படை மனமே ஆகும். 'மனம் என்பது எது? அஃது எத்தன்மையது?' என்னும் ஆராய்ச்சியில் நுழையின, விரிந்து செல்லும். அதற்கு இஃது இடமுமன்று. ஆத லின், சுருக்க வழியிற்செல்வோம்: மனத்திற்கு இடம் எது? சிலர் 'மூளை' என்பர்; சிலர் 'நெஞ்சத் தாமரை' என்பர். உடலில் செல்லும் நரம்புகளால் மூளைக்கும் மனத்திற்கும் தொடர்புள்ளது. இதை, மூளையில் தாக்குண்டோர், மனந்தடுமாறிப் பிதற்றுவதி லிருந்து நன்கு உணரலாம். நம் உடல் பருப்பொருள். இப்பருப்பொருளை நடத்துதற்கு ஒரு நுண்பொருள் வேண்டும். ஐம்பொறிகளோடுங் கூடிய நம் உடலை நடத்துவது நம் மனமன்றோ? மனம் முதலில் ஒன்றை நினையாவிடில், கால், கை முதலிய அவயவங்களும், பொறி புலன்களும் ஒரு காரியத்தையேனும் இயற்றும்

வன்மை பெறுமோ? ஆகவே, இப்பருப்பொருள்களைத் தூண்டிவிடும் மனம் நுண்பொருளெனக் கொள்க.

இம்மனம் ஒன்றே ஆயினும், இதன் செயல்களை நோக்கி இதை இரு பிரிவாகப் பிரிக்கலாம்: ஒன்று புற மனம்,மற்றொன்று உள்மனம். முன்னது பொறிகளுடன் கலந்து புறத்திற் படிந்து படிந்து தொழில் புரியும் புலன்களால் கட்டுப்பட்டது; எல்லைக்குட்பட்டது; வெளிக் காட்சி, வெளிப்பொருள்களிலேயே பதிந்து கிடப்பது. இப்போக்குகளைக் குறைக்கக் குறைக்கப் புறமனம் குவிகிறது. இப்புறமனம் குவியக்குவிய, அகமனம் அலர்கிறது; அஃது ஆட்சி பெறுகிறது. அவ்வாட்சியில் காணுதன இல்லை; அறியாதன இல்லை. நுண்பொருளும் தெள்ளிதின் விளங்கும். அவ்வகமனம் அலரப் பெற்றோர், தெய்வ அருளில் நிலைத்திருப்பர்; என்றும் இன்பந் துய்ப்பர்; வேண்டிய வேண்டியாங்கு எய்துவர்; செயற்கரிய செய்வர். அவர்களால் ஆகாதது ஒன்றுமிராது. உலகத்தையே கட்டியாளுவர் எனினும் பொருந்தும். நம் தேவியாரும் அகமனம் அலரப் பெற்றவரைச் சார்ந்தவரே ஆவர்.

இனி, அன்னையார் சீர்திருத்தங்களுள் ஒன்றாகிய இறை வழிபாட்டை நோக்குவோம்: முன்னர்க் கூறியவாறு மனம் மிக்க நுண்பொருளே ஆயினும், இதற்கு உருவுண்டு. யாங்ஙனம்? உருவமில்லாத ஒன்றிற்கு ஒரு பெயர் வாய்த்தல் இல்லை. பெயர்பெற்ற யாவும் உருவமுடையனவே. நுண்ணிய உருவம் அமைந்த இவ்வுள்ளத்தால் வழிபடும் இறைக்கு, உருவம் உண்டு என்பர் சிலர். அஃது 'அருவம்' என்பர் சிலர். எல்லாவற்றையும் கடந்து இன்னதன்மையன் என வரையுறுக்க இயலாத இறைவன் எல்லாப் பொருள்களிலும் கலந்தும் நிற்

கிறான்; அவற்றைத் தானே இருந்தும் நடத்துகிறான். இன்றேல், பொருள்களுக்கு இயக்கம் ஏது? யாவற்றி லும் உயிர்க்குயிராய்த் திகழும் இறைவனுக்கும் நுண் ணிய உருவம் உண்டு என்பது அறிஞர் கருத்து. நுட்பம் நோக்கி 'உருவம் இல்லை' என்பாரும் உண்டு. இம்முறை யில் உருவம் வாய்ந்த மனம் உருவமற்றதை யாங்ஙனம் பற்றும்? ஆனால், எங்ஙனம் அனலைத் தனித்துக் காண இயலாதோ, அங்ஙனமே இறைவன் உருவத்தையும் தனித்துக் காண நம்பொறி புலன்களுக்கு இயலாது. ஆத லின், அவன் இயற்கையைத் தனக்கு உடலெனக்கொண்டு ஒளிருகிறான். இயற்கையில் இறையைக்கண்டு வழிபாடி யற்றல் ஒரு சிறந்த சீர்திருத்தமாகும். இச்சீர்திருத்தத்தை நம் கோதையார் நமக்கு எங்ஙனம் அலசி அலசிக் காட்டு கிறார்! மனம் வாக்குகளைக் கடந்து நிற்கும் கடவுளை இயற்கைப்பொருள்களாகிறபளிங்கைக் கொண்டுகாணு மாறு நம்மை ஏவுகிறார். இஃது என்ன எளிமை! என்ன எளிமை! இவ்வெளிமையைப் பின்பற்ற யாவருக்கும் இயலுமோ? இதற்குப் புறமனம் போதியதோ? நாம் புறமனச் சூழலிலிருந்து உள் நுழைய இவர் செய்யும் சூழ்ச்சிஎன்னே! இவர் நம்மை உள் மனத்திற்கு ஈர்த்துச் செல்லும் பக்குவம் என்னே! யாவரையும் உள் மனத் திற்குச் செல்லத் தூண்டும் தூண்டலன்றே இது! இவர் இதைக்சொல்லாமற் சொல்லும் சூக்குமமென்னே! இங்கிலை இவர் அனுபவத்தில் கண்டதன்றோ? சாஸ் திரங்களைக்காட்டிலும் அனுபவமன்றோ சிறந்தது? இயற்கையில் இறையைக் கண்டு இன்புற்ற மாண் புடையார் இன்னும் எங்குச் செல்கிறார்? யாவற்றிலும் பரந்து சென்ற இவர் இறை ஞானம், எதில் சென்று அமைகிறது? ஞானிகளால் உருவகப்படுத்தப்பட்ட

அர்ச்சாவதாரத்தினிடமே ஆகும். அவ்வுருவம் கேவலம் விக்கிரகம் என்பதா இவர் நினைவு? இல்லை இல்லை. அணுவில் அணுவாகவும், மலையில் மலையாகவும் நிற்கும் கடவுள், மற்ற இடங்களைக்காட்டிலும், அர்ச்சையில் பெரிதும் விளக்கமுற்று நிற்கிறான் என்பதே நம் செல்வியார் எண்ணம். இறைவன் தன் குணங்கள் யாவும் நிறைவு பெற நிற்கும் இடம் அர்ச்சையே என்பது வைணவ சித்தாந்தம். இதைப் பல சமயங்களும் ஒப்புக்கொள்ளுகின்றன. இதை உண்மைப்படுத்தப் பல சான்றுகள் உண்டு. அவை ஈண்டு வேண்டற்பாலன அல்ல. இறுதியாகத் திருப்பாவைச் செல்வியார், இரண்டறக் கலந்து நின்ற இடம் திருவரங்கன் திருமேனியே அன்றோ? ஆகவே, நுண்ணிய உருவம் பெற்ற மனம் உய்தற்கு உருவம் வாய்ந்த இறையின் வழிபாடே இன்றியமையாததென்றும், இவ்விறையை இயற்கையில் வழிபடுதல் பொது நிலை என்றும், அர்ச்சையில் தொழுதலே சிறப்பு நிலை என்றும் நமக்குச் செம்மைப்படுத்திக் காட்டிய இவர் சீர்திருத்தத்தின் செப்பமென்னே! இதுவே சீர்திருத்தத்திற்கு உயிர் நிலையாகும். இச்சீர் திருத்தம் வாழ்வதாக!

ஆகவே, குலத்தைத்தள்ளி ஞானத்தையே கொள்ளுதல், உயிரை உரமுறச் செய்ய இயற்றும் நோன்பில் களையறுத்தல், காதல் மணத்திற்குக் கால்கோள் செய்தல், இறைவனை இயற்கை அர்ச்சைகளின் வாயிலாக வழிபட்டுப் பிறப்பின் பயனை எய்துதல் ஆகிய இவற்றுள் தோய்ந்த சீர்திருத்தத்தைத் தெளித்துத் தெளித்துக் காட்டுகிறார். அருள் நிறைந்த நம் அன்னையார் காட்டிய வழிபற்றி உலகம் செல்வதாக!

## 10. கனவு

மக்கட்குப் பகற்பொழுதில் உயிரும் உடலும் உழன்று தொழில் புரியும் நிலை ஒன்று; துயிற்காலத்தில், பொறி புலன்களின் செயலோய்ந்து, மனோதத்துவம் மட்டும் நடையாடும் பாதித் துயிலும், பாதி விழிப்புமாய் இருக்கும் நிலை ஒன்று. மனமும் அடங்கித் தன்னைத்தான் அறியாமல் தூங்கும் நிலை ஒன்று. ஆக, நம் ஒவ்வொரு நாள் வாழ்க்கையும் முத்திறப்பட்டிருக்கும். இவற்றுள் இடை நிலையிலேதான் கனவுகள் தோன்றுகின்றன. இக்கனவைக் குறித்துப் பலருக்கும் பலவித அபிப்பிராயங்கள் உண்டு. இந்தக் காலத்தில் இந்தக் கனவைக் காணின் இந்தப் பலனுண்டாகும் என்பதை விளக்கமாகத் தெரிவிக்கும் கனவு நூல் ஒன்றும் தமிழில் உள்ளது. அவற்றை விரித்தல் ஈங்கு வேண்டற்பாலதன்று. நனவு உலகைப் போன்றே, கனவு உலகிலும் அவரவர்கள் புண்ணிய பாவத்திற்கேற்ப நற்கனவும், தீக்கனவும் தோன்றுகின்றன என்பது பாஷ்யகாரர் கருத்து. இதனால், பொதுவாக நல்லெண்ணமுடையார் நற்கனவையும், தீய எண்ணமுடையார் தீக்கனவையும் காணுதல் ஒருதலை என அறிந்தாம். இம்முறையில் பெரியாழ்வார், ஆண்டாள் அவதாரச் சிறப்பையும், பிற்காலப் போக்கையும் எம்பெருமானே தம் கனவில் வந்துரைக்க அறிகிறார். ஆனால், ஆண்டாளோ, என்றும் தம் உள்ளத்தில் உறையும் திருமால், மானிட உருவந்தாங்கித் தம்மை மணம் புரிவதாகக் கனவு கண்டு களிக்கிறார். இச் செய்தியை,

> "துஞ்சுங்கால் தோள்மேலராகி விழிக்குங்கால்
> நெஞ்சத்த ராவர் விரைந்து."

எனத் திருக்குறள் தெரிவிக்கிறது.

அக்கனவில் எத்தனை மங்கலப் பொருள்கள் - எத்தனை அலங்காரங்கள் - எத்தனை வாத்திய ஒலிகள் - எத்தனை தத்துவங்கள் தவழ்கின்றன ! தாம் மணக்க விரும்பும் எம்பெருமானின் குண நலங்களும், அறச்செயல்களும் அக்கனவில் அமையும் அழகு என்னே ! மனத்தின் உயர் கருத்துகளைக் காண அஃதோர் ஆடி என்னலாம். ஒவ்வொரு செயலும் ஒவ்வொரு கருத்தைப் பற்றியதே. மணம் என்பது வாழ்க்கையின் போக்கைத் தெளித்துக் காட்டும் ஒருசெயலன்றோ? அதன்உண்மைப் பொருளை உணராமையன்றோ, தற்காலம் கணவன் மனைவியரிடம் ஏற்படும் மன வேறுபாடுகள் யாவற்றிற்கும் காரணம்?

" பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீநான். "

—நா. தி. 6-1

" இந்திரன் உள்ளிட்ட தேவர் குழாம்எல்லாம்
வந்திருந் தென்னை மகட்பேசி மந்திரித்து
மந்திரக் கோடி யுடுத்தி மணமாலை
அந்தரி சூட்டக் கனாக்கண்டேன் தோழீநான். "

—நா. தி. 6-3

என்னும் பாசுரங்களை நோக்குக !

இங்கு இன்னுமொரு சிறப்பைக் காணுதல் வேண்டும். நம் அன்னையார் கனவில் கண்ட மணத்தின் தொடர்பு, இப்பிறவிக்கு மட்டும் துணை புரியும் எனக் கருதினார் இல்லை. இங்குக் கோதையார் தம் கனவு நிலையிலும், தம்மையும் தம்மை ஆட்கொள்ளும் எம்பெருமானையும் எம்முறையில் அறிந்துள்ளார் என்பது,

" இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்
நம்மை உடையவன் நாராய ணன்நம்பி
செம்மை உடைய திருக்கையால் தாள்பற்றி
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீநான். "

—நா. தி. 6-8

என்னும் பாசுரத்தால் நன்கு புலனாகின்றது.

## 11. அவதாரம்

"அவதாரம்' என்பதற்குக் 'கீழிறங்குதல்' என்பது பொருள். உயர்நிலையிலுள்ள ஒருவர், பிறர் நலன் நாடி உலகில் தோன்றுவதைத்தான் அவதாரம் எனக் கூறுகிறோம்; அருள் நிறைந்த மாந்தர் பலர், உலகில் தோன்றி உயிர்களை உயர்த்தியதைச் சரித்திர வாயிலாக அறிகிறோம். இத்தன்மையில், காக்கும் தொழிலமைந்த திருமால் பன்முறை உலகில் பிறந்தார். அப்பிறவிகளுள் சிறந்தன இராமனுகவும் கண்ணனுகவும் தோன்றிய இவ்விரு தோற்றங்களே. இவை இரண்டனுள்ளும் இறைமைக் குணங்கள் முற்றும் பெற்று விளங்கியது கண்ணனவதாரமே! அவன் யசோதையால் கட்டுப்படுகிறான்; பெண்கள் ஏவிய காரியங்களைச் செய்து செய்து உவக்கிறான்; தூது செல்கிறான்; தேரோட்டுகிறான்; என்ன எளிமை! என்ன எளிமை! அதே அவதாரத்தில் பூதகி ஊட்டிய நஞ்சை உண்டு உயிருடன் நிலவுகிறான்; ஒரு பெண்ணின் கூனை நிமிர்த்துகிறான்; மாண்ட மக்களை உயிர்ப்பிக்கிறான்; ததிபாண்டனது மட்பாத்திரத்திற்கு வீடு பேற்றை அளிக்கிறான். தெய்வத்தன்மையின் திறமென்னே! மற்றும் கஞ்சனைத் துவைக்கிறான்; பல அரக்கர்களையும் மாய்க்கிறான். இவன் வீரமும் வன்மையும் என்னே! மக்கள் ஞானச்செல்வத்தை அடைதற்பொருட்டுத் தத்துவங்களைப் போதிக்கிறான். இவன் அருள் என்னே! இத்துணைப் பெட்புகள் வாய்க்கப் பெற்ற இறைவன் அவதார மாண்பைப் பலர் அறிதல் இல்லை. அவர், 'மக்கள் போன்று பிறந்து இறக்கும் ஒருவனும் கடவுள் ஆவானே?' என இழித்துக் கூறுகின்றனர். இதற்குக் காரணம், பிறர் மதத்தை இழிவு படுத்த வேண்டும் என்னும் எண்ணமோ, அன்றி

ஆராய்ச்சிக் குறைவோ அறியோம்! கன்மத்தால் தோன்றிக் கன்மத்தில் கட்டுப்பட்டுழலும் மக்களுக்கும் இச்சையால் தோன்றி அருளுக்குக் கட்டுப்பட்டுச் செயலாற்றும் இறைக்கும் வேறுபாடு காணாதது என்ன பாவமோ! 'நம் கட்டை நீக்க அவன் கட்டுப்படுகிறான்; நம் பிறப்பை ஒழிக்க அவன் பிறக்கிறான்,' என்னும் உண்மையை அறிஞர் அறிவர். தன்னலத்திற்கெனக் குற்றமிழைத்தோன் சிறைசெல்லற்கும், பொதுநலத்திற்கென உழைப்போன் சிறை செல்லற்கும் வேறுபாடு இன்றோ? அவ்வேறுபாட்டைத்தான் இங்கும் நாம் கொள்ளல்வேண்டும். இறைவன் கீழிறங்கி உழைக்கும் உழைப்பிற்கு உலகம் என்ன கைம்மாறு புரியுமோ! திருமால் தோற்றத்தினால் உண்டான சீர்திருத்தங்கள் எத்தனை? நீதி முறைகள் எத்தனை? அருட்டிறங்கள் எத்தனை? இத்துணைச் சீர்மைகள் யாவும் வாய்ந்த கண்ணன் அவதாரத்தை அன்னையார் பெரிதும் போற்றினார். 'சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற' என்றும், 'கொல்லை அரக்கியை மூக்கரிந்திட்ட குமரன்' என்றும் இவர் ஓரோ இடத்தில் ஸ்ரீராமபிரானை நினைக்கினும், இவர் மனம் முற்றும், எளியார்க்கும் எளியனாய், ஆஸ்ரித பரதந்திரனாய் நின்ற கண்ணனிடமே சென்றது. இவர் நோன்பு நோற்றதும் கண்ணனை நோக்கியே! இவர் இயற்கையில் கண்டனவும், கண்ணபிரான் உடலழகும், உயிர்ச் சிறப்புமே! இவர் செல்ல நினைத்ததும் கண்ணபிரானிடமே! இவர் தேர்ந்தெடுத்த அவதாரத்தின் அருமை என்னே!

"குறும்பு செய்வானோர் மகனைப் பெற்ற
நந்தகோபாலன் கடைத்தலைக்கே
நள்ளிருட்கண் என்னை உய்த்திடுமின்"—நா. தி. 12-3

மற்றவற்றிற்கும் அகச்சான்றுகள் உள.

இவ்வவதாரத்தையே இவர் கருதியற்கும் காரணம் இல்லாமற் போகவில்லை. நம் கோதையார் எதன் பொருட்டு உலகில் தோன்றினர்? எதற்காகப் பன்னிரண்டு ஆழ்வார்களுள் ஒருவராய் அமைந்தார்? எதைக் கருதி அழியா நிதிகளாகிய இருநூல்களை இயற்றினர்? தாம் நலம் பெறுதற்பொருட்டா? புகழடைதலைக் கருதியா? இல்லை இல்லை. 'பெண் மகளிர் பெட்புறுதல் வேண்டும்! பெண் மகளிரை யாவரும் போற்றுதல் வேண்டும்! பெண் மகளிருக்கும் நுண்ணிய மதி, தூய ஞானம், பரந்த பக்தி உண்டு என்பதை உலகம் அறிதல் வேண்டும் எனக் கருதியே இவர் தோற்றம் நிகழ்ந்தது. பெண் மக்கள் நலத்திற்கெனவே தோன்றிய மாதர்க்கரசியாரின் விழைவு யாரிடம் செல்லும்! மங்கையரின் மாண்புணரும் பெருந்தகைமை உடையவரிடமே அன்றோ? அச்சீர்மை வாய்ந்தவன் கண்ணனே ஆவான். ஆண்டாள் கண்ணனையே காதலித்ததற்கு இதுவே முதற்காரணமாகும். இதற்குப் பல சான்றுகள் உண்டு. விரிக்கில் பெருகும்.

கண்ணனைத் துயிலெழுப்பச் செல்லுகின்றவர் யாருக்கு முதன்மை இடத்தைக் கொடுக்கிறார்? கண்ணனுக்கா? அவனுடன் உறங்கும் நப்பின்னைப்பிராட்டிக்கல்லவா? 'கந்தங்கமழும் குழலீ!' என அவள் உடலழகையும், 'மைத்தடங்கண்ணினாய்!' என அவள் அருளழகையும், 'நப்பின்னை நங்காய்! திருவே!' என அவள் ஆன்ம அழகையும் பன்னிப் பன்னி எழுப்பும் பண்பை நோக்குதல் வேண்டும். இது மட்டுமோ! கண்ணனிடம் தம்மைச் சேர்ப்பதற்கு அவளையே அல்லவா இறைஞ்சுகிறார்? இங்ஙனம் பெண்கள் பெருமையையே பெரிதும் பாராட்டும் நம் செல்வியார், பெண்

களையே தம் உயிர்நிலையாகக் கருதும் கண்ணனை யல்லாது வேறு யாரை விரும்புவார்? தம் காலத்திற்குப் பல்லாண்டுகளுக்கு முன்பே கண்ணன் தோன்றி மறைந்திருப்பினும், அவனிடம் இவருக்கு எத்துணை நம்பிக்கை! எத்துணை அன்பு! எத்துணை மதிப்பு! அவன் அவதாரத்தின் அருமை, பெட்பு, சீர்மை முதலிவற்றை நன்குணர்ந்தவரல்லரோ நம் அன்னையார்? அவதாரத்தின்போது ஏற்பட்ட உடல் நம்மை விட்டு மறையினும், அப்பெரும்பொருளின் ஆன்ம சக்தியும், தெய்வ அருளும் நம்மை விட்டகலுமோ? அவை என்றும் நம்மோடிருந்து துணை புரியுமல்லவா? இந்நுட்பத்தை அறிந்து கண்ணனைப் பற்றிய கோதையார் வாழ்வாராக! கண்ணன் யாவருக்கும் அருளீந்து காப்பானாக! உலகமும் அன்னையார் காட்டிய வழியையே பற்றி வாழ்வதாக!

## 12. அர்ச்சை

'ஆண்டாள்' என்னும் தலைப்பில் கூறியுள்ளபடி எம்பெருமானுக்குப் பரமபதம், பாற்கடல், அவதாரம், அந்தர்யாமித்துவம், அர்ச்சாவதாரம் என ஐந்து நிலைகள் உண்டு. இவற்றுள் முன் கூறிய அவதாரம் சிறந்ததேயாயினும், அஃது இறைவன் உலகில் தோன்றிய காலம் எதுவோ அக்காலத்தில், அத்தேயத்தில் உள்ளவர்க்கன்றி மற்றோருக்குப் பயன் அளித்தல் இல்லை. அர்ச்சாவதாரமோ, அற்றன்று. எக்காலத்தவர்க்கும், எத்தேயத்தவர்க்கும் காட்சி அளித்தல் மட்டுமே அன்றி, அவரவர் விரும்பிய நலனையும் ஈந்து நிற்கின்றது. 'மனம் வாக்குக் காயங்கட்கு எட்டாத பரம்பொருளுக்கு ஒருருவத்தையும், ஓரிடத்தையும் நிலைநாட்டி வழிபடுதல்

யாங்ஙனம் பொருந்தும்?' எனச்சிலர் ஐயுறலாம். சிலர் இங்ஙனம் வழிபடும் கொள்கையை மறுத்தும் நிற்கலாம். நம் மனமும், புலன்களும், செயல்களும் வரையறைக்குட் பட்டன. ஆதலின், அவற்றிற்கேற்ப எல்லாவற்றையும் கடந்து நிற்கும் கடவுளை வகுத்துக்கொண்டாலன்றி, நாம் அக்கடவுளிடம் அன்பு செலுத்தவோ, அவன் அருளைப் பெறவோ இயலாது. பரந்து செல்வதும், கட்டுக் கடங்காததும், காற்றினும் விரைந்து ஓடுவதுமான மனத்தை; ஓரிடத்தில் நிறுத்தித் தியானிக்க ஓர் உருவம் இன்றியமையாதது. உருவம் இன்றேல், மனம் ஒருப்படுதல் இல்லை. நாம் காணாத ஒன்றைத் தெரிந்துகொள்ளுதற்கு எதை நாடுகிறோம்? கண்ட ஒரு பொருளை அன்றோ? அன்றேல், விஷயத்தை எளிதில் விளக்கிக் கொள்ள இயலுமோ? அங்ஙனமே, காணாத கடவுளிடம் மனத்தைக் குவியச்செய்து, தியானத்தில் நுழைக்க உருவம் இன்றியமையாது வேண்டற்பாலதாகும். இதைத் தற்கால விஞ்ஞானிகளும் ஒப்புக்கொள்ளுகின்றார்கள். இவர்கள் பல ஆராய்ச்சிகளின்மேல் சிறிது காலத்திற்கு முன்புதான் மனத்தைக் கவர உருவம் வேண்டும் என்னும் தீர்மானத்திற்கு வந்தார்கள். ஆனால், நம் பண்டைக் காலத்தவரோ, பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்பே இம்முடிவைக் கொண்டுள்ளனர்.

மற்ற மதத்தினரைக்காட்டிலும் வைணவர்களுக்கு உருவத்தில் ஊற்றம் அதிகம். அர்ச்சையே பூரணமானதென்பதும், ஈஸ்வர குணங்கள் யாவற்றையும் பெற்றுள்ளதென்பதும், இதுவே பக்தியிலும் சிறந்த பிரபத்தியைச் சேதனன் செய்தற்குப் பொருத்தமான இடம் என்பதும், இதில் செய்யும் பிரபத்தியே தவறாமல் விரைவில் பயனளிக்கும் என்பதும் அவர்கள் உறுதி. இதற்கு,

“ நிகரில் அமரர் முனிக்கணங்கள்
விரும்பும் திருவேங் கடத்தானே!
புகலொன் றில்லா அடியேனுன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே.”
—திருவாய். 6-10.

“ வந்துன் திருவடி அடைந்தேன்
நைமிசா ரணியத்துள் எந்தாய்!”
—பெரிய. திரு. 6.

எனச்செப்பிய ஆழ்வார்களே தக்க சான்ருவார்கள். இவ்வுயர் கோட்பாட்டைப் **பிள்ளை லோகாச்சாரியர்** ஸ்ரீவசன பூஷணத்தில் நன்கு விளக்கியுள்ளார். உருவம் வாய்ந்த மனம் உருவத்தையே பற்றும் என்பதைக் குறித்து இந்நூலில் சில இடங்களில் செப்பியுள்ளேன். ஆங்குக் கண்டுகொள்க! விரிவஞ்சி இத்துடன் நிறுத்தப் பட்டது.

இக்கோட்பாட்டில் நம் கோதையாரின் குறிக்கோள் யாது எனக் காண்பாம் : இவர் நூற்றெட்டுத் திருப்பதிகளிலும் எழுந்தருளியிருக்கும் அர்ச்சாவதா ரங்களைக் காண விழைந்தனர் என்றும், அவருள் திரு வேங்கடம், திருமாலிருஞ்சோலை, திருவரங்கம் ஆகிய மூன்று இடங்களிலும் உள்ள பெருமான்களிடமே இவர் அதிக அன்பு காட்டினர் என்றும், இவருள்ளும் இவர் உயர்பக்தி திருவரங்கனையே பற்றிற்று என்றும் இவர் வரலாற்றில் தெரிவித்துள்ளேன். இங்கு நாம் நோக்க வேண்டுவது, “ நம் அன்னையார் அர்ச்சையை எவ்வாறு கண்டார்? கல், மண், உலோகங்களாகவா? வேறு விதமாகவா?” என்பதுதான். இவர் எண்ணம் என்ன? இவர் வேட்கை யாது? ‘எல்லாம் வல்லவனும், எங்கும் நிறைந்தவனும், அருளையே வடிவெனக்கொண்டவனும்,

சேதனன் உய்வையே உளத்திருத்தியவனுமான ஈஸ்வரனுக்குக் கைங்கரியம் (தொண்டு) புரிதல் வேண்டும்; அத்தொண்டு அவன் முகமலர்த்தி (மனமகிழ்ச்சி)க்கே காரணமாயிருத்தல் வேண்டும்; அதைக் கண்டு நாம் மகிழவேண்டும்; இதுவே நம் ஆன்மாவிற்கு உய்வு,' என்பதுதானே? இஃதோர் உயர் தத்துவமன்றோ? இதுதானே பிறந்ததன் பயன்? இதனினும் மேம்பட்டது வேறொன்று உளதோ? இந்தப் பேற்றை அடைதற்கு இவர் பற்றும் இடம் எது? பரமபதமா? பாற்கடலா? அந்தரியாமித்துவமா? இல்லை இல்லை.

இவர் அவதாரங்களில் இறங்கிய ஸ்ரீ ராமபிரான், வாமனன் முதலியோரைப் பொதுவாகவும், கண்ணனைச் சிறப்பாகவும் மனங்கொள்ளினும், இவர் அர்ச்சையில் செலுத்தும் அன்பு வேறுபட்டதாகும்.

இதை அறிய இவர் செயலில் நுழைந்து காணல் வேண்டும்: ஆயர் மகளிர் கண்ணனுக்கு வெண்ணெயை ஊட்டியது போன்று இவர் யாருக்கு வெண்ணெயை ஊட்டுகிறார்? யாருக்குத் தம் கைங்கரியத்தை ஏற்றுக் கொண்டதற்குக் கைக்கூலியாகப் பின்னும் பல தொண்டுகள் புரிய உறுதி செய்துகொள்கிறார்? படியாய்க்கிடந்து பவளவாய்காண விரும்பும் குலசேகரரைப் போன்று யாருடைய குணங்களைப் பாடி உயிரைப் பாதுகாத்துக்கொள்ளக் கருதுகிறார்? சடகோபரைப் போன்று, யாரைத் தாம் வதியும் அத்தெருவிலேனும் போகக் காண இயலுமோ எனப் பகருகிறார்? யார் தம் மெய்ப்பொருளும் கொண்டதாகச் செப்புகிறார்? யார் நீரின் ஆழத்தில் பாசி படர்ந்து கிடந்த தமக்கு உதவி புரிந்ததாக எண்ணுகிறார்? தாம் இழந்த வளைகளை யாரிடமிருந்து பெற விரும்புகிறார்? யாரிடம் சரண்

அடைகிறார் ? இவை யாவும் மேற்கூறிய மூன்றிடங்களிலும் எழுந்தருளியிருக்கும் அர்ச்சாவதாரப் பெருமாள்களிடமே அல்லவா ?

இங்ஙனம் அர்ச்சையிலேயே மனத்தைச் செலுத்தி அதனிடமே அளவில்லாப் பக்தியைக் கொண்ட இவர், இறுதியில் அவ்வர்ச்சையினிடமே தம் உடலையும் செலுத்திப் பெறுப்பேற்றைப் பெற்று இன்புறுகிறார் ; மற்ற நிலைகளைக்காட்டிலும் அர்ச்சாவதாரமே மேன்மை வாய்ந்தது என்பதற்கு மற்றப் பெரியவர்களைக்காட்டிலும் நம் கோதையாரே உச்சநிலையில் நின்று சான்று பகருகிறார். இவர், சில இடங்களில் எழுந்தருளியிருக்கும் அர்ச்சாவதாரங்களைப் பற்றிமட்டும் பேசியிருப்பினும், இத்தன்மை மற்ற எல்லா இடங்கட்கும் ஒக்கும். ஆகவே, வாத்ஸல்யம், ஸௌலப்யம், ஸௌசீல்யம், ஸ்வாமித்துவம்,சக்தி, ஞானம்ஆகிய எல்லாக் குணங்களையும் பெற்றுத் திகழும் அர்ச்சாவதாரம் வாழ்க! அவற்றினிடம் புரியும் கைங்கரியமே உயிர் உள்ளது, உத்தமமானது எனக்கருதித் தொண்டு பூண்டொழுகிய நம் கோதையார் என்றென்றும் வாழ்க !

## 13. அக அமைப்பு

ஒவ்வொரு பொருளிடத்தும் அகம், புறம் என்னும் இருபிரிவுகள் உண்டு. ஒருவருக்கும் புலனாகாதது அகம். யாவருக்கும் புலப்படுவது புறம். இன்ன தன்மை உடையதெனப் பிறருக்கு வெளிப்படையாக எடுத்தியம்புதற்கும், ஒருகால் அநுபவித்த தானே மற்றொரு கால் இஃது இந்நிலை வாய்ந்தது என உய்த்துணர்தற்கும் இயலாது அகத்திலே அடங்கிக் கிடப்பது ‘ அகம் ’ எனப்பட்டது. இப்பண்பு அன்பினிடமும்

உண்டு. 'குடத்துள் விளக்கும் தடற்றுள் வாளும் போன்று மறைந்து ஒளிர்வது' என அன்பின் இலக்கணத்தை அறிஞர் வரையறுத்தனர். ஒத்த வயதும், ஒத்த கல்வியும், ஒத்த அறிவும், ஒத்த பண்பும் அமைந்த தலைவர் தலைவியரிடம் ஏற்படும் அன்பைக் காதல் எனக் கூறுவர். யாவற்றிலும் ஒன்றுபட்ட இவ்விருவர் உள்ளத்தில் உதிக்கும் காதலே உண்மைக் காதல். இதற்கு என்றும் மறைவு இல்லை; அழிவு இல்லை. இதை வெள்ளம் வீழ்த்துமோ? தீ எரிக்குமோ? வாள் வெட்டுமோ? கொடியர் கொடு போவரோ? இல்லை இல்லை. இம்முறுகிய காதலின் இலக்கணம் இத்தன்மைத்தென்று ஒருவராலும் இயம்புந் தன்மை உடையதன்று; உயர்வுள்ளது; உத்தமமானது; உயிருள்ளது; இம்மை, மறுமை, இவ்வுலகம், வீட்டுலகம் எங்கும் தொடர்ந்து செல்லக் கூடியது; இறையன்பைப் பெறுதற்கு வழி காட்டுவது. ஆதலின், இதனினும் உயர்ந்தது வேறொன்றுமில்லை. உலகில் தோன்றிய ஒவ்வோர் ஆன்மாவும் இதைப் பெறவே அல்லும் பகலும் முயல்கிறது. நீதி நூல்கள், புராணங்கள், சமயநூல்கள் யாவும் இதைக் கற்பிக்க எழுந்தனவே! ஒவ்வோர் ஆன்மாவும் முயன்று முயன்று முடிவில் இதைப் பெற்றே தீரும் என்பது திண்ணம். இஃதே ஆன்மாவின் ஆனந்த நிலை; இஃதே இன்பநிலை. இந்நிலை எய்திய பின்பு துன்பம் ஏது? குறைவு ஏது? இதுவே பூரணநிலை எனப்படும். இத்துணைப் பெட்பு வாய்ந்த காதலுக்குத் தோற்றுமிடம் எது? இஃது எங்கிருந்து கிளைக்கிறது? பிறர் கண்ணினால் காணற்கு இயலாத அகத்தினிடமே ஆகும். இதனாலேயே இவ்வன்பொழுக்கம் **அகப்பொருள்** எனவும் **அகத்திணை** எனவும் பெயர் பெற்றது.

மற்ற இலக்கண இலக்கியங்கள் தவிர, இவ்வகப் பொருள் இலக்கண நிதி ஒன்று நம் தமிழ் மொழியை அலங்கரித்துள்ளது. இதைப் பெருநிதி எனக் கூறல் மிகையாகாது. மற்றெந்த மொழியிலும் இது குடியேறிற்றிலது. இச்சிறந்த துறையைப் பெற வேறு மொழிகள் தவமியற்றிலபோலும்! நம் பழந்தமிழர் வழக்க ஒழுக்கங்களின் பேழையைத் திறந்து காட்டுதற்கு இதுவே தக்க திறவுகோல். தமிழ் நாட்டின் சீர்மையையும், ஒழுக்க முறைகளையும், பாகுபாடுகளையும் தெள்ளிதின் உணர்த்தும் பெட்பு மனோதத்துவ நூலாகிய இதற்கே வாய்ந்துளது. ஒரு நாடு உயர்நிலை அடைவதற்கேற்ற சிறந்த வழிகளுள் ஒன்று மணம். இம்மணம் நேரிய முறையில் நடைபெறவில்லையேல், மணத்தினால் மணமக்கள் எப்பயனையும் எய்துதல் இயலாது. தெய்வம் பேணல், விருந்தாதரித்தல், நன் மக்கள் தோற்றம் முதலிய யாவும் மனமொத்த மணத்தினாலன்றே நிகழும்! இத்துறையில் நம் தமிழ் நாடு எத்துணை நாகரிகத்தைப் பெற்றிருந்தது என்பதை உள்ளங்கை நெல்லிக்கனியெனக் காட்டுவது இவ்வகப் பொருள் நூலேயாகும். இதற்கு இலக்கணம் வகுத்தோர்,

> **" அன்பின் ஐந்திணைக் களவெனப் படுவது**
> **அந்தணர் அருமறை மன்றல் எட்டனுள்**
> **கந்தருவ வழக்கம் என்மனார் புலவர்."**
>
> —இறையனாரகப்பொருள்

எனச் சாற்றினர். இதனால் அந்தணர் மணம் எண்வகையுள் இக்காதல் மணம் கந்தருவ மணத்தோடு ஒக்கும் என அறிந்தாம்.

கொடுப்பாரும், அடுப்பாரும் இன்றி ஒத்த குலமும் ஒத்த அறிவும் வாய்ந்த இருவர், அன்பினால் கட்டுப்பட்டுத் தம்முள் கலக்கின்றமையின் இக்காதல் மணம் கந்தருவ வழக்கத்தோடு ஒத்ததாயிற்று. இது தெய்வக் காதல். இத்தெய்வக் காதலுக்குப் புறக் கண்களின் கூட்டுறவு வேண்டுவதில்லை; அகக் கண்களின் கூட்டுறவே போதியது. ஏன்? இஃது உடலழகையோ அன்றி உடலமைப்பையோ பற்றி ஏற்படுவதன்றே? உயிர்ப் பண்பையும் உத்தமச் செயல்களையும் கொண்டு தோன்றுவதன்றோ? இக்காதல் உடையார் தாம் என்றும் அவள் என்றும் வேற்றுமை இலர்; தாமே அவள், அவளே தாம் எனத்திகழ்வர். ஒருவரை விட்டு ஒருவர் உடல் பிரிந்திருப்பினும், இவர் காதல் பிரிதல் இல்லை. இஃது உயிர்க்காதலன்றோ? உயிர் ஒன்றை விட்டு ஒன்று பிரிதல் உண்டோ? இவைகளின் கூட்டுறவு என்றும் நித்தியமாகும். உயிர்க்கிறுதி உண்டாயின் அன்றோ இக்காதலுக்கும் இறுதி ஏற்படும்? உயிர்க்கு இறுதி ஏது?

ஆதலினாற்றான் சிற்றின்பம் போன்று தோன்றும் இவ்வகப்பொருள் நம் தமிழ் நாட்டு மக்களுக்குப் பேரின்பமாகக் காணப்பட்டது. தமிழர் அணிந்தது பேரின்பப் பளிங்கு போலும்! ஜீவான்மாவைப் பரமான்மாவோடு சேர்த்து வைத்தற்குக் கைகண்டமருந்து ஈதன்றோ! இதைப்பற்றிய இலக்கணங்கள் எத்தனை! புறப்பொருளாலும், அகப்பொருளாலும் அளவிட இயலாத ஆன்ம பரமான்மாக்களை ஒன்றுபடப் பிணிக்கும் நெறியை வரையறுத்த நம் தமிழ் மொழியின் சீர்மை என்னே! இம்முறையைப் பின் பற்றிச் சென்று வெற்றி பெற்ற நம் பெரியோரின் மாண்பென்னே?

அவர்தம் மன இயலை யாரால் அளந்து கூற இயலும்! இதுவே தமிழ் நாட்டை அழகு செய்யும் அணிகளில் தலை சிறந்ததாகும். ஈங்கு மாணிக்கவாசகர், திருமங்கை ஆழ்வார், நம்மாழ்வார் முதலிய சான்றோரின் மனப் பான்மையை நினைவு கூர்க!

நம் ஆண்டாளும் இவ்வியல்பில் பண்பட்ட ஒருவரேயாவார். ஆயினும், இவர், முற்கூறிய பெரியோர்களுக்கு ஒப்பு எனக் கூறக் கற்றோர் மனம் இடந்தராது. இவர் யாவரிலும் சீரிய நிலையில் நிற்பவர். மற்றவர்களைப் போன்று, இவர் அகப்பொருள் இலக்கணத்திற்கு ஓர் இலக்கியம் என்னும் அளவோடு நின்றுவிடவில்லை. அவ்விலக்கியத்தில் ஆழ மூழ்கி அதன் தத்துவத்தைப் பளிங்கெனச் செயல் முறையிலும் காட்டியவர் நம் கோதையார் ஒருவரே. இதன் பயனை இவர் கனவில் பெற்றது மட்டுமே அன்றி, நனவிலும் பெற்றார். தெய்வத் தன்மை வாய்ந்த அகப்பொருட்சுவையில் பண்பட்ட இவர் உடல், பக்தி மயமாகவே மாறிப் பண்பட்டது போலும்! இன்றேல், இவரை உடலுடன் ஏற்றுக் கொள்ள எம்பெருமான் இசைவனோ?

ஒரு மகவின் பிணியகல எண்ணெயையும் பாலையும் ஒன்றுபடக் குழைத்து உண்பிக்கும் தாயைப் போன்று, நம் அறியாமை நீங்க நம் கோதையார் தமிழையும் அகப்பொருளையும் ஒன்றுபடக் கலந்து நமக்கு ஊட்டுகிறார். மக்கள் தூய்மையும், நேர்மையும், உயர்வும் அடைதற்கு இஃதொரு கருவியாகும்.

தலைவர் தலைவியாரைப் பிரிந்து செல்கிறார். இளவேனிற்பருவம் வருகிறது. மலர்கள் மலர்கின்றன. மயில்கள் ஆடுகின்றன; குயில்கள் கூவுகின்றன. அவற்றைக் கண்டு இரங்குகின்றார் தலைவியார். அக்காலம் கடந்து கார்ப்

பருவம் வருகின்றது. 'கார்காலத்தில் திரும்பி வருவேன்,' எனச் செப்பிச் சென்ற தலைவர் வந்திலர். தலைவியார்க்கு ஆற்றாமை மிகுகின்றது. கார்கால மலர்களும் மற்ற இயற்கைப் பொருள்களும் தலைவியாரைப் பெரிதும் வருத்துகின்றன. கார்மேகம் விரைவாகச் செல்கிறது. அதைத் தம் தலைவரிடம் தூது செல்லுமாறு ஏவுகிறார் தலைவியார். இது முல்லை நிலத்தின் இலக்கணம். இதை நம் பெட்புடையார் அழகுபட அமைக்கிறார். இதை இயற்கை என்னும் தலைப்பில் கூறியுள்ளோம்.

தெய்வப் பாவையார் நூல் அகப்பொருளாகும் மனோதத்துவ சாஸ்திரத்தையும் கடந்து நிற்பதொன்று. மக்கள் மனத்திற்குப் புலனாகும் பொருள்களைப் பகரும் அகநூல்களோடு, மனத்திற்கும் எட்டாத நுட்பப் பொருள்களை இயம்பும் நம் அன்னையாரின் நூலை வைத்து ஒப்புக்காணல் யாங்ஙனம் இயலும்? புலிக்குப் பூனையை உவமைப்படுத்தும் முறையிலும் இவற்றைக் கொள்ள இயலாதென்க. ஆயினும், அகப்பொருள் நூல்கள், கேவலம் சிற்றின்பத்தைப் பற்றியவை என்றெண்ணும் பலர் மயக்கத்தைப் போக்கவே, ஆன்மாவிற்கும் பரமான்மாவிற்கும் தொடர்புபடுத்தும் நம் நாச்சியார் நூல்களிலும் இத்துறைகள் அமைந்துள்ளன என்பதை ஈண்டுச் சில சான்றுகளால் பகர முன் வந்தோமேயன்றிப் பிறிதில்லை.

தலைவியார் தாம் விரும்பிய தலைவரை அடைதற் பொருட்டுத் தெய்வத்தைப் பராவி நிற்றல் :—

" தையொரு திங்களும் தரைவிளக்கித்
தண்மண் டலமிட்டு மாசிமுன்னாள்
ஐய நுண் மணற்கொண்டு தெருவணிந்து
அழகினுக்கு அலங்கரித்து அனங்கதேவா !

உய்யவும் ஆங்கொலோ என்றுசொல்லி
உன்னையும் உம்பியையுந் தொழுதேன் ;
வெய்யதோர் தழலுமிழ் சக்கரக்கை
வேங்கட வற்கென்னை விதிக்கிற்றியே."—நா-தி. 1-1

"உரவிப் பெருங்கலித் துன்பங்கள்
போய்முதல் ஊழிஇன்பம்
வரவிப் படிதன்னை வாழ்வித்த
வாணன்தென் மாறை அன்னாள்
புரவிப் புனைநெடுந் தேர்அண்ண
லே! நின் பொருட்டணங்கைப்
பரவிப் பரவிநின் றேவரம்
வேண்டுதல் பார்த்தருளே!" —தஞ்சை. 286.

பிற விலக்குவித்தல் :

"மானிட வர்க்கென்று பேச்சுப்படில்
வாழகில் லேன்கண்டாய் மன்மதனே!"—நா-தி. 1-5.

"பொருபால் மதியினைப் போல்மருப்
பியானையில் பொன்னொடின்பம்
தருபால் மொழிவஞ்சி! சாரவந்
தார்தஞ்சை வாணன்வெற்பின்
ஒருபால் நொதுமலர் என்னவெந்
தீஉலை உற்றசெவ்வேல்
இருபால் மருங்கினும் கொண்டெறிந்
தால்ஒத்த தென்செவிக்கே." —தஞ்சை. 226

கூடலிழைத்தல்:

....................................."வாமனன்,
ஒட்ட ராவந்தென் கைப்பற்றித் தன்னொடும்
கூட்டு மாகில்நீ - கூடிடு கூடலே!"— நா-தி-4-2.

"வரற்காலம் என்றென் றெனப்பல கூடல் வளைத்துதிரம்
விரற்கால இன்று மெலியல்மின் னே!"—தஞ்சை. 413.

## கவின் அழிவு உரைத்தல் :

" எத்திசை யும்அம ரர்பணிந் தேத்தும்
இருடீகே சன்வலி செய்ய
முத்தன்ன வெண்முறு வற்செய்ய வாயும்
முலையு மழகழிந் தேன்நான்
கொந்நலர் காவில் மணித்தடங் கண்படை
கொள்ளும் இளங்குயி லே!" நா-திரு. 5-6.

" வாளினும் நீள்விழி வாள்நுத
லாய் !தஞ்சை வாணன்தெவ்வின்
நாளினும் நாளும் நலம்தொலை வேன்."—தஞ்சை. 216.

" ஏரேற்ற கொங்கை இளங்கொடி
மாந்தளிர் ஏய்ந்தவண்ணம்
காரேற்ற கங்குலில் பீரலர்
போன்றது; காவியுண்கண்
.........................வாவியின்கண்
நீரேற்ற செங்கழு நீர்மலர் போன்றது.' தஞ்சை. 247.

## தன் துயர் தலைவற்கு உணர்த்தல் வேண்டல் :

" பொங்கிய பாற்கடற் பள்ளிகொள் வானைப்
புணர்வதோ ராசையி னுல்என்
கொங்கை கிளர்ந்து குமைத்துக் குதுகலித்
தாவியை ஆகுலஞ் செய்யும்
அங்குயி லே! உனக் கென்ன மறைந்துறைவு ?
ஆழியுஞ் சங்கும்ஒண் தண்டும்
தங்கிய கையவ னைவரக் கூவில்நீ
சாலத் தருமம் பெறுதி." —நா-தி. 5-7.

" .......................வையை
நுரைப்பால் முகந்தன்ன நுண்துகி
லாய் ! இந்த நோய்அலர்க்கின்று

உரைப்பார் உளரேல் உயிர்எய்த
லாம்நமக் கூர்திரைசூழ்
தரைப்பால் வளரும் புகழ்எய்த
லாம்அவர் தங்களுக்கே.'' —தஞ்சை. 217.

காமம் மிக்க கழிபடர் கிளவி:

'' பைங்கிளி வண்ணன் சிரீதரன் என்பதோர்
பாசத் தகப்பட்டி ருந்தேன்
பொங்கொளி வண்டிரைக் கும்பொழில் வாழ்குயி
லே ! குறிக் கொண்டிது நீகேள் :
சங்கொடு சக்கரத் தான்வரக் கூவுதல்
பொன்வளை கொண்டு தருதல்
இங்குள்ள காவினில் வாழக் கருதில்
இரண்டத்தொன் றேல்திண்ணம் வேண்டும்.''
—நா-தி. 5-9.

'' ஒண்டுவி நாராய்! நின் சேவலும் நீயுமாய்
வண்டுது பூங்கானல் வைகலும் சேறிரால்;
'பெண்டுது வந்தேன்,' எனவுரைத்தெம் காதலரைக்
கண்டீர் கழறியக்கால் காதலர் கடிபவோ ?''
—இறையனுரகப்பொருள், 214.

தனிப்படர் மிகுதி :

'' அன்றுல கம்மளந் தானை உகந்தடி
மைக்கண வன்வலி செய்யத்
தென்றலுந் திங்களும் ஊடறுத் தென்னை
நலியு முறைமை அறியேன்.'' நா.தி.5-10.

'' பருவரலும் பைதலும் காணுன்கொல் காமன்
ஒருவர்கண் நின்றொழுகு வான்?''
—திருக்குறள், 120-7.

கனவு நலிவு உரைத்தல் :

'' பூப்புனை கண்ணிப் புனிதனோடு என்றன்னைக்
காப்புநாண் கட்டக் கனக்கண்டேன் தோழீநான்.''
—நா. தி. 6-4.

"சினவாகை சூடிச் செருவென்ற
வாணன்தென் மாறையில்நம்
மனவாழ் வனையவர் வந்துநல்
லியாமம் மணந்ததெல்லாம்
நனவாம் எனவே மகிழ்ந்தே
விழித்தொன்றும் நான்கண்டிலேன்
கனவாய் முடிந்தது பின்னை; என்
னே! என்ன கைதவமே!" —தஞ்சை. 215

"கனவினுல் உண்டாகும் காமம் நனவினுல்
நல்காரை நாடித் தரற்கு." —திருக்குறள், 122-4

சங்கினை வாழ்த்தல் :

"செங்கமல நாண்மலர்மேல் தேனுகரும் அன்னம் [போல்
செங்கண் கருமேனி வாசுதே வனுடைய
அங்கைத் தலமேறி அன்ன வசஞ்செய்யும்
சங்கரையா! உன்செல்வம் சால அழகியதே!"
—நா. திரு. 7-7

"தேனிற வார்கண்ணிச் செம்பியன்
மாறன் செழுங்குமரி
மானிற வெண்டிரை மால்கடல்
தோன்றினை ; மண்ணளந்த
நீனிற வண்ணனும் ஏந்தினன்
நம்முன் நிறம்புரைதீம்
பானிற வெண்சங்கம் ; யார்நின்னின்
மிக்க படிமையரே ?" —இறையனர், 315

தென்றலுக்கிரங்கல் :

"காமத்தீ யுள்புகுந்து கதுவப்பட்டு இடைக்கங்குல்
ஏமத்தோர் தென்றலுக்கிங்கிலக்காய்நானிருப்பேனே!"
—நா. திரு. 8-2

“ தைவர லசைவளி மெய்பாய்ந் துறுதரச்
செய்வுறு பாவை யன்னவென்
மெய்பிறி தாகுத லறியா தோரே.”

—குறுந்தொகை, 195

தலைவி கூற்று:

“ மின்னாகத் தெழுகின்ற மேகங்காள்! வேங்கடத்துத்
தன்னாகத் திருமங்கை தங்கியசீர் மார்வற்கு
என்னாகத் திளங்கொங்கை விரும்பித்தாம் நாடோறும்
பொன்னாகம் புல்குதற்கென் புரிவுடைமை செப்புமினே.”

—நா. தி. 8-4

“ பெரும்பெய லுண்மையின் இலையொலித் தாங்கென்
உரஞ்செத்து முளனே தோழியென்
நலம்புதி துண்ட புலம்பி னானே.”

—குறுந்தொகை, 133

“ இலங்குவளை நெகிழச் சாஅ யானே
உளனே ....................”. —குறுந்தொகை, 125

“ யானே ஈண்டை யேனே; என்னலனே
கானக நாடனொடு ஆண்டொழிந் தன்றே.”

—குறுந்தொகை, 54

“ நள்ளென் யாமத் துயவுத்துணை யாக
நம்மொடு பசலை நோன்று நம்மொடு
தானே சென்ற நலனும்
நல்கார் கொல்லோநாம் நயந்திசி னோரே!”

—அகநானூறு, 103

“ இருவிசேர் மருங்கிற் பூத்த முல்லை
வெருகுசிரித் தன்ன பசுவீ மென்பிணிக்
குறுமுகை அவிழ்ந்த நறுமலர்ப் புறவின்
வண்டுசூழ் மாலையும் வாரார்
கண்டிசிற் றோழி பொருட்பிரிந் தோரே.”

—குறுந்தொகை, 220

### தலைவி இளவேனிற்பருவம் கண்டு புலம்பல் :

" பாடும் குயில்காள்! ஈதென்ன பாடல்நல் வேங்கட
நாடர் நமக்கொரு வாழ்வுதந் தால்வந்து பாடுமின்
ஆடும் கருளக் கொடியுடை யார்வந் தருள்செய்து
கூடுவ ராயிடிற் கூவிநும் பாட்டுக்கள் கேட்டுமே."

—நா. தி. 10-5

" நங்கண் இரங்க அரும்பொருள் தேட நடந்தஅன்பர்
செங்கண் இருங்குயில் ஆர்ப்பது கேட்கிலர்."

—தஞ்சை. 421

### தலைமகள் கார்ப்பருவம் கண்டு புலம்பல் :

" மழையே ! மழையே ! மண்புறம் பூசியுள் ளாய்நின்று
மெழுகூற்றி னற்போ லூற்றுநல் வேங்கடத் துள்நின்ற
அழகப் பிரானார் தம்மைஎன் னெஞ்சத் தகப்படத்
தழுவநின்று என்னைத் ததர்த்திக்கொண் டூற்றவும் வல்லையே!"

—நா. தி. 10-8

"யாணர்க் குழல்மொழி! என்செய்கு
வேன் !கல்வி எல்லைஎல்லாம்
காணப் பிரிந்தவர் காண்கிலரால்.........
............என் வல்உயிரின்
ஊணற்பம் என்னஎண் ணுவரும்
மேகம் உருமுடனே." —தஞ்சை. 409.

" கேளார் கொல்லோ தோழி ! தோள்...............
இலங்குவளை நெகிழ்த்த கலங்கஞர் எள்ளி
நகுவது போல மின்னி
ஆர்ப்பது போலுமிக் கார்ப்பெயற் குரலே."

—நற்றிணை, 214.

" தண்ணந் துறைவன் தணந்தமை நம்மினும்
முன்ன முணர்ந்தாள் அனை." —திருக்குறள், 128-7.

" தம்மை யுகப்பாரைத் தாமுகப்பர் என்னுஞ்சொல்
தம்மிடையே பொய்யானால் சாதிப்பா ராரினியே ?"

—நா. தி. 11-10.

“ பெரியோர் மொழிபிற ழார்என்று
தேறுதல் பேதைமையே.” —தஞ்சை 291.

“ நீர்வார் மருங்கின் நீரணி திகழ
இன்னும் வாரார் ஆயின் நன்னுதல் !
யாதுகொல் மற்றவர் நிலையே? காதலர்
கருவிக் காரிடி இரீஇய
பருவ மன்றவர் வருதுமென் றதுவே.”

—அகநானூறு, 139.

## நாணிழந்து வருந்துதல் :

“ நாணி யினியோர் கருமமில்லை
நாலய லாரும் அறிந்தொழிந்தார்
பாணியாது என்னை மருந்துசெய்து
பண்டுபண் டாக்க உறுதிராகில்
மாணி யுருவாய் உலகளந்த
மாயனைக் காணில் தலைமறியும்
ஆணையால் நீரென்னைக் காக்க வேண்டில்
ஆய்ப்பாடிக் கேளன்னை உய்த்திடுமின்.”

—நா-தி. 12-2.

“ உயிரினும் சிறந்தன்று நாணே ; நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று.”

இறையனார், 177.

“ சேண்அக லர்துஉடன் என்னொடு நாடித் திரிந்துவந்த
நாணும் அழியத் தகுக்ப்பு மேம்பட நைகின்றதே.”

—இறையனார். 178.

## காம மிகவுரைத்தல் :

“ துற்ற மற்ற முலைதன்னைக் குமரன் கோலப் பணைத்தோளொடு
அற்ற குற்ற மவைதீர அணைய வழக்கிக் கட்டீரே.”

—நா. தி. 13-7.

“ பின்னாக முன்வந்த பேதைதன் காமப் பெருங்கடற்கு
நின்னாக மன்றியுண் டோபுணை யாவது நீந்துதற்கே ?”

—தஞ்சை, 245.

இம்முறையில் இயம்பிக்கொண்டே செல்லின் மிக விரியும். ஆயினும், இங்ஙனம் சிற்சில இடங்களில் அகப் பொருள் நூல்களுக்கும் திருமொழிக்கும் ஒற்றுமை காணப்படினும், அகத்துறையுள் அடங்காத துறைகள் பல நம் அன்னையார் நூலில் உண்டு. அவற்றிற்கு ஒரு வராலும் திணையும் துறையும் வகுத்தற்கு இயலாது. ஏன்? இத்திருமொழி, முன் கூறியவாறு மனத்திற்கு அடங்கியதும், இலக்கணத்தைப் பார்த்து இலக்கியத் தைக் கோலியதும், காதலின் இயல்பு இம்முறையிலே தான் செல்லும் என ஊகித்து வரையறுத்ததும் அன்றே?

இஃதோர் அநுபவ நூலன்றோ? நம் தமிழ் நாட்டில் தோன்றிய நம் தெய்வப் பாவையாரின் காதல் ஊற்றைப் படம் பிடித்துக் காட்டுவதன்றோ இந்நூல்? ஆன்மா பரமான்மாக்களின் புணர்ச்சி முறையைக் காட்டும் பண்பு நூலன்றோ இது? ஒவ்வோர் ஆன்மாவும் அடைய வேண்டிய நிலையை அன்றோ இந்நூல் தெளித்துக் காட்டுகிறது? இது பற்றற்றவருக்குப் பற்றுக்கோலா கும்; துறவிகளுக்கு உற்ற துணையாகும்; பக்திமான் களுக்குப் பயனளிக்கும்; ஞானிகளுக்கு நட்புடைய தாகும்; இல்லறத்தாருக்கு இன்பமீயும்; கலைஞருக்குக் கலை அளிக்கும்; இன்னும் பல்லோருக்கும் பல முறையில் பயனளியாநிற்கும். இத்துணைச் சிறப்புகள் வாய்ந்த இந்நூல், மற்ற அகப்பொருள் நூல்களுக்கு இணை யானது எனக்கூறல் எவ்வாறு பொருந்தும்? உயிர்களுக் கும் இறைக்கும் உள்ள தொடர்பை வரையறுத்துக் காட்டும் இத்தகைய காதல் நூலை, சிலர் கேவலம் '**காம நூல்**' என இகழ்வர். அவர்தம் ஊன்றி நோக்கா மையின் இயல்பென்னே! மிக்க பரிதாபம்! இது நிற்க.

நம் காதல் மணியார் நூலைப்போன்ற ஒன்று இவருக்கு முன்னும் உருக்கொண்டெழுந்திலது ; இனியும் உருக்கொண்டெழும் என்பது பகற்கனவே. இந்நூலை அன்புடன் ஊன்றிக் கற்போர் இறைக்காதலில் கனிந்து, பிறந்ததன் பயனை அடைவர் என்பது திண்ணம். இதனினும் உயர் நலனை அளிக்கக் கூடியது எது? ஆகவே, இக்காதல் நூலே மக்களுக்கு இறுதியற்ற இன்பத்தை ஈயும் கருவியெனக் கொள்க. நம் சூடிக் கொடுத்தாரும், இவர்தம் தமிழ்க்காதலும், அக்காதலைத் தெளித்துக்காட்டும் திருமொழியும் வாழ்க!

## 14. காதல்

உலகப் பொருள்கள், 'காட்சிப் பொருள், கருத்துப் பொருள்' என இரு பிரிவினுள் அடங்கும். முந்தியது ஐம்பொறிகளால் அறியப்படுவது ; பிந்தியது மனத்தினால் மட்டும் உணரப்படுவது. அன்பிற்கும் இவ்விலக்கணம் உண்டு. ஆயினும், 'காதல்' என்பது அன்பைக் காட்டிலும் மிக உயர்ந்த நிலையில் இருப்பது. இத்துணை அன்பையும் காதலையும் வெவ்வேறாகப் பிரித்துரைத்தலை நம் ஆன்றோர் நூல்களில் காணலாம்.

ஒத்த நலனும், ஒத்த பண்பும், ஒத்த திருவும் உடைய இரு பாலாரிடையே தோன்றும் அன்பு, '**காதல்**' எனப் பகரப்படுகிறது. இவர்களுக்குக் '**காதலன், காதலி**' என்னும் சிறப்புப் பெயர் அமைந்திருத்தலை நோக்குக! இவர் இருவரிடையே நிகழும் இன்பச்சுவை இத்தன்மைத்தென்றும், இந்நிலை உடையதென்றும் பிறர்க்கெடுத்தோதற்கியலாதிருத்தல் மட்டுமேயன்றி, முன்பு அனுபவித்த தம்மாலும் பின்பு இன்ன இயல்புடையதென நன்கு உணர்தற்குக் கூடாததாய் அகத்தோடு

அடங்கி இருத்தலின், இஃது 'அகப்பொருள்' எனப் பெயர் பெற்றது.

நம் சமய நூல்கள் அன்பைப் 'பக்தி' எனவும், இக் காதலைப் 'பிரேமம்' எனவும் கூறுகின்றன. பக்தியைக் காட்டிலும் பிரேமமே சிறந்தது. இப்பிரேமம் என்னும் காதலின் இலக்கணத்தை வெளியிட எழுந்த இலக்கணங்களும் இலக்கியங்களும் பலப்பல. இத்துணை உயரியதும், தூயதுமான காதல் இவ்வுலக மக்களிடை நிகழ்தல் அரிதாகும் என்பதும், தெய்வத்தன்மை வாய்ந்த சிரியோரிடையே இஃது அரும்பாநிற்கும் என்பதும் அறிஞர் கருத்து. பரம்பொருளுக்கும், ஆன்மாவிற்கும் ஒன்பது வகையான தொடர்புகள் ஏற்பட்டிருக்கின்றன என வைணவத் தத்துவம் விளம்பாநிற்கும். அவற்றுள் தலைவன் தலைவி தொடர்பும் ஒன்று. இஃதே உயிராயது. இம்முறையில் பரமான்மாவைத் தலைவனாகவும், ஜீவான்மாவைத் தலைவியாகவும் வைத்து அகப்பொருள் சுவை துன்னப் பாடியவருள் சிறந்தவர் **திருமங்கை ஆழ்வாரும், நம்மாழ்வாரும், ஆண்டாளுமே**யாவர்.

இவருள் முன்னைய இருவருக்கும், பல தொடர்புகளுள் தலைவன் தலைவி தொடர்பும் ஓர் அங்கமாய் அமைந்துள்ளது. நம் அன்னையாருக்கோ, தம் இரு நூல்களின் முற்றிலும் இத்தொடர்பே செல்லாநிற்கிறது ; இஃதொன்றில் மட்டுமன்று ; இன்னும் பல துறைகளிலும் அவர்களைக்காட்டிலும் நம் அன்னையார் காதல் உயர் நிலையில் ஒளிர்வதைக் காணலாம். அவர்கள் இத்தொடர்பை எம்பெருமானிடம் கொள்ள நினைக்குங்கால், தங்களை மகளிராகப் பாவிக்கவேண்டியிருந்தது. நம் கோதையாருக்கோ, அப்பெண்மை இயற்கையாகவே அமைந்திருந்தது.

பாகவதர்களை முன்னிட்டே ஈஸ்வரனிடம் செல்ல வேண்டுமென்பது வைணவத்தின் வழக்கு. இது மற்றை யோருக்கு ஒரோ இடத்தில் உருக்கொண்டுள்ளது. நம் சூடிக்கொடுத்த சுடர்க்கொடிக்கோ, இத்தத்துவம் திருப்பாவை முதல் பாசுரந் தொடங்கி நாய்ச்சியார் திரு மொழி இறுதிப் பாசுரம் வரையும் பொருந்தி இருத்த லைக் காணலாம். இவர் நூலை ஆராய்பவருக்கு இவர் இறைக்காதல், படிப்படியாய் வளர்ந்து உச்ச நிலையை அடைவது நன்கு புலனாகும். விரிக்கிற் பெருகும்.

இக்காதலின் ஊற்றமன்றோ இவரை எம்பெருமா னோடு இரண்டறக் கலந்து நிலைபெற்ற இன்பத்தைத் துய்க்கச் செய்தது! இவ்வீறிலின்பம் மற்றையோருக்குக் கிடைத்ததோ?

இவரியற்றிய இவ்விரு காதல் நூல்களையும் இரு மாடிகள் அமைந்த ஓர் அரண்மனை என்னலாம். முதல் மாடியில், (திருப்பாவையில்) இறைக்கும் தமக்கும் உள்ள தொடர்பு, பக்தியாக, உருக்கொண்டெழுகிறது. இரண்டாவது மாடியில் (நாய்ச்சியார் திருமொழியில்) ஏற்பட்ட தொடர்பு பிரேமமாக உருக்கொண்டு, வரம்பு கடந்த செயல்களையும் இயற்றி அவனை அடையு மாறு தூண்டுகிறது. இதனாற்றான் நாய்ச்சியார் திரு மொழிக்குக் காதற்பெருக்கு என்னும் பெயரைச் சூட்ட வேண்டியதாயிற்று.

"ஞான தசையில் ரக்ஷ்ய ரக்ஷக பாவம் தன் கப் பிலேகிடக்கும்; பிரேம தசையில் தட்டுமாறிக் கிடக்கும்" என்னும் பிள்ளை லோகாசாரியர் வாக்கியம் இங்குப் பொருத்தமுடைத்து. ஆண்டாளாகிய கற்பகத்தருவில் தோன்றிய இவ்விரு கிளைகளுள் ஒன்று சிறு அரும்புக ளுடன் காட்சியளிக்கிறது. மற்றொன்று அவ்வரும்புகள்

நெகிழ்ந்து பூத்துக் காய்த்துக் கனிந்து பயன் துய்க்கும் பக்குவ நிலையில் உள்ளது. இந்நிலை எந்த ஆழ்வார்க்கேனும் வாய்த்ததோ! இங்ஙனம் கூறிக்கொண்டே செல்லின் விரியாநிற்கும்.

(திருப்பாவைச் செல்வியார் காதற்பார்வை எம்மட்டும் செல்கிறது? அப்பார்வைக்குப் பொருத்தமான எப்பொருளும் இவ்வுலகில் அகப்படாமையின், பரமபதம் அளவும் அளாவிச்சென்று அவணுள்ள இறையின்கண் படிகிறது. அக்காதற்பார்வையை மறுபக்கம் திருப்ப இவரால் இயலவில்லை. ஆதலால், இவர் அப்பொருளிலேயே அழுந்தி, அதற்கே தம்மை உரிமைப்படுத்தக் கருதுகிறார்; தம் வாழ்க்கை வேறு விதமாக மாறுபடின், தாம் உயிர்வாழ இயலாதென்பதை உறுதியாக இயம்புகிறார்.)

**" மானிடவர்க்கென்று பேச்சுப்படின் வாழகில்லேன்'**
என்பதை நோக்குக! —நா. திரு. 1-5.

ஒருவர்பாலே காதலைச் செலுத்தும் உயர்குடி மகளிரின் சிறந்த பண்பு இஃதாகும். இது தமிழ் நாட்டிற்கே உரியது. இச்செய்தியைத் தஞ்சை வாணன் கோவை எடுத்துரைக்கும் அழகு என்னே!

**"பொருபால் மதியினைப் போல்மருப் பியானையில் பொன்னொ [டின்பம்**
**தருபால் மொழிவஞ்சி!சாரவந் தார்தஞ்சை வாணன்வெற்பின்**
**ஒருபால் நொதுமலர் என்னவெந் தீஉலை உற்றசெவ்வேல்**
**இருபால் மருங்கினும் கொண்டெறிந் தால்ஒத்த தென்செ [விக்கே."**

—தஞ்சை. 226

இத்தெய்வக் காதலில் ஆழ்ந்துள்ள இவருக்கு அத்திருமால் தம்மைக் கைப்பற்றுவனோ என்னும்

ஐயப்பாடு நிகழ்கிறது! அவ்வையப்பாட்டால் இவர் மனம் நைகிறது. அதைத் தாங்க இவரால் இயலவில்லை. அதற்கு ஏதேனும் பரிகாரம் தேடக் கருதுகிறார். பெரியார் குறி பார்க்கும் கொள்கை ஒன்று இவர் நினைவில் தோன்றுகிறது. அதன்படியே கூடல் இழைத்துப் பார்க்கிறார். 'கூடல் இழைத்தல்' என்பது, கண்ணை மூடிக் கொண்டு தரையில் ஒரு பெரிய வட்டக்கோடு இட, அதன் இரு நுனிகளும் கூடி முடியின் எண்ணிய எண்ணம் முடியுமென்றும், கூடாவாயின் கருதியது கைகூடாது என்றும் தீர்மானிப்பது.

> "ஆய்ச்சி மார்களும் ஆயரும் அஞ்சிடப்
> பூத்த நீள்கடம் பேறிப் புகப்பாய்ந்து
> வாய்த்த காளியன் மேல்நட மாடிய
> கூத்த னார்வரிற் கூடிடு கூடலே!"
>
> —நா-தி. 4-4

என்னும் பாசுரத்தை நோக்குக!

அகநானூற்றில் கழங்கு குறிபார்த்தலும், தஞ்சை வாணன் கோவையில் கூடலிழைத்தலும் இடம் பெற்றுள்ளன.

ஒருவருக்கு மற்றொருவர்பால் உண்டாகும் அளவு கடந்த காதல் அவர்மட்டோடு நிற்குமோ? அவர் தொடர்புற்ற பொருள்களிடத்தும் செல்லுமன்றோ? அப்போதுதான் அஃது ஊன்றிய காதலாகும். அங்ஙனமே, நம் அன்னையார் எம்பெருமானிடத்தில் கொண்ட காதல், அவனளவோடு நின்றிலது; அவன் இடக்கரத்தில் தாங்கியிருக்கும் சங்களவும் செல்லுகிறது. அச்சங்கின் மேன்மையும், திருமாலின் உடற்கறுப்பும், அச்சங்கு ஒலித்தற்கு இடமான அவன் திருவதரத்தின் சிவப்பும் இவருக்குக் காட்சி அளிக்கின்றன. "என்ன சேர்க்கை!

என்ன அழகு! என்ன அழகு! காண்போர் மனத்தைக் கவரும் இதன் பெட்புத்தான் என்னே! இதற்கு உறையுளும் உணவும் எவை? முறையே எம்பெருமானின் இடக்கரமும், அவன் திருவாயில் ஊறிய அமுதமுமே அல்லவா? இஃது என்றேனும் என்னைப்போன்று அவனைப் பிரிந்து வருந்தியது உண்டோ? இல்லை இல்லை. இரவும் பகலும் அவன் அழகிய கைத்தலத்தையே தனக்கு அணையாகக் கொண்டுள்ளதே! இதன் தவந்தானென்னே! தவமுடையார்க்கல்லவா தவம் கூடுவது! என்ன ஆனந்தம்! என்ன ஆனந்தம்! உவகை பொங்கி வழிவது போன்றன்றோ இஃது என்றும் நகை முகம் காட்டிக்கொண்டுள்ளது! உலகில் தோன்றின், இங்ஙனமன்றோ தோன்றல் வேண்டும்! இதற்கன்றோ அவன் வாய்ச்சுவை தெரியும்! அதைத் துய்க்கப் புண்ணியமியற்றாத யான் இப்போது செய்ய வேண்டுவது யாது? இதனைக் கேட்டேனும் அச்சுவையைத் தெரிந்து கொள்ள வேண்டுமல்லவா? ஆம், இதுவே தக்க வழி!" எனக் கருதி,

> **"கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?**
> **திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்தி ருக்குமோ?**
> **மருப்பொசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்**
> **விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே!"**
>
> —நா. தி. 7-1.

எனச் சங்கை அன்புடன் வினவுகிறார்.

இன்னும் கொடிய அசுரரை அலக்கழிக்கும் அச்சங்கத்தின் ஒலியையும், கடலிற்பிறந்து திருமால் கைத்தலத்தில் கண்வளரும் அதன் அழியாச் செல்வத்தையும் மிகப் பாராட்டிப் பேசுகிறார்:

"கடலிற் பிறந்து கருதாது பாஞ்சசனன்
உடலில் வளர்ந்துபோய் ஊழியான் கைத்தலத்
திடரில் குடியேறித் தீய வசுரர்
நடலைப் படமுழங்குந் தோற்றத்தாய் நற்சங்கே!"
—நா. தி. 72.

ஒரு தலைவியைத் தலைவன் விட்டுப் பிரியுங்கால் அவள் கைவளை, உறக்கம், சிந்தை யாவும் அவளை விட்டு நீங்கி அவளை வருத்துதல் இயல்பு. அந்நிலை நம் அன்னையாரையும் வந்தடைகிறது. அவ்வமயம் கோதையார் என்ன செய்கிறார்? யாங்ஙனம் இவர் தம் உயிரைக் காத்துக்கொள்ளுகிறார்? அத்திருமாலை ஒத்த பொருள்களைப் பார்த்து, அவற்றோடு தம் ஆற்றாமையையும், அவன் தம்மைக் கைவிட்டிருத்தலால் அவனுக்கு ஏற்படும் பழிப்பையும் அவனிடம் தெரிவிக்குமாறு அவற்றிடம் கூறுகிறார்; அன்றியும், அவன் எப்போது தம்மோடு கலந்து தம்மை ஆட்கொள்ளுவான் என அவன் வரவை எதிர்பார்த்த வண்ணமாய் அவன் உயரிய குணங்களை நாவார வாழ்த்திக்கொண்டே தம் காலத்தை அரிதாகக் கழிக்கிறார். இவர் காதலின் ஊற்றம், தாம் காதலித்த பொருளின் மேன்மை, தாம் செய்தி அனுப்பும் பொருளின் கீழ்மை முதலியவற்றை ஓர்ந்து பார்த்தற்கும், தம் அரற்றலினால் ஏற்படும் உலக வசையை உற்று நோக்கற்கும் இடந்தந்திலது. கரை கடந்த உண்மைக் காதல் எதைத்தான் ஊன்றி நோக்கும்!

"ஒளிவண்ண வளைசிந்த உறக்கத்தோ டிவையெல்லாம்
எளிமையா லிட்டென்னை யீடழியப் போயினவால்
குளிரருவி வேங்கடத்தென் கோவிந்தன் குணம்பாடி
அளியத்த மேகங்காள்! ஆவிகாத் திருப்பேனே!"
—நா. தி. 8 - 3.

என அன்னையார் அரற்றுநிற்பதைக் காண்க!

உயர் குடியில் தோன்றிய மகளிர்க்கு நாணம் உயிரினும் சிறந்தது. அவர் உயிரைத் துறக்க நேரினும் நாணைத் துறக்க உடன்படார். இத்துணை உயரிய நாணமும், காதல் கரை புரண்டோடுவார் மாட்டு நிலை பெற்றிருத்தல் இல்லை. காதலே தலை தூக்கி நிற்கும். அதைத் தம்முள் அடைத்து வைக்கும் தாளை அவர் கண்டிலர். அத்தகையருள் தலை சிறந்த நாய்ச்சியாருக்குத் தம் காதலனாகிய திருமாலின் உரு வெளிப்பாடு, தம் கண்முன் தோன்றுகிறது. அவன் நிறத்தை ஒத்த மலர்களும், மேகங்களும் முகங்காட்டி இவர் மனத்தை ஈர்க்கின்றன. கண்ணன் ஸௌலப்பியம் (கட்புலனுக்குத் தோற்றாத தான் யாவரும் கண்டு தன்னைப் பற்றுமாறு எளியனாய் இருத்தல்) முதலிய சீரிய குணங்களை நினைக்கிறார்; நெஞ்சம் அலமருகின்றார். இவர் மனப்போக்கை அறியாத மற்றையோர், இவர் பெண்மைக்குரிய நாணத்தைக் கைவிட்டனர் என வசை கூறிப் பழிக்கின்றனர்; இவர் உடல் மெலிவிற்கு வேறு சிகிச்சை தேடவும் முயல்கின்றனர். "அந்தோ! என் உண்மைப் பிணியை நீர் அறிந்தீரில்லையே! என் நோய் முனிவர்க்கும் அறிய அரிதுதான்! ஆயினும், கடல் வண்ணனை கண்ணன் தன் கைகளால் என்னைத் தடவின் என் நோய் பறந்தோடும்! கண்ணனிடம் எனக்குள்ள ஆர்வ வெள்ளம் நாணக்கரையை உடைத்தெறிந்துவிட்டது. 'நாணி இனியோர் கருமமில்லை.' இனி என் செய்வேன்! என் மனப்போக்கை உலகினர் யாவரும் அறிந்தனர். இயற்கைப் பொருள்கள் எம்பெருமானுடன் நீயும்போ என்று என்னை ஏவுகின்றன. ஆதலின் என்னை அவன் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் ஏதேனும் ஓரிடத்தில் கொண்டுபோய் விட்டுவிடுங்

கள்! அஃதே இவ்வமயம் நீங்கள் செய்ய வேண்டுவது!'' எனச் சுற்றத்தாரை இறைஞ்சுகிறூர். இஃது,

"கார்த்தண் முகிலும் கருவிளையும்
காயா மலரும் கமலப்பூவும்
ஈர்த்திடு கின்றன என்னைவந்திட்
டிருடீகே சன்பக்கல் போகென்று
வேர்த்துப் பசித்து வயிறசைந்து
வேண்டடிசில் உண்ணும்போது ஈதென்று
பார்த்திருந்து நெடுநோக்குக் கொள்ளும்
பத்தவி லோசனத் துய்த்திடுமின்!''

—நா. தி. 12-6.

என்னும் பாசுரத்தால் நன்கு புலனுகின்றது.

இப்பொருளைத் தமிழ் நூல்கள் நேரிதாக விரிக்கின்றன:

"காமக் கணிச்சி உடைக்கும் நிறைஎன்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு.''

—திருக்குறள், 126-1.

"சேணும் அகலா துடன்என்றெ டாடித் திரிந்துவந்த
நாணும் அழியத் தகுகற்பு மேம்பட நைகின்றதே!''

—இறையனாகப்பொருள், 178

"அளிதோ தானே நாணே; நம்மொடு
நனிநீ டுழந்தன்று மன்னே; இனியே
வான்பூங் கரும்பின் ஓங்குமணல் சிறுசிறைத்
தீம்புனல் நெரிதர வீந்துக் கா அங்குத்
தாங்கும் அளவை தாங்கிக்
காமம் நெரிதரக் கைந்நில் லாதே.''

—குறுந்தொகை, 149.

காதலில் ஆழ்ந்திருப்பாருக்குத் துன்பந் தருமவற்றுள் மாரி காலமும் ஒன்று. அக்காலமட்டும், அவர்

களை வருத்தல் இல்லை. அவ்வமயம் பூத்தொளிரும் மலர்கள், மகிழ்ந்துறையும் உயிர்த் தொகுதிகள் யாவும் அவர்கள் மனப் புண்ணிற்குக் கருவிகளாய் உள்ளன. இம்முறையில் கார் காலம் தொடங்குகின்றது. எல்லாப் பொருள்களும் தளதளவென்று ஒளிர்கின்றன. ஆண்டாள் சுற்றும் முற்றும் பார்க்கிறார். குதுகுலிப்புடனும், முழு அழகுடனும் தோன்றும் பறவைகள், மலர்கள், கனிகள் இவர் கண்ணிற்படுகின்றன. "அந்தோ! யான் எந்தத் திருமாலை அடையக் கருதுகின்றேனோ, அந்தப் பெருமானின் நிறத்தையன்றோ இவைகள் பெற்றுள்ளன! இவைகட்கு அஃது என்ன பயனைத் தரும்! தமக்குப் பயனியாத இதை இவை மேற்கொண்டிருத்தல் என்னை வருத்தவே போலும்! யானோ, கொன்றை மரங்கள்மேல் தொங்கும் பொன்னிற மாலைகளோடொப்ப வாளா கிடக்கின்றேன்! ஓ மயில்களே, உங்கள் நடனத்தைக் காணும் வன்மை எனக்கிப்போதில்லை! உயரப் பூத்துள்ள மலர்களே, திருமால் சக்கரத்தைப் போன்று என்னைச் சுட்டு எனக்கு அல்லலை விளைவியாதீர்கள்! காந்தள் மலர்களே, உங்களைப் போர்க்கோலஞ் செய்து என்மேல் பாயுமாறு விடுத்தவன் எங்குற்றான்!' எனக் கதறுகின்றார்.

"பைம்பொழில் வாழ்குயில்காள்! மயில்காள்! ஒண் கருவிளைகாள்!
வம்பக் களங்கனிகாள்! வண்ணப்பூவை நறுமலர்காள்!
ஐம்பெரும் பாதகர்காள்! அணிமாலிருஞ் சோலைநின்ற
எம்பெருமா னுடைய நிற முங்களுக்கென் செய்வதே!"
— நா. தி. 9-4.

"மேற்றோன்றும் சோதி வேதமுதல்வர் வலங்கையில்
மேற்றோன்றும் ஆழியின் வெஞ்சுடர் போலச்சுடாதீர்."
— நா. தி. 10-2.

**"முல்லைப் பிராட்டி நீ உன் முறுவல்கள் கொண்டு எம்மை**
**அல்லல் விளைவியேல் ஆழி நங்காய்!"**

— நா. தி. 10-4.

**"நடமாடித் தோகை விரிக்கின்ற மாமயில்காள்! உம்மை**
**நடமாட்டங் காணப் பாவியேன் நானோர் முதலிலேன்."**

— நா. தி. 10-7.

கோதையார் உள்ளத்தின் உணர்ச்சியைக் காட்டு தற்கு இப்பாசுரங்கள் மாசற்ற பளிங்கு என்னலாம்.

இன்னும் அன்னையார், தம்மிடம் உள்ளாரை நோக்கி, "நீர் என்னை என் காதலனிடம் கொண்டுபோய் விடுவதாகக் காணப்பட்டிலீர். அங்ஙனம் செய்திலீரேனும், அவன் உடுத்துள்ள பீதாம்பரத்தையேனும் கொணர்ந்து என்மேல் வீசுவீராக! என் நோயைத் தீர்ப்பதற்கு அஃதொரு சிறந்த கருவியாகும்," என்கிறார்.

**"கண்ணன் என்னும் கருந்தெய்வம் காட்சிப் பழகிக்**
**கிடப்பேனைப்**
**புண்ணிற் புளிப்பெய் தாற்போலப் புறநின் றழகு பேசாதே**
**பெண்ணின் வருத்த மறியாத பெருமா னரையிற் பீதக**
**வண்ண வாடை கொண்டென்னை வாட்டம் தணிய வீசீரே."**

— நா. தி. 13-1.

நம் கோதையாருக்குத் திருமாலிடம் எத்துணை அன்பு ஏற்பட்டிருப்பின் அவன் தொடர்புற்ற பொருளும் தம் காதலைத் தணிக்கும் எனக் கருதுவார்!

திருப்பாவைச் செல்வியாருக்கு ஏற்பட்ட காதல், கேவலம் ஊனுடலைப் பற்றியதன்று என்பதை அவர் மொழிந்த சொற்களே தெளித்துக் காட்டுகின்றன. எம் பெருமானிடம் ஈடுபட்டு அவனுக்குத் தொண்டு புரிதலே இப்பிறவியின் பயனெனக் கோதையார் கருது

கிறார் ; இறைவனுக்கே ஆட்பட்டு, தம் உடலையும் உயிரையும் அவனுக்கே உரிமையாக்கி, மனம் வாக்குக் காயங்களால் தொண்டு பூண்டொழுகுமாறு செய்யும் அன்பின் மிகுதியையே இங்குக் காதல் எனக் கூறுகிறார். இஃதே ஆன்மாவிற்குரிய உயரிய காதலாகும். இக் காதலை உடையார்களையே ஞான பக்தி வைராக்கியம் நிறைந்தவர்கள் எனச் சமய உலகம் கொண்டாடுகிறது.

*" கோவிந் தற்கோர் குற்றேவல்*
*இம்மைப் பிறவி செய்யாதே ,*
*இனிப்போய்ச் செய்யும் தவந்தானென் ?"*

—நா. தி. 13-9.

*" சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்*
*பொற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய் :*
*பெற்றமேய்த் துண்ணும் குலத்திற் பிறந்துநீ*
*குற்றேவ லெங்களைக் கொள்ளாமற் போகாதே;*
*இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா!*
*எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு*
*உற்றோமே யாவோம்; உனக்கேநாம் ஆட்செய்வோம்."*

—திருப்பாவை, 29.

இத்தகைய உயரிய காதலைக்கொண்ட பெண்ணரசியார் சிந்தை "எம்பெருமான் எவண் இருப்பான்? என்ன நிலையில் தோற்றப்படுவான்?" என அவன் உயர்வு, எளிமை, அருள், அழகு முதலியவற்றைச் சிந்தித்துப் பார்க்கிறது; பின்பு அது சில வினாக்களை எழுப்புகிறது. அவ்வினாக்களுக்கு இவர் ஆய்ந்த அறிவு பொருத்தமான விடைகளை இறுக்கின்றது. இன்னலமும் இன்பமும் நிறைந்த அவ்விடைகளைச் செவியேற்ற நம் அன்னையார் நெஞ்சம், குளிர்ந்து குதுகுலமடைகிறது. அவன் வீரச் செயல்களைக் கேட்டுக்கேட்டு மகிழ்கிறார். கஜேந்

திரனைப் போன்று பல நாட்கள் காதல் என்னும் முதலையின் வாயகப்பட்டு ஆற்ருமையில் துவக்குண்ட அன்னையார், முடிவில் எம்பெருமானை மனக்கண்ணல் சேவித்து, இப்பிறவியிலேயே அவனுக்குத் தொண்டு புரிந்து, அழிவில்லா இன்பப்பேற்றை அடைந்தார் என்பது இவர் இறுதித் திருமொழியால் வெளிப்படுகிறது. ஆகவே, அவன் மாட்டுச் செலுத்திய உயரிய காதல் இவர் தூய ஆன்மாவை உய்யச் செய்தது என அறிந்தாம். இஃது எம்பெருமானின் அருளாகும்.

**"பட்டி மேய்ந்தோர் காரேறு**
**பலதே வற்கோர் கீழ்க்கன்ருய்**
**இட்ட றிட்டு விளையாடி**
**இங்கே போதக் கண்டீரே?—**
**இட்டமான பசுக்களை**
**இனிது மறித்து நீரூட்டி**
**விட்டுக் கொண்டு விளையாட**
**விருந்தா வனத்தே கண்டோமே."**

—நா. தி. 14-1.

எனத் தாம் எம்பெருமானைக் கண்டு களித்ததைப் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிருர். இவர் காதல் வெள்ளம் எம்பெருமானுகிய உயர் கரையை அடைந்து அமைதியைப் பெறுகிறது. உண்மைக் காதல் வாழ்க! உயர் காதலை உயிரெனக்கொண்டோர் வாழ்க! திருமால் காதலில் செம்மை வாய்ந்த நம் திருமொழிச் செல்வியார் வாழ்க!

57980

The B. N, Press, Mount Road, Madras